வெளியீடு 10-11-2004 Issued 10-11-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜூலை 26, 2004—தொகுதி 59 எண் 1

**Monday the 26th July, 2004—Volume 59—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

28 2005

26—07—2004

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xv |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| **2. அறிக்கை அளித்தல்—** | |
| மனுக்கள் குழு | 40 |
| **3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 40-41 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 41-42 |
| **4. அறிவிப்பு—** | |
| மானியக் கோரிக்கைகள், 2004–2005, பேரவையில் முன்மொழிதல் (ஆ.செ.) | 42 |

பக்கங்கள்


5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை
(இ) கோரிக்கை எண் 30 – தகவல் தொழில்நுட்பவியல் துறை
(ஈ) கோரிக்கை எண் 32 – சட்டத் துறை
(உ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை
} 43-95, 103-116, 118-145

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 43, 44-45, 46, 47, 54, 58-59, 60, 118-140
மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் 48, 50, 51, 52, 53, 55, 103-116
* திரு. கே.வி. முரளிதரன் 44, 45, 49, 50-60, 141, 142, 144
திரு. நா. சந்திரமோகன் 60-68
* டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி 68-74
திரு. ப. சிதம்பரம் 75-80
* திருமதி கே. பவானி கருணாகரன் 80-88
* திரு. ப. இளவழகன் 88-95

6. உரிமை மீறல் பிரச்சினை—

நிதியமைச்சர் பதிலுரையின்மீது திரு. மு. கருணாநிதி தெரிவித்த கருத்து 95-103, 116-118

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 145-147




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3 நிதி மற்றும் உணவு அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

10. தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

226245
சென்னை 600 008
நூலகம்



Y211,31

11. வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

12. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

13. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன்

கால்நடை பராமரிப்பு.

14. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

15. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**16. கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**17. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**19. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**20. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

**21. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு



**22. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம். செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**23. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

--------

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance and Food** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 4. **Minister for Law, Information Technology and Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**
Health, Medical Education and Family Welfare.

7. Minister for Social Welfare .. **The Hon. Tmt. B. Valarmathi:**
Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. Minister for Adi-Dravidar Welfare .. **The Hon. Thiru C. Karuppasamy:**
Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

9. Minister for Transport .. **The Hon. Thiru R. Viswanathan:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. Minister for Industries .. **The Hon. Thiru Nainar Nagenthran:**
Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

11. **Minister for Agriculture and Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development, Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

12. **Minister for Commercial Taxes and Co-operation** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**
Commercial Taxes and Co-operation.



13. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**
Animal Husbandry.

14. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**
Forests & Environment and Pollution Control.

15. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**
Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

16. **Minister for Education and Backward Classes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**
Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees, Backward Classes, Most Backward Classes and Denotified Communities

17. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**
Milk and Dairy Development.

18. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**
Handlooms and Textiles.

19. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**
Fisheries.

20. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**
Tourism and Tourism Development Corporation.

21. **Minister for Labour** - **The Hon. Thiru P. Annavi:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

22. **Minister for Information & Publicity and Local Administration** - **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply.

23. **Minister for Sports and Youth Welfare** - **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

-----



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

*திருமதி சி. எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. செ. கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 23-7-2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

– – –

## பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகுசி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. . | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
72. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

113. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
122. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி

நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்



136. நடராசன், திரு. வது. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - பேரவூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

| | | |
|---|---|---|
| 159. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | தொண்டாமுத்தூர் |
| 160. | பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | ஸ்ரீரங்கம் |
| 161. | பாலபாரதி, செல்வி க. | திண்டுக்கல் |
| 162. | பாலன், திரு. எஸ்.எம். | லால்குடி |
| 163. | பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மகாதேவி |
| 164. | பிச்சாண்டி, திரு. கு. | திருவண்ணாமலை |
| 165. | புகழேந்தி, திரு. இ. | கடலூர் |
| 166. | பூபதி மாரியப்பன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 167. | பூவராகமூர்த்தி, திரு. ஏ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 168. | பெருமாள், திரு. என்.கே. | விளாத்திகுளம் |
| 169. | பொன்முடி, டாக்டர் க. | விழுப்புரம் |
| 170. | பொன்னம்பலம், திரு. ப. | சமயநல்லூர் (செ.வ.) |
| 171. | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 172. | போளூர் வரதன், திரு. | செங்கம் (செ.வ.) |
| 173. | மகாலிங்கம், திரு. எஸ். | அவினாசி (செ.வ.) |
| 174. | மகேந்திரன், திரு. கே. | பெரம்பூர் (செ.வ.) |
| 175. | மகேஸ்வரி, திருமதி எஸ். | கோயம்புத்தூர் மேற்கு |
| 176. | மணி, திரு. கோ.சி. | கும்பகோணம் |
| 177. | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 178. | மணி, திரு. ஜி.கே. | பெண்ணாகரம் |
| 179. | மலையப்பசாமி, திரு. அ.இரா. | கபிலர்மலை |
| 180. | மல்லிகா சின்னசாமி, திருமதி | முசிறி |
| 181. | மாணிக்கராஜ், திரு. எஸ். | நாங்குநேரி |



| | | |
|---|---|---|
| 182. | மில்லர், திரு. அ. | கூடலூர் |
| 183. | முரளிதரன், திரு. கே.வி. | தளி |
| 184. | முருகவேல் ராஜன், திரு. க. | வந்தவாசி (செ.வ.) |
| 185. | முருகேசன், திரு. ஆ.கு. | ஆத்தூர் |
| 186. | முனுசாமி, திரு. கா.பூ. | காவேரிப்பட்டினம் |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | பாளையங்கோட்டை |
| 188. | மோகன், திரு. ப. | சின்னசேலம் |
| 189. | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 190. | ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 191. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | பட்டுக்கோட்டை |
| 192. | ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | கோபிசெட்டிப்பாளையம் |
| 193. | ராதாகிருஷ்ணன், திரு. எம். | திருமயம் |
| 194. | ராதாரவி, திரு. | சைதாப்பேட்டை |
| 195. | ராமசாமி, திரு பி.சி. | மொடக்குறிச்சி |
| 196. | ராமராஜ், திரு. ச. | போடிநாயக்கனூர் |
| 197. | ராம்குமார், திரு. எம். | பாபநாசம் |
| 198. | ராஜகோபால், திரு. ஆ | சிவகாசி |
| 199. | ராஜம்மாள், திருமதி எஸ். | தூத்துக்குடி |
| 200. | ராஜா, திரு. எச். | காரைக்குடி |
| 201. | ராஜாங்கம், திரு. வி.ஆர். | சோழவந்தான் |
| 202. | ராஜு, திரு. எச்.எம். | உதகமண்டலம் |
| 203. | ரெங்கநாதன், திரு. என். | பூம்புகார் |
| 204. | ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | பேரூர் |

| | | |
|---|---|---|
| 205. | லட்சுமணன், திரு. வி.கே. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 206. | லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | - அரவக்குறிச்சி |
| 207. | வடிவேல், திரு. ஆர். | - வாணியம்பாடி |
| 208. | வளர்மதி, திருமதி பா. | - ஆலந்தூர் |
| 209. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | - மதுரை மேற்கு |
| 210. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 211. | வாசுதேவன், திரு. பெ. | - மதுராந்தகம் |
| 212. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 213. | வில்வநாதன், திரு. இரா. | - சோளிங்கர் |
| 214. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - பூங்கா நகர் |
| 215. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - புதுக்கோட்டை |
| 216. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - பனமரத்துப்பட்டி |
| 217. | வீரபாண்டியன், திரு. ஜெக. | - மயிலாடுதுறை |
| 218. | வெங்கடாசலம், திரு. அ. | - ஆலங்குடி |
| 219. | வெங்கடாஜலம், திரு. செ. | - சேலம்-I |
| 220. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 221. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 222. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 223. | வேல் முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 224. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | - தாம்பரம் |
| 225. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 226. | ஜீவானந்தம், திரு. இரா. | - நாகப்பட்டினம் |
| 227. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | - ஆரணி |



| | | |
|---|---|---|
| 228. | ஜெயக்குமார், திரு. கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 230. | ஜெயராமன், திரு. வி. | - பொள்ளாச்சி |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | - மதுரை மத்தி |
| 234. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - திருவட்டாறு |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | - (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 11, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 ஜூலை 26, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 1, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

1—

### சார் பதிவாளர் அலுவலகம்

***9864—திருமதி செ. சுந்தராம்பாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் சார் பதிவாளர் அலுவலகம் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் செயல்பட்டு வருவதை திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது சாத்தியம் இல்லை.

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் 20-7-1984 ஆம் ஆண்டு இந்த அலுவலகம் தொடங்கப்பட்டு மிக நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. வருடத்திற்கு 1500-க்கு மேற்பட்ட பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறு இல்லையென்று கூறி இருக்கின்றார்கள். மறுபரிசீலனை செய்து வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் இயங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் முகாம் சார் பதிவகம் சேலம் (மேற்கு) பதிவு மாவட்ட மேட்டூர் சார் பதிவகத்துடன் சார்ந்தது. இச்சார் பதிவகம் வாடகைக் கட்டடத்தில் மாத வாடகையாக ரூ.300 அளிக்கப்பட்டு இயங்குகிறது. இவ்வலுவலகத்திலிருந்து மேட்டூர் சார் பதிவாளர் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் சென்று பதிவு நடவடிக்கைகளைக் கவனிக்கின்றார். இந்த அலுவலகத்தில் ஆண்டொன்றுக்குத் தோராயமாக 700 ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு நாளைக்கு சராசரியாக 2 ஆவணங்கள் என்ற அளவில்தான் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு சார் பதிவகம் நடத்திட ஆண்டொன்றுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் செலவாகின்றது. பொதுவாக ஓர் அலுவலகம் துவங்க குறைந்தபட்சம் 2,500 ஆவணங்கள் பதிவு தேவை. எனவே, இங்கு முழுநேர அலுவலகம் துவங்க போதிய வாய்ப்பு இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்



**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சார் பதிவாளர் அலுவலகங்களினுடைய எண்ணிக்கை தமிழகத்திலே இருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகங்களினுடைய எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. அரசு சிக்கன நடவடிக்கையாக சார் பதிவாளர்களுடைய அலுவலக எண்ணிக்கையை நிலவரத்திற்கு ஏற்ப குறைக்க முன்வருமா என்றும் மேலும் சார் பதிவாளர் அலுவலகங்களில் பத்திரம் பதிவு செய்யப்படுகின்றபோது முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக நேரடியாகப் பணம் கட்டுகின்ற, பணம் கட்டிப் பதிவு செய்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பணத்தைச் செலுத்துவதற்கு சார் பதிவாளர் அலுவலகங்களில் வங்கியினுடைய கிளைகளைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 588 சார் பதிவகங்கள் இருக்கின்றன. குறிப்பாக அளவிற்கு அதிகமான சார் பதிவகங்கள் தமிழகத்தில் இருக்கின்ற நிலையை எண்ணி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஒரு வட்டத்திற்கு ஒரு சார் பதிவகம் என்ற வீதமும், 10,000 ஆவணங்கள் பதிவுகளுக்கு மேல் இருக்கின்ற வட்டங்களுக்குக் கூடுதலாக ஒரு சார் பதிவகமும் இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்து அரசினுடைய ஆய்வில் இருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக வங்கிகளில்— ஏற்கெனவே வங்கிகள் மூலமாகவும் Treasury மூலமாகவும் பணத்தைச் செலுத்தி அல்லது நேரடியாகவே சார் பதிவகங்களில்-- பணத்தைச் செலுத்தி ஆவணங்களைப் பதிவு செய்வதற்கு ஏற்கெனவே வழிவகை உண்டு என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**2—**

## வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

***18682—திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் வட்டம் என்பது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருடைய தொகுதியைச் சேர்ந்த வட்டம் ஆகும். தமிழகத்தில் உள்ள மிகப் பெரிய வட்டங்களில் இது ஒரு வட்டமாகும். இந்த உத்தரமேரூர் வட்டத்திலே 73 ஊராட்சிகள், ஒரு பேரூராட்சி, 127 வருவாய்க் கிராமங்கள், 227 சிற்றூராட்சிகள் இருக்கின்றன. மக்கள் தொகையோ ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மேலாக இருக்கின்றது. சதுர கிலோமீட்டர் 406.1. மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி 1991 முதல் 1996 வரை இருந்த காலத்திலே இந்த வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதாகக் கொள்கை அளவிலே ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அதற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள் இதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் பெரிய மாவட்டங்களையெல்லாம் நிர்வாக வசதிக்காகவும் மக்கள் நன்மைக்காகவும் இரண்டாகப் பிரிக்கின்றார்கள். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலம், இந்த ஆண்டு முடியவில்லையென்றாலும் வருகின்ற நிதியாண்டிலாவது இந்த வட்டத்தை இரண்டாகப் பிரிப்பாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிர்வாகம் மற்றும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு பெரிய வட்டங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம் கோட்டத்தில், காஞ்சிபுரம், உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர் வட்டங்களும், செங்கல்பட்டு கோட்டத்தில், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், தாம்பரம் வட்டங்களும், மதுராந்தகம்



கோட்டத்தில், மதுராந்தகம் மற்றும் செய்யூர் வட்டங்களும் அமையப்பெற்றுள்ளன. சட்டமன்ற பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லை வரம்பிடுதல் பணிக்காக எல்லை வரம்பிடுதல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லை வரம்பிடுதல் பணி முடியும் வரை நடைமுறையிலுள்ள நிர்வாக அலகுகளைப் பிரிக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ கூடாது என வரம்பிடுதல் ஆணையம் பணித்துள்ளது. எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தினை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நலன் கருதி, நிர்வாக வசதிக்காகப் பெரிய வட்டங்களை அரசு பிரிக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். உத்திரமேரூர் வட்டத்தைப் பிரிப்பதில் காலதாமதம் இருக்கும் என்று சொன்னாலும்கூட, தமிழ்நாட்டில் வேறு ஏதாவது பெரிய வட்டங்களைப் பிரிப்பதற்கு அரசிடம் ஏற்கெனவே செயற்குறிப்பு உள்ளதா? அப்படியென்றால் இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தை, சிக்கலைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று 10 ஆண்டுகளாக மக்கள் கோரி வருகிறார்கள். 1991–1996 வரையில் இருந்த நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுகூட அந்த வட்டத்தை இரண்டாகப் பிரிக்க முயற்சி எடுத்தது. அந்த முயற்சி எந்த மட்டத்திலே இருக்கிறது? எதிர்வரும் காலத்திலாவது அந்த மக்களுடைய அந்த எண்ணம் நிறைவேறுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லை வரம்பிடுதல் பணிக்காகத் தற்போது எந்த நிர்வாகங்களையோ, வட்டங்களையோ, கோட்டங்களையோ, மாவட்டங்களையோ பிரிக்கக் கூடாது என்று ஆணையம் உத்தரவிட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கடலாடி வட்டத்தினையோ அல்லது பொது மக்களிடமிருந்து வட்டங்கள், கோட்டங்கள், மாவட்டங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்று வரப்பெறுகின்ற கோரிக்கைகளோ எதுவாக இருந்தாலும் இந்த வரம்பிடுதல் பணி முடிவுற்றவுடன் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[2004 ஜூலை 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வட்டங்கள் பிரிக்கப்படுகின்றபோது என்னென்ன அளவுகோல்கள், நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன? அதுபோல, பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்ட புதிய வட்டங்களுக்கெல்லாம் நல்ல கட்டடங்கள் வசதியோடு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எங்கள் தொகுதியைப் போன்ற பழமையான வட்டங்களுக்குப் போதுமான கட்டட வசதிகள் இல்லாததால் அங்கே நடைபெறுகின்ற பணிகளுக்கு அது மிகுந்த இடைஞ்சலாகவும் இடையூறாகவும் இருக்கிறது. அதற்கு அரசு நடவடிக்கை எடுத்து அப்படிப்பட்ட வட்டங்களுக்கெல்லாம் புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வட்டங்களைப் பிரிப்பதற்கு அதன் பரப்பளவு 250 சதுர கிலோமீட்டர் முதல் அதிகளவு 2 ஆயிரம் சதுர கிலோமீட்டர் வரை இருக்க வேண்டும். மக்கள் தொகை ஒரு இலட்சம் முதல் அதிகளவு 5 இலட்சத்து 50 ஆயிரம் வரை இருக்க வேண்டும். வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை குறைந்தளவு 30 கிராமங்கள் இருக்க வேண்டும்.

முற்பகல் 10–10

கோட்டங்களை நாம் பிரிக்கும்போது அதனுடைய பரப்பளவு குறைந்தது ஆயிரம் சதுர கிலோமீட்டரிலிருந்து 4,500 சதுர கிலோமீட்டர் வரை இருக்க வேண்டும். மக்கள் தொகை 4 இலட்சம் முதல் 15 இலட்சம் வரை இருக்க வேண்டும். குறைந்தது அந்தக் கோட்டத்தில் இரண்டு வட்டங்கள் இருக்க வேண்டும். குறைந்தது 100 கிராமங்கள் இருக்க வேண்டும். மாவட்டங்களைப் பிரிக்கும்போது, பரப்பளவு 2,500 சதுர கிலோமீட்டர் முதல் அதிக அளவு 9 ஆயிரம் சதுர கிலோமீட்டர் இருக்க வேண்டும். மக்கள்தொகை 10 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை இருக்க வேண்டும். குறைந்தது அந்த மாவட்டத்தில் 5 வட்டங்கள் இருக்க வேண்டும். 2 கோட்டங்கள் இருக்க வேண்டும். குறைந்தது 200 கிராமங்கள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் தொகுதியில் மிகப் பழமைவாய்ந்த வட்டங்களுக்குக் கட்டட வசதிகள் இல்லை என்று தெரிவித்தார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வட்டங்கள் அனைத்தும் அரசாங்கக் கட்டடங்களில் இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு,



2004 ஜூலை 26]

இதுவரை 206 வட்டங்களில், 18 நீங்கலாக, மற்றவை சொந்தக் கட்டடங்களில், அரசினுடைய கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப அத்துணை வட்டங்களும் அரசு கட்டடங்களாக தரமுள்ள உறுதியான கட்டடங்களாகக் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற எல்லையை நிர்ணயம் செய்கின்ற ஆணையம் அறிக்கை சமர்ப்பித்த பின்பு வட்டங்கள் பிரிப்பது பற்றி ஆலோசிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகாவானது மிக அதிக பரப்பளவு கொண்டதும், மிக அதிக மக்கள்தொகை கொண்டதும், 47-க்கும் மேலான கிராமங்களும், கிட்டத்தட்ட 2 பேரூராட்சி மன்றங்களும், 45 ஊராட்சி மன்றங்களும் கொண்ட மிகப் பரந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அறிக்கையை சமர்ப்பித்த பிறகு கேள்வியைக் கேளுங்கள். அப்பொழுதுதான் அமைச்சர் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியும்.

**திரு. மு. அப்பாவு:** எப்பொழுது அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 4, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

4—

## துணை மின் நிலையம்

***36020—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகரில் மின்னழுத்தக் குறைவால் அடிக்கடி மின் தடை ஏற்படுவதைத் தவிர்க்க 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2004 ஜூலை 26

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரூபாய் 20 கோடியே 38 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகரில் 110 கேவி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 2003–2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருந்த நிலையில், நிலம் கிடைப்பதற்கு முன்னனுமதியை எதிர்நோக்கி இருக்கின்ற காரணத்தினால், நில நிர்வாகத் துறை சிறப்பு ஆணையர் அவர்களிடம் அந்த மின் நிலைய முன்நுழைவு அனுமதி கேட்கப்பட்டுள்ளது. முன்நுழைவு அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் 110 கிலோ வாட் கொண்ட துணை மின் நிலையத்திற்கு 8–7–2003 அன்று வாரியம் நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பித்துள்ளது. அப்படி இருந்தும், கடந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட பல்வேறு துணை மின் நிலையங்கள் வட சென்னை பகுதியிலே அமைந்து இருக்கின்ற எம்.ஆர்.கே. நகர், கொட்டிவாக்கம், இந்தியா பிஸ்டன், காலடிப்பேட்டை, பேப்பர் மில்ஸ் போன்ற பகுதிகளில் இந்தப் பணி நிறைவுற்று, இன்றையதினம் அந்த மக்கள் அந்தத் துணை மின் நிலையம் ஏற்பட்டதால் பெரிதும் பயன் அடைந்திருக்கின்றார்கள். அதே காலகட்டத்தில் அரசாணை பிறப்பித்த இந்தத் துணை மின் நிலையத்திற்கு இட ஆர்ஜிதம் செய்வதில காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூறியிருக்கின்றார்கள். இந்த இடத்தைப் பொறுத்த அளவிலே, இதற்கு அருகிலே 1992 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் சுமார் 31 ground அளவிலே தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முன்னனுமதி பெற்றுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 300 குடும்பங்களுக்கு அங்கே குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இப்பொழுது மின்சார வாரியத்திற்கும், நில உடைமைத் துறைக்கும் உள்ள பிரச்சினை என்னவென்றால், அந்த இடத்திற்கு உண்டான சார் பதிவாளர் மதிப்பீட்டு வழிகாட்டி முறையிலே ஒரு சதுர அடிக்கு ரூபாய் 492/—ஐ கேட்கிறார்கள். மின்சார வாரியமும் அதைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்ற நேரத்தில், மின்சார வாரியம் என்பது commercial என்பதால் இரு மடங்கு விலையினை



2004 ஜூலை 26]

அந்த இடத்திற்குத் தரவேண்டுமென்பதால் இந்தப் பிரச்சினை நிலுவையிலுள்ளது. ஆகவே, அருள்கூர்ந்து மின்சாரத் துறை அமைச்சரும், அருகே இருக்கின்ற பொதுப் பணித் துறை அமைச்சரும் இந்த இடத்திற்கு முன்னனுமதியினை மாத்திரம் முதலிலே பெற்றுத் தந்துவிட்டு, பணி தொடங்கியபின் அதற்குண்டான விலையை நிர்ணயம் செய்து வாரியம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் தொகுதியைப் பொறுத்தவரையில் கடந்த 3 வருடங்களில் மின் விநியோகம் சீராக இருக்க வேண்டும் என்கின்ற ஒரு நிலையில் distribution transformers 14–ம், pillar box 215–ம் உயர் அழுத்த மின் தடக் கம்பிகள் 6.5 கிலோ மீட்டருக்கும், குறைந்த அழுத்த மின் கம்பிகள் 20.5 கிலோ மீட்டருக்கும் போடப்பட்டு மின் விநியோகம் சீராக வழங்கப்பட்டு வருகிறது. எனவே வருங்காலத் தேவையைக் கருத்தில்கொண்டு அந்த இடத்திலே ஒரு துணை மின் நிலையம் அமைப்பது அவசியம் என்று கருதி அதற்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் நில உரிமை உடைமை மாற்றம் என்கின்ற நிலை வருகின்றபோதுதான் சற்றுத் தாமதமாக இருக்கிற ஒரு நிலை கண்டறியப்பட்டு உடனடியாக மாவட்ட ஆட்சியரிடம், மாவட்ட ஆட்சியர் என்ன விலை நிர்ணயிக்கின்றாரோ அந்த விலையைக் கொடுப்பதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது என்ற கருத்து சொல்லப்பட்டு மாவட்ட ஆட்சியரும் 3 கோடியே 69 இலட்சம் ரூபாய்க்கு விலை நிர்ணயம் செய்து தற்போது அது மின் வாரியத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. எனவே 3 கோடியே 69 இலட்சம் ரூபாய் மின் வாரியம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்ற நிலையில் நில உரிமை உடைமை மாற்றம் அரசுக்கும் அரசு சார்ந்த துறைக்கும் சம்பந்தப்பட்டு இருக்கிற பிரச்சினை என்பதால் உரிமை உடைமை மாற்றம்கூட பிறகு செய்துகொள்ளலாம், ஆனால் அந்தத் துறையிடம் நீங்கள் முன்நுழைவு அனுமதியாவது கொடுத்துவிடுங்கள் என்று கேட்டிருக்கிறோம். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்கள் முன்நுழைவு அனுமதி அதாவது enter upon permission கொடுக்கின்றபட்சத்தில் நிச்சயமாக இந்தப் பணி உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தளவிலே, மின்சாரத் துறையிலே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில்தான் தூத்துக்குடி, வடசென்னை போன்ற அனல் மின் நிலையங்கள் இந்திய அரசின் தங்கப் பதக்கத்தைப் பெறுகின்ற தகுதியைப் பெற்றிருக்கிற ஒரு நிலை நிலவுகின்றபடியால் ஆண்டு ஒன்றுக்கு 60 துணை மின் நிலையங்கள் என்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற இந்த வேளையில் ஒரு சில இடங்களில் இப்படிப்பட்ட நில ஆர்ஜிதம் செய்வது தொடர்பாக பிரச்சினை இருப்பதால், சென்னையிலேகூட 2, 3 இடங்களில் இப்படி நிலுவையில் இருப்பதாக அறிகிறேன். ஆகவே இது சம்பந்தமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும் ஒரு குழுவைக்கூட நியமித்து குறைந்தபட்சம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது இப்படித் துணை மின் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக ஏற்படுகின்ற இடப் பிரச்சினைகளை ஆய்வு செய்து விரைந்து முடித்துத்தர வேண்டும். அவ்வகையில் ஒரு குழுவை ஏற்படுத்த முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகம் முழுவதும் இதுபோன்ற பிரச்சினைகள் எழவில்லை. அதுவும் மின் வாரியம் ஒரு commercial organization என்கின்ற நிலையில் தனியார் நிலமாக இருந்தாலும் சரி—தனியார் நிலமாக இருக்கின்ற சூழ்நிலையில்—அந்தத் தனியாரோடு பேசி நிலத்தை வாங்கி transformer அமைப்பதற்கோ இல்லையென்றால் அதிலே ஒரு sub-station அமைப்பதற்கோ வேண்டிய நடவடிக்கையை எடுக்கிறது. சிற்சில இடங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றபோது, உடனடியாக மின்வாரியம் சம்பந்தப்பட்ட துறையோடு அணுகி நில உரிமை உடைமை மாற்றம் பெற்று விடுகிறது. எனவே அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. அதேபோல இதிலும் எந்தப் பிரச்சினையும் இல்லை. விரைவிலே நில உரிமை உடைமை மாற்றமோ இல்லையென்றால் முன்நுழைவு அனுமதியோ நிச்சயமாகக் கிடைக்கப்பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும். எனவே குழு அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 ஜூலை 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்)**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வரகூர் தொகுதியில் துங்கபுரம் தேனூரில் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு இரண்டு மின் நிலையங்களைக் கொடுத்தார்கள்.

முற்பகல் 10–20

அதிலே துங்கபுரம், தேனூர் பகுதிகளில் மட்டும் நில ஆர்ஜிதம் செய்கின்ற நேரத்தில் S.No.202/1-ல் 1.53 எக்டேர் நிலத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பெயருக்கு மாற்றுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால், அண்டிக்குளம் என்பது புறம்போக்கு என்று கூறி உள்ளாட்சித் துறைச் செயலாளர் அவர்களால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. அப்படி அனுப்பப்பட்டதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்த இடத்தைப் பார்த்து இதிலே அண்டிக்குளம் புறம்போக்கு நிலம், அது நீர் பிடிப்புக்கான பகுதி என்பதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்று திரும்ப பதில் அனுப்பிவிட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் திரும்பவும் 15–12–2003 அன்று இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுப்பி விளக்கம் பெறப்பட்டு தற்போது சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறைச் செயலாளர் அவர்களிடம் நிலுவையிலே இருக்கிறது. அந்தப் பகுதியிலே current motor வைத்து விவசாயம் செய்வதற்குக்கூட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் கருதியும், அண்டிக்குளம் என்பது, அதாவது உண்மையிலேயே அந்தப் பகுதியிலே அப்படிப்பட்ட நீர்ப்பிடிப்பு இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பரிந்துரை செய்திருப்பதால், அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிற அந்தத் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அந்த இடத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி கொடுத்தாலும்கூட, அதற்கு ஒரு முன்நுழைவு

[2004 ஜூலை 26

அனுமதியோ, நில உரிமை உடைமை மாற்றமோ அரசு அளவில், இல்லை என்றால் சம்பந்தப்பட்ட துறையினுடைய தலைவர் அளவில் அனுமதி கொடுக்கப்பட வேண்டும். எனவே, நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, இதிலே காலதாமதம் ஏற்பட்டால் முன்நுழைவு அனுமதி கிடைப்பதற்கோ, இல்லை என்றால் நில உரிமை உடைமை மாற்றம் செய்வதற்கோ காலதாமதம் ஏற்படுகின்ற நிலையில் அவர்கள் எங்கேயாவது தனியார் நிலத்தை இதற்கு suitable land எனக் காட்டினாலும்கூட அதை மின்வாரியம் விலைக்கு வாங்கி அந்த இடத்திலே அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றது. எனவே, இதுபோன்ற முன்நுழைவு அனுமதி அல்லது நில உரிமை உடைமை மாற்றம் பெறுகின்ற சிக்கல் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றது என்பதைக் கண்டறிந்து அவற்றையெல்லாம் ஒரு பட்டியலாகத் தயார் செய்து அவற்றிற்கும் இந்த ஓரிரு மாதங்களிலே தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், இதை இரண்டுபேரும் பேசி முடித்துக்கொள்ளுங்களேன்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே பகுதியிலே, புதுவேட்டைக்குடி என்கிற கிராமத்தில் சாவடிக்குட்டை என்று ஒன்று இருக்கிறது. அந்த இடத்தில் 2.5 ஆண்டுகளாக 5 ஏக்கர் நிலத்தை எடுத்து விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். இது பொது மக்களுக்குப் பயன்படுகிற நிலம். துணை மின் நிலையத்திற்குத்தான் இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த நிலமும் பொது மக்களின் உபயோகத்திற்குத் தேவை எனக் கருதி, சாவடிக்குட்டையை விவசாயத்திற்கு அனுமதித்திருப்பதுபோல அதற்கும் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்திலே உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதற்கு, ஏற்கெனவே நான் சொன்ன பதில் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2004 ஜூலை 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

5—

### சட்டக் கல்லூரி

***51667—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியிலுள்ள ஆரணி நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டக் கல்லூரி ஒன்றினைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அடுத்த கல்வியாண்டிலிருந்து அதனைச் செயல்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலே ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். கேள்வியே எழவில்லை என்று சொன்னால், அப்படிச் சொல்லிவிட்டால், கேட்டதைக் கொடுக்கின்ற தர்மத் தாய் ஆட்சியிலே, வினா எழவில்லை என்று சொல்லி ஒரே வார்த்தையில் முடித்துவிட்டால் போதாது. எங்களைத் தேர்ந்தெடுத்த மக்கள் என்ன செய்தீர்கள் இந்தத் தொகுதிக்கு, சொல்லுங்கள் குறிப்பிட்ட அளவிற்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்கின்றார்கள். அங்கே அரசுக் கல்லூரிகள் எதுவுமே கிடையாது. ஆரணித் தொகுதி பட்டு உற்பத்திக்குப் பெயர் பெற்ற ஊர்; அரிசி உற்பத்திக்குப் பெயர் பெற்ற ஊர். அந்த ஊரிலே ஏறத்தாழ 150 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் சும்மாவே கிடக்கிறது. ஆதனூர் என்ற

கிராமத்திலே, ஆற்காடு சாலையிலே. அதேபோல, சத்தியவிஜயநகரம் என்ற கிராமத்திலும் 100 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆகவே, அங்கே எந்த அரசுக் கல்லூரியும் இல்லை என்பதால், இந்த ஆண்டு எப்படியாவது அம்மாவினுடைய ஆட்சியிலே, எதிரிகளுக்குக்கூட கொடுக்கின்ற இந்த ஆட்சியிலே, எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறேன். இதை மறுபரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் மறுபடியும் எனக்கு ஏதாவது நல்ல வார்த்தை சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது ஒரு கல்லூரியைத்தான் கேட்கிறார்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேரார்வம் பாராட்டுதற்குரியது. 234 தொகுதிகளையும் தன் தொகுதிகளாகப் பாவித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து நலத் திட்ட உதவிகளும் செய்துகொண்டு வருகின்றார்கள். எனவே ஆரணித் தொகுதிக்கு புதிய சட்டக் கல்லூரி கொடுப்பதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், நம்முடைய இந்திய வழக்கறிஞர் மன்ற விதிகள் விதி 8—ன்படி மாவட்ட நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் மட்டுமே சட்டக் கல்லூரி தொடங்க முடியும். ஆரணியில் மாவட்ட நீதிமன்றம் இல்லை. இல்லாத பட்சத்தில் எப்படித் தொடங்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி ராமச்சந்திரன். (குறுக்கீடுகள்) அவர் கேட்டால் நீதிமன்றம் கேட்பார்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் மாவட்ட நீதிமன்றம் இருக்க வேண்டும், விதி இருக்கிறது என்று சொல்கிறார். பக்கத்திலே இருக்கிற செய்யாறிலே அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. அங்கே மாவட்ட நீதிமன்றமே இல்லை. அப்படி ஒரு முன்னுதாரணம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெமினி ராமச்சந்திரன், கலைக் கல்லூரி என்பது வேறு (குறுக்கீடுகள்) சட்டக் கல்லூரி என்பது வேறு. மருத்துவக் கல்லூரி என்பது வேறு.





**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** இல்லை, இல்லை, முன்னுதாரணத்திற்காக நான் சொல்கிறேன். மாவட்ட நீதிமன்றம் இல்லை, அந்த இடத்திலே அரசுக் கல்லூரி இருக்கிறது. எங்களுக்கு சட்டக் கல்லூரி அந்த இடத்திலே நீங்கள் தர வேண்டும், நீங்கள் அவசியம் அதற்கு ஒதுக்கீடு செய்து இந்த ஆண்டிலே எப்படியாவது அந்தச் சட்டக் கல்லூரி வருவதற்குண்டான மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெமினி ராமச்சந்திரன், அமைச்சர் வைத்துக் கொண்டா செய்ய மாட்டேன் என்கிறார். என்ன விதிமுறை என்று அவர் சொல்லியிருக்கிறார். திரு. அரசன் (குறுக்கீடு)

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** ஏற்கெனவே சென்ற ஆண்டு கல்வி அமைச்சரிடத்திலேகூட நான் கலைக் கல்லூரி வேண்டும் என்று கேட்டேன். அப்போதே அங்கே தனியார் கல்லூரிகளுக்கு, அதற்கே இடம் இல்லை என்று சொல்லி விட்டார். மக்கள் அரசுக் கல்லூரி வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். ஆகவே எங்கள் ஆரணித் தொகுதிக்கு ஏதாவது ஒரு கல்லூரியை வழங்குவதுபற்றி அம்மாவுடன் கலந்து, நீங்கள் நல்ல முறையிலே எங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டக் கல்லூரி அவசியம் எங்கள் பகுதிக்கு வந்தால்—30 தொகுதிகளுக்கு நடுவிலே ஆரணி இருக்கிறது. ஆகவே, சட்டக் கல்லூரி வேண்டும் என்பதுபற்றி மறுபரிசீலனை செய்து, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய அண்ணன் ஜெமினியார் அவர்கள் இந்தத் தள்ளாத வயதிலேயும் சட்டம் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்று நினைக்கிறேன். ஆகவே அவருடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இரண்டு பேருக்குமே தள்ளாத வயதுதான். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி துவங்கப்பட வேண்டும் என்றால் ஏற்கெனவே நான் சொல்லியபடி இந்திய வழக்கறிஞர் மன்ற விதிகள் விதி 8—ன்படி

[2004 ஜூலை 26

மாவட்ட நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் மட்டுமே சட்டக் கல்லூரி தொடங்க முடியும். எனவே, மாவட்ட நீதிமன்றம் ஆரணியில் இல்லாத சூழ்நிலையில் அவர் இவ்வளவாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்ற ஒரு சூழ்நிலையில் அவருடைய கோரிக்கையை நிராகரிக்க இயலாது. எனவே, இந்த விதி 8—ஐ பிரத்தியேகமாகத் தளர்த்த முடியுமா என்று இந்திய Bar Council-லிடம் கருத்துக் கேட்டு நம்முடைய சட்டப் பல்கலைக்கழகம் மூலமாக எழுதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**6—**

## திருக்கோயில்களுக்குச் சுற்றுச் சுவர்

***32712—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூரிலுள்ள சிவன்கோயில், முருகன் கோயில் மற்றும் முத்துமாரியம்மன் திருக்கோயில்களுக்குச் சுற்றுச் சுவர் மற்றும் திண்காரைத் தளம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூரில் உள்ள (1) சிவன் கோயில் (2) முருகன் கோயில் போன்ற இத்திருக்கோயில்களுக்கு திண்காரைத் தளம் ரூ.25,000/— மதிப்பீட்டில் 10—9—2002—ல் போட்டு முடிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் பொதுமக்கள் நன்கொடை மூலம் எழுப்பப்பட்டு பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது. (3) அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு திண்காரைத் தளம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்க நன்கொடையாளர்கள் எவரும் முன்வராததால் இப்பணிகள் செய்ய இயலாத நிலை உள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2004 ஜூலை 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**7—**

## அன்னதானத் திட்டம்

***37395—திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், தும்பூர் கிராமத்திலுள்ள அருள்மிகு நாகம்மன் திருக்கோயிலில் இலவச அன்னதானத் திட்டம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், தும்பூர் கிராமத்திலுள்ள அருள்மிகு நாகம்மன் திருக்கோயிலின் வருவாய், திருக்கோயிலின் நிர்வாகச் செலவினங்களுக்கே ஈடு செய்யக்கூடிய நிலையில் உள்ளதால், இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினை தற்சமயம் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கு இடமே இல்லை என்று பொன்னான ஆட்சி செய்து கொண்டிருக்கிற இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இன்றைக்கு நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பல்வேறு சலுகைகளை அள்ளித் தருகின்ற அரசாக விளங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினால் உடனடியாக இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியாவிட்டாலும் எதிர்வரும் காலங்களில் மீண்டும் பரிசீலனை செய்து, நிதி வசதி இல்லாவிட்டாலும்கூட நிதி வசதி அதிகம் உள்ள திருக்கோயிலிலிருந்து உபரி நிதியைப் பெற்று இந்தத் திட்டத்தை தும்பூர் நாகம்மன் கோயிலில் அமல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

[2004 ஜூலை 26

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலில் 63 ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கினார்கள். தற்சமயம் 171 ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்த ஆலயத்திலேயும் அந்தப் பகுதியினுடைய மக்கள் மூலம் வருவாயைப் பெருக்குவதற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முன்வருவார்களேயானால் நிதிநிலைக்கேற்ப அன்னதானத் திட்டத்தைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

8—

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம்

***35921—திருமதி வி. அழகம்மாள்—**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய பழைய கட்டடத்தை இடித்துவிட்டு, அந்த இடத்திலேயே புதிய கட்டடம் கட்டுவதற்கு நபார்டு நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைத்தவுடன் புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2004 ஜூலை 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

9—

### முதியோர் பாதுகாப்புத் திட்டம்

***34871—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பராமரிக்க இயலாத நிலையிலுள்ள முதியவர்களின் பாதுகாப்பிற்கான திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பராமரிக்க இயலாத நிலையில் உள்ள முதியவர்களின் பாதுகாப்பிற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஆதரவற்ற, வருமானம் ஏதுமின்றி உள்ள முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் மாதம் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு இரு முறை இலவச வேட்டி மற்றும் சேலை வழங்கப்பட்டு வருகிறது. சத்துணவுக்கூடங்களில் மதிய உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், மதிய உணவு உட்கொள்ளாதவர்களுக்கு 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. முதியோர் இல்லங்கள் நடத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. கே. மகேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை வழங்குகிற நேரத்தில் கணவனை இழந்து, கைம்பெண்களாக இருக்கின்றவர்களுக்கு ஆண் மகன்கள்

[2004 ஜூலை 26

இருந்தாலும்கூட, அந்த ஆண் பிள்ளைகள் அவர்களுக்கு உதவுவது இல்லை என்ற நிலையிருக்கிறது. எனவே, கணவனை இழந்த முதிய பெண்களுக்கு இந்த உதவித் தொகையை வழங்குவதற்குக் கருணை மிகுந்த அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் கணவனை இழந்த பெண்கள், கணவனால் கைவிடப்பட்டு விவாகரத்துப் பெற்றிருக்கின்ற பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்கள், ஊனமுற்ற நிலையிலும் விவசாயத் தொழிலாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்கள், இவர்களெல்லாம் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, மாதந்தோறும் 200 ரூபாய் அரசு வழங்கிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** அமைச்சரிடமிருந்து நான் கேட்பது எல்லாம் கணவனை இழந்துவிட்ட பெண்களுக்கு ஆண் பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்குக் கொடுப்பதற்கு இயலாது என்று மறுக்கப்படுகிறதே? அவர்களுக்கும் இந்த நிதி உதவி வழங்கப்படுமா? அதற்கு அரசு உதவி செய்யுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு போலைத் தலைவர் அவர்களே, அரசு சிந்தித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு போலைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிக்க இயலாத நிலையில் உள்ள முதியோர்களின் பாதுகாப்பிற்காக பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சத்துணவுக் கூடங்களிலே மதிய உணவைச் சாப்பிடுகின்ற, முதியோர் உதவித் தொகை பெறும் ஆதரவற்ற முதியோர்கள், இரவு நேரங்களிலே சத்துணவுக் கூடங்களிலே தங்குவதற்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2004 ஜூலை 26]

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் சத்துணவு சாப்பிடுவதற்குரிய பொருட்கள் ஏற்கெனவே வைக்கப்பட்டு சத்துணவு அமைப்பாளர்கள் மூலமாக அல்லது பள்ளிக்கூடங்களின் தலைமையாசிரியர்கள் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பள்ளிக்கூடங்களுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகிவிடும் என்கிற காரணத்தினாலும் அங்கே வைத்திருக்கக்கூடிய பொருட்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலை உருவாகாது என்கிற காரணத்தாலும் இரவு நேரங்களில் முதியோர்களை அங்கே தங்க வைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ்.

*முற்பகல் 10–35*

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் விதவைகளுக்கு உதவித் தொகை வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. விதவையாக இருக்கின்ற இளம் பெண்களுக்கு சுய உதவிக் குழுக்கள் மூலமாக கடன்கள் பெற்று அவர்கள் வாழ்க்கை நடத்தலாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்லி வருகிறார்கள். கணவனை இழந்து இளமையிலே இருக்கின்ற அந்தத் தாய்மார்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்த முடியாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மீண்டும் அந்த விதவை உதவித் தொகையை வழங்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தந்து கொண்டிருக்கிறார்கள். விதவைகளுக்கான உதவித் தொகை எங்கேயும் நிறுத்தப்படவில்லை. இதுசம்பந்தமாகப் பல்வேறு இடங்களிலே அவர்களை ஆய்வு செய்து தகுதியானவர்களா என்று கண்டறியப்படுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறபோதுதான் அந்தச் சமயங்களிலே நிறுத்தப்படுகிறதே தவிர பொத்தாம்போக்கிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதை அரசு ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து போன்ற நிகழ்வுகளில் இறந்தவர்களின் குடும்பத்துக்கு வழங்குகின்ற நிதி ரூபாய் 10 ஆயிரம் என்று அரசு வழங்கி வருகின்றது. அந்த நிதி வழங்குவதற்கு, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்பு 2, 3 ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு நிதி வராமல் இருப்பது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? என்னுடைய சேரன்மகாதேவி கோட்டத்தில் அவ்வாறு 200-க்கு மேற்பட்டவர்களுக்குத் தகுதி இருந்தும், அவர்களுக்கு நிதி வராமல் இருக்கிறது. அவர்களுக்கு விரைவாக நிதி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பகுதியிலே அந்தக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பாரேயானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவன் இறந்து விதவையாகிவிட்ட பெண்கள் அங்கே சென்று, விதவை பென்ஷன் கேட்கின்றபோது அவர்களுக்கு வயது வரம்பு ஏதாவது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதா? குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்படுமா? அவர்கள் நேரடியாக வட்டாட்சியரைச் சந்தித்துக் கேட்கின்றபோது உங்களுக்கு வயது குறைவாக இருக்கின்றது. ஏறத்தாழ 45 வயதுக்கு மேல் இருந்தால்தான் அந்தத் தொகை கொடுக்கப்படுமென்று மறுக்கப்படுகின்றது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவாக, எத்தனை வயதாக இருந்தாலும், கணவன் இறந்துவிட்டால் அவர்களுக்கு வயது வரம்பு இல்லாமல் உடனடியாக விதவை பென்ஷன் கொடுப்பதற்கு முன்வருவாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 வயதிலே இருந்து 40 வயதுக்குள்ளாக இருக்கக்கூடியவர்கள் விதவை என்று கணவன் இறந்த சான்றிதழைக் கொண்டு வந்து வட்டாட்சியர் அலுவலகத்திலே சமர்ப்பிக்க வேண்டும். அதேபோல் 40 வயதுக்கு மேற்பட்ட விதவைகள் தங்களைப் பதிவு செய்கின்றபோது அவர்களுக்கு 20 வயதுக்கு மேற்பட்ட மகனோ அல்லது மகனின் மகன்—பேரன், ஆதரவு உள்ளவர்களாக இருக்கக் கூடாது. ரூபாய் 5





ஆயிரத்திற்கு மேல் சொத்து இருக்கக்கூடாது. பிச்சை எடுப்பது என்பதைத் தொழிலாக வைத்து இருக்கக் கூடாது. இதுபோன்ற நிலைகளை எல்லாம் வட்டாட்சியர் அலுவலகத்திலே இருந்து செல்லக்கூடியவர்கள் கண்டறிந்ததற்குப் பிறகு இதை வைத்து விதவை உதவித் தொகை என்பது நிச்சயமாக அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் மற்றும் விதவைகள் உதவி பெறுபவர்களுக்கு அரசால் மாதந்தோறும் 4 கிலோ அரிசி வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 4 கிலோ அரிசி வாங்குபவர்களுக்கு நியாயவிலைக் கடைகளிலே வழங்கக்கூடிய 20 கிலோ அரிசி மறுக்கப்பட்டு வருகின்றது. எனவே, 4 கிலோ அரிசியை வைத்து அந்த மாதம் முழுவதும் அவர்கள் வாழ்க்கை நடத்த முடியாது. எனவே, 4 கிலோ அரிசி இலவசமாக பெறுபவர்களுக்கும், நியாயவிலைக் கடைகளிலே எல்லோருக்கும் வழங்குவதுபோல் 20 கிலோ அரிசி வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவனை இழந்து விதவையாக இருக்கும் 20 வயது முதல் 40 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பெரும்பாலான வட்டாட்சியர் அலுவலகத்திலே 40 வயதுக்குக் கீழே இருக்கின்ற விதவைகளுக்கு, ஏழைத் தொழிலாளியாக இருக்கக்கூடிய பெண்களுக்கு ஓய்வூதியம் கிடைப்பதில்லை. அரசு அதனை ஆய்வு செய்து அனைவருக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்கள் நலனிலே மிகவும் அக்கறையோடு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

அதிலும், குறிப்பாகக் கணவனை இழந்த பெண்களுக்கு, அதுவும் குறைந்த வயதிலே கணவனை இழந்துவிட்ட பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே வட்டாட்சியர் அலுவலகத்தில் இளம் விதவைகள் சென்றவுடன் உடனடியாக அவர்களுடைய மனுவைப் பரிசீலிக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்குவதற்குக் காலதாமதம் இருக்குமேயானால், அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய தகுதிப் பட்டியலில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமேயானால் நிச்சயமாக காலதாமதம் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது இதுபோன்று சம்பவங்கள் அவருடைய தொகுதியிலே நடந்திருக்குமேயானால், தனிப்பட்ட முறையிலே எழுத்துபூர்வமாக எழுதித் தருவாரேயானால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. கே. மகேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**10—**

## பேருந்து இயக்குதல்

***37339—திரு. கே. மகேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதி நகரிலிருந்து எருக்கஞ்சேரி வழியாக கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு மாநகரப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதி நகரிலிருந்து எருக்கஞ்சேரி வழியாக கோயம்பேடு பேருந்து நிலையத்திற்குப் போதிய பேருந்து வசதிகள் இருப்பதால், புதிய வழித்தடம் ஒன்றில் நகரப் பேருந்துகளை இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**11—**

## பேருந்து இயக்குதல்

***37787—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம், சீனிவாச நகரிலிருந்து 100 அடி சாலை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், கிண்டி வழியாக பெசன்ட் நகருக்குப் புதிய மாநகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வில்லிவாக்கம், சீனிவாச நகரிலிருந்து 100 அடி சாலையில் கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், கிண்டி வழியாக பெசன்ட் நகருக்கு ஏற்கெனவே போதிய பேருந்து வசதிகள் இருப்பதால் புதிய நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**12—**

## கழிவுகளை அகற்றுதல்

***31691—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், எண்ணூர், மணலி போன்ற பகுதிகளில் இருக்கும் பல்வேறு பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் அனைத்தும் கடலில் கலந்து அங்குள்ள மீனவர்களுக்குப் பெரும் தீங்கு விளைவிப்பதால், அவற்றைக் களைய அரசு முற்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர், எண்ணூர், மணலி போன்ற பகுதிகளில் பல்வேறு பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து மீண்டும் தொழிற்சாலை உபயோகத்திற்கும் மரம் வளர்ப்பதற்கும் பயன்படுத்திக்கொள்கின்றனர். எஞ்சிய கழிவுநீர் கடலில் கலப்பதற்கு முன்னர், அதன் தரத்தை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆய்வு செய்கிறது. கடலில் விடப்படும் கழிவுநீரின் தரம் மற்றும் வெப்பநிலை ஆகியன வாரியம் நிர்ணயித்த தர அளவுக்கு உட்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 13, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**13—**

## சிப்காட் தொழிற்சாலைகள்

***39808–திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் சிப்காட் மூலம் தொழிற்சாலைகள் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியானது காவிரி டெல்டாவின் கடைமடைப் பகுதியாகும். இங்கு எந்தவிதமான தொழிற்பேட்டையும் இதுவரையில் தொடங்கப்படவில்லை. இப்பகுதியிலுள்ள மக்கள் முழுக்க, முழுக்க விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். தற்சமயம் வானம் பொய்த்துவிட்டதாலும், கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் தர மறுத்துவிட்டதாலும், இப்பகுதியிலுள்ள விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் எந்தவொரு பணியும் இல்லாமல் வறுமையில் வாடுகின்றனர். இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில், கடற்கரையோரமாக உள்ள பகுதியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டைகள் தொடங்க முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் புதியதாகத் தொழில் வளாகம் ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. சீர்காழி தொகுதிக்கும் கடலூருக்கும் 45 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. ஆகவே, 45 கிலோ மீட்டர் தூரத்தில் இன்னொரு சிப்காட் தொழில் வளாகத்தை உருவாக்குவது என்பது சற்று இயலாத காரியமாக இருக்கின்ற காரணத்தினால், சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு வேண்டிய கடன் உதவி மற்றும் தேவையான வசதிகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் அதற்கான வழிமுறை மற்றும் தகுந்த திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்து அதன் மூலம் தொழில் உற்பத்தியை சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

[2004 ஜூலை 26

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. ஏ.கே. செல்வராஜ், மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

14—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***22903–திரு. ஏ.கே. செல்வராஜ்:**

மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரமடை ஒன்றியம், கெம்மாரம்பாளையம் கிராமத்தில் புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வாண்டு வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10–45

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெம்மாரம்பாளையம் கிராமம் ஒரு மிகப் பெரிய கிராமம். 2435.5 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்ட கிராமம். இந்தக் கிராமத்திலே நிறைய ஆதிவாசி மக்கள் வசித்து வருகிறார்கள். தற்சமயம் இந்தக் கிராமத்திலே இருக்கிற மக்கள் அனைவருமே காளம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலேதான் வரவு–செலவுக் கணக்குகளையெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த காளம்பாளையம் கிராமத்திலேயிருக்கிற அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே அதிகமான அளவிலே டெபாசிட்களைச் செய்கிற மக்கள் இந்த கெம்மாரம்பாளையம் கிராமத்திலே இருக்கிறார்கள். ஆகவே,



2004 ஜூலை 26]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது இந்த ஆண்டு புதியதாக அந்த கெம்மாரம்பாளையம் கிராமத்திலே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, நபார்டு விதிமுறையின்படி, புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்கப்பட, அதன் செயல்நிலையில் குறைந்தபட்சம் 2000 ஹெக்டேர் சாகுபடி செய்யக்கூடிய விவசாய நிலங்கள் இருக்க வேண்டும். மேலும், குறைந்தபட்சம் 10 இலட்சம் ரூபாய் அளவிற்குக் குறுகியகாலக் கடன்கள் வழங்க வாய்ப்புகள் இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர், புதியதாக வங்கி ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள கெம்மாரம்பாளையம் கிராமத்தில் 1144 ஹெக்டேர் நிலங்கள் மட்டுமே பயிரிடக்கூடிய நிலையில் உள்ளன. இது நபார்டினுடைய விதிமுறையை நிறைவு செய்யவில்லை. மேலும், கடந்த 4 ஆண்டுகளில் கெம்மாரம்பாளையத்தில், அதனுடைய செயல்நிலையாகக் கொண்டுள்ள காளம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நஷ்டத்தில் உள்ளது. இந்த நிலையில் காரமடை ஒன்றியம், கெம்மாரம்பாளையம் கிராமத்தில் புதியதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்கப்படும்பட்சத்தில், ஏற்கெனவே செயல்பட்டு வரும் காளம்பாளையம் வங்கியின் செயல்நிலையும், அதன் கடன் வழங்கும் அளவும் குறையும். அதனால் அதன் வாழ்திறன் பாதிக்கும்; நஷ்டம் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. மேலும், நபார்டு வங்கி நிர்ணயம் செய்துள்ள நிலத்தின் அளவைவிட, குறைவான விளைநிலம் உள்ள கிராமத்தை எல்லையாகக் கொண்டு புதிய வங்கி வாழ்திறனோடு செயல்பட இயலாது. எனவே, கெம்மாரம்பாளையத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்க வேண்டுமென்று கோரிக்கைகள் ஒருபுறம் இருந்தால்கூட, ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கடந்த கால ஆட்சியினுடைய நிர்வாகச் சீர்கேட்டினால்,

பல்வேறு இடங்களில் மூடுவிழா காணக்கூடிய நிலையிலே, மிகவும் நலிவடையும் நிலையிலே இருந்து வந்தன என்பது அத்தனை பேருக்கும் தெரியும். அப்படி நலிவடைந்த நிலையிலே, மூடுவிழா காணக்கூடிய நிலையிலே, அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுடைய நிலை என்ன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில், 1999—ல் நஷ்டத்திலிருந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 3486. 2002—2003—ல் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், நஷ்டம் 2202 என்ற அளவிற்கு அந்த எண்ணிக்கை குறைந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், அவைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திமுக ஆட்சியின்போது, பல்வேறு வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அன்றைக்குத் தலைவர்களாக இருந்தவர்களுடைய நிர்வாகத்திலே ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக, பல்வேறு வங்கிகள் நிதி நிலைமையில் சிக்கி, சீரழிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு அபாய நிலை இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட அந்தக் கூட்டுறவு வங்கிகளில் கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளை விசாரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், கடந்த காலத்திலே கூட்டுறவுத் துறையிலே இருந்த இயக்குநர்கள், தலைவர்கள், அவர்களுடைய நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும், அதேபோன்று, பல்வேறு கூட்டுறவுத் துறைகளையும் சீரழித்ததற்காக, அந்த முறைகேடுகள்மீது துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இளவழகன்.



**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியினுடைய நிர்வாகச் சீர்கேட்டினால், பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நஷ்டம் எற்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, ** வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளவழகன், கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. பொதுவாகப் பேசுங்கள்.

*முற்பகல் 10—50*

**திரு. ப. இளவழகன்:** என்னுடைய அரியலூர் தொகுதியில் பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூடப்பட்டே இருக்கின்றன. இந்த வங்கிகளிலே கடன் பெற்றவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தும்கூட ஒரு ரூபாய்கூட அந்தக் கடனை அடைக்க மனம் இல்லாமல் ஏமாற்றி வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் குறிப்பை அதனுடைய விவரங்களைத் தனியாகக் கொடுப்பார்களேயானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் எல்லா வகையிலும் கூட்டுறவுத் துறையினுடைய ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அதேபோன்று வழக்குகளையும் துரிதப்படுத்தி கொண்டிருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய இதய தெய்வம் டாக்டர்...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2004 ஜூலை 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வராஜ், அவர் பெருந்தன்மையோடு அதுபற்றிச் சிந்திப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, விட்டுவிடுங்கள்.

அடுத்து வினா எண் 15, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**15—**

## கால்நடை தீவனத் தொழிற்சாலை

***2779—திரு. ப. இராஜரெத்தினம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் பகுதியில் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராயிரம் ஆண்டுகாலம் ஓய்ந்து கிடந்ததற்குப் பின்னால் வாராது வந்த மாமணியாய்த் தமிழ்த் திருநாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிகின்றேன்.* பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம் என்பது கால்நடை வளர்ப்பை முக்கியத் தொழிலாகக் கொண்ட மாவட்டம் என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த மாவட்டத்திலுள்ள மக்கள் கால்நடை வளர்ப்பின் மூலம் பெறுகின்ற வருமானத்தைத்தான் முக்கிய வருமானமாகக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு திருச்சி, பெரம்பலூர், கரூர் என்ற மூன்று மாவட்டங்களுக்கு ஒன்றாக இணைந்து செயல்பட்டு வருகிற திருச்சி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கமான ஆவின் நிறுவனத்திற்குத் தேவைப்படுகின்ற பால் உற்பத்தியின் அளவை 60 சதவீதத்திற்குத் தருகின்ற மாவட்டம் எங்களது பெரம்பலூர் மாவட்டம் என்பது அனைவருக்கும் தெரியும்.



2004 ஜூலை 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராஜரெத்தினம், பெரம்பலூர் மாவட்டத்தை எல்லோரும் வாழ்த்துகிறோம், போற்றுகிறோம். கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை சம்பந்தமாக ஒரே ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** ஆகவே ஈரோடு மற்றும் மதுரையிலிருந்து தான் கால்நடைத் தீவனங்களைப் பெற்று வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மேலும் கால்நடைத் தீவன மூலப்பொருட்களான மக்காச்சோளம், தவிடு, பிண்ணாக்கு போன்ற மூலப்பொருட்கள் பெரம்பலூர் பகுதியிலே அதிகமாக உற்பத்தியாகி வருகின்றன. மேலும் பெரம்பலூர் பகுதியிலே திருச்சி—சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இத்தகைய தொழிற்சாலை அமைப்பதற்குப் போதிய இடவசதியும் உள்ளது. ஆகவே, இங்கு கால்நடைத் தீவனத் தொழிற்சாலை அமைத்தால் பெரம்பலூர் பகுதி மாத்திரம் அல்ல, திருச்சி, தஞ்சாவூர் போன்ற பகுதிகளும் நல்ல பலன் அடைய வாய்ப்பு உள்ளதால் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து பெரம்பலூர் பகுதியிலே புதியதாக கால்நடைத் தீவனம் தயாரிக்கின்ற தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைத் தீவனம் தயாரிக்க இடுபொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக அம்மாவட்டத்தில் வசதிகள் இல்லை. கால்நடைத் தீவனம் தயாரிக்கத் தேவைப்படும் இடுபொருட்களான பருத்திக்கொட்டை, கடலைப் பிண்ணாக்கு, சோளம், கம்பு, கோதுமைத் தவிடு, அரிசித் தவிடு, தாது உப்புகள், வெல்லப்பாகு போன்றவற்றை வாங்க வேண்டும். மேலும், கால்நடைத் தீவனம் தயாரிக்கும் ஆலை நிறுவிட அரசுக்குக் கூடுதலாக நிதி தேவைப்படும். எனவேதான் பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றேன்.

கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் மையத்தினால் ஆம்பூர், ஈரோடு, மாதவரம் போன்ற இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் தனியார் நிறுவனங்களால் கால்நடைத் தீவனம் தயாரிக்கப்படுகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மாவட்ட கால்நடைப் பண்ணைகள் மற்றும்

ஆட்டுப் பண்ணைகளுக்குத் தேவைப்படும் கால்நடைத் தீவனங்கள், சென்னை நந்தனத்திலுள்ள கோழியின ஆராய்ச்சி நிலையம், ஆவின் மற்றும் தமிழ்நாடு மாவட்ட பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்துதான் வாங்கப்படுகின்றன. இத்துறையின்கீழ் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏதும் செயல்படவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க அப்பகுதியில் தீவனத் தொழிற்சாலை அமைப்பது குறித்து, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்றுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. ந. கணபதி. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**16—**

**கால்நடை மருத்துவமனை**

***37520—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு கால்நடை பராமாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, நாணக்கால்மேடு பகுதியில் கால்நடை மருத்துலமனை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, நாணக்கால்மேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் செயற்குறிப்பில் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், எனது வானூர் தொகுதிக்குட்பட்ட கிளாப்பாக்கம் ஊராட்சியிலுள்ள நாணக்கால்மேடு



மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் ஐந்தாயிரம் கால்நடைகள் உள்ளன. அங்குள்ள கால்நடைகள் மருத்துவ வசதிக்காக சுமார் 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தூரமுள்ள உப்புவேலூர் அல்லது முருக்கேரிக்குச் செல்ல வேண்டியிருப்பதால், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் மறுபரிசீலனை செய்து இங்குள்ள விவசாயிகளின் நலன் கருதி அடுத்த ஆண்டிலாவது ஒரு கால்நடை மருத்துவமனை அல்லது பகுதிநேர மருத்துவமனையாவது அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, நாணக்கால்மேடு கிராமத்திலுள்ள மொத்தக் கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 794 ஆகும். இதன் அருகில் ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் உப்புவேலூர் கால்நடைக் கிளை நிலையமும், பத்து கிலோ மீட்டர் தூரத்தில் கிளியனூர் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன.

ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க வேண்டுமானால், தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் நாற்பதுக்கும் மேற்பட்டிருக்க வேண்டும். உள்நோயாளி கொட்டகை வசதி இருக்க வேண்டும். ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி இருத்தல் வேண்டும். ஒரு கால்நடை மருந்தகம் தொடங்க வேண்டுமானால், கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரும் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கும் மேற்பட்டிருக்க வேண்டும். தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை முப்பதுக்கும் மேற்பட்டிருக்க வேண்டும். கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரும் இடத்திற்கும் அதன் அருகில் செயல்பட்டுவரும் கால்நடை மருந்தகத்திற்கும் இடைப்பட்ட தூரம் எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்பட்டிருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் தேவையான தீர்மானங்களை நிறைவேற்றித் தர வேண்டும். நாணக்கால்மேடு கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ தற்போது அங்கு செயல்படாத நிலையில், நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க வழி இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 26

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது இதைப் பரிசீலிக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த ஆண்டு அமைச்சர் சொல்கிற நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றுவீர்களானால், அமைத்துக் கொடுப்பார். (சிரிப்பு)

வினா எண் 17, திரு. செ. அண்ணாதுரை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**17—**

**கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்**

***6974—திரு. செ. அண்ணாதுரை:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் பால் உற்பத்தியை முறையாக நெறிப்படுத்தி நடத்தும் வகையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதியில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை.

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டால் இந்த ஆண்டு சங்கம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் ஏற்கெனவே 7 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 26]

மேலும், புதிதாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டால் தகுதி அடிப்படையில் சங்கம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்த ஆண்டே உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. ப. அரசன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**18—**

**பாலியெஸ்டர் நூற்பாலை**

***38690—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலையை பாலியெஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலையாக மாற்றும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறந்தாங்கியில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலையை பாலியெஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலையாக மாற்றும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைத்தறித் துறையில் தேனி, எட்டையபுரம் போன்ற மில்களில் பாலியஸ்டர் நூல் தயாரிக்கிற வகையில் இப்போது இரண்டு நூற்பாலைகளை மாற்றியிருக்கிறார்கள். அப்படி மாற்றுகிறபோது அந்த நூற்பாலைகள் இலாபத்திலே இயங்குகிற ஒரு சூழ்நிலை உருவாகிறது. அங்கேயிருக்கிற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது. அந்த வகையில் அறந்தாங்கியிலே இயங்குகிற கூட்டுறவு நூற்பாலை பாலியெஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலையாக மாற்றித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கியிலே இயங்கிவரும் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை *10,560* கதிர்களுடன் தனது உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆலையில் 22 S Hank, 34 S Cone, 40 S Hank, 40 S Cone, 60 S Hank, 60 S Cone போன்ற பருத்தி நூல்கள் இங்கே தயாரிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு காரணங்களினால் ஆலை நட்டத்திலே இயங்குவதுடன் நிதிநிலையும் மோசமடைந்துள்ளது. இந்தக் கூட்டுறவு நூற்பாலையை பாலியெஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலையாக மாற்றும் கருத்துரு அரசிடம் பரிசீலனையில் இல்லை. மேலும், ஆலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதாலும், ஆலையில் குவிந்த நட்டம் *31-5-2003* வரை சுமார் *2411* இலட்சம் என்பதாலும் ஆலையை மேலும் விரிவுபடுத்தும் திட்டமோ, மாற்றியமைக்கும் திட்டமோ ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *19*, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**19—**

### மணிக் கூண்டைச் சீரமைத்தல்

***20583—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு நகர பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள மணிக் கூண்டைச் சீரமைத்துக் கடிகாரத்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்செங்கோடு நகராட்சியின் நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால், திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள மணிக்கூண்டைச் சீரமைத்துக் கடிகாரத்தை இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *20*, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**20—**

### சாலை வசதி

***28502—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட விலவூர் பேரூராட்சியில் மூலச்சலிலிருந்து ஊர்குளம் ஆதிதிராவிடர் காலனி வழியாக சரல்விளை பாலம் வரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட விலவூர் ஊராட்சியில் மூலச்சலில் இருந்து ஊர்குளம் ஹரிஜன காலனி வழியாக சரல்விளை பாலம் வரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட விலவூர் ஊராட்சியில் ஊர்குளம் ஆதிதிராவிட மக்கள் வசித்து வருகின்ற பகுதியாகும். அந்த மக்களின் தேவையை முன்னிட்டு விலவூர் ஊராட்சியில் மூலச்சல் சரல்விளைச் சாலையைச் சரி செய்து பாலம் அமைப்பது என்பது மிகவும் அவசியமாகும். அந்தப் பகுதி மக்கள் மாவட்ட மருத்துவமனைக்கு மிக விரைவாக வந்து செல்லவும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாய மக்கள் தக்கலை வேட்டைச்சந்தை வந்து செல்வதற்கும் மிகவும் தேவையானதாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் சிறப்புத் திட்டமாக இதை மறுபரிசிலனை செய்து இந்தச் சாலையை அமைத்து பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2004 ஜுலை 26

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட விலவூர் ஊராட்சியில் மூலச்சலில் இருந்து ஊர்குளம் ஹரிஜன காலனி வழியாக சரல்விளை பாலம் வரை சாலை அமைக்க வேண்டுமாயின் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு தடுப்புச் சுவர் மற்றும் ஜல்லி வைத்து தார்ச் சாலை அமைக்க ரூ.30 இலட்சம் தேவைப்படுகிறது. இச்செலவினத்தை ஏற்க ஊராட்சியில் போதிய நிதிவசதி இல்லை. எனினும் வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப இந்தப் பணி மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கை அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன், மனுக்கள் குழுத் தலைவர்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 49 முதல் 58 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



2004 ஜுலை 26]

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-05

## 4. அறிவிப்பு

### மானியக் கோரிக்கைகள், 2004-2005, பேரவையில் முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004-2005 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for Grants for the financial year 2004-2005."



## 5. மானியக் கோரிக்கைகள், 2004-2005, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை

(இ) கோரிக்கை எண் 30 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

(ஈ) கோரிக்கை எண் 32 – சட்டத் துறை

(உ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

### (அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004-2005 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 3, நீதி நிருவாகம், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.142,53,99,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 11, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி நகரில் சப்-கோர்ட் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,53,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 35, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு தாலுகா தலைநகரங்களிலும் உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,53,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 47, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி தேன்கனிக்கோட்டையில் உள்ள நீதிமன்றம் பழைய கட்டடத்தில் இயங்குவதால் அதற்குப் புதியதாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,53,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13, எரிசக்தித் துறை. மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.260,11,65,000/–, மூலதனக் கணக்கில்



ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.179,25,74,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 34, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதியில் நிலவும் மின் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்குப் புதிதாகத் துணை மின் நிலையம் ஒன்று செல்லம்பட்டியில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,11,65,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.179,25,74,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 46, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, மதகொண்டபள்ளி பகுதியில் அதிகமான தொழிற்சாலைகள் இருப்பதால் நிரந்தரமாக மதகொண்டபள்ளியில் ஒரு துணை மின் நிலையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,11,65,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.179,25,74,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் பகுதியில் நிலவும் குறைந்த மின் அழுத்த நிலையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம்

[திரு. ப. அரசன்] [2004 ஜூலை 26

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,11,65,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.179,25,74,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 30 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30, தகவல் தொழில்நுட்பவியல் துறை, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.16,55,26,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 12, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி அருகே குரும்பூர் பகுதியில் தொழில்நுட்பப் பூங்கா தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,55,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 32, திரு. லா. சந்தானம்.



2004 ஜூலை 26]

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இணையதளம் (Internet) மூலமாக சுற்றுச்சூழல் கல்வி கற்பிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,55,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 32 – சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32, சட்டத் துறை, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,99,50,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 33, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,99,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரறிஞர் அண்ணா பிறந்த பூமியான காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம் தொடங்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,99,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**(உ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 18, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,335,38,69,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,10,79,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 10, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியில் உள்ள பெருமருதூர் அம்பலவாணனேந்தல், கரூர் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,335,38,69,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,10,79,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 52, திரு. கே.வி. முரளிதரன்.





**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியில் முப்பது படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,335,38,69,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,10,79,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 31, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,335,38,69,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,10,79,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், எரிசக்தித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை மற்றும் சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவரவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை ❁ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப்

❁ 149 முதல் 244 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I முதல் IV வரை அச்சிடப்பெற்றுள்ளன.

பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவரவர்கள் படிப்பதற்கு வசதிக்கேற்ப கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை * நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், பதிலுரையில், அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், இரண்டு அமைச்சர்களினுடைய துறைகள் தொடர்பான கருத்துகள் அனைத்தையும் பொதுவாகப் பேசலாம். பத்து மணித் துளிக்குள்ளே பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், எரிசக்தித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, சட்டத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை ஆகியவற்றின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி.

எல்லா Government Hospitalகளிலும் sanitary மிகவும் bad ஆக இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள், அதை உடனடியாக எல்லா hospitalகளிலும், அந்த sanitary cleanersஐ ஏற்படுத்த உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* 245 முதல் 322 வரையிலான பக்கங்களில் இணைப்பு V-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மாவட்டங்களினுடைய மாவட்ட மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள், வட்டம் சாரா மருத்துவமனைகளினுடைய சுத்தம் குறித்து, அதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அதற்கான tenders விடப்பட்டிருக்கின்றன. கூடிய விரைவில், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நான் சொன்னதல்ல; Recently, The Director of Human Rights Commission visited the Government Hospital in Chennai. She found the sanitary condition of the hospital bad. அதை அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இந்தியாவிலே மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழகத்தினுடைய சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில், தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும் சரி, மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி—கிட்டத்தட்ட, நமது தமிழ்நாட்டிலே, 1413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன; 8682 துணைச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன; 29 மாவட்ட தலைமை சுகாதார மையங்கள் இருக்கின்றன; அவை போக, 156 தாலுகா Hospitals இருக்கின்றன. இதற்கு மேலாக, 80 Non-Taluk Hospitals இருக்கின்றன; 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இருக்கின்றன. அத்தனை மருத்துவமனைகளிலும் —மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, நமது அம்மா அவர்கள், இது சம்பந்தமாக ஓர் ஆய்வு நடத்தி, போர்க்கால அடிப்படையிலே, அத்தனை மருத்துவமனைகளிலும் இருக்கக்கூடிய மருத்துவர்களாக இருந்தாலும் சரி, அங்கே இருக்கக்கூடிய செவிலியர்களாக இருந்தாலும் சரி, Sanitary Workersஆக இருந்தாலும் சரி, அத்தனை பணியிடங்களையும் உடனடியாக நிரப்புவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா Government Hospitalகளிலும், Doctors மிகவும் குறைவாக இருக்கிறார்கள். எங்கள் தொகுதியிலே, தேன்கனிக்கோட்டை Hospitalஇல், ஒரே ஒரு Doctor இருக்கிறார். அந்த Hospitalக்கு ஒரு Lady Doctor வேண்டும். ஒவ்வொரு Hospitalக்கும் 4 Doctor அல்லது 5 Doctor இருந்தால்தான் மிகவும் நன்றாக இருக்கும். 400லிருந்து 500 Patients தினம் வருகிறார்கள். எல்லா Hospitalகளிலேயும் Doctorஐ அதிகமாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, எல்லா Government Hospitalகளிலும், evening timeஇல், கொசு, mosquito மிகவும் அதிகமாக இருக்கின்றது. ஆகவே, அதற்கு mosquito nets அல்லது tortoise அல்லது "All-Out" வாங்கிக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், Ayurvedic Medicineக்கு Government College இல்லை. அதற்கு Government College ஒன்று அமைத்துக் கொடுத்தால், மிகவும் நன்றாக இருக்கும்.

அதேபோல, இந்தியாவிலே, இப்போது 102 கோடி என்ற அளவுக்கு மக்கள் தொகை இருக்கிறது. Family Planning ஐ அமல் செய்வதற்கு நம்முடைய தமிழகத்தில் அதற்கென்று ஒரு சட்டமே கொண்டுவந்தால் நன்றாக இருக்கும். Local Body தேர்தலுக்கு contest செய்வதற்கு, 2 குழந்தைகளுக்கு மேல் இருந்தால் contest செய்யக்கூடாது என்றும், ரேஷன் கார்டு கொடுக்கும்போதும்...

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பிறப்பு விகிதம் 1999–ல் 19.3ஆக இருந்தது; 2002–ல் பிறப்பு விகிதம் 18.5 ஆக குறைந்து, இப்போது 2003–ல் 17.8ஆக குறைந்து உள்ளது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தேசிய அளவில் 25–வது இடமாக உள்ளது.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் போன பட்ஜெட்டில் பான் பராக் விற்பதை எல்லாம் ban பண்ணி இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், இப்போது எல்லா கடைகளிலும் பான் பராக் விற்கப்படுகிறது. இப்போது கும்பகோணம், தஞ்சாவூரிலே எல்லாம் 18 வயதுக்குக் கீழே



இருப்பவர்களுக்கு இல்லை என்று போர்டே போட்டு இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை நல்லா அமல்படுத்தினால் ரொம்ப நல்லா இருக்கும் என்று அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. இதுபோன்ற புகார்கள் ஏதாவது இருந்தால் நீங்கள் உடனடியாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எச். ராஜா:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், உறுப்பினர் பேசிய பிறகு குறுக்கீடு செய்வாரேயானால் சரியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இல்லை என்றால், பேசுபவருக்கு தடை ஏற்படும் என்கின்ற காரணத்தாலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தால் பரவாயில்லை. கேள்வி மாதிரி கேட்கிறார்கள்.

**திரு. எச். ராஜா:** அவர் பேசுகிற பழக்கம் அப்படித்தான்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு language problem இருக்கிறது. நான் தங்கத் தமிழில் பேசுவதற்கே நீங்கள் எல்லாம் சந்தோஷப்பட வேண்டும். ஏனென்றால் நான் படித்து இருப்பதெல்லாம் தெலுங்கு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, PMRY – பிரதான் மந்திரி ரோஜ்கார் யோஜனா என்ற ஒரு நல்ல schemeஐ மாண்புமிகு முன்னாள் பிரதமர் கொண்டு வந்தார். அதிலே 30 beded hospital in every Block என்று கொண்டு வந்தார். கன்னியாகுமரி மாவட்டத்தைவிட எங்கள் தளி யூனியன் மிகவும் பெரியதாக உள்ளது. அஞ்செட்டிக்கு ஒரு 30 bedded hospital கொடுத்து இருக்கிறீர்கள். அதற்கு ரொம்ப நன்றி. அதுபோல் தளிக்கும் 30 bedded hospital வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் PMRY Scheme–ல் 2007–க்குள் இந்தியாவில் எல்லா ஊர்களுக்கும் current கொடுக்க வேண்டுமென்று சொல்லி ஒரு நல்ல scheme அவர் கொண்டுவந்திருக்கிறார். எனது தளி constituency-ல்

Hill Area, Forest Area நிறைய இருக்கின்றன. Hill Area-வில் ரொம்ப ஊர்களில் Low voltage இருக்கிறது. Current இல்லாமல் நிறைய ஊர்கள் இருக்கின்றன. Hills Area Development என்று சொல்லி நாமக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் (கொடைக்கானல்) ஆகியவற்றிற்கு அந்த schemeஐ போட்டு இருக்கிறார்களே தவிர—தருமபுரி மாவட்டத்தில் Hills Area நிறைய இருக்கின்றன; ஆனால்—தருமபுரி மாவட்ட பெயரே அதில் வரவில்லை. மாண்மிகு அமைச்சர் அவர்கள் அந்த Hills Area Development Schemeல் தனி Constituencyக்கு Solar current, low voltage இல்லாமல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்றால் மின் கடத்திகள் போடப்பட வேண்டும். மின் கடத்திகள்—Conductors—போடப்படுவதற்கு Forest Areaஆக இருந்தால் வனத் துறையினுடைய முன்னனுமதி பெற வேண்டும். வனத் துறையினுடைய அனுமதி பெறாமல் அதைப் போட முடியாது. எனவே, அப்படிப்பட்ட கிராமங்கள் தமிழ்நாட்டிலே எங்கெங்கே எல்லாம் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து கிட்டத்தட்ட 150 கிராமங்களுக்கு 10 கோடி ரூபாய் செலவில் சூரிய ஒளியிலே இயங்கக்கூடிய அளவிற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை TEDA (Tamil Nadu Energy Development Agency) மூலம் எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வனத் துறை சம்பந்தப்படாத இடத்தில் மின் தடம் அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பின் அதுபற்றிய தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கவனத்திற்குக் கொண்டுவருவாரேயானால் அந்த இடத்திலே மின் தடம் ஏற்படுத்தி நிச்சயமாக மின் இணைப்புக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, agricultural purposeக்கு service connection கேட்கிறார்கள், அதற்காக application போட்டால் 8 வருடங்கள், 9 வருடங்கள் ஆனாலும்கூடக் கொடுப்பதில்லை. அதுபோல் 25 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் கட்டினால் அதற்கும் 2 வருடங்கள் delay ஆகிறது. கர்நாடக மடாநிலத்தில் application போட்டால் 6 மாதத்திலே service connection கொடுக்கிறார்கள். அது agricultureக்கு ரொம்ப வேண்டியிருக்கிறது.



Application போட்டால் 6 மாதத்தில் இலவசமாக அதைக் கொடுத்தால் ரொம்ப நல்லா இருக்கும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் ராஜா அவர்கள் ஒரு petition கொடுத்தார்கள். Government Hospital, Karaikudi, Blood Bank.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா மனுவை உங்களிடமே கொடுத்து விட்டாரா?

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசும்போது, மானியக் கோரிக்கையிலே அதையும் அமைச்சர் அவர்களிடம் சொல்ல வேண்டும் என்பதற்காக குறித்துக் கொடுத்து இருந்தேன். அதாவது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரத்த வங்கிக்கு நிதி ஒதுக்கப்பட்டு இரத்த வங்கியும் அங்கே துவங்கப்பட்டது. ஆனால் அதற்கான Refrigerator ரிப்பேர் ஆகியிருக்கிறது என்று 20–1–2004–ல் அதற்காகக் கடிதம் அனுப்பப்பட்டு இன்னமும் 6½ மாதங்கள் ஆகியும்கூட Refrigerator ரிப்பேர் செய்யாத காரணத்தால் இரத்த வங்கி இயங்காமல் இருந்து கொண்டிருக்கிறது. எனவே அரசு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த வங்கியைப் பொறுத்தவரையிலே இதுபோன்ற குறைபாடுகள் இருக்கக்கூடாது என்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை இரத்த வங்கிகளுக்கும், மாவட்ட அரசு மருத்துவமனையில் இருக்கக்கூடிய இரத்த வங்கியாக இருந்தாலும் சரி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே இருக்கக்கூடிய இரத்த வங்கியாக இருந்தாலும் சரி— கிட்டத்தட்ட 220 இரத்த வங்கிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இந்த இரத்த வங்கியினுடைய சட்டத்தில் இப்போது மத்திய அரசு சில சட்டங்களை மாற்றி இருக்கிறது. அதற்கு லைசென்ஸ் எடுக்க வேண்டுமென்றால் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்பட வேண்டும்–நீங்கள் கூறிய குறையை உடனடியாக ஆய்வு செய்து அதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Courtல் staff ரொம்ப குறைவாக இருக்கிறார்கள். எனவே, அங்கே போதுமான staff போட்டால் ரொம்ப நன்றாக இருக்குமென்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தேன்கனிக்கோட்டையிலே Court building ரொம்ப damageஆகி இருக்கிறது. மழை வந்தால் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. அதற்கு building கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றிச் சில கோரிக்கைகளைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதி, கிருஷ்ணகிரி divisionல் சேர்ந்து இருக்கிறது. கிருஷ்ணகிரி divisionல் 3200 கிலோ மீட்டர், ஒரே divisionல் இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் ஆயிரம் கிலோ மீட்டருக்கு ஒரு division என்று இருக்கிறது. 3200 கிலோ மீட்டர் உள்ள divisionக்கும் ஒரே fund கொடுக்கிறீர்கள், மீதியிருக்கிற divisionக்கும் ஒரே fund கொடுக்கிறீர்கள். அங்கே 25 கோடி ரூபாய் ஒரு divisionக்குக் கொடுத்தால், இங்கேயும் 25 கோடி ரூபாய் கொடுக்கிறீர்கள். ஆயிரம் கிலோ மீட்டர் இருக்கிற divisionக்கும் 25 கோடி ரூபாய், 3200 கிலோ மீட்டர் இருக்கிற divisionக்கும் 25 கோடி ரூபாய் என்று கொடுத்தால் போதாது. அதை இரண்டு divisionகளாக மாற்ற வேண்டும். இல்லையென்றால் இந்த divisionக்கு 50 கோடி ரூபாய் கொடுத்தால்தான் நன்றாக இருக்கும். மேலும், எனது தொகுதியில் 530 கிலோ மீட்டர் இருக்கிறது. Inter State Connection Roads நிறைய இருக்கின்றன. கர்நாடக மாநிலத்தில், கர்நாடக மாநிலத்தில் Inter State Connection Roads-க்காக மத்திய அரசிடமிருந்து funds வாங்கி நன்றாகப் போட்டிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய constituency-ல் ஒரு ரோடுகூட சரியாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது தனி தொகுதிக்கு...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதியை ஒட்டுமொத்தமாகப் பெற்று போக்குவரத்துத் துறையில் இருக்கிற அத்துணை கோட்டங்களுக்கும், அந்தக் கோட்டங்களில் உள்ளடக்கிய கிலோ மீட்டர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல்தான் proportionateஆக நிதி ஒதுக்கப்படுகிறதேயொழிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஒட்டுமொத்தமாக அனைத்துக் கோட்டங்களுக்கும் சரிசமமாக நிதி ஒதுக்கப்படுவது இல்லை. ஒரு கோட்டத்திற்கு ஆயிரம்



கிலோ மீட்டர் என்று இருந்தால் அதற்குத் தகுந்த மாதிரி நிதியும், அதற்கு அதிகமாக கிலோ மீட்டர்கள் இருந்தால் அதற்குத் தகுந்த மாதிரி நிதியும்தான் தற்போது ஒதுக்கப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தனி constituencyல் 530 கிலோ மீட்டர் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது தொகுதிக்கு வந்தால் ரொம்ப நன்றாக இருக்கும். எல்லா ரோடுகளும் ரொம்ப damageஆகி இருக்கின்றன. எனது தனி தொகுதிக்கு 10 கோடி ரூபாய் special funds allot செய்தால்தான் அனைத்து ரோடுகளும் நன்றாக இருக்கும். ஏனென்றால் எனது தொகுதி கர்நாடக மாநிலத்தை ஒட்டியிருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் இருக்கிற ரோடுகளை எல்லாம் நன்றாகப் போட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற ரோடுகள் நன்றாகப் போடப்படவில்லை. CRF-Central Road Funds கேட்டு தமிழக அரசு மத்திய அரசுக்குக் கோரிக்கை வைக்க வேண்டும். இந்த CRF-லே 3 கோடி ரூபாயை எங்கள் தொகுதிக்குக் கொடுத்தால் ரொம்ப நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பேருந்துகள் அதிகம் வேண்டப்படுகின்றன. 5, 6 புது routes கொடுத்தால்தான் எங்கள் தொகுதியில் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். இருக்கிற பேருந்துகள்கூட நிறைய damage ஆகி இருக்கின்றன. போன வாரம் அமைச்சர் அவர்கள் தளி-சென்னை பேருந்தைப் புதியதாக விட்டார்கள். அதற்கு அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல என்னுடைய பஞ்சாயத்தில் கூட்டூர் என்ற இடத்திற்கு பேருந்து வேண்டுமென்று எல்லா கட்சிகளின் சார்பிலும் சாலை மறியல் செய்தார்கள். ஆனால் இதுவரைக்கும் நடவடிக்கை இல்லை. அந்தக் கூட்டூருக்கு 14-வது நம்பர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதியைப் பொறுத்தளவிலே நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே என்னிடம் நேரிலே அழைத்து, 'நான் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றபோது பார்த்தேன். அந்தப் பகுதியிலே சற்றுக் குறைவாக பேருந்து வசதிகள் இருப்பதாக அறிகிறேன்,

அதை உடனடியாக நீங்கள் சரி செய்ய வேண்டும்' என்று நீங்கள் கேட்காமலே மாண்புமிகு அம்மா அவர்கள் உங்கள் தொகுதிக்காக ஆணையிட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் இப்போது பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து இப்போது ஒட்டுமொத்தமாக தனி தொகுதி மட்டுமல்ல, அந்த தருமபுரி மாவட்டம் முழுவதற்கும் பல்வேறு புதிய வழித்தடங்களிலே பேருந்து வசதி மற்றும் புதிய பேருந்துகளாக மாற்றுவதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம், நடவடிக்கைகளை எல்லாம் இப்போது எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன், உங்களிடம் நேரடியாகவும் சொல்லி இருக்கிறேன். ஆகவே, இன்னமும் ஏதாவது குறைபாடுகள் இருந்தால்கூட நீங்கள் தெரிவித்தால் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–25*

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என் தனி Constituency மேல் இவ்வளவு அக்கறை வைத்து பேருந்து விடுவதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அமைச்சர் அவர்களும் Highways Ministerகூட என் தொகுதிக்கு வந்தால் ரொம்ப நன்றாக இருக்கும். எப்படி என்றால் பஸ் ரொம்ப damage ஆகி இருக்கிறது. இருக்கிற பேருந்துகள் glass இல்லாமல் இருக்கிறது. அதன்மீது எல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகளுக்கு, காத்து இருப்பவர்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டும், 40 ஆயிரம் மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. பதிவு செய்த மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை என்று சொல்லும்போது, கிட்டத்தட்ட 5 இலட்சம் விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி பதிவு செய்து இருக்கிறார்கள். எனவே, உடனடியாக இந்தக் கோரிக்கையை நிறைவு செய்ய வேண்டும் என்றால் 7 ஆயிரம் கோடி ரூபாய் ஏற்பாடு செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, அதற்கு மின் சப்ளை செய்யப்பட வேண்டும். கிட்டத்தட்ட 1500 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தி செய்து சப்ளை செய்தாக வேண்டும். இந்த இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன.



எனவே இன்னொரு Self Financing Scheme இருக்கிறது. ரூ.10 ஆயிரம், ரூ.25 ஆயிரம், ரூ.50 ஆயிரம். அவசரமாக, உடனடியாக யாருக்காவது மின்சாரம் வேண்டுமென்றால் ரூ.10 ஆயிரம் திட்டத்திலே Self Financing Scheme–லே வரலாம்; ரூ.25 ஆயிரம் திட்டத்திலே வரலாம்; ரூ.50 ஆயிரம் கட்டலாம். ரூ.50 ஆயிரத்திற்கு மேலே கூடுதலாக எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, எங்களுக்கு மின்சாரம் வேண்டும் என்று சொல்பவர்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் எவ்வளவோ பேர் இன்றைக்கு மின் வாரியத்தை அணுகி மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்கள் அப்படி எல்லாம் வரும்போது, உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் இருந்தால் Self Financing Scheme–லேகூட அவர்களை வரச்சொன்னால் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று நீதிமன்றத்திலே staff இல்லை என்ற குறையைச் சொன்னார்கள். சாமிநாதன் கமிட்டி ஆய்வு செய்து இருக்கிறது. அந்த ஆய்விலே அலுவலர்கள் சில துறைகளிலே மிகுதியாக இருக்கிறார்கள் என்று கண்டறிந்துள்ளது. எந்த எந்தத் துறையில் மிகுதியாக இருக்கிறார்கள் என்று கண்டறிந்து அவர்களை நம்முடைய நீதிமன்றத் துறைக்கு மாற்றம் செய்ய முடியுமா என்பது குறித்துக்கூட ஆராயப்படுகிறது. அப்படி மாற்றம் செய்யப்படும்போது, நிச்சயமாக இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

Court building பொறுத்தவரையில், ஒரு தொலைநோக்குப் பார்வையோடு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை, கிட்டத்தட்ட ஒரே ஆண்டிலே எல்லா Court building-ம் கட்டப்பட வேண்டும் என்பதுதான். ஆனால் அதற்குக் கிட்டத்தட்ட estimate எடுத்தது 140 கோடி ரூபாய். அந்த 140 கோடி ரூபாய்க்கு நாம் matching grantஆக 70 கோடி ரூபாய் போடுவதற்குத் தயாராக இருக்கிறோம். மத்திய அரசு 70 கோடி ரூபாய் கொடுத்தால் ஒரே வருடத்திலே தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை நீதிமன்றங்களுக்கும், புதிய கட்டடங்கள் கட்டப்படும் ஒரு நிலை ஏற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன் என்ன?

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின் இணைப்பைப் பற்றி மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு ஒரு கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் காவிரி டெல்டாவிற்கு நீங்கள் சலுகை அளித்திருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலேயும் காவிரி டெல்டா இருக்கிறது. இரண்டு, மூன்று முறை உங்களிடத்திலேகூடச் சொல்லியிருக்கிறேன். ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திற்கு அளித்துள்ளதைப்போல, என்னுடைய தொகுதியில் இருக்கிற காவிரி டெல்டா பகுதிக்கும் அந்தச் சலுகை தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே காவிரி டெல்டா பகுதியாக இருந்தால் நிச்சயமாக அதற்குச் சிறப்பு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் 2004–2005 ஆம் ஆண்டுக்கான சட்டம், எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், மக்கள் நல்வாழ்வு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கும்பகோணம் தனியார் பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்தில் மரணம் அடைந்த குழந்தைகளை நேரில் சென்று பார்த்து அஞ்சலி செலுத்தியும், அவர்களது பெற்றோர்களுக்கு ஆறுதல் கூறியும், பிறகு எஞ்சிய உயிர்களைப் பாதுகாக்கிற வகையில் பெரு நகரங்களில் இருந்து டாக்டர்களை வரவழைத்து சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து அவர்களைக் காப்பாற்றி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிதி உதவியை வழங்கி ஏழையின் துயரை நீக்கும் கருணைத் தாய் அம்மா அவர்களுக்கு, காவிரி டெல்டா பகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–30





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நீதித் துறையிலும் ஒரு வியக்கத்தகு சாதனையைச் செய்து வருகிறது. நீதி நிருவாக மேம்பாட்டுக்கான ஒதுக்கீடு இந்த ஆண்டு ரூ.171.89 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் கடந்த 2001–2002 ஆம் ஆண்டைவிட 32 கோடி ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னைப் பெருநகர நீதிமன்றங்கள் அனைத்தும், முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு, இணையதள வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள நூலகக் கட்டடத்திற்கு அருகில் ரூ.1.52 கோடி செலவில் கூடுதலாக இரண்டு அடுக்குமாடிகளுடன்கூடிய ஒரு கூடுதல் நூலகக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதையும் நான் மனமாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில்தான், அதுவும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான், video conferencing முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கைதிகளைச் சிறையிலிருந்து நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும்போது இடையில் ஏற்படும் தகாத சம்பவங்களைத் தவிர்க்கவும், அரசு செலவினங்களைக் குறைக்கவும், காவலர்களின் மனித நேரத்தை விரயமாக்காமல் இருப்பதற்கும் இந்த video conferencing முறை மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதனை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் 49 விரைவு நீதிமன்றங்களை அமைத்து முந்தைய ஆட்சிக் காலத்தில் தேங்கிக் கிடந்த பல்லாயிரக்கணக்கான வழக்குகளை விரைந்து முடித்து மக்களுக்கு உடனுக்குடன் நீதியும் வழங்கியுள்ளார்கள். மேலும் தமிழ்நாட்டில் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகளுக்குத் தரமான பயிற்சியைக் கொடுப்பதற்காக Judicial Academy–ஐ ஏற்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டக் கல்லூரிகளை ஒருங்கிணைத்து டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தை முதன் முதலில் துவக்கியுள்ளார்கள். கடந்த 2003–2004 ஆம் கல்வி ஆண்டில் செங்கற்பட்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியும் துவங்கப்பட்டுள்ளது. மேலும் பிற்காலங்களில் புதிய சட்டக் கல்லூரிகளைத் துவங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. முந்தைய தி.மு.க.

ஆட்சிக் காலத்தில் சட்டக் கல்லூரி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த எந்தவித நடவடிக்கையும் எடுக்காத சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டக் கல்லூரி மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், அவர்களின் வாதத் திறமையை வளர்த்துக்கொள்ளவும் Vienna மற்றும் Hong Kong போன்ற வெளிநாடுகளுக்கு மாணவர்களை அனுப்பி பயிற்சி பெற வைத்துள்ளார்கள். மேலும், உலகமயமாக்கலின்பொருட்டு சட்டக் கல்வியில் ஏற்பட்டுள்ள தாக்கத்தினைக் கருதியும் புதிய பாடப் பிரிவுகளை அறிமுகம் செய்யும் நோக்குடன், அறிவுசார்ந்த சொத்துரிமை, பன்னாட்டுச் சட்டங்கள் ஆகிய இரண்டு புதிய முழு நேரச் சட்ட மேற்படிப்புப் பிரிவுகளை விரைவில் துவக்க உள்ளார்கள். மேலும் வணிகச் சட்டம், அரசமைப்புச் சட்டம் மற்றும் சட்டம்-ஒழுங்கு ஆகிய பிரிவுகளையும் துவக்கியுள்ளார்கள். இதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கண்டுகொள்ளப்படாத சட்டக் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் மற்றும் வகுப்பறை வசதிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் பல கோடி ரூபாய் மதிப்பில் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் முதன் முதலில் மகளிர் நீதிமன்றங்கள் துவங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதனால் பெண்கள் நலன் என்பது பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பது தெரிகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 92 மையச் சட்டங்களையும், 45 தமிழ்நாடு சட்டங்களையும், ஆக 137 சட்டங்களையும் தமிழில் மொழி பெயர்த்து, புத்தக வடிவில் அச்சிட்டுள்ளது. இதன் மூலம் மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டத் துறையில் தமிழுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். இதற்காகவும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை உயர் நீதிமன்றக் கிளைக் கட்டடம் அமைக்கப்பட்டு தற்போது திறக்கப்பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 56 கோடி ரூபாயை ஒதுக்கியும், மேலும் 1.11 கோடி ரூபாய் Computer-களுக்காகவும், High Court அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குடியிருப்புகளுக்கான நிலம் வாங்க 8.41 கோடி ரூபாயும்





ஒதுக்கியுள்ளார்கள். நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றத்தை சாமானியர்களும் எளிதில் அணுகும் வகையில் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டும், வழக்குகளை விரைவில் முடிக்க வேண்டிய அவசியம் கருதியும், தென் மாவட்ட மக்களின் நலன் கருதியும், மதுரை உயர் நீதிமன்றக் கிளைக்கு 65.52 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்து, நீதிமன்றம் உடனே செயல்பட அனைத்து உதவிகளையும் செய்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய பணியையும், சேவையையும் நன்றியோடு பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு என்றென்றும் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்திட மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் உருவான தகவல் தொழில்நுட்பக் கொள்கை–2002, தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் புதிய சாதனை படைத்துள்ளது. தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளும் பணிகள் துறையின் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 2000–2001இல் 11 சதவீதமாக இருந்தது. இது 2002–2003இல் 17 சதவீதமாக அதிகரித்து, வியக்கத்தகு வளர்ச்சியடைந்துள்ளது. இப்புதிய தொழில்நுட்பக் கொள்கையினால் இத்துறை வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் கல்விப் பணித் திட்டங்கள் முதன்முதலில் இந்த அரசால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் மிகவும் பயனடைந்துள்ளார்கள். இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் நமது அரசு செயற்கரிய சாதனைகளைச் செய்து வருகின்றது. தமிழகத்தின் எதிர்கால மின்தேவையை உணர்ந்து, பல மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்கி, தமிழ்நாட்டை மின்தடையில்லா முழுமையான மின் வசதி பெற்ற மாநிலமாக உயர்த்தியதன் மூலம், பன்னாட்டு தொழில் முதலீட்டாளர்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க ஆர்வம் காட்டி வரும் நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள். மின் வசதியில்லாக் குடிசைவாசிகளுக்கும், வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்கிடவும், விவசாய பம்புசெட்டுகளுக்கும் தொடர்ந்து இலவச

மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மின் இணைப்பு வேண்டுவோர். தடையில்லாச் சான்றிதழ் வழங்காமல் மின் இணைப்புப் பெறலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இதனால் மின் இணைப்பு வேண்டுவோர் விரைவாக மின் இணைப்புப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஒரு கோரிக்கையைப் பணிவோடு சமர்ப்பிக்கின்றேன். தமிழ்நாட்டில் அரசு புறம்போக்கு மற்றும் அரசுத் துறை நிலங்களில் நீண்டகாலமாக அதன் நில உரிமையைக் கோராமல் குடியிருந்து வரும் ஏழை எளிய மக்களுக்கும் அவர்களிடமிருந்து எழுத்து மூலம் சில உத்தரவாதங்களைப் பெற்றுக்கொண்டு மின் இணைப்பு வழங்கினால், பெரும்பாலான ஏழை எளிய மக்கள் பயனடைவார்கள். இதனால் இந்த 21 ஆம் நூற்றாண்டில் மின்சாரம் இல்லாத வீடே இல்லை என்ற ஒரு பெருமையும் தமிழ்நாட்டிற்கு வந்து சேரும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த நூற்றாண்டில் யாருக்குமே மின்வசதி இல்லாத ஒரு நிலை இருக்கக்கூடாது என்கின்ற ஓர் உயர்ந்த கொள்கை நிலையில்தான், ஒரு கோட்பாட்டுடன்தான், மின் இணைப்பு அனைவரும் பெறவேண்டுமென்கின்ற நிலையில் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மின் இணைப்பைப் பெறுவதற்கு சுலபமான வழிகளை உருவாக்கியிருக்கிறார்கள். மின் இணைப்பைப் பெறவேண்டுமென்றால். Completion Certificate தேவையில்லை; Town Planning approval தேவையில்லை மற்றும் இது இரண்டும் இல்லாமல் மின் இணைப்புக் கேட்டவுடன் கொடுக்கப்பட வேண்டுமென்பது நம்முடைய அம்மா அவர்களின் ஆணை. எனவே, இந்த ஆணையின் மூலம் கிட்டத்தட்ட இந்த ஆண்டு 6 இலட்சம் மின் இணைப்புகள் மின்சார வாரியம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்ற நிலையில், அதன் மூலம் மின்சார வாரியத்திற்கு மட்டும் 200 கோடி ரூபாய் வருவாயும் கிடைக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆனால், மின் இணைப்புக் கொடுக்கும்போது மின்சார வாரியம் அனுசரிக்க வேண்டியது, பாதுகாப்பு இருக்கிறதா; wiring சரியாக பண்ணியிருக்கிறார்களா; agreement மின்சார வாரியத்தோடு போட்டிருக்கிறார்களா மற்றும் deposit கட்டி இருக்கிறார்களா என்று இந்த மூன்றைத்தான் மின்சார வாரியம் பார்க்க வேண்டும். எனவே



இந்த நூற்றாண்டில் யாருக்குமே மின் இணைப்பு இல்லாத நிலை இருக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல அரசுத் துறையிலோ மற்றும் சில புறம்போக்கு இடங்களிலோ நீண்ட நெடுங்காலமாக குடியிருப்பவர்கள்கூட, அவர்கள் நில உரிமை கோரவில்லையென்றால், கோராதபட்சத்தில் அவர்கள் வசிக்கின்ற பகுதியில் மின்இணைப்புப் பெறுவது அவசியமாக இருக்கின்ற நிலையில் அந்த இடங்களில் குடியிருப்பவர்கள், வட்டாட்சியரிடம், "நான் குடியிருக்கின்ற இந்தப் பகுதிக்கு இட உரிமை கோரப் போவதில்லை, எனவே, மின் இணைப்புப் பெறுவதற்கு மட்டும்தான்" என்கின்ற Certificate-ஐ தாசில்தாரிடத்திலே வாங்கி மின்சார வாரியத்திற்குக் கொடுத்து, ஒரு affidavit, இந்த ownership–க்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று கொடுத்தால், அங்கே மின் இணைப்புக் கொடுப்பதற்கான பரிசீலனை செய்யக்கூடிய அளவிற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இதுகுறித்தும் ஆராய்ந்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மனமார்ந்த நன்றி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் நமது அரசு அனைவருக்கும் நல்வாழ்வு அளிப்பதில் குறிப்பாக பொருளாதார ரீதியில் நலிவடைந்த நிலையில் உள்ள ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பெரிதும் தேவைப்படுகின்ற நல்வாழ்வு வசதிகளை அளிப்பதில் உறுதி பூண்டுள்ளது. குறிப்பாக சென்ற ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 51 என்று இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அது 44 ஆகக் குறைந்துள்ளது. ஆகவே அம்மா அவர்கள் ஆட்சியில் மருத்துவத் துறை சிறந்து விளங்குகிறது என்பதை இது காட்டுகின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து 86.25 கோடி ரூபாய் செலவில் 746 துணைச் சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 93 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இவையும் வரவேற்கத்தக்க சாதனைகளாகும்.

முற்பகல் 11–40

நமது அரசு பொறுப்பேற்ற பிறகு, சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைக்க 73 விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள்

ஏற்படுத்தப்பட்டிருப்பது மாண்புமிகு அம்மா அவர்கள், விலை மதிப்பிட முடியாத மனித உயிர்களைக் காப்பாற்ற எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ்நாட்டில் 9.34 கோடி ரூபாய் செலவில் பொதுமக்களுக்கு அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே தரமான மருத்துவ சேவையை அளிக்கும் வகையில் மொத்தம் 571 சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தி, ஏழை எளிய மக்கள் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியமான வாழ்வு பெற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

மகப்பேறு காலத்தில் தாய்மார்கள் 1000 மகப்பேறுக்கு இறப்பு வீதம் 1.3 என்ற வீதத்தில் இருப்பதைக் குறைப்பதற்கான உறுதியான நோக்குடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு மருத்துவமனைகளில் 24 மணி நேரம் மகப்பேறு அறுவை சிகிச்சையை உள்ளடக்கிய ஒட்டுமொத்த அவசரகால மகப்பேறு கவனிப்பு வசதியைச் செய்து கொடுக்க நமது அரசு உத்தேசித்துள்ளது. அதேபோல் குழந்தை இறப்பு வீதத்தையும் குறைக்க 24 மணி நேரம் குழந்தை கவனிப்பு மையமும் செயல்பட இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாட்டவர்களை ஈர்க்கும்பொருட்டு சென்னை அரும்பாக்கத்தில் உலகத்தரம் வாய்ந்த இந்திய முறை மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்த இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆங்கில மருத்துவத்திற்கு இணையாக இந்திய முறை மருத்துவமும் அளிக்கப்பட வேண்டும் என்று இவ்வரசு முடிவெடுத்துள்ளது. இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் சித்த மருத்துவத்தில் சிகிச்சை பெற்றுப் பயனடைகின்றனர். இது ஒரு வரவேற்கத்தக்க திட்டமாகும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் போன்றவற்றில் சித்த மருத்துவப் பிரிவு கட்டடம் கட்டிக் கொடுத்து சித்த மருத்துவர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதனைப் பார்க்கும்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்திய மருத்துவ முறைக்குப் புத்துணர்ச்சி ஊட்டி உள்ளார்கள் என்பதை இது காட்டுகின்றது. மேலும், அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் முந்தைய முறையை அரசு இரத்து செய்தது பாராட்டுக்குரிய விஷயமாகும்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் எனது தொகுதிக்குத் தேவையான சில கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்கின்றேன்.

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கம் ஊராட்சி அருகே கொள்ளிடம் ஆற்றில் தண்ணீரைத் தேக்கம் செய்து குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் பயன்படுத்தவும், கோடைகாலங்களில் கடல்நீர் மேலேறுவதைத் தடுக்கவும் ஒரு regulator கட்டிக் கொடுத்து உதவிட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழி அரசு மருத்துவமனை NH 45A தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்த மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடமும், 100 படுக்கை வசதிகள் கொண்ட கட்டடமும் கட்டிக் கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

காறைமேடு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழி நகரில் எந்த ஓர் அரசு உயர்நிலைப் பள்ளியோ அல்லது மேல்நிலைப் பள்ளியோ கிடையாது. எனவே, அவசியம் ஓர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி துவங்க வேண்டுகிறேன்.

சீர்காழி நகரில் பழைமையான கட்டடமான வட்டாட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

மயிலாடுதுறை சார்பு நீதிமன்ற வளாகத்தில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் இல்லாத காரணத்தால் அங்குள்ள வழக்கறிஞர்களும் பொதுமக்களும் மிகவும் கஷ்டப்படும் சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் உடனடியாகக் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளைச் செய்து கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

சீர்காழி தொகுதி, எடமணல் ஊராட்சிக்கும், திருநகரி ஊராட்சிக்கும் இடையில் உள்ள வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் போக்குவரத்திற்கும், கடல்நீர் மேலேறாமல் தடுப்பதற்கும் வசதியாக regulator-உடன்கூடிய போக்குவரத்துப் பாலம் ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

சீர்காழியிலிருந்து சிதம்பரம் செல்லும் NH 45A தேசிய நெடுஞ்சாலையில் சேந்தங்குடி இரயில்வே கிராசிங்கின்மேல் ஒரு போக்குவரத்துப் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் முஸ்லீம்களும், மீனவர்களும் அதிகமாக வசிக்கிறார்கள். அதனால் அங்கு பல பிரச்சினைகள் ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், உடனடியாக அங்கு ஒரு புதிய காவல் நிலையத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைக்குமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்திட அல்லும் பகலும் அயராது உழைத்திடும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கருப்பாயி. பத்து நிமிடங்களுக்குள் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

*முற்பகல் 11–45*

***டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டு மக்கள், தமிழ்நாட்டு மக்கள் நலமுற்று வாழவும் நானிலத்தவர் மேனிலை எய்தவும், நிதிநிலையில் பாழ்பட்டுக் கிடந்த தமிழகத்தைப் பாரினில் உயர்த்தவும், அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் " My strength is as the strength of ten. Because my heart is pure" என் இதயம் தூய்மையானதாக இருப்பதால் என் வலிமை 10 பேர் வலிமைக்குச் சமமானது என்றான் ஆங்கிலக் கவிஞன் 'Lord Tennyson'. நம் அன்னை அவர்களோ 'என் உள்ளம் தூய்மையானது. ஆனால் என் வலிமை ஆறரைக் கோடித் தமிழர்களின் வலிமையும் என் வலிமை' என்று கூறி, தன்னுடைய அதிவலிமையின் காரணமாகத் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, நீதி நிருவாகம், எரிசக்தித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, சட்டத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கியமைக்காக நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.



சுகாதாரப் பணியில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக உருவெடுத்து வருகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டுக்கு ரூ.1387.58 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்கள் நல்வாழ்வுக்காக அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்துள்ளது என்றாலும் ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல ஒருசில திட்டங்களை மட்டுமே இங்கு கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அரசு மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக வருகின்ற புறநோயாளிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் முந்தைய முறையை அரசு இரத்து செய்துள்ளதால் தமிழகத்து மக்கள் மனநிறைவைப் பெற்றுள்ளனர். அண்மையில் மக்களின் மன நிலையை அறிந்து மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ள பல்வேறு சலுகைகளில் அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர் கட்டணம் இரத்து என்பதும் ஒன்றாகும். இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்.

தமிழகத்தில் தற்போது 11 மருத்துவக் கல்லூரிகளும், ஒரு பல் மருத்துவக் கல்லூரியும், 2 இயன்முறை மருத்துவக் கல்லூரிகளும், 2 செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளும் அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

மேலும், கூடுதலாக தேனி, கன்னியாகுமரி, வேலூர் ஆகிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் துவங்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனால் மேலும் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெறுவர் என்பது உறுதி.

மாணவர்களின் நலனில் அக்கறை காட்டி வரும் மாண்புமிகு அம்மா அவர்கள் மருத்துவம் மற்றும் உயர்கல்வி பயில்வதற்காகத் தேர்வு செய்யப்பட்டுக் கட்டணம் செலுத்த இயலாத பல மாணவர்களின் கல்விச் செலவிற்காக தொடர்ந்து நிதி வழங்கி பல ஏழைக் குடும்பங்களின் கண்ணீரைத் துடைத்துள்ளார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கறிவர், நாமும் அறிவோம்.

இதனால் "பிச்சைப் புகினும் கற்கை நன்றே" என்ற நிலை தமிழகத்தில் மாற்றப்பட்டுவிட்டதை எண்ணி மக்கள் மனதாரப் பாராட்டுகின்றனர்.

மேலும், எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்கு 5 கல்லூரிகளில் 315 இடங்களைக் கூடுதலாக ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்பால் மாணவர்களும், பெற்றோர்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

செவிலியர் பயிற்சிக்குப் புதிதாக செவிலியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க அரசு ஆணையிட்டதோடு 9 பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதால் கூடுதலான மாணவர்கள் பயனடைய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களிடம் ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-50*

முதல் இந்திய பெண் மருத்துவர் என்ற சிறப்புக்குரிய டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியார் பிறந்த புதுக்கோட்டை மண்ணில் அவருக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் ஒரு மருத்துவக் கல்லூரியும், ஓர் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியும் தொடங்குவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களைப் பரிசிலனை செய்யுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் கொள்கை முடிவின்படி 20 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 25 அறுவைச் சிகிச்சை கூடங்களுக்கும் 64 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலுள்ள 64 அறுவைச் சிகிச்சை கூடங்களுக்கும் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி எனது குளத்தூர் தொகுதியில் கீரனூர், இலுப்பூர் மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளதால் தொகுதி மக்களின் சார்பாக நான் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், மாவட்ட, வட்டத் தலைமையிட மருத்துவமனை மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளுக்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்கி வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கீரனூர் வட்ட மருத்துவமனைக்கும் மின் உற்பத்தி இயந்திர வசதி செய்து தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மஞ்சள் காமாலை என்ற கொடிய உயிர்க்கொல்லி நோயிலிருந்து மனித உயிர்களைப் பாதுகாப்பதற்காக சென்னை மாநகரில் குடிசை வாழ் குழந்தைகளுக்கும் விருதுநகர், இராமநாதபுரம், மதுரை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை நோய்த்தடுப்பு மருந்து அளிக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டம் இதர மாவட்டங்களிலும் படிப்படியாக



விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பு எதிர்காலச் சமுதாயத்தின் முக்கிய தூண்களாக விளங்குகின்ற குழந்தைகள்மீது மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் கொண்டுள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

அம்மா அவர்களின் தீவிர தடுப்பு நடவடிக்கைகளினால் கிராமங்களில் மலேரியா நோய் நிகழ்வு பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

இந்நோய்ப் பகுதிகளைக் கண்டறியவும் நோய் ஏற்படும் காலங்களை அறியவும் புவியியல் தகவல் முறை ஒன்று தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டு வருவதால் இந்நோய் நிகழ்வு எதிர்காலங்களில் மேலும் குறைய வாய்ப்புள்ளது. "நோய் நாடி நோய் முதல்நாடி" அம்மா அவர்கள் தமிழகத்து மக்களைப் பாதுகாத்து வருவதை இதன்மூலம் உணர முடிகின்றது.

குடும்ப நலத் திட்டம் தமிழகத்தில் சாதனை படைத்துள்ளது. தமிழ் நாடானது கேரள மாநிலத்திற்கு அடுத்து குறைந்த மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைக்கொண்டு இரண்டாவது இடத்தைக் கண்டுள்ளது. "குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கான காப்பீட்டுத் திட்டமானது" குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களில் யாரேனும் இறக்க நேரிட்டால் ரூபாய் இரண்டு இலட்சம் காப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டம் 2001 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தொகை அவர்களின் குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படும். இத்திட்டத்தை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் 31-10-2004 வரை நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது) இதன்மூலம் என்றென்றும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் தாய் மற்றும் சேய் நலன்மீது மிகுந்த அக்கறைகொண்டவர்கள் என்பதைக் காட்டுகிறது. இதற்காக என்றென்றும் தமிழ்நாட்டு ஒட்டுமொத்த மகளிர் சமுதாயமும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது.

குளத்தூர் தொகுதியில் விராலிமலை ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் உடனடியாக ஒப்பந்த அடிப்படையில் கூடுதலாக ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டிருப்பது விராலிமலைப் பகுதி மக்களுக்கு மிகுந்த

மகிழ்ச்சியை அளித்துள்ளது. மேலும், கடந்த ஆட்சிக் காலத்தில் பல ஆண்டுகள் கேட்டும் பயன் அடையாத இப்பகுதி மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியிலே (மணியடிக்கப்பெற்றது) கேட்காமலே கிடைப்பதை எண்ணி மக்கள் பூரிப்பு அடைந்துள்ளனர்; நன்றி செலுத்துகின்றனர்.

இன்றைய மானியக் கோரிக்கையில் மிக முக்கிய இடத்திலிருப்பது சட்டத் துறை. தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் உண்மையான, நேர்மையான வெளிப்படையான மக்களாட்சி இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. "மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி" என்பதற்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்கள் மதித்தும் பின்பற்றியும் வரும் சட்டங்களை, தமிழகத்து மக்களும் மதித்தும் பின்பற்றியும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகின்றது. தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மிகச் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. சாதாரண கிராமப்புற மாணவர்களும் சட்டத்தை எளிதில் புரிந்து படிப்பதற்காக சட்ட நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருவதால் மேலும் கூடுதலாக மாணவர்கள் பயன் அடைவர் என்பது உறுதி. மேலும், தமிழ் மொழிக்காகப் பேச்சளவில் பாடுபட்டு வரும் வாய்ச்சொல் வீரர்களுக்கு மத்தியில் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் எதிலும் எதையும் சாதிக்கப் பிறந்தவர்கள், செயல்வடிவம் தருபவர்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவர். இயல், இசை, நாடகத் தமிழுக்கு அடுத்து நான்காவதாக அறிவியல் தமிழுக்கும் தற்போது சட்டத் தமிழுக்கும் செயல்வடிவம் கொடுத்த சிறப்பும் பெருமையும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களை மட்டுமே சாரும்.

*முற்பகல் 11–55*

மேலும், உரிய காரணங்களைக் கருத்தில்கொண்டு தமிழகத்தில் புதிய சட்டக் கல்லூரிகளைத் தொடங்க தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மிகவும் பின்தங்கிய பகுதியான புதுக்கோட்டை பகுதியில் கீரனூரை மையமாக வைத்து ஒரு புதிய அரசு சட்டக் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கோரிக்கையாக வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.



'காலம் தாழ்த்தப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம்' என்பர். தமிழகத்தில் நீதித் துறை தனித்தன்மை பெற்றுச் சிறப்பாக இயங்கி வருகின்றது.

"ஆணும் பெண்ணும் சமம் எனக்கொள்வதால்
அறிவினில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்"

என்ற பாரதியின் கவிகளுக்கேற்ப வையத்தில் ஆணுக்கு நிகராகப் பெண்கள் விளங்குவதற்கு தொடர்ந்து பாடுபட்டுக்கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், நீதியினைப் பெறுவதிலும் பெண்களுக்குக் காலம் தாழ்ந்துவிடக் கூடாது என்பதற்காக சென்னை, கோவை ஆகிய இடங்களில் மகளிர் நீதிமன்றங்களைத் தொடங்க ஆணையிட்டிருக்கின்றார்கள். தற்போது மிகச் சிறப்பாக அவை செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம், பெண் கமாண்டோ படை, மகளிர் நீதிமன்றங்கள் எனச் சாதனை படைத்து வருகின்ற பெருமை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களை மட்டுமே சாரும். சாமான்ய மக்களும் எளிதல் அணுகும் வகையில் நீதிமன்றம் அமைய வேண்டும் என்ற தென்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான உயர் நீதிமன்றத்தின் கிளை மதுரையில் *24–7–2004* அன்று திறக்கப்பட்டிருப்பதும்

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் என்பதைக் காட்டுகின்றது.

மின்சாரமானது இன்றைய பரபரப்பான மக்களின் வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. மின்சாரம் இல்லையென்றால் மனித வாழ்வே ஸ்தம்பித்துவிடும் நிலை உருவாகிவிட்டது. தமிழ்நாடு மின்சார வாரியம் மிகச் சீரிய முறையில் இயங்கி வருகின்றது. வான்மழை பொய்த்த நிலையில் தமிழகத்தில் புனல் மின் உற்பத்தி இழப்பு மிக அதிக அளவாக இருந்தபோதிலும் தமிழக அனல் மின் நிலையங்களின் செயல்பாட்டை மேம்படுத்தியும் பல்வேறு துரித நடவடிக்கைகளாலும் கடந்த மூன்றாண்டுகளில் மின்வெட்டு, மின்தடை இல்லாமல் தொடர்ந்து தமிழக மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு அம்மா அவர்கள் அண்மையில் அறிவித்துள்ள விவசாயிகளுக்கும் குடிசைகளுக்கும் இலவச மின்சாரம்; விவசாய பம்புசெட்டுகளுக்கும் குடிசைகளுக்கும் மீட்டர் கிடையாது என்ற சலுகைகளைத் தமிழ்நாட்டு மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர், பாராட்டுகின்றனர், நன்றியைச் செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள். மேலும், கட்டடங்களின் மின் இணைப்புக்கு கட்டட அனுமதி மற்றும் கட்டட நிறைவுச் சான்று ஆகியவற்றை அளிக்க வேண்டும் என்பதை நீக்கி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் தமிழ்நாட்டில் பல இலட்சம் மக்கள் குறிப்பாக ஏழை மக்கள் பயன்பெறுவர் என்பது உறுதி.

மேலும், புதுப்பிக்கவல்ல எரிசக்தி உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதை அறிகின்றபோது (மணியடிக்கப்பெற்றது) மின் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியையும் கடின உழைப்பையும் மக்கள் தங்களுடைய கண்முன் நிறுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பது திண்ணம்.

மேலும், என்னுடைய தொகுதிக்காக நான் ஒருசில கோரிக்கைகளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கீரனூர் அரசு மருத்துவமனைக்கு நாள் ஒன்றுக்கு 400 முதல் 500 வரை நோயாளிகள் வருகின்றனர். தற்போது ஒரு பெண் மருத்துவர் மட்டுமே இருக்கின்றார். எனவே, குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவர் ஒருவரும், மயக்க மருத்துவர் ஒருவரும், மகப்பேறு மருத்துவர் ஒருவருமாக நியமிக்கப்பட வேண்டுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், மருத்துவர்கள் தங்கிப் பணி செய்ய குடியிருப்பு வசதி செய்து தருமாறும் பணிவோடு வேண்டுகிறேன். நீண்ட காலமாக வசதி ஏதுமே இல்லாத வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டித் தருமாறும், மிக மோசமான நிலையிலுள்ள புதுக்கோட்டை-மணப்பாறை சாலையை C.R.F.-ல் சேர்த்துச் செப்பனிடவும், எளிமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வரும் மெய்வழிச்சாலை பகுதி மக்களுக்காக ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரவும் பணிவோடு வேண்டி, நல்ல வாய்ப்புக்காக மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)





*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. சிதம்பரம்.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, எனது பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட சுமார் 30 ஆதிதிராவிடர் திருக்கோவில்களின் திருப்பணித் திட்டத்திற்கு ஒரு கோவிலுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் 30 கோவில்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றியை என்னுடைய உத்தமத் தலைவிக்கு, இலட்சியத் தலைவிக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம், மின்சாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்ததற்கு நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

முதலில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் சர்வதேச அளவிலே சட்டக் கல்வியின் தரம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் சட்டப் பல்கலைக்கழகத்தை முதன்முதலில் அமைத்தது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இதன் காரணமாக ஏழை எளிய மக்களுக்குச் சட்ட அறிவு எளிதாகக் கிடைக்கின்ற வகையிலே அம்மா அரசு நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அரசின் ஆட்சிக் காலத்தில்தான் நீதி நிருவாகத்தை மேம்படுத்த மொத்த ஒதுக்கீடு 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 140.99 கோடியில் இருந்து 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 171.89 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பது மிகவும் பாராட்டுக்குரியது. உயர் நீதிமன்றத்தினை கம்ப்யூட்டர் மயமாக்குவதற்கும், ஏனைய நீதிமன்றங்களிலே அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. உச்ச நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் அடிப்படையில்

தமிழ்நாட்டில் உள்ள சார்பு நீதிமன்றங்களில் திருத்திய சம்பள விகிதங்களைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் செயல்படுத்தி உள்ளது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரையில் உயர் நீதிமன்றக் கிளை அமைப்பதற்கு இடத்தை ஒதுக்கிக் கொடுத்ததுடன், இதன் கட்டுமானப் பணிக்காக ரூபாய் 56 கோடியை ஒதுக்கி, நீதிமன்றம் உருவாக்க தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகுத்துக் கொடுத்ததன் விளைவாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்று முதல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

சட்டப் பல்கலைக்கழகத்தின் மூலமாகச் சட்டத் தமிழ் நூலை வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்கள். எனது நீண்டநாள் கோரிக்கையான சத்தியமங்கலத்தில் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றம், குற்றத் துறை நீதிமன்றம் ஆகியவை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றை எனது தொகுதிக்கு உட்பட்ட அரியப்பம்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட திம்மையன்புதூர் என்ற இடத்தில் அரசுக்குச் சொந்தமான நிறைய காலி இடங்கள் உள்ளதால், அந்த இடத்திலே நீதிமன்ற வளாகம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால அட்சியில் அமைத்துத் தர வேண்டுமாய் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், சார்பு நீதிமன்றம் வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தர என் சார்பிலும், சத்தியமங்கலம் வழக்கறிஞர்கள் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்கின்றேன்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கேற்ப ஒரு மனிதன் நல்ல வாழ்வு வாழ வேண்டுமென்றால் அவனுடைய உடல் நலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அந்த வகையிலே, மக்களுக்கு எளிதில் பெறக்கூடியதும், நல்ல தரமானதுமான சுகாதார வசதிகள் கிடைக்கச் செய்வதில் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு வியத்தகு சாதனைகளைச் செய்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

2000 ஆம் ஆண்டில் குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000–க்கு 51 என்ற நிலையிலிருந்து 2002 ஆம் ஆண்டில் 1000–க்கு 44 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது என்பது ஒரு நல்ல முன்னேற்றம் ஆகும். அதேபோல்,



பிறப்பு விகிதம் 1000 மக்கள்தொகைக்கு 19.3 என்ற அளவிலிருந்து 18.5 என்ற அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டு, அளவு குறைந்துள்ளது என்பதும் மிகவும் பாராட்டுவதற்குரிய அம்சமாகும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து ரூபாய் 86.25 கோடி மொத்த அளவில், 746 சுகாதாரத் துணை மையங்களும், புதிய கட்டடங்களும் கட்டப்பட்டதோடு மட்டுமல்லாமல், 93 ஆரம்ப சுகாதார மையங்களும் 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டது மிகவும் வரவேற்பதற்குரிய ஒன்றாகும்.

மேலும், 2003–2004 ஆம் ஆண்டில் 56.6 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையிலே பள்ளி மருத்துவ முகாம் திட்டம் செயல்படுத்தப்பட்டது அம்மாவின் பொற்கால ஆட்சியில்தான் என்பதை மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–05

உலக வங்கியின் நிதி உதவியுடன் சுகாதார அமைப்புகள் மேம்பாடு திட்டத்தைத் தயாரிப்பதில் தமிழக அரசு பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. நடப்பு ஆண்டில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்கும், மருத்துவக் கல்வி இயக்ககத்திற்கும், பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்திற்கும், குடும்ப நல இயக்ககத்திற்கும் மேலும் இதுபோன்ற இயக்ககங்களுக்குத் தேவைப்படும் செலவுகளுக்காக அம்மா அவர்களின் அரசு 2004–05 ஆம் ஆண்டில் ரூபாய் 1387.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

மேலும், நோய்த் தடுப்புப் பணிகளைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக அம்மாவின் அரசு விளங்குகிறது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது. தாய் சேய் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கும் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வகையான தடுப்பு மருந்துகளை இலவசமாக வழங்கி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வரும் தீவிர நடவடிக்கையினால் போலியோ நோய் தமிழ்நாட்டில் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை யாரும் மனதாரப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்.

நூறு ஆண்டு காலம் வாழ வேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவருக்கும் உண்டு. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று சொல்வார்கள். அப்படி வாழ வேண்டும் என்று சொன்னால் சித்த வைத்தியத்தை இன்னும் விரிவுபடுத்தி ஒவ்வொருவருடைய ஆயுளையும் நீட்டிக்க சித்த வைத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

மகாத்மா காந்தி அடிகள். அவர்களின் துணைவியார் கஸ்தூரிபாய் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவருடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக அப்போது இங்கிலாந்து அல்லது அமெரிக்கா நாட்டில் இருந்துதான் மருந்து வர வேண்டும் என்று சொன்ன நேரத்தில், காந்தியடிகள் சொன்னார், அந்த மருந்து இங்கு இந்தியாவில் உள்ள கிராமத்தில் வசிக்கும் சாதாரண மனிதருக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் இந்த காந்தியின் துணைவி என்பதற்காக என்னுடைய மனைவி உயிர் வாழ வேண்டிய அவசியம் இல்லை என்று அந்த மருந்தை நிராகரித்தார். அவருடைய சிந்தனையின் பொருள் சாதாரண ஏழைகளுக்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்பதுதான். அப்படிப்பட்ட நிலையை நிறைவேற்றத்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராம மக்களும், ஏழை எளிய மக்களும் வாழ வேண்டும் என்பதை மனதிலே வைத்துத்தான் நலம் பயக்கின்ற நல்ல பல திட்டங்களை அம்மா அவர்கள் தமிழகத்திற்குத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மெத்தப் பணிவோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மின்சாரத் துறையில் புதிய மின்சக்தித் திறனை உருவாக்கி மின் வழங்கல் திறனை மேம்படுத்துவதற்குக் கொடுத்துள்ள தனிக் கவனம், தடையின்றி தரமான மின்சக்தி கிடைப்பதை உறுதி செய்துள்ளது. மேலும் பயன்பாட்டு அடிப்படையிலான மின் கட்டண முறைக்கு மாறியதன் மூலம், தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கும் மின்சக்தியின் தரத்தை மேம்படுத்துவதையும் உறுதி செய்துள்ளது என்பதை இந்நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன் பயனாக வழங்கப்படும் மின்சாரத்தின் அலை அதிர்வு எண் 48 ஹெர்ட்ஸ் என்பதிலிருந்து விதிக்கப்பட்ட 50 ஹெர்ட்ஸ் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது மிகவும் வரவேற்புக்குரியதாகும். மேலும், மாநிலத்தின் மின்சார உற்பத்தித் திறனை வலுப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது பாராட்டிற்குரியதாகும்.



மின்சார வழங்கலில் மேம்பட்ட தரத்தினையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதற்காக மின்னனுப்புகை மற்றும் பகிர்மானத் திட்டங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் 2004–05 ஆம் ஆண்டில் ரூபாய் 1305.46 கோடி அளவிற்கு முதலீடு செய்யும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது வரவேற்புக்குரியதாகும்.

மேலும், 2004–05 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 102 இலட்சம் செலவில் புதியதாக அறிவித்திருக்கின்ற 10 திட்டங்களும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கண்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

அடுத்தபடியாக எனது தொகுதிக்குத் தேவையான சில கோரிக்கைகளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலாவதாக எனது தொகுதிக்கு உட்பட்ட புஞ்சை புளியம்பட்டி, நம்பியூர், காசிபாளையம், பவானிசாகர், எலத்தூர் செட்டிபாளையம், உக்கரம், வின்னப்பள்ளி ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. எனது தொகுதியில் அரசு மருத்துவமனைகள் ஏதும் இல்லை. எனவே, புஞ்சை புளியம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி அரசு மருத்துவமனையாக மாற்றித் தர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகர் மருந்தகத்திற்கு ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்று தேவைப்படுவதால் அதற்கும் நடவடிக்கை எடுத்து உடனே வழங்க ஆவன செய்ய வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பவானிசாகரில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும், விதை நாற்றங்கால் பண்ணையும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. எனது தொகுதியில் எந்தவிதமான கல்லூரியும் இல்லை. எனவே, வேளாண்மை சம்பந்தப்பட்ட ஒரு கல்லூரியை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு, எனது தொகுதிக்குட்பட்ட கடத்தூர், நம்பியூர் காவல் நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கட்டப்பட்டுள்ள காவலர்

குடியிருப்பில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகின்றன. அது நிரந்தர சொந்தக் கட்டடத்தில் இயங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்யுமாறு மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை சட்டம், மின்சாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கே. பவானி கருணாகரன்.

***திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி, சட்டம், மின்சாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'சட்டம் ஒரு இருட்டறை' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். ஆனால், எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், சட்டமும் நீதியும் காக்கப்பட வேண்டுமென்றும், ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் நீதி என்ற உயர்ந்த குறிக்கோளை அடைய வேண்டுமென்றும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், நீதித் துறை நிர்வாகத்திற்கு அரசு வழங்கி வரும் முன்னுரிமையை மேற்கொள்ளும் வகையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில் நமது மாநிலத்தில் நீதித் துறை கணிசமான அளவிற்கு வளர்ச்சியையும் மேம்பாட்டையும் அடையச் செய்தது மாண்புமிகு அம்மாவின் அரசு.

தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழவும், சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவும் போதிய அளவிற்கு நிதி ஆதாரங்கள் இல்லாதபோதிலும் நீதித் துறை தங்கு தடையின்றிச் செம்மையாகச் செயல்படுவதற்காகக் கட்டடங்கள், பணியாளர்கள் மற்றும் தேவையான ஏனைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அம்மாவின் அரசு செய்து கொடுத்துள்ளது.



பெண்கள் நாட்டின் கண்கள் என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கெதிராக பல குற்றங்கள் இழைக்கப்படுகின்றன. பெற்றோர் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பலர் இருக்கின்றனர். இவர்களுக்கு யார் துணையாக இருப்பார்கள்? கருணை உள்ளம் கொண்ட தாயாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் மகளிர் காவல் நிலையங்களை முதன்முதலாகத் தமிழகத்திலே ஏற்படுத்தி பெண்கள் தலைநிமிர்ந்து வாழ வழிவகை செய்து, அவர்களுக்கு 'நான் உங்களுக்குத் துணையாக இருக்கிறேன்' என்று சொல்லாமல், செயலாற்றி வருவதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

நீதி தேவதையாக இருந்து பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்காக மட்டுமே மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒரு மகளிர் நீதிமன்றம் 2002 ஆம் ஆண்டு முதல் இயங்கிச் செயல்படுகிறது. மேலும், ஆகஸ்ட் திங்கள் 2003–லிருந்து மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

வேலூர் மாவட்டத்திற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு மகளிர் நீதிமன்றம் வழங்கக் கோருகிறேன்.

ஊரகப் பகுதிகளில் காலமுறைப்படி சட்ட அறிவு விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. தீர்ப்புத் திரட்டு என்னும் பெயரில் தமிழில் வெளிவரும் இதழ் பொதுமக்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் ரூபாய் 32 இலட்சத்து 90 ஆயிரம் செலவினத்தில் கணினி தகவல் மையம், விசாரணை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வழக்காடும் பொதுமக்கள் வழக்குகள் பற்றிய தகவல்களை எளிதாகப் பெற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இவ்வாறு அமைத்துள்ளது பொதுமக்கள் பலராலும் பெரிதும் பாராட்டப்படுகின்றது.

மக்களாட்சியில் ஒட்டுமொத்த மக்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் பிரதிபலிப்பதாக மட்டுமல்லாமல் மக்களின் வாழ்க்கை முறையையும் தரத்தையும் நிலை நிறுத்துவது சட்டம். அந்தச் சட்டத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறை தமிழ்நாட்டில் 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகின்றது.

இந்தச் சட்டக் கல்லூரி, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் தொடங்கப்பட்டு, மொத்தம் உள்ள 5 சட்டக் கல்லூரிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்பு மாணவர்கள் 6254 பேர் பயிலும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் 22–2–2003 ஆம் கல்வியாண்டில் சிறப்புச் சட்டப் பள்ளியினையும் 2003–2004 ஆம் கல்வியாண்டில் செங்கல்பட்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரியையும் நிறுவியுள்ளது. மேலும், இது தவிர மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய காரணங்களைக் கருத்திற்கொண்டு மாநிலத்தில் புதிய சட்டக் கல்லூரிகளைத் துவங்க டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அதிகாரம் வழங்கியுள்ளார்கள்.

பிற்பகல் 12–15

மேலும், சட்டத் துறையை சீர்தூக்கும் வகையில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், பின்வரும் சிறப்புப் பிரிவுகளில் முழுநேர முதுகலைச் சட்டப் படிப்புகளைத் துவங்கியுள்ளது: 1) வணிகச் சட்டம் 2) அரசமைப்புச் சட்டம் மற்றும் சட்டம் ஒழுங்கு.

United India Insurance நிறுவனத்துடன் இணைந்து வேலைவாய்ப்பு அளித்திடும் காப்புறுதி மற்றும் நடைமுறை பற்றிய முதுகலை பட்டயப் படிப்பு தொலைதூரக் கல்வித் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் United India Insurance நிறுவனத்தால் முகவர்களாகப் பணியமர்த்தப்படுவது மட்டுமல்லாமல் உலகமயமாக்கலின் பொருட்டு சட்டக் கல்வியில் ஏற்பட்டுள்ள தேவைகளைக் கருத்தில்கொண்டு புதிய சிறப்புப் பாடப் பிரிவுகளை அறிமுகம் செய்யும் நோக்குடனும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அறிவுசார்ந்த சொத்துரிமை மற்றும் பன்னாட்டுச் சட்டங்கள் ஆகிய இரண்டு புதிய முழுநேரச் சட்ட மேற்படிப்புப் பிரிவுகளை 2005 ஆம் ஆண்டில் துவங்க மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் உத்தேசித்துள்ளார்கள்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001 மே திங்கள் முதல் அம்மாவின் அரசால் பின்பற்றப்பட்டு வந்த விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கும், கிராமப்புறங்களில் உள்ள குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடரப்பட வேண்டும் என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்பாக மாண்புமிகு அம்மாவின் அரசு வேண்டுகோள் விடுத்தது. எனினும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 1998 ஆம் ஆண்டு மத்திய சட்டத்தில் வகுத்தளிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி விவசாய பம்ப்செட்டுகள் அனைத்திற்கும் ஒரு யூனிட்டுக்கு 20 பைசா அல்லது ஒரு குதிரை சக்திக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 250 என்று புதிய கட்டண விகிதத்தை நிர்ணயித்தது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் புதிய கட்டண விகிதத்தை அறிவித்தபோதிலும் தமிழ்நாட்டிலுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளும், குடிசைவாசிகளும் பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்துடன் இந்தியாவிலேயே விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுவதை (மேசையைத் தட்டும் ஒலி) உறுதி செய்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

முந்தைய தி.மு.க. அரசு அனைத்து விவ்சாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்ற ஷரத்து உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் நிதி உதவியைப் பெற்றுக்கொண்டபோதிலும், விவசாய பம்புசெட்டு இணைப்புகளுக்கும் குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டியதில்லை என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதைப் பொதுமக்கள் அனைவரும் பெரிதும் வரவேற்றுப் பாராட்டுகின்றனர்.

இலவச இணைப்புகள் வழங்குதல், குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குதல், தடையில்லா மின்சாரம் வழங்குதல், மின் குறைபாட்டை நீக்குதல் போன்ற திட்டங்களை வழங்குகிறது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் குடிநீர் வழங்கல் வாரியத்தில் பயன்பாட்டுப் பட்டுவாடா சேவைகளைக் கருதி மின் சேவைகள் வழங்கலுக்கான ஒரு முன்னோடித் திட்டம் 2003–2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2004–2005 ஆம் ஆண்டில் சென்னையில் பிற துறைகளிலும் செயல்படுத்தப்பட உள்ளதை நான் பெரிதும் வரவேற்கின்றேன்.

[திருமதி கே. பவானி கருணாகரன்] [2004 ஜூலை 26

உலகம் முழுமையிலும் உள்ள மின் ஆளுமைச் செயல்பாடுகளில் சிறந்தவற்றை நமது அரசின் மின் ஆளுமைத் திட்ட முயற்சிகளில் புகுத்துவதற்கு தமிழ்நாடு மின் ஆளுமை இயக்ககம் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் மின் சேவை மையங்கள் அமைத்து, குடிமக்களுக்கு தகுந்த கட்டணத்தில் வழங்கவும் அரசு–குடிமக்கள் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயலாற்றி வருவதை நான் மிகவும் வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்"

என்ற தெய்வப் புலவர் வள்ளுவன் வாக்குக்கேற்ப எந்த நேரத்தில் நாட்டு மக்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை அறிந்து உடனுக்குடன் அந்த இடத்திற்கு விரைந்து உதவி புரிந்து அவர்களின் கண்ணீரைத் துடைப்பது நம் வேந்தனாக விளங்கும் விண்ணரசி எங்கள் அம்மா.

மக்கள் நல்வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்துப் பல நல்ல திட்டங்களை வழங்கி வருகிறார்கள் அம்மா அவர்கள். குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு இந்த அரசு அனைத்து மருத்துவ வசதிகளையும் வழங்கி வருகிறது. தமிழகத்தில் தனியார் மருத்துவமனைகளைவிட அரசு பொது மருத்துவமனைகள் சிறப்பான வைத்திய வசதிகளை இலவசமாகத் தந்து ஏழை எளிய மக்களை இத்துறை காப்பாற்றி வருகிறது.

எங்கள் அரக்கோணம் நகரில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனைக்கு சுமார் 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பான குளிர்சாதன அறுவை சிகிச்சை அரங்கம் அமைக்க உத்தரவிட்ட இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–20*

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை மூலம் ஏழையெளிய மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டு காலரா தடுப்புப் பணி, உணவு கலப்பட தடுப்புப் பணி, மலேரியா நோய்த் தடுப்புப் பணி, யானைக்கால் நோய்த் தடுப்புப் பணி ஆகிய திட்டங்களையும் தமிழகத்தில் உள்ள தாய்மார்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள அம்மாவின் அரசு சிறப்பான தாய்–சேய் நலத் திட்டங்கள், ஆறு வகையான நோய்த் தடுப்பு ஊசி போடுதல் முறை ஆகிய திட்டங்களைச்



2004 ஜூலை 26] [திருமதி கே. பவானி கருணாகரன்]

செயல்படுத்தி வருகிறது. பச்சிளம் குழந்தைகள்மீது அக்கறை கொண்ட எங்கள் அம்மாவின் அரசு பள்ளிச் சிறார் நல்வாழ்வுத் திட்டங்களையும், தமிழகத்தில் உள்ள வளர் இளம் பெண்கள் வருங்காலத்தில் சிறப்பான வாரிசுகளை உருவாக்க, சுகாதாரத்தோடு இருக்க, இரத்த சோகைத் தடுப்புத் திட்டம் மற்றும் நரம்பு சிலந்தி நோய் விழிப்புணர்ச்சி முகாம், எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்ச்சி, போலியோ நோய் தடுப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துதல் போன்ற திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருவதைப் பொது மக்கள் அனைவரும் வரவேற்றுப் பெரிதும் பாராட்டுகின்றனர்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து"

என்ற குறளுக்கேற்ப கிராமங்கள்தோறும் மருத்துவ முகாம்களை நடத்தி, ஏழையெளிய மக்களின் நோய்களை அருகிலிருந்து தீர்க்கும் அரசாக அமைந்துள்ளது எங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசு.

கருவிலேயே பெண் சிசுக்களை அழிக்கும் கொடூரமான செயலைத் தடுத்துப் பெண் குழந்தைகளைத் தன் குழந்தைகளாக பேணி வளர்க்கும் உன்னதத் திட்டமான, தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்த அரசு எங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் சேவையைத் தலையாய கடமையாகக் கருதி மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் சிறந்த அரசு மருத்துவமனைகள், மண்டல நோய்ப் பரிசோதனை மையங்கள், மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை, குடும்ப நலத் துறை, இப்படிப் பல வழிகளில் செயல்பட்டு வருகிறது. M.R.I மற்றும் C.T. ஸ்கேன் மூலம் பொது மக்கள் அரசு பொது மருத்துவனைகளில் பெரும் பயன் அடைகின்றனர்.

தேசிய நெடுஞ்சாலைகளில் அன்றாடம் நடக்கும் விபத்துகளில் உயிர் இழப்பு ஏற்படுவதைத் தடுக்க விபத்து மற்றும் மருத்துவ அவசர சிகிச்சை வசதிகள் கொண்ட ஊர்திகளை ஏற்படுத்தி இந்தியாவிலேயே முதன்முதலாக இத்திட்டத்தைக் கருணை உள்ளத்தோடு கொண்டு வந்த அரசுதான் எங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசு.

இந்திய திருநாடு சுதந்திரம் அடைந்தபோது சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்கள் சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று நிம்மதியாக இரவில் உறங்கி இருந்தனர். ஆனால் டாக்டர் அம்பேத்கர் மட்டும் இரவில் நீண்ட நேரம் விழித்துச் சிந்தனை செய்து

கொண்டிருந்தார். இவ்வாறு இருந்ததை பல நாள் கண்ணுற்ற பத்திரிகையாளர்கள் அவரை அணுகி, 'நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது; அதனால் அனைவரும் நிம்மதியாக இருக்கிறார்கள்; நீங்கள் மட்டும் ஏன் இரவில் தூங்காமல் விழித்துக்கொண்டு இருக்கிறீர்கள்' என்று கேட்டனர். அதற்கு டாக்டர் அம்பேத்கர், 'மற்ற இன மக்கள் அனைவரும் விழித்துக் கொண்டனர்; ஆதலால் தலைவர்கள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்; என் இன ஆதிதிராவிட மக்கள் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்; அதனால் நான் விழித்துக் கொண்டு இருக்கிறேன்' என்று கூறினார்.

டாக்டர் அம்பேத்கரை வாயாரப் புகழ்கின்ற தலைவர்கள், ஆட்சியாளராக இருந்தபோதுகூட இந்த ஆதிதிராவிட மக்களுக்குச் செய்ய முடியாத பல சலுகைகளை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே எங்குமில்லாத அளவுக்கு ஆதிதிராவிடர்களுக்கு அதிகமான சலுகைகளை வழங்கி இருக்கிறார்கள். குறிப்பாக, இந்தியாவிலேயே எந்த முதலமைச்சர் நினைவிலும் உருவாகாத திட்டமான, ஆதிதிராவிட இன மாணவிகளுக்கு சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி ஆதிதிராவிட மக்களின் தலைவியாகக் காட்சி அளிக்கிறார்.

மேலும், ஆதிதிராவிட இனப் பெண்கள் நிலம் வாங்க மானியம் வழங்கப்படும் திட்டம் நாட்டிலேயே தமிழகத்தில் அம்மாவின் ஆட்சியில்தான் செயல்படுத்தப்படுகிறது. ஆதிதிராவிட ஏழையெளிய மக்களின் ஏகோபித்த தலைவியாக எங்கள் அம்மாவைத்தான் நாங்கள் காண்கிறோம். தமிழகத்தில் தாட்கோ மூலம் பல நல்ல திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. இந்த மாமன்றத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இட ஒதுக்கீட்டினைத் தந்து, பெரும்பான்மையான ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த ஆதிதிராவிட இனப் பெண்களைச் சட்டமன்ற உறுப்பினர்களாக்கியுள்ளார். இந்தச் சமுதாயத்தில் எங்களுக்கெல்லாம் வாழ்வளித்த இதயதெய்வம் அம்மா அவர்களின் உள்ளத்தில் ஆதிதிராவிடர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அளவு முக்கியம் அளித்துள்ளார் என்பதை இந்த நாட்டு மக்களே நன்கு உணர்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் அம்மாவின் கனிவான பார்வைக்கு என் தொகுதியின் கோரிக்கைகளைத் தங்களின் வாயிலாக வைக்கிறேன்.



வளர்புரம், நெமிலி ஆகிய இரண்டு ஊர்களில் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிகள் கட்டிக் கொடுத்ததற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரக்கோணம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த நெமிலி ஒன்றியம், புன்னை ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் கொண்ட வட்டார மருத்துவமனையாக மாற்றித் தர அம்மா அவர்களிடம் பணிவுடன் வேண்டுகிறேன்.

ஆட்டுப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ விடுதிக்குக் கட்டடம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரக்கோணம் நகரத்தில் போக்குவரத்து இடைஞ்சல் அதிகமாக உள்ளது. தூய அந்திரேயர் மேல்நிலைப் பள்ளி மற்றும் C.S.I. சென்ட்ரல் பள்ளி, அரசு பொது மருத்துவமனை ஆகியவை உள்ளன. இதன் அருகில் உள்ள சாலை மிகவும் குறுகி உள்ளதால் இந்த வழியாகக் கனரக வாகனங்கள் மற்றும் L & T சிமென்ட் தொழிற்சாலைக்கு மூலப்பொருட்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் செல்லும்பொழுது பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன; பள்ளி மாணவர் ஒருவர் இறந்துவிட்டார். அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அதனால் ஒரு புறவழிச்சாலை வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளதால் துரிதமாக அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சோளிங்கர்–அரக்கோணம் சாலையில் போக்குவரத்து பாதிப்பு உள்ளதால் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்கக் கோருகிறேன்.

பிற்பகல் 12–25

அரக்கோணம் நகரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், விரைவு நீதிமன்ற வளாகம் ஆக்கப் பணியைத் துரிதப்படுத்தக் கோருகிறேன்.

அரக்கோணம் ஒன்றியத்தைச் சேர்ந்த கிருஷ்ணபுரம் ஊராட்சி அருகில் உள்ள நந்தி ஆற்றின் குறுக்கே ஒரு Check Dam அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து மகளிர் காவல் நிலையக் கட்டடம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்கு ஒரு சொந்தக் கட்டடம் அமைத்துத் தர கோருகிறேன்.

காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் கட்டடம் வாடகையில் இயங்கி வருகிறது. அதற்கு ஒரு சொந்தக் கட்டடம் கட்டித் தரக் கோருகிறேன்.

ஊராட்சி ஒன்றிய அளவில் உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: உரையை முடித்து விடுங்கள்.

**திருமதி கே. பவானி கருணாகரன்**: இதில் இரண்டு அல்லது மூன்று A.E.O.கள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் கிராமங்களில் உள்ள பள்ளிகளைக் கண்காணிக்க வேண்டும். ஆனால், இவர்கள் போக்குவரத்து வசதி இல்லாததால் ஆசிரியர் பணிகளைச் சரிவர ஆய்வு செய்வதில்லை. ஆதலால் இவர்களுக்கு கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் ஆய்வுக்கு ஒரு ஜீப் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. ப. இளவழகன்.

***திரு. ப. இளவழகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டு நீதி நிருவாகம், சட்டம், எரிசக்தித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் குடும்ப நலத் துறையில் என்னைப் பேச அனுமதித்ததற்குத் தங்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்,
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்"

என்ற பாரதியின் வைர வரிகளுக்கு ஏற்ப தாழ்ந்து கிடந்த தமிழகத்தைத் தலை நிமிர்த்தி இந்தியாவில் முதன்மை மாநிலம் ஆக்கிக் காட்டுவேன்



என்று சூளுரைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குச் சாதனை படைத்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி உரையாற்ற விழைகிறேன்.

நீண்ட நெடுங்காலமாகத் தென் மாவட்ட மக்களின் பிரதான கோரிக்கையான மதுரையில் உயர் நீதிமன்றத்தினுடைய கிளை அமைக்க வேண்டுமென்ற மக்கள் கோரிக்கையை ஏற்று மதுரையில் உயர் நீதிமன்றக் கிளையை அமைத்து நீதித் துறையினுடைய மணி மகுடத்திலே ஒரு வைரக் கல்லைப் பதித்து, உச்சாணிப் புகழில் இன்று இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு நானும் ஒரு வழக்கறிஞர் என்ற வகையிலே மிகப் பணிவோடு என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திருமதி சி.எம். சூரியகலா தலைமை)

நீதித் துறையில் இன்று மக்களுக்கு நீதி விரைந்து கிடைக்க வேண்டுமென்ற வகையிலே 49 விரைவு நீதிமன்றங்களை அமைத்து, "விரைவான நீதி மக்களுக்கு" என்கின்ற அடிப்படையில் இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்து கொண்டிருக்கிறது.

அதைப்போல் நீதிமன்றங்களில் கணினிமயமாக்கத்தை உருவாக்கி, நீதிமன்றங்களைக் கணினிமயமாக்கிய பெருமை இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

சட்டத் துறைக்குப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று இந்த நாட்டு மக்கள், சட்ட வல்லுநர்கள், நீதிபதிகள் வேண்டிய விருப்பக் கருத்தை ஏற்று அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய திருப்பெயரிலே சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் அமைத்தது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

சென்னை, மதுரை, கோவை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் 6 குடும்பநல நீதிமன்றங்களை அமைத்து மக்களுக்காக நற்பணியாற்றியது அம்மா அவர்கள்தான். உயர்நீதிமன்றக் கிளையின் திறப்பு விழாவில் உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி மாண்புமிகு லகோதி அவர்கள் உரையாற்றியபோது கூறியிருக்கிறார்; இன்று நாட்டுமக்கள் அதைப் பார்த்துப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். "இந்தியாவில் தமிழகத்தில் நீதித் துறை மிகச் சிறப்பாகத் தழைத்தோங்கி விளங்கிக்கொண்டிருக்கிறது" என்று மனமாரப் பாராட்டியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய தி.மு.க. அரசினுடைய மக்கள் விரோத, தவறான அணுகுமுறையால் 1.5 இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாய பெருங்குடி மக்களும், 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடிசைவாழ் ஏழையெளிய மக்களும் கண்ணீரில் மிதந்தனர். அதற்குக் காரணமாக இருந்த தி.மு.க அரசினுடைய தவறான நடவடிக்கையை அறிந்து இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச மின்சாரம் மீண்டும் வழங்குவேன், அதற்கான நஷ்டஈட்டுத் தொகையை என்னால் சரி செய்ய முடியும் என்று நெஞ்சு நிமிர்த்தி அறிவித்தார்கள். இன்றைக்கு மக்களுக்கு அந்த இலவச மின்சாரத்தை, அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எழையெளிய மக்கள் சார்பாக நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–30*

தமிழக மின் வாரியத்தில் மேட்டூர், தூத்துக்குடி, வடசென்னை ஆகிய அனல் மின் நிலையங்கள் இந்தியாவினுடைய தங்கப் பதக்கம் பெறக்கூடிய அனல் மின் நிலையங்களாக சிறப்பான முறையிலே பணியாற்றியுள்ளன. அந்த அளவுக்கு இந்தியாவின் தங்கப் பதக்கம் பெறுகின்ற மாநிலம் தமிழ்நாடு (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற பெருமையை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதுபோலச் சர்க்கரை ஆலையிலுள்ள கரும்புச் சக்கையிலிருந்து நீராவியை உற்பத்தி செய்து அதன்மூலம் மின்சாரம் தயாரித்து, தன் சுய தேவை போக எஞ்சிய மின்சாரத்தைத் துறைக்கு வழங்கக்கூடிய அந்தச் செயல்பாடு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், இந்தத் தமிழக மின்துறைதான் முன்னணியில் இருக்கிறது என்ற நிலையை உருவாக்கி அதை உலக விஞ்ஞானிகள் இப்போது பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஜெயங்கொண்டம் பகுதியில் குறைந்த மின்அழுத்தம் ஏற்பட்டு, அங்கே கோடைகாலங்களில் நிறைய மின்சாரம் ஆங்காங்கு பயன்படுத்தப்படுவதால் விவசாயிகளுடைய மின் மோட்டார்கள் பழுதடைந்து ஓட மறுத்து வருகின்றன. அதைச் சரி செய்யக்கூடிய வகையிலே ஜெயங்கொண்டம் பகுதியிலுள்ள பாப்பாக்குடியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மின் வாரியத்திற்கு இடமும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பணியை விரைவில் முடித்துத்



தரும்படி மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல் இப்போது கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் காலிப் பணியிடங்கள் இருப்பதை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒப்பந்த அடிப்படையிலே மருத்துவர்களை நியமனம் செய்து, ஏழை எளிய மக்களுக்குச் சிறந்த மருத்துவ சேவையைக் கொடுக்க வேண்டும் என்பதிலே அக்கறையோடு செயல்பட்டு அதைச் செயலாற்றியிருக்கின்றார்கள். இதை நாட்டு மக்கள் வரவேற்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், தமிழகத்திலே 20 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 25 இடங்களிலும், 64 வட்டார மருத்துவமனைகளிலே 64 இடங்களிலும் புதிதாகக் குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை சிகிச்சை அரங்குகள் அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இது மக்களிடையே பெரிய வரவேற்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதுபோலப் பள்ளி மாணவர்களுக்குச் "சுகாதார அட்டை" என்ற அட்டை வழங்கி, வாரத்திலே வியாழக்கிழமையைப் பள்ளி "சுகாதார நாளாகக்" கொண்டாடக்கூடிய வகையிலே அமைத்து, இப்போது மாணவர்கள் நலனிலே அக்கறை காட்டி சிறந்ததொரு நிர்வாகத்தை, நல்லதொரு நற்பெயரை இப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை ஈட்டியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைச் செய்துகொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நன்றியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த மாதம் எங்களுடைய அரியலூர் அரசு மருத்துவமனைக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திடீரென்று முன் அறிவிப்பு இல்லாமல் விஜயம் செய்து, அங்கு இருக்கக்கூடிய நிலைமைகளை நேரடியாக கண்ணுற்று மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே

அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். பல ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே அந்த மருத்துவமனைக்கு நல்ல மேம்பாட்டுப் பணிகள் கிடைக்காமல், அதற்குக் கட்டட வசதிகள் இல்லாமல் துயருற்ற நிலையைக் கண்டு எங்களுடைய அரியலூர் அரசு மருத்துவமனைக்கு 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதைச் செய்து கொடுக்கும். அதற்காக நான் இங்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல் திருமானூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று இங்கு நான் மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல் திருமானூர் பகுதியில் நெல், கரும்பு ஆகிய முக்கிய பயிர்களை விவசாயிகள் பெரிதும் பயிரிட்டு வருகின்றார்கள். அந்த வகையிலே திருமானூர் ஒன்றியத்தில் நவீன அரிசி ஆலை ஒன்றை இப்போது அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அரியலூர் பகுதியில் பால் உற்பத்தியாளர்கள் பெரும் அளவிலே நிறைந்து காணப்படுவதால் அரியலூர் பகுதியில் வி. கைகாட்டி என்ற இடத்திலே பால் வளத் துறைக்குச் சொந்தமாக இடம் வாங்கப்பட்டு readyஆக இருக்கின்றது. அந்த இடத்திலே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துக் கொடுத்தால் – எங்களுடைய பகுதியிலே மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த பெண்கள் இப்போது பெரும் அளவிலே பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் அமையப்பெற்றால் – இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு மக்கள் பெரிதும் நன்றியுடன் இருப்பார்கள் என்பதை நான் இங்கே நன்றியோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அதேபோல அரியலூர் பேரூராட்சி, பன்னெடுங்காலமாக பேரூராட்சியாக இயங்கி வருகிறது. அதனுடைய மக்கள் தொகை 27,871 ஆகும். அந்த அரியலூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்தித்



தர வேண்டுமென்று இதயதெய்வம் அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"அஞ்சுதலைப் பாம்பென்பான் – அப்பன்;
ஆறுதலை என்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்து விடுவார் – பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்"

என்று பாரதி கூறியிருக்கின்றார்.

"அஞ்சுதலைப் பாம்பென்பான் – அப்பன்;
ஆறுதலை என்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்து விடுவார் – பின்பு,
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்"

என்ற பாரதியின் வைர வரிகளுக்கேற்ப இன்றைக்குத் தமிழகத்திலே வாழக்கூடிய ஒருசில அப்பன் மகன்கள், அவர்கள் குடும்பச் சண்டையில், மதுரையிலே ஓடுகின்ற அரசுப் பேருந்துகளையெல்லாம் எரித்துத் தீயிட்டுக் கருகச் செய்துவிட்டு, அந்தத் தீஞ்செயல்களிலே, கொடுஞ்செயல்களிலே ஈடுபட்டவர்களைக் காவல் துறை கைது செய்து, காவல் நிலையத்தில் அடைத்தபோது, அத்து மீறி, சட்டத்தை மீறி, காவல் நிலையத்திற்குள்ளே புகுந்து, அப்படிப்பட்ட தவறைச் செய்தவர்களை அத்து மீறி வெளியே இழுத்து வந்து சட்டத்தை மீறியது முந்தைய ஆட்சியிலே நடந்த அவல நிலையாகும்.

அதோடு மட்டுமல்லாமல், பத்மநாபா உள்பட 14 பேர்களை சென்னையிலே கொலை செய்துவிட்டு, கொலைகாரக் கும்பல் சென்னையிலிருந்து குமரிமுனை வரை சென்று, எந்த அச்சமும் இல்லாமல், எந்த நடுக்கமும் இல்லாமல், அவர்கள் தப்பியோட உதவி செய்தது முந்தைய தி.மு.க. ஆட்சியிலே நடந்தேறியிருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, நீதியைக் கட்டிக்காக்கும் நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே கொலைவெறித் தாக்குதல் நடத்தி, கொலை நடத்தி, சட்டம் ஒழுங்கைக் கேவலமாக்கி, இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு மிகக் கேவலமாக இருக்கிறது தமிழ்நாட்டிலே – என்ற அவப்பெயரை எடுத்தது; சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்கின்ற ஒரே காரணத்தால், தி.மு.க. ஆட்சி முன்பு கலைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் எந்த

மாநில அரசும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்கின்ற காரணத்தால் கலைக்கப்பட்ட வரலாறு கிடையாது. ஆனால், கருணாநிதியினுடைய அரசாங்கம் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற காரணத்தால் கலைக்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் இரண்டு நாட்களாகப் பேசுகிறார்கள்; தமிழகத்திலே சட்டசபைக்கு வர மறுக்கின்றவர்கள்; சட்டமன்றத்திலே பணியாற்ற மறுக்கின்றவர்கள்; சந்துமுனையிலே நின்றுகொண்டு சிந்து பாடிக்கொண்டு, சட்டசபைக்குப் போக விடாமல் தடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்; யார் தடுக்கிறார்கள்? போகிற போக்கிலே என் அன்னையின்மீது புழுதி வாரித் தூற்ற நினைக்கின்றார்கள். இன்றைக்கு ஒரு குடும்பத் தொலைக்காட்சி ஒளிபரப்புகின்றது. அந்தத் தொலைக்காட்சியைப் பார்த்து மக்கள் சொல்கிறார்கள், 'இந்தத் தொலைக்காட்சியைப் பார்த்தால் குழப்பமே வந்துவிடுகிறது' என்று சொல்கிறார்கள். இந்தத் தொலைக்காட்சியைப் பார்த்ததற்குப் பின்னர், வேறு ஒரு சேனலை வைத்து ஒரு அரை மணி நேரம் நன்றாக உற்றுக் கவனித்தால்தான் சுய சிந்தனையே வருகிறது என்று சொல்லக்கூடிய வகையிலே இன்றைக்கு உண்மைக்கு மாறான பிரச்சாரங்களை அந்தத் தொலைக்காட்சி செய்து வருகின்றது.

நாலு கடலையைத் தின்கின்றவன், ஐந்தாவதாக ஒரு சொத்தைக் கடலையைத் தின்றுவிட்டால், மீண்டும் ஒரு நான்கு நல்ல கடலையைத் தின்றால்தான் வாய் பழைய சுவையை அடைய முடியும். உப்புநீரைக் குடித்தவன், சிறிது நேரம் கழித்து நல்ல தண்ணீரைக் குடித்தால்தான், நா சுவை அடையும் என்கின்ற வகையிலே, இன்றைக்கு அந்தக் குடும்பத் தொலைக்காட்சி உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்பி, இன்றைக்கு நாட்டு மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. இதோ வருகிறது தேர்தல்; அதோ வருகிறது தேர்தல் என்று மக்களிடத்திலே குழப்பத்தை உருவாக்கிக்கொண்டு இன்றைக்கு 7 பேர் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனி ஒருவராக நின்று போரிட்டு, அந்தத் தேர்தல் களத்திலே 1 கோடியே 2 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) எப்போது தேர்தல் வந்தாலும் வெற்றி பெறக்கூடிய இயக்கம் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. எப்போதாவது வெற்றி பெறக்கூடிய இயக்கத்தினர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள். அப்படிச் சந்தர்ப்ப





சூழ்நிலையால் எப்போதோ வெற்றி பெறக்கூடிய அந்தச் சூழ்நிலையில் நின்றவர்கள். இன்றைக்கு ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கும்பகோணத்திலே இறந்த குழந்தைகளின் குடும்பங்களின் துயர்துடைக்க இதயதெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அடுத்த கணமே விரைந்து சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கண்ணீர் மல்க ஆறுதல் கூறியதை இந்த நாட்டு மக்கள் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அதைக்கூட அந்தக் குடும்பத் தொலைக்காட்சி அரசியலாக்கி, எதை எதைச் சொல்லி மக்களிடத்திலே கெட்ட பெயர் உண்டு பண்ணலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில், அந்தக் குளக்கரையிலே இறந்து கிடந்தாரே மாணவன் உதயகுமார், அவனுடைய மரணத்திற்கான காரணத்தையும் இந்த நாட்டு மக்கள் இன்னும் மறந்துவிடாமல் அதனை மனதில் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு எப்படிப்பட்ட பிரச்சாரங்களை நீங்கள் எப்படி எழுப்பினாலும் அதை எதிர்கொண்டு திறமையோடு சந்திக்கக்கூடிய ஆற்றல் உடையவர் — வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீர முழக்கமிட்டானே வீரபாண்டிய கட்டபொம்மன் அந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரத்தையும், தியாகத்தையும் மிஞ்சியவர்—எங்கள் தாய் புரட்சித் தலைவி என்று கூறி, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

## 6. உரிமை மீறல் பிரச்சினை

### நிதியமைச்சர் பதிலுரையின்மீது திரு. மு. கருணாநிதி தெரிவித்த கருத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 219–ன்கீழ் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் உரிமைப் பிரச்சினை குறித்த அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்தார்கள். மேலெழுந்தவாரியாக பார்க்கிறபோது இதிலே உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால் பேரவை விதி 225–ன்கீழ் உரிமை மீறல் தீர்மானம் ஒன்றினை அவை முன்னவர் அவர்கள் முன்மொழிய அனுமதி அளிக்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2004 ஜூலை 26

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23-7-2004 அன்று அவையில் 2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது முந்தைய நேர்வுகளில் முன்னளி மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி அவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது குறித்துப் பேசினேன். ஆனால் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கருணாநிதி கூறியதாக, சில உண்மைக்கு மாறான அவை உரிமை மீறிய செய்திகள் 26-7-2004 நாளிட்ட முரசொலி நாளிதழில் வெளிவந்துள்ளன. அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

"அய்யா மந்திரியாரே, மானியம் வேறு, மசோதா வேறு. மானியத்திற்கும் மசோதாவிற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் எல்லாம் மந்திரிகளாக உட்கார்ந்து கொண்டு மக்களைக் குழப்பாதீர்கள் என்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். சட்டப் பேரவையில் யாரும் இல்லாத நேரத்தில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், யார கேட்கப் போகிறார்கள், பத்திரிகையாளர்கள் ஒப்பிட்டுப் பார்க்கப் போகிறார்களா, ஜனநாயகத்திலே எல்லா கதவுகளையும் நாம் மூடி விட்டோம். ஆகவே, எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற அந்த நிலையிலேதான் பொன்னையன் இவ்வளவு பெரிய பொய்யைச் சட்டமன்றத்திலே இரண்டு நாட்களுக்கு முன்பு சொல்லியிருக்கிறார். இது உண்மைக்கு மாறான தகவல் என்பதால் உரிமைப் பிரச்சினைக்குக்கூட உரியது".

மேலும், 26-7-2004 நாளிட்ட இந்து பத்திரிகையில் 1979-80ல் சட்டமன்றம் மிகக் குறுகிய காலமே நடைபெற்றதாக நான் கூறியதாகவும், ஆனால், அன்றைய பேரவைத் தலைவர் 59 நாட்கள் பேரவை நடைபெற்றதாகக் கூறியுள்ளதாகவும், எனவே அவைக்கு நான் தவறான தகவலைத் தந்ததாகக் கூறி என்மீது அவையில் உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம் என திரு. கருணாநிதி கூறியுள்ளதாகச் செய்தி வந்துள்ளது. ஆனால், நான் அவையில் பேசியதை அவைக்குறிப்பில் உள்ளவாறு படிக்கின்றேன்:

"இதற்கு முன்னால் இப்படிப்பட்ட விவாதமின்றி Demands ஈடேற்றப்பட்டுள்ளனவா என்றால் பலமுறை இப்படி நடந்திருக்கிறது. 1957-58-ல் 48 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன. அதைப்போலவே, 1962-63-ல் 45 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன. அதைப்போலவே,



2004 ஜூலை 26] [திரு. சி. பொன்னையன்]

1967-68-ல் 47 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி முடிந்திருக்கின்றன. 1979-80-ல் 58 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன."

இதில் நான் பேரவையில் எந்த இடத்திலும் மசோதா என்ற வார்த்தையைக் குறிப்பிடவே இல்லை. மானியக் கோரிக்கைகள் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன். இந்த உண்மை நிலையை மறைத்துப் பேசுவது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதற்கு சமமாகும். மசோதாவிற்கும் மானியத்திற்கும் வித்தியாசம் தெரியாமல், Bills-க்கும், Demands-க்கும் வித்தியாசம் தெரியாமல் குழம்பியிருப்பவர் திரு. கருணாநிதிதான். வயதான காரணத்தால் அவரது சிந்தனை தடுமாறுவதால், senility என்னும் மனநிலையில் அவர் இருப்பதால், திரு. கருணாநிதிக்கு Demands-க்கும், Bills-க்கும் உள்ள வேறுபாடு தெரியவில்லை. நான் சட்டமன்றப் பேரவையில் எந்த இடத்திலும் Bills என்று கூறவில்லை. அனைத்து இடத்திலும் Demands, அதாவது மானியக் கோரிக்கைகள் என்றுதான் கூறியுள்ளேன். இந்த உண்மையைச் சிந்தனைத் தெளிவு பெற்று திரு. கருணாநிதி உணர வேண்டும்.

அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பதுபோல், அறவே உண்மை இல்லாத ஒரு செய்தியைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறி வந்தால், அத்தகைய உண்மையில்லாச் செய்தியும் மெய்யான செய்தி என்று மக்களால் நம்பப்படும் எனும் கோயபல்ஸ் தத்துவத்தின் தற்போதைய ஒரே வாரிசு திரு. கருணாநிதி அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நாட்டு மக்கள் எங்கு பார்த்தாலும் திரு. கருணாநிதியைப் பற்றி எள்ளி நகையாடுகிறார்கள். ஒரு பொருளைத் திருடிவிட்டு ஓடுகின்ற திருடன், அக்கம் பக்கத்தில் உள்ள நிரபராதிகளைத் திருடன், திருடன் என்று சொல்லிவிட்டுத் தப்பித்து ஓட முயற்சி செய்வான். கோயபல்ஸ் தத்துவமான, உண்மை அல்லாதவற்றை மட்டுமே உறங்கும்போதுகூடப் பேசிக் கொண்டிருக்கிற திரு. கருணாநிதி, என்னைப் பார்த்து, உண்மைக்கு மாறாக அவை உரிமையை மீறி நான் பேரவையில் பேசாதவற்றைப் பேசினேன் என்று கூறி அவை உரிமையை மீறி இருக்கிறார்; மேலும், தமிழக மக்களை ஏமாற்றியிருக்கிறார்; பத்திரிகைகளையும் ஏமாற்றுகிறார். பத்திரிகைகளின் நலன் கருதியும், பத்திரிகைகள் கருணாநிதி எதைப் பேசினாலும், எதை எழுதினாலும் அதில் உண்மையிருக்கிறதா என்பதைக் கண்டறிந்த பின்னரே வெளியிட வேண்டும் என்பதற்காகவும், இவற்றிற்கு ஆதாரமான சில எடுத்துக்காட்டுகளை அவையில் தெரிவிக்க விழைகின்றேன்.

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 26

பிற்பகல் 12–45

1968 ஆகஸ்ட் 24–ல் ஹேமாவதி நீர்த்தேக்கத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் என்று இந்தச் சட்டப்பேரவையிலே அப்போது விவாதிக்கப்பட்டது. அப்போது திரு. கருணாநிதி பேசியிருக்கிறார்.

"தலைவர் அவர்களே, 82-வது விதியின்கீழ் பேரவையின் கவனத்தை ஈர்த்து ஒரு முக்கிய பொருள் பற்றி இந்த அறிக்கையை அவைமுன் வைக்க விழைகின்றேன்.

தமிழகத்தின் தலையாய பாசன ஆதாரம் காவிரி. 1924 ஆம் ஆண்டு மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் காவிரிப் பாசனம் சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அது சம்பந்தப்பட்ட சில முக்கிய கூறுகள் – மேட்டூர் நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றவும், தமிழகத்திற்கு நிலையாக, உரித்தான நீர்ப்போக்கின் அளவு (Limit flows) கணக்கிடப்பட வேண்டும். அவ்வாறு கணக்கிடப்பட்ட அளவு நீரை காவிரி ஆற்றின் வழி விடுத்த பின்னரே, மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகரில் நீரைத் தேக்கலாம் எனவும், மைசூர் மாநிலத்திற்கு சில பாசன வாய்ப்புகளும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், தமிழக பாசனத்திற்கு நிலையாக, உரித்தான நீர்ப்போக்கின் அளவு சிறிதேனும் குன்றாதவாறு, மைசூர் பாசன வாய்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் 1974–வது ஆண்டு வரை செயல்திறன் உடையதாக இருக்கும்" என்று சட்டப்பேரவையிலே கூறினார்.

இப்படி, சட்டப்பேரவையிலேயே காவிரி ஒப்பந்தம் 1974–வது ஆண்டோடு முடிந்துவிட்டது எனும் பொருள்படும்படிப் பேசி, காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்களுக்கு திரு. கருணாநிதி துரோகம் இழைத்துவிட்டார் என்பதைச் சட்டப் பேரவையில் பல முறை நாங்கள் எடுத்துக் கூறினோம். ஆனால், கருணாநிதி உண்மையல்லாத கோயபல்ஸ் தத்துவத்தை மட்டுமே நம்புகின்ற மனநிலை உடையவர் என்பதால், சட்டப்பேரவையில் 24–8–1968–ல் "இந்த ஒப்பந்தம் 1974 வது ஆண்டு வரை செயல்திறன் உடையதாக இருக்கும்" என்று கூறியதை மறைத்துவிட்டு, எந்தக்காலத்திலும், 1974 வரைதான் காவிரி ஒப்பந்தம் செயல்திறன் உடையதாக இருக்கும் என்று தான் கூறவில்லை என்று கூறி வருவது, கருணாநிதி, கோயபல்ஸ் தத்துவத்தை வெட்கப்படாமல் பாடிக்கொண்டே, தமிழக மக்களை ஏமாற்றி வருவதற்கு ஓர் எடுத்துக்காட்டு.



2004 ஜூலை 26] [திரு. சி. பொன்னையன்]

அதைப்போலவேதான், கபினியில் இருந்து மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 14,000 கன அடி வீதம் தண்ணீர் விடப்படுமென்று கர்நாடக முதல்வர் திரு. தரம்சிங் அறிவித்தார். ஆனால், திரு. கருணாநிதியும், அவர் கட்சியினரும் காவிரியில் மேட்டூருக்குத் தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டதற்காக பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங்கிற்கும், திருமதி சோனியா காந்திக்கும் நன்றி தெரிவித்து, ஏதோ திரு. கருணாநிதி முயற்சியாலும், திருமதி சோனியா காந்தி முயற்சியாலும்தான் காவிரியில் கபினியில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது என்ற ஓர் உண்மைக்கு மாறான கோயபல்ஸ் மாயையை உருவாக்கினார்கள். ஆனால், கர்நாடக முதலமைச்சர் திரு. தரம்சிங் அவர்களோ, "கபினி அணையிலிருந்து தமிழகத்தின் மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 14,000 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கபினி அணைக்கு நீர்வரத்து அதிகமானதைத் தொடர்ந்து நீர்மட்டம், அதன் முழு அளவைத் தொடும் நிலைமை ஏற்பட்டது. அணையின் பாதுகாப்பைக் கருதி தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று நீர்ப் பாசனத் துறை அதிகாரிகள் கூறினார்கள். அதனால்தான் தண்ணீரைத் திறந்துவிட்டோம்" என்று கர்நாடக முதலமைச்சர் தெளிவுபடுத்தினார். இயற்கை அன்னை தந்த அதிகப்படியான மழையினால்தான் தண்ணீர் கபினி அணையிலிருந்து, அணையின் பாதுகாப்பிற்காகத் திறந்துவிடப்பட்டதேயொழிய, திரு. கருணாநிதியின் முயற்சியாலோ, திருமதி சோனியா காந்தி முயற்சியாலோ கபினி நீர் திறந்துவிடப்பட்டது என்ற கருணாநிதி கும்பலின் கூற்று, உண்மையல்லாதவற்றை மட்டுமே கூறும் திரு. கருணாநிதியின் கோயபல்ஸ் தத்துவத்திற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

1972 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது, அதில் இணைந்தவர் ** திரு. பெ. சவுந்திரபாண்டியன். 1967-ல் இவர் திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராகப் பேரறிஞர் அண்ணா அவர்களால் நிறுத்தப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1971–லும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் இவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும் சேர்ந்தார் என்பதற்காக 'லஞ்சம் கேட்டார்' என்று ஓர் உண்மைக்கு மாறான புகாரை சட்டமன்றத்தில் கூறிய அன்றைய முதலமைச்சர் கருணாநிதி, அதற்கு ஆதாரமாக ஒரு forgery கடிதத்தையும் தாக்கல் செய்தார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 26

*பிற்பகல் 12–50*

1968 ஆம் ஆண்டு திரு. பெ. சவுந்திரபாண்டியன் அவர்கள் ஒருவருக்கு டைரக்டர் பதவி வாங்கித் தருவதாகவும் சென்னைக்குப் போக வழிச் செலவும் கார் நிதியும் கொடுக்கச் சொல்லி கடிதம் எழுதியதாக 1973 ஆம் ஆண்டு நவம்பர் 27ந் தேதி ஒரு forgery கடிதத்தை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தவர் முதலமைச்சராக இருந்த கருணாநிதி. இந்தக் கடிதம் போலியானது, forgery-யானது என்பதை அன்றைய பேரவைத் தலைவர் 1–12–1973ல் உறுதி செய்தார். இதில் உண்மையில்லாதவற்றைக் கூறி அதை உண்மையாக்கிவிடலாம் என்று எண்ணும் திரு. கருணாநிதியின் கோயபல்ஸ் தத்துவத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

1997 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதியன்று காலை தினசரிகளில், அன்று வெளி வந்த வார இதழ்களில் வண்ணப் புகைப்படம் ஒன்று வெளி வந்தது. அதில் கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடன் ராஜீவ் காந்தி படுகொலையில் சம்பந்தப்பட்ட இருவர் கும்பலில் நிற்பது போன்ற படம். அப்போது சட்டப் பேரவையில் பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் கருணாநிதி "ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை டெல்லியில் நடந்து வருகிறது. ஜெயின் கமிஷன் விசாரணை நடந்து வருகிறது. இந்த நேரத்தில் பிரச்சினைக்குரிய போட்டோ வெளியாகியிருப்பது வழக்கின் புதிய திருப்பம். எனவே, இதுகுறித்து தமிழக அரசு விசாரித்து மத்திய அரசுக்குத் தகவல் தெரிவிக்கும்" என்று பேசினார். இந்தப் புகைப்படத்தில் இருப்பவர்கள் பற்றி அன்றையதினமே அப்போதே சட்டமன்றத்தில் தெரிவிப்பதற்கு எழுந்த ஒசூர் தொகுதி ஜனதா தள உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்களைப் பேசுவதற்கு அனுமதிக்கவேயில்லை. டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடன் போட்டோவில் இருக்கும் பெண் விடுதலைப் புலி தாணு அல்ல மாறாக தாட்சாயிணி என்ற வழக்கறிஞர் என்றும், கண்ணாடி அணிந்திருப்பவர் விடுதலைப் புலி சிவராசன் அல்ல மாறாக நஞ்சேகௌடர் எனும் வழக்கறிஞர் என்றும் இவர்கள் ஒசூரில் இருக்கிறார்கள் என்பதும் நிரூபணமானது. இதில் உண்மையில்லாதவற்றைக் கூறி அதை உண்மையாக்கி விடலாம் என்று எண்ணும் திரு. கருணாநிதியின் கோயபல்ஸ் தத்துவத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.



2004 ஜூலை 26] [திரு. சி. பொன்னையன்]

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதலமைச்சராக இருந்த கருணாநிதி, டாக்டர் பட்டம் பெறுவதற்காகப் படை பட்டாளத்தோடு சென்றபோது அங்கிருந்த மாணவர்கள், எந்தத் தகுதியும் இல்லாத கருணாநிதிக்கு டாக்டர் பட்டம் தரக் கூடாது என்று போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய மாணவன் உதயகுமார் அடித்துக்கொல்லப்பட்டு அங்கிருந்த குளத்திலே தூக்கி எறியப்பட்டார். மாணவன் உதயகுமார் பிணத்தைக் காட்டி அவரது பெற்றோர்களே இது தங்களது மகன் இல்லை என்று சொல்வதற்குக் காரணமாக இருந்தவர் இந்த கருணாநிதி. பின்னர் நடைபெற்ற விசாரணை கமிஷனில் கொல்லப்பட்டு குளத்தில் மிதந்து கிடந்தது தனது மகன்தான் என்று தந்தையே ஒப்புக்கொண்டதால் கருணாநிதியினுடைய உண்மையைக் குழியில் புதைக்கும் முயற்சி தோற்றது. இப்படி உண்மையல்லாதவற்றைக் கூறி அதை உண்மையாக்கிவிடலாம் என்று எண்ணும் திரு. கருணாநிதியின் கோயபல்ஸ் தத்துவத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

பத்திரிகைகள் செய்திகள் வெளியிடும்போது, அவையில் நடந்தவற்றை உள்ளபடி சரியாக வெளியிட வேண்டும். நடைபெற்ற நிகழ்ச்சிகளை உண்மைக்கு மாறாகத் திரித்து வெளியிடக் கூடாது. இது மக்களைத் திசை திருப்பும் நோக்கோடு, அவர்களை ஒரு விரும்பத்தகாத முடிவுக்கு அழைத்துச் செல்கின்ற ஒரு தவறான வழிகாட்டுதலாக அமையும். எனவே, பாரம்பரியம் மிக்க பத்திரிகைகள் அவைச் செய்திகளை வெளியிடும்போது, அவையின் விதிகளுக்கும் நெறிமுறைகளுக்கும் சற்றும் வழுவாது அவை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் பேரவை நடவடிக்கைகள் குறித்த உண்மைச் செய்திகளை வெளியிட வேண்டும். நான் மேலே கூறிய எடுத்துக்காட்டுகளிலிருந்து திரு. கருணாநிதி எத்தகைய குணம் படைத்தவர் என்பதையும் முற்றிலும் உண்மை இல்லாதவற்றையும், உண்மையானவை என்பது போன்ற மாயையை கோயபல்ஸ் முறையில் உருவாக்கக்கூடியவர் என்பதையும் பத்திரிகைகள் இனியேனும் புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. கருணாநிதி எதைப் பேசினாலும், எதை எழுதினாலும் அதில் கோயபல்ஸ் தத்துவமான உண்மை இல்லாததே நிறைந்திருக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு பத்திரிகைகள் உண்மை என்ன என்பதனை



226215
Chennai-600 009

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 26

சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்த பிறகே செய்திகளை வெளியிட வேண்டும். திரு. கருணாநிதி உண்மையைத்தான் சொல்கிறார் என்று தப்பாகக் கணக்கிட்டு அவை உரிமை மீறல் போன்ற சிக்கல்களில் பத்திரிகைகள் இனியேனும் சிக்கிக்கொள்ளாமல் தங்களையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்; பத்திரிகை தர்மத்தையும் பாதுகாக்க வேண்டும்.

*பிற்பகல் 12–55*

தற்பொழுது தினமணி, இந்து, தினமலர், தினகரன், முரசொலி போன்ற பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்திகள் அவை உரிமை மீறிய செயலாகக் கருதப்பட்டாலும், பத்திரிகைகள் இனிமேல் பேரவை நடவடிக்கைகள் குறித்த உண்மைச் செய்திகளை வெளியிடும் என்ற நம்பிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கூறியுள்ளதற்கு ஏற்ப அப்பத்திரிகைகள்மீது உரிமை மீறல் நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாம் என்று பேரவைத் தலைவர் மூலமாகப் பேரவையைக் கேட்டுக்கொள்கிறேன். திரு. கருணாநிதி எதைப் பேசினாலும், எதை எழுதினாலும் அதில் கோயபல்ஸ் தத்துவமான உண்மையில்லாததே நிறைந்திருக்கும் என்பதால் பத்திரிகைகள் அதன் உண்மை நிலை என்ன என்பதை சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்த பின்னரே செய்திகளை இனி வெளியிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*26–7–2004* ஆம் நாளிட்ட முரசொலி பத்திரிகையில் திரு. கருணாநிதி, அவையில் நான் பேசிய செய்தியை நேர்மாறாகத் திரித்து உண்மையல்லாதவற்றைப் பேசி, தமிழக மக்களைத் திசை திருப்பும் வகையிலும், அவதூறான வகையில் அவைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலும் கூறியிருப்பது அவை உரிமையை மீறிய செயலாகும். எனவே, திரு. கருணாநிதி, பேரவை நடவடிக்கைகளுக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில், அவையின் உரிமையை மீறுகிற வகையில், பேரவையில் நடைபெற்ற செய்தியைத் திரித்து உண்மையல்லாதவற்றைக் கூறி, மக்களைத் திசை திருப்பும் நோக்கத்துடன் அவைக்குக் களங்கம் உருவாக்கி, அவையின் விதிமுறைகளுக்கு மாறாகச் செய்தி வெளியிட்டிருப்பது அவை உரிமை மீறிய செயலாகும்.

எனவே, இப்பிரச்சினையை உரிமைக் குழு ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



2004 ஜூலை 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

தீர்மானம் நிறைவேறியது.

இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெறுகிறது.

## 5. மானியக் கோரிக்கைகள், 2004-2005, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்**

**(ஆ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை**

**(இ) கோரிக்கை எண் 30 – தகவல் தொழில்நுட்பவியல் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 32 – சட்டத் துறை**

**(உ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறரைக் கோடி மக்களுடைய நெஞ்சங்களிலே நீங்காத இடம் பெற்றுக்கொண்டிருக்கின்ற எங்களுடைய இதயதெய்வமும் தமிழகத்தினுடைய முதல்வருமான மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து, இந்த இயக்கத்தின் கோடானுகோடி தொண்டர்களின் மத்தியிலே என்னையும் நாடாளுமன்ற உறுப்பினராக்கி இன்றையதினம் இந்த அமைச்சரவையிலே அமைச்சராகவும் ஆக்கி, கழகத்தின் சார்பாகப் பல்வேறு பணிகளையும் அளித்து, தொண்டர்கள் மத்தியிலே இந்தத் தொண்டனுக்கும் ஒரு வாய்ப்புத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, இன்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறை குறித்து என்னுடைய பதிலுரையினை அளிக்கின்றேன்.

இதுவரையிலும் இந்தியாவில் இல்லாத அளவிற்கு, எந்த இயக்கமும் செய்யாத அளவிற்கு தமிழ்நாட்டிலே முதன்முதலாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழையெளிய மக்களுடைய நலனைக் காக்க வேண்டுமென்று கழகத்தின் சார்பாக ஒரு ஒன்றியத்திலே இருக்கக்கூடிய ஏழையெளிய தொண்டன் வரையில், அது யாராக இருந்தாலும் அவர்களுடைய இதயத்தினைக் காப்போம் என்ற ஒரு திட்டத்தினை இதுவரையிலும் எந்த இயக்கமும் அறிவிக்காத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார் என்றால் அது இந்தியாவிலேயே, அது தேசிய கட்சியாக இருந்தாலும் அல்லது எந்தக் கட்சியாக இருந்தாலும் இதுபோன்ற செயல் இந்நாள் வரை இருந்ததில்லை என்பதை நான் இந்த மாமன்றத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–00*

தமிழகத்தினுடைய முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, 2001–லிருந்து இன்றுவரை, இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சீரோடும், சிறப்போடும் பணியாற்றி வருகிறது. மாண்புமிகு அம்மாவைப் பொறுத்தவரையிலே, அது சுகாதாரத் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அத்தனை துறைகளினுடைய வளர்ச்சிக்காகவும், பல்வேறு பணிகளை மேற்கொண்டு, அல்லும்பகலும் பணியாற்றி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், உதாரணத்திற்கு, பிறப்பு விகிதத்தை இன்று எடுத்துக்கொண்டால், 1999–லே, 19.3 ஆக இருந்த பிறப்பு விகிதம், 2002–லே, 18.5 ஆகக் குறைந்துள்ளது. ஆனால், அதற்கும மேலாக, 2003–லே, இந்தக் கணக்கை எடுத்துக்கொண்டால், மேலும் அது 17.8 ஆகக் குறைந்துள்ளது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இறப்பு விகிதத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால், 1999–லே, 8.0 ஆக இருந்த இறப்பு விகிதம், 2002–லே, 7.7 ஆகக் குறைந்துள்ளது; மேலும், 2003–லே, 6.98 ஆகக் குறைந்துள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



சிசு மரண விகிதத்தை எடுத்துக்கொண்டாலும், 1999–லே, 52 ஆக இருந்த சிசு மரண விகிதம், 2002–லே 44 ஆகக் குறைந்துள்ளது. மேலும், 2003–லே, அது 30.18 ஆகக் குறைந்துள்ளது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, கிட்டத்தட்ட நமது மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக—1413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன; இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன், மாண்புமிகு அம்மா அவர்கள்—இதுவரையில் இல்லாத அளவுக்கு, 2001–லிருந்து, இதுநாள்வரையிலேயும் 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தியுள்ளார்கள் என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுந்தவரையில், இதுவரையில் இல்லாத அளவுக்கு, நவீன மருத்துவச் சாதனங்கள், X-ray --ஊடுகதிர் கருவி-- Scan உபகரணம், Mobile E.C.G., ஆய்வுப் பரிசோதனைகள், அறுவை சிகிச்சைகள் போன்றவற்றை, மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அளித்து, அதன்மூலம் கிராம மக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காக, இன்றையதினம் கிட்டத்தட்ட 186 டாக்டர்களை ஒப்பந்த அடிப்படையிலே உடனடியாக நியமிக்க வேண்டும் என்று, அங்கே அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலே இருக்கக்கூடிய மருத்துவர்களிலே, ஒரு ஆண் டாக்டரையும், ஒரு பெண் டாக்டரையும் உடனடியாக நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டிலே உள்ள மொத்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, இதுவரையிலும் 2895 மருத்துவர் பணியிடங்கள் உள்ளன. அதிலே இன்றுவரை, மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரிலே, கிட்டத்தட்ட 1078 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே மொத்தமுள்ள 8682 துணைச் சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டால், அங்கே இருக்ககூடிய கிராம சுகாதார செவிலியர்களின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், 10,366; காலியாக உள்ள பணியிடங்கள் 536–ஐ மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக நிரப்பி, இன்றையதினம் 10,224 பேர் பணியாற்றி வருகிறார்கள்.

மீண்டும், 142 பேர் கிராம சுகாதார செவிலியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றையும் உடனடியாக நிரப்புவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டால், இன்றுவரை, மாண்புமிகு அம்மா அவர்கள், இங்கேயும், இந்தத் துறை, இந்திய மருத்துவத் துறையின் முன்னோடியாக இருக்க வேண்டும் என்பதற்காக—ஏறத்தாழ 287 மையங்கள் இருந்தன-- 2002–2003-லே மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் புதிதாக, 50 புதிய மையங்களும், 2003–2004 ஆம் ஆண்டில் 25 புதிய மையங்களும் ஏற்படுத்தினார்கள். அதற்கும் மேலாக 1413 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே 356 மையங்கள் இன்றையதினம் இந்திய மருத்துவப் பிரிவுகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தற்போது 2004–2005 பகுதித் திட்டத்தின்கீழ் மேலும் 35 மையங்கள் இந்திய மருத்துவப் பிரிவுகளாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பு ஏற்ற பிறகு, 110 இந்திய மருத்துவப் பிரிவுகளை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–05*

இதுவரையிலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்திலே மருத்துவ மற்றும் ஊரக நலத் துறை சார்பாக 24 மணி நேர சிகிச்சைப் பிரிவுகள் கொண்ட மருத்துவமனைகளை, கிட்டத்தட்ட 61 மருத்துவமனைகளைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, அதிலும் குறிப்பாக தாய்மார்களின் நலனைக் கருதி இந்த ஆண்டு பல்வேறு நகரங்களில் எல்லாம் பலரும் எந்த நேரத்திலும் எந்தக் காலத்திலும் அந்த மருத்துவமனைகளை அணுகி, அவர்களுக்குப் பணி செய்ய வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, அவசர தாய்—சேய் நல சிகிச்சையை உடனடியாக அளிப்பதற்கு, மாவட்டந்தோறும் 2 மருத்துவமனைகள் தேர்வுசெய்யப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட தாய் மற்றும் சிசு நல மையங்களாக மாற்றப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மையங்களிலே 24 மணி நேரம் இயங்கக்கூடிய அறுவைச் சிகிச்சை அரங்கம், இரத்த வங்கி, ஆய்வுக் கூடம், அவசர ஊர்தி ஆகிய வசதிகள் செய்து தரப்படும். மேலும், தேவையான சிறப்புப் பயிற்சிகள் பெற்ற மருத்துவர்கள் மற்றும்



செவிலியர்களைத் தனியாக நியமிக்கப் போகிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய மையங்கள் மாநிலம் முழுவதும் 61 இடங்களிலே தொடங்கப்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இதற்கெல்லாம் மேலாக பிரசவ காலத்திலே அந்தத் தாய்மார்களின் உறவினர்களை, உதவியாளர்களை அந்த இடத்திலே அனுமதிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதைப் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாதம் முதற்கொண்டு அரசு மருத்துவமனைகளிலே பிரசவத்திற்கு வரும் தாய்மார்கள், பிரசவ அறையிலே தங்களுடன் உதவிக்கு ஒரு பெண் உறவினரையும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும். இதனால் தாய்மார்களுக்குப் பிரசவ நேர வேதனையும், சிக்கலும் பெரிதும் குறையும். மற்றும் அறுவைச் சிகிச்சை விகிதங்களும் குறையலாம் என்பதை உணர்ந்து இதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரையிலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிலே மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள், இருக்கக்கூடிய அத்தனை மருத்துவமனைகளையும், 29 தலைமை மருத்துவமனைகளையும், 186 வட்ட மருத்துவமனைகளையும், 80 வட்டம் சாரா — **Non Taluk** — மருத்துவமனைகளையும் தரம் உயர்த்துவதற்காக 590 கோடி ரூபாயை உலக வங்கியிடம் பெறுவதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகளால் அது இறுதி நிலையில் உள்ளது என்பதையும், அதற்கான தக்க நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவப் பணியிடங்களைப் பொறுத்தவரையிலும், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறையிலே ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் மொத்த இடங்கள் 1810. இதிலே 1582 மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள். காலியாக இருக்கக்கூடிய 228 மருத்துவர்களை உடனடியாக நிரப்புவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய மருத்துவக் கல்வி இயக்ககத்தின் சார்பாக 43 உயர்நிலை மருத்துவ நிலையங்கள் உள்ளன. மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறையின்கீழ் 29 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளும், 186 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளும், 80 வட்டம் சாரா மருத்துவமனைகளும் மற்றும் நடமாடும் மருந்தகங்கள்கூட ஏனைய 47 மருந்தகங்களும் செயல்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால், 1–7–1994–ல் இதுவரையிலும் இல்லாத அளவிற்கு, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்தியாவிலேயே, முதன்முதலாக தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம், Tamil Nadu Medical Services Corporation என்ற ஒரு நிறுவனம் தமிழ்நாட்டில் மட்டும்தான்--இந்த நிறுவனம்--தொடங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சேவைக் கழகத்தினுடைய முக்கிய நோக்கம், மக்களுக்கு, குறிப்பாகத் தமிழகத்தினுடைய மக்களுக்கு, நல்ல தரமான மருந்துகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இன்றையதினம் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம், இந்தியா முழுவதற்கும் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. அதுமட்டுமல்லாமல், இதுபோன்ற அமைப்பைத் தங்கள் மாநிலங்களிலும் நிறுவ வேண்டும் என்று ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், ஜம்மு மற்றும் காஷ்மீர் போன்ற மாநிலங்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தை அணுகி உள்ளன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் அவர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி, இந்த நேரத்திலே இந்த நிறுவனம் ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் 9001–2000 பெற்றுள்ளது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–10

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த மருத்துவ சேவைக் கழகம், ஆண்டுதோறும் கிட்டத்தட்ட ரூ.111 கோடி மதிப்புள்ள மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் பெற்று வருகிறது. அவை அரசு மருத்துவமனைகளின்மூலமாக விநியோகிக்கப்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற



ஆண்டில் மட்டும் நாய்க்கடி மருந்து ரூ.7 கோடியே 61 இலட்சம் மதிப்பில் வாங்கி விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு திசு வளர்ப்பு யுக்தி மூலம் தயாரிக்கப்படும் நவீன நாய்க்கடி மருந்தினை வாங்குவதற்காகக் கூடுதலாக ரூ.15 கோடி நிதியை அரசு கோரியுள்ளது. அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கான Cyclosporin என்ற மருந்தைப் பொறுத்தவரை, கடந்தகால ஆட்சியிலே அவர்கள் தனியார் மருத்துவமனையிலே சிகிச்சைப் பெற்றால், அவர்களுக்கு இந்த மருந்து இலவசமாக இல்லை என்றிருந்த முறையை மாற்றி, சிறுநீரகம் மற்றும் அறுவைச் சிகிச்சை பெற விரும்புகிறவர்கள், அதற்கான மருத்துவக் குழுக்களிடம் ஒப்புதல் பெறுவதற்காக இதுநாள்வரையிலும் சென்னைக்கு வர வேண்டியிருந்த நிலையை, மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றியமைத்து நோயாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டு இத்தகைய மருத்துவக் குழுக்களை மதுரையிலும், கோவையிலும் அமைத்து நோயாளிகளுக்கும் உதவும்வண்ணம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள், அவர்கள் வாழ்நாள் முழுவதும் உட்கொள்ள வேண்டிய Cyclosporin என்ற மருந்தை, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இலவசமாக வழங்கி வருகிறது. சென்ற ஆண்டு மட்டும் இதற்காக ரூ.60 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், இந்தியாவிலே முதன்முறையாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் தேவைப்படும்?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்— இதுவரையிலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்களால், குறிப்பாக சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையிலே, இதுபோன்ற பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதிலும், குறிப்பாகத் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தினுடைய நிலைமை குறித்துச்

சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே முதன்முறையாக தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையிலே எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோய்க்கு Anti Retroviral Therapy முறையில், மாத்திரை 1–4–2004 முதல் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு, சென்னைப் பொது மருத்துவமனையிலும் மற்றும் நாமக்கல் மாவட்டம், அரசுத் தலைமை மருத்துவமனையிலும் கொடுக்கப்படவுள்ளது என்பதை நான் இந்தநேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக, தமிழக மக்களிடையே விழிப்புணர்வு 98 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, பால்வினை நோய் உள்ளவர்கள் மத்தியிலே, எச்.ஐ.வி.–யின் தாக்கம் 2002–ல் 14.8 சதவிகிதமாகக் குறைந்து, 2003–ல் 9.2 சதவிகிதமாக மேலும் குறைந்துள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளுக்கு வரும் எச்.ஐ.வி. பரவாமல் தடுப்பதற்கு, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் முயற்சி மேற்கொண்டதன் பலனாக 2002 ஆம் ஆண்டு 0.64 சதவிகிதமாகக் குறைந்து 2003 ஆம் ஆண்டிலே 0.57 சதவிகிதமாக எச்.ஐ.வி.–யின் தாக்கம் மேலும் குறைந்துள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோயின் தாக்கம் ஆண்டுக்கு ஒருமுறை தேசிய அளவிலே நடத்தப்படும் கண்காணிப்பு, இரத்தப் பரிசோதனைகள் மூலமாகக் கண்டறியப்படுகிறது. இதன்மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், தமிழ்நாட்டிலே எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோயின் தாக்கம் 2001 ஆம் ஆண்டு 1.1 சதவிகிதமாகவும், 2002 ஆம் ஆண்டு 0.87 சதவிகிதமாகவும், 2003 ஆம் ஆண்டு 0.75 சதவிகிதமாகவும் தொடர்ந்து குறைந்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே மொத்தம் 8417 அரசு மற்றும் மெட்ரிக் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலே 9 மற்றும் 11 ஆம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக் கல்வி புகுத்தப்படுகிறது. இதுபோன்று இந்த ஆண்டும் அனைத்துக் கல்லூரிகளிலும் எச்.ஐ.வி. பற்றிய விழிப்புணர்வுக் கல்வி புகட்ட 500 சிவப்பு ரிப்பன் குழுக்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரிகளைப்



பொறுத்தவரையிலே, தமிழ்நாட்டிலே அரசு மருத்துவக் கல்லூரிகள் 11 கல்லூரிகளும், பெருந்துறையைச் சேர்த்தால் 12 அரசு மருத்துவக் கல்லூரிகளும் இருக்கின்றன. இன்றையதினம் இந்தக் கல்லூரிகளினுடைய அடிப்படை வசதிகளை, அதாவது Medical Council of India எதை எதிர்பார்க்கிறதோ அதற்கேற்ப அதையெல்லாம் உடனடியாக நிறைவேற்றுவதற்குப் போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–15

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இதுவரையில் இல்லாத அளவுக்கு மருத்துவத் துறை சீரோடும், சிறப்போடும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் சில தலைவர்கள், அரசு மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தனியார் மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அதைப் பற்றிக் கவலைப்படாமல், அப்பல்லோ மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அந்த மருத்துவமனையைப் பற்றிக் குறை கூறிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் என்றும் குறை கூறுபவர்கள். ஏனென்றால், தமிழ்நாட்டிலே இதுவரையில் இல்லாத அளவுக்கு, இந்திய வரலாற்றிலேயே இதுவரையில் இல்லாத அளவுக்கு, 2 தடவை அவர்களது இயக்கத்திற்கு எதிராக 356 பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு தடவை பயன்படுத்தும்போது – அவர்கள் நாட்டைப்பற்றி இன்றையதினம் பேசிக்கொண்டு வருகிறார்கள். ஒரு தடவை அவர்கள் – விடுதலைப் புலிக்கு ஆதரவாக இருந்ததாலும், மற்றொரு முறை அவர்கள்மீதான ஊழல் அடிப்படையிலேயும் அவர்களுடைய, அந்தக் கட்சியினுடைய அரசு கவிழ்க்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றையதினம்கூட, அவர்கள் சட்டம் ஒழுங்கு பற்றிப் பேசினார்கள். கடந்தகால ஆட்சியிலே, வீரப்பனைப் பிடிக்க முடியாமல் அவர்கள் நக்கீரன் கோபாலை அனுப்பினார்கள். அவர்கள் சட்டம் ஒழுங்கைப் பற்றி இன்றையதினம் பேசிக்கொண்டு வருகிறார்கள். பிப்ரவரியில் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் வரும் என்று அவர்களே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். மத்திய அமைச்சரை எந்த நேரத்திலே எங்கே பிடிப்பது என்ற சூழலிலே அவர்களும் அந்தக் கூட்டணியில் இருக்கிறார்கள். ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பொறுத்த அளவிலே இதுவரையிலும்,

சட்டம் ஒழுங்கை எடுத்துக்கொண்டாலும் சரி, எந்தத் துறையை — எடுத்துக்கொண்டாலும் சரி, இந்தியாவிலே இல்லாத அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சாதனை செய்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**புதிய அறிவிப்புகள்**

1. கீழ்க்காணும் அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு, ரூ.100 இலட்சம் மொத்தச் செலவிலே மருத்துவச் சாதனங்கள் மற்றும் அறைகலன்கள் வழங்கப்படும்:

(1) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி,

(2) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி,

(3) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி,

(4) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி,

(5) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி

2. சென்னை, தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்தவமனையினுடைய பட்ட மேற்படிப்பு கட்டடத் தொகுதியில் தற்போதுள்ள முதல் தளத்திற்கு மேலே ரூ.80 இலட்சம் மொத்தச் செலவிலே கூடுதல் தளம் ஒன்று கட்டப்படும்.

3. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.70.00 இலட்சம் மொத்தச் செலவிலே நீராவிச் சலவையகம் கட்டப்படும்.

4. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியிலே மருத்துவமனைக்கு ரூ.15.00 இலட்சம் மொத்தச் செலவிலே 160 கிலோவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வழங்கப்படும்.

5. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே ரூ.150 இலட்சம் மொத்தச் செலவிலே கட்டாய உள்ளுறைப் பயிற்சியாளர் குடியிருப்பு கட்டப்படும்.

6. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே ரூ.160 இலட்சம் மொத்தச் செலவிலே மகளிருக்காகக் கூடுதல் மாணவியர் விடுதி கட்டப்படும்.



7. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே ரூ.11.00 இலட்சம் மொத்தச் செலவிலே தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.

8. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலும் ரூ.60 இலட்சம் மொத்தச் செலவிலே படியடுக்கு அமைப்பு (gallery) கொண்ட விரிவுரைக் கூடம் கட்டப்படும்.

9. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அறுவைச் சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்திலே ரூ.20 இலட்சம் மொத்தச் செலவில் ஒரு மின்தூக்கி புதுப்பிக்கப்படும் மற்றும் புதிதாக வாங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

10. சென்னை இராயப்பேட்டை, அரசு மருத்துவமனையிலே ரூ.20 இலட்சம் மொத்தச் செலவிலே மயக்கமருந்தியல் துறை வலுப்படுத்தப்படும்.

11. சென்னை, தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை, புறநோயாளிகள் பிரிவு ரூ.6.50 இலட்சம் மொத்தச் செலவிலே விரிவுபடுத்தப்படும்.

12. திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் ரூ.10.00 இலட்சம் மொத்தச் செலவிலே விலங்ககம் (Animal House) ஒன்று கட்டப்படும்.

13. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் ரூ.60 இலட்சம் மொத்தச் செலவிலே விலங்ககம் (Animal House) ஒன்று கட்டப்படும்.

14. பெரியகுளம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் மொத்தம் ரூ.32.00 இலட்சம் செலவிலே புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படும்.

15. மாவட்டத் தலைமையிடமான மருத்துவமனைகளில் உள்ள 12 அவசர ஊர்திகள், அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக மொத்தம் ரூ.48 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வழங்கப்படும்.

16. சீர்காழி மற்றும் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசு வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ரூ.64 இலட்சம் செலவில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படும்.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2004 ஜூலை 26

17. நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையிலே ரூ.28.00 இலட்சம் செலவிலே குளிர்பதன வசதிகளுடன்கூடிய பிணவறைப் பிரிவு கட்டப்படும்.

18. வள்ளியூர் அரசு மருத்துவமனையில் ரூ.71.80 இலட்சம் மொத்தச் செலவில் 10 படுக்கை வசதிகளுடன்கூடிய விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு கட்டப்படும்.

19. வட்டத் தலைமையிட மருத்துவமனையிலே ரூ.0.19 இலட்சம் செலவிலே தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

20. மயிலாடுதுறை, சிவகாசி, மானாமதுரை, விருத்தாச்சலம், ஏற்காடு மற்றும் முதுகுளத்தூர் ஆகிய வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 6 அவசர ஊர்திகள், அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக ரூ.24.00 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வழங்கப்படும்.

பிற்பகல் 1–20

21. வட்டம் சாரா 10 மருத்துவமனைகளில் 10 அறுவைச் சிகிச்சைக் கூடங்களுக்கு ரூ.6.10 இலட்சம் செலவிலே குளிர்சாதன வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

22. குமாரபாளையம் மற்றும் உதயரம்பாளையத்திலுள்ள வட்டம் சாரா மருத்துவமனைகளிலே ரூ.22.60 இலட்சம் செலவிலே மின் உற்பத்தி இயந்திரத்திற்கான கட்டடங்கள் கட்டுவதன்மூலம், அடிப்படை வசதிகளை மேம்படுத்தி 40 கே.வி.ஏ. திறன்கொண்ட மின் உற்பத்திச் சாதனம் வழங்கப்படும்.

23. வட்டம் சாராத் தலைமையிடமான 38 மருத்துவமனைகளுக்கும் ரூ. 2.36 இலட்சம் செலவில் தொலைபேசி வசதி செய்துதரப்படும்.

24. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் அலுவலகத்திற்கு மொத்தம் ரூபாய் 4.00 இலட்சம் செலவிலே கணினி இணைப்பு மற்றும் துணைப் பாகங்கள் வழங்கி, அதன்மூலம் நிருவாகம் நவீனப்படுத்தப்படும்.

25. மொத்தம் ரூ.5.00 இலட்சம் செலவிலே நீரிழிவு நோய்க் கட்டுப்பாடு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்.



2004 ஜூலை 26] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

26. ரூ.5.00 இலட்சம் செலவிலே பிறப்பு–இறப்புகளைப் பதிவு செய்வது குறித்து விளம்பரம் செய்யப்படும்.

27. ரூ.6.00 இலட்சம் செலவிலே மாவட்டப் பொது சுகாதார அலுவலர் அலுவலகத்திற்குக் கணினி (computer) வழங்கப்படும்.

28. இரண்டு மாவட்டங்களிலே பல் மருத்துவத் திட்டம் மொத்தம் ரூ.20.00 இலட்சம் செலவிலே விரிவாக்கப்படும்.

29. மொத்தம் ரூ.15.00 இலட்சம் செலவிலே பேறுகாலத்திற்குப் பிந்தைய தாய்மார்களுக்கு Vitamin A மாத்திரைகள் வழங்கப்படும்.

30. மொத்தம் ரூ.90.00 இலட்சம் செலவிலே 1000 சுகாதார துணை மையங்களுக்கு Labour Board வழங்கப்படும்.

31. மொத்தம் ரூ.6.90 இலட்சம் செலவிலே 150 துணைச் சுகாதார நிலையங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும்.

32. மொத்தம் ரூ.9.50 இலட்சம் செலவிலே இந்திய முறை மருத்துவத்தைப் பயன்படுத்தி இரத்த சோகையைக் கட்டுப்படுத்த திட்டம் செயல்படுத்தப்படும்.

33. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு ரூ.50.00 இலட்சம் செலவிலே 20 Laparoscope கருவிகள் வழங்கப்படும்.

34. மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகத்தின் கீழ்வரும் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் ரூ.7.50 இலட்சம் செலவிலே கணினிகள், துணைப் பாகங்கள் மற்றும் அறைகலன்கள் ஆகியவை வாங்கி வழங்கப்படும்.

35. 35 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.92.07 இலட்சம் செலவிலே இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும்.

36. ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே ரூ.5.68 இலட்சம் செலவிலே யோகா மற்றும் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும்.

37. சென்னை, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியிலே மொத்தம் ரூ.15.00 இலட்சம் செலவிலே பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2004 ஜூலை 26

38. இந்திய மருத்துவத் துறை பிரிவிலே, உதவி மருத்துவ அலுவலர்களுக்கு முழுச் சம்பளத்துடன்கூடிய பட்ட மேற்படிப்புப் படிப்பதற்கு மொத்தம் ரூ.14.40 இலட்சம் வழங்கப்படும்.

39. அரசு, சித்தா/யுனானி/ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் பகுதி நேர/மதிப்பூதியத்தின் அடிப்படையிலே ரூ.5.76 இலட்சம் செலவிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

40. தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறைக்கு மொத்தம் ரூ.0.99 இலட்சம் செலவிலே துணைப் பாகங்களுடன்கூடிய ஒரு கணினி (computer) மற்றும் அறைகலன்கள் முதலியவை வழங்கப்படும்.

41. தலைமைச் செயலகத்தில் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு மொத்தம் ரூ.1.00 இலட்சம் செலவிலே நிழல் படிபெருக்கிச் சாதனம் (Xerox machine) வர்ங்கி வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிட்டத்தட்ட 41 அறிவிப்புகளையும் கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், தமிழகத்தினுடைய முதலமைச்சருமான மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து, இதுபோன்று மக்கள் நல்வாழ்வுத் துறையில் நல்ல நடவடிக்கைகளை எடுப்பதற்காகப் பல்வேறு சாதனைகளைப் படைத்துக் கொண்டு வருகிறார்கள். இங்கே கூறப்பட்ட அத்தனை வெட்டுத் தீர்மானங்களையும், பேரவை உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## 6. உரிமை மீறல் பிரச்சினை—தொடர்ச்சி

### நிதியமைச்சர் பதிலுரையின்மீது திரு. மு. கருணாநிதி தெரிவித்த கருத்து—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், அவைக்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமை மீறல் குறித்து நான் முன்மொழிந்த தீர்மானத்தில் ஒரு திருத்தத்தை முன்மொழிகின்றேன்:



2004 ஜூலை 26] [திரு. சி. பொன்னையன்]

"1972 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணா தி.மு.க.வைத் தொடங்கியபோது, அதில் இணைந்தவர் ** திரு. பெ. சௌந்தரபாண்டியன்" என்று கூறினேன். எனக்குக் கொடுக்கப்பட்ட தகவல் மீண்டும் விசாரிக்கப்பட்டதில், அவர் ** தெரிய வந்திருப்பதால், அதில் இணைந்தவர் அந்த ** என்ற சொல்லை நீக்குமாறு நான் அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உறுப்பினர்கள் இன்னொரு விளக்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். அவை உரிமை மீறல் குறித்து என்ன என்ன என்பதனை விளக்குமாறு கேட்டிருக்கிறார்கள். இதில் கருணாநிதி அவர்கள் கூறியிருப்பது, " அய்யா மந்திரியாரே, மானியம் வேறு; மசோதா வேறு. மானியத்திற்கும், மசோதாவிற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் எல்லாம் மந்திரிகளாக உட்கார்ந்துகொண்டு மக்களைக் குழப்பாதீர்கள் என்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார். நான் அவையிலே விவாதத்தின்போது மசோதா என்று கூறியதாகக் கூறியிருக்கிறார் மானியம் என்று கூறுவதற்குப் பதிலாக. எந்த இடத்திலும் நான் மசோதா என்று கூறவில்லை. மசோதா என்றால் Bill என்று பொருள். மானியம் என்றால் Demand என்று பொருள். இதிலே நான் கூறியிருப்பது "இதற்கு முன்னால்.."—அவைக் குறிப்பேட்டில் உள்ளவாறு அதைப் படிக்கின்றேன். "இதற்கு முன்னால் இப்படிப்பட்ட விவாதமின்றி Demands ஈடேற்றப்பட்டுள்ளனவா என்றால்"—Demands என்றால் மானியம் என்று பொருள். "பலமுறை இப்படி நடந்திருக்கிறது." Demands என்பதற்கு மானியம் என்று பொருள் தெரியாத நிலையில், புரியாத நிலையில், ஒருவேளை திரு. கருணாநிதி அப்படிப் பேசிவிட்டார் என்றுகூட நான் எண்ணுகிறேன்.

பிற்பகல் 1-25

"...Demands ஈடேற்றப்பட்டுள்ளனவா என்றால், பலமுறை இப்படி நடந்திருக்கிறது. 1957–58–ல் 48 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன" என்றுதான் நான் பேசினேன். 48 மசோதாக்கள் விவாதமின்றி ஈடேறியுள்ளன என்று எந்த இடத்திலும் நான் அவையிலே பேசவில்லை. 48 மசோதாக்கள் என்றால், 48 bills were approved என்று பொருள். "அதைப்போலவே, 1962–63–ல் 45 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன" என்றுதான் அவையில் நான் பேசினேன். அவை, அவைக் குறிப்பில் இருக்கின்றன. அதிலே 45 bills were passed என்று எந்த இடத்திலும் நான் கூறவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 26

"அதைப்போலவே, 1967–68–ல் 47 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி முடிந்திருக்கின்றன. 1979–80–ல் 58 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன" என்றுதான் நான் பேசினேன். அவைக் குறிப்பில் அவை இடம் பெற்றிருக்கின்றன. 1979–80–ல் 58 bills were passed என்று எந்த இடத்திலும் நான் பேசவில்லை. அவைக் குறிப்பில் இல்லை. மசோதாவிற்கும் மானியத்திற்கும்—Demand–க்கும் Bill–க்கும் பல்லாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி புரியாது, குழம்பிய நிலையில், ஒருவேளை வயதாகிவிட்ட காரணத்தால், senility காரணமாகத் தடுமாறுகின்ற மனநிலையில் இருக்கின்ற காரணத்தால், அவர்தான் குழம்பிப்போய் இப்படிப் பேசிவிட்டாரே ஒழிய, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப் பேரவையில் எல்லா இடங்களிலும் Demands, மானியக் கோரிக்கைகள் என்றுதான் நான் பேசினேன். எந்த இடத்திலும் Bills என்று பேசவில்லை. சிந்தை தெளிவு பெற்று, குழம்பிய மனநிலையில் இருந்து விடுபட்டு திரு. கருணாநிதி இதை உணர்வார் என்று நான் நம்புகிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2004–2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை
(இ) கோரிக்கை எண் 30 – தகவல் தொழில்நுட்பவியல் துறை
(ஈ) கோரிக்கை எண் 32 – சட்டத் துறை
(உ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை
} தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் ஒரு நொடியில் 22 குழந்தைகள் பிறக்கின்றன. அதுவும் நிமிடத்திற்கு நிமிடம் மாறுகின்றன. அவையெல்லாம் வளர்ந்து ஆளாகி உன்னத நிலையை அடைவதில்லை. உயர்ந்த புகழைப் பெறுவதில்லை.



2004 ஜூலை 26] [திரு. டி. ஜெயக்குமார்]

பேரும் புகழும் பெறுபவர்கள் வெகு சிலரே. கை விரல் போடும் கணக்காய், உலகில் வாழும் அந்த ஒரு சிலரில் அறிவுச் சிகரமாய், அன்புத் தாயாய், அரசியல் ஞானியாய், அன்றாடம் வழிபடும் அன்னையாய், அத்தனைச் சிறப்புகளும் நிறைந்த ஓர் அற்புதத் தலைவியாய் அவதரித்த எங்கள் அம்மாவே, உங்களது வார்த்தை எங்களுக்குச் சட்டம்; உங்களது பேச்சு எங்களுக்கு வேதம்; அம்மா, நீங்கள் எதிலும், எப்போதும் வித்தியாசமானவர்கள் என்பது எங்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களுக்கும் நன்றாகவே தெரியும். அதனால்தான் உங்களிடத்தில் அதிக எதிர்பார்ப்பையும், அதே அளவுக்கு அன்பையும் வைத்திருக்கிறார்கள். அதை, இந்த அரசியல் ஆதாய வியாபாரிகளும் தெரிந்தே வைத்திருக்கிறார்கள். அதனால்தான் அம்மா, இவர்கள் எல்லாம் உங்கள் பெயரை உச்சரிக்க ஒரு நாளும் தவறுவதில்லை. காரணம் என்னவென்றால், எங்கே தங்களை மக்கள் மறந்துவிடுவார்களோ என்ற பயத்தில்தான் தங்களின் பெயரை உச்சரித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

அம்மா, சூழலில் சிக்கித் தவிப்பவன் சாதாரண மனிதன். சூழலையே மாற்றி அமைப்பவன் தலைவன். சோதனைகளைக் கண்டு கலங்குபவன் சராசரி மனிதன். சோதனைகளைச் சாதனைகளாய் மாற்றுபவன் தலைவன். சவால்கள் வரும்போதெல்லாம் தன்னை இழப்பவன் சாதாரண மனிதன். சவால்கள் வரும்போதெல்லாம் இதுதான் சமயமெனக் கருதி, அவற்றையே வாய்ப்புகளாக மாற்றி வெற்றி பெறுபவன் மாமனிதன். ஒரு வெற்றிகரமான தலைவரின் சிறப்பு அம்சங்கள் Characteristics or qualities பற்றி Stodgill என்ற அறிஞர் குறிப்பிடுகையில், புத்திக் கூர்மை (intelligence), தன்னம்பிக்கை (self-confidence), தோழமை (sociability), மனத்திட்பம் (will), முயற்சி தொடக்கம் (initiative), உறுதி (persistence), பேராவல் (ambition), சிறந்த பேச்சாற்றல் (oratorical skill), இன்முகம் (cheerfulness), அன்பாதரவு (geniality), உற்சாகம் (enthusiasm), தெளிவான வெளிப்பாடு (expressiveness), விழிப்புணர்வு (alertness) மற்றும் தற்படைப்பாற்றல் (originality) ஆகியவை தலைவரின் சிறப்பு அம்சங்கள் என்று குறிப்பிடுகிறார்.

இச்சிறப்பு அம்சங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்ற எங்கள் அம்மாவே, தங்கள் செயல்பாடுகள் நம் தமிழகத்திற்கு மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாகவும், முன்மாதிரியாகவும் விளங்குகின்றன. அந்தவகையில் அம்மா, நீங்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக, முதல்வர்களுக்கெல்லாம் வழிகாட்டும் முதல்வராக விளங்கி

வருகின்றீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களை வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

*பிற்பகல் 1–30*

"நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறை" என்ற வகையில், Law and Justice are twins — சட்டம் இன்றி நீதியில்லை, அதேபோல் நீதியின்றி சட்டமும் இல்லை— தமிழ்நாட்டிலே இரண்டுமே பீடுநடை போடுகின்றன. Law is Supreme. சட்டம் எல்லோருக்குமே மேலானது. சட்டத்திற்குமுன் அனைவரும் சமம் என்கிற புரட்சிக் கோட்பாடுதான் இங்கு ஆட்சி புரிகிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மக்களின் எண்ணங்கள்தான் அரசின் இலட்சியம் என்ற அடிப்படையில், இத்துறை பல சட்டங்களை இயற்றியுள்ளது. இவ்வரசு கொண்டுவரும் ஒவ்வொரு சட்டமும் தமிழ்ச் சமுதாயத்தின் தரத்தினை மேம்படுத்துவதாகவே அமைந்துள்ளது. நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணத்தில் தோன்றும் கருத்துருக்கள்தான் செயல்வடிவம் பெற்று சட்டமாக இயற்றப்படுகின்றன. இந்த மூன்று ஆண்டுகளில்தான் கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டு சாதனை புரியப்பட்டுள்ளது. நீதித் துறைக்கென அம்மாவின் அரசு செலுத்தும் அக்கறை Justice delayed is justice denied என்ற நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான். மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, எப்போதுமே மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு, நீதியோடு ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றது. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், தென் மாவட்ட மக்களுடைய நலனுக்காக வழக்குகளுக்கு அவர்கள் நெடுந்தூரம் வரவேண்டியதில்லை; மதுரையிலே உச்ச நீதிமன்றக் கிளை, 56 கோடி ரூபாய் செலவிலே உருவாக்கப்பட்டது. அதனை, நம்முடைய இந்தியாவினுடைய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்புமிகு நீதியரசர் ஆர்.சி. லஹோதி அவர்கள் திறந்து வைத்தார்கள். அதேபோன்று, மறுநாள்..(மணியடிக்கப்பெற்றது) நம்முடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உயர் நீதிமன்றக் கிளை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** Sorry, உயர் நீதிமன்றக் கிளை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உச்ச நீதிமன்றக் கிளை மதுரைக்கு வந்தாலும் அதிலே மிகவும் மகிழ்ச்சியடைவேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** உயர் நீதிமன்றக் கிளையைத் திறந்துவைத்து, அதேபோன்று, மறுநாள் சென்னையிலே நான்கரை கோடி ரூபாயிலே Judicial Academy நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய அந்தக் கட்டடத்தையும் திறந்துவைத்து நம்முடைய மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் பேசும்போது, தமிழ்நாட்டிலே நீதித் துறையிலே ஒரு புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆம், புரட்சி ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழ்நாடு என்று சொல்லும்போது, எத்தனையோ அரசாங்கங்கள் ஆண்டிருக்கலாம். ஆனால், இந்த மூன்று ஆண்டுக் காலத்திலே கிட்டத்தட்ட எண்ணிப் பார்க்கமுடியாத அளவிற்கு நீதித் துறைக்கு, அதுவும் உயர் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்படுகின்ற அத்தனை கருத்துருக்களுக்கும் தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்து, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியுதவி அளித்துக்கொண்டு வருகிறார்கள். புரட்சி என்று சொல்லும்போது, ஏறக்குறைய தீர்க்கப்பட்ட வழக்குகளை நாம் முதலிலே பார்க்கவேண்டும். பொதுவாகவே, தமிழ்நாட்டிலே ஒவ்வோராண்டும், கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன, எல்லா நீதிமன்றங்களிலும். அதிலும் நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்திலே ஆண்டுக்கு ஒன்றரை இலட்சம் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்தியாவிலேயே, அது உயர் நீதிமன்றமாக இருந்தாலும் சரி, அதைப்போன்று உயர் நீதிமன்றத்திற்குக் கீழ்ப்பட்ட நீதிமன்றங்களாக இருந்தாலும் சரி, வழக்குகளைத் தீர்வு காண்பதிலே முதலிடம் பெற்ற மாநிலம் என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாட்டைத்தான் சொல்லவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2001–லிருந்து 2003 வரை ஏறக்குறைய 5,90,164 வழக்குகள் தீர்வு காணப்பட்டிருக்கின்றன என்கின்ற தகவலை நான் இங்கே சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று, அவர்கள் – நீதிபதிகள் – நீதி பரிபாலனம் செய்வதற்கு infrastructure ஏற்படுத்திக் கொடுப்பது என்பது, அரசாங்கத்தினுடைய முக்கியக் கடமை. எனவே, அதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை; உயர் நீதிமன்றம் கருத்துருக்கள் அனுப்புகிறதா; உடனடியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை நிறைவேற்றி வருகிறார்கள். சமீபத்திலே,

9 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில், விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு உடனடியாக உயர் நீதிமன்றம் ஒரு கருத்துருவை அனுப்பியபோது, அங்கே நீதிமன்றம் கட்டுவதற்கு 9 கோடியே 8 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று, நம்முடைய தேனி மாவட்டத்திலே, ஒரு புதிய நீதிமன்றம் அமைப்பதற்கு 8.5 இலட்சம் ரூபாய் Constitution of new Court — அதாவது, Court அமைப்பதற்கு 8.5 இலட்சம் ரூபாயும், அதேபோன்று கட்டடம் கட்டுவதற்கு 3 கோடியே 90 இலட்சம் ரூபாயும் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள்.

அதேபோன்று, சட்டப் பணிகள் ஆரம்பிப்பதற்கு இதுவரையிலே சொந்தக் கட்டடம் என்பதே இல்லை. அந்தக் கட்டடத்திற்கு ஒரு proposal, High Court–லிருந்து வருகிறது. அதற்கும் ஒரு கோடியே 8.5 இலட்சம் ரூபாயை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது குறுக்கிட்டுப் பேசினேன். ஒரே வருடத்திலே எல்லா நீதிமன்றங்களும் — அடிப்படை வசதிகள் இல்லாத நீதிமன்றங்கள், வாடகைக் கட்டடத்திலே இயங்குகின்ற நீதிமன்றங்கள் — அரசாங்கக் கட்டடத்திலே வரவேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. இதற்காகக் கடந்த காலத்திலே திட்டங்கள் தீட்டப்பட்டதா என்றால் இல்லை. ஆனால், ஒரு master plan போட்டு ஒரு concrete proposal போட்டு, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு 140 கோடி ரூபாய்க்கு அந்தத் திட்டத்தைத் தீட்டி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் 70 கோடி ரூபாய் உடனடியாக விடுவித்தால், மாநில அரசும் 70 கோடி ரூபாய் விடுவிப்பதன்மூலம் தமிழ்நாட்டிலே அனைத்து நீதிமன்றங்களுக்கும் நல்ல வசதி, நிச்சயமாகக் கிடைக்கப்பெறும் என்கின்ற ஒரு மகிழ்ச்சியான தகவலை நான் இங்கே தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–35*

அதேபோன்று, விரைந்து நீதி வழங்க வேண்டும் என்ற அரசின் கொள்கையின் அடிப்படையிலே, 49 விரைவு நீதிமன்றங்கள் அமைப்பதிலே, இந்தியாவிலேயே முதன்மையான அளவிற்கு ஒரு வரலாற்றுச் சிறப்புப் பெற்றது எதுவென்றால், அது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை



நான் இங்கே பெருமையோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 49 நீதிமன்றங்களில் இதுவரை 74,000 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று, கீழ்நிலை நீதிமன்றங்களிலே 43,47,609 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன, இந்த 3 ஆண்டுக் காலத்திலே.

அதேபோன்று, நம்முடைய நீதிமன்றங்கள் தவிர, Lok Adalat என்று சொல்லக்கூடிய மக்கள் நீதிமன்றங்கள் அமைப்பதன்மூலம், பொதுவாக பல்வேறு பிரச்சினைகளுக்கு நீதிமன்றங்களிலே சென்று தீர்வு காண்பதைக் காட்டிலும், அந்த இடத்திலேயிருந்து நீதிமன்றங்களுக்குச் சென்றால் — காலதாமதம் ஆகின்றது என்ற நிலை வரக்கூடாது என்று — காலதாமதம் ஏற்படுகிறது என்ற அந்தச் சூழ்நிலையைத் தவிர்க்கும்பொருட்டு, மக்கள் நீதிமன்றங்கள் அமைக்கப்படுகின்றன. இதுவரையில், கிட்டத்தட்ட 18,842 மக்கள் நீதிமன்றங்கள் அமைக்கப்பெற்று கிட்டத்தட்ட 1,94,530 வழக்குகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டிருக்கின்றன. தீர்ப்பின்மூலம் தீர்வு செய்யப்பட்ட தொகை என்று சொன்னால், 915 கோடி ரூபாய். எனவே, மக்கள் நீதிமன்றங்கள் மூலமாகத் தீர்க்கப்படுகின்ற பிரச்சினைக்கு எந்த மேல்முறையீடும் எந்த Court–லும் செய்ய முடியாது. அதுதான் இறுதியான தீர்ப்பு. எனவே தீர்க்கப்பட முடியாத அந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம்கூட, மக்கள் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, குற்ற வழக்குத் தொடர்பு இயக்ககம் என்று சொல்லும்பொழுது, அவர்கள் தங்களுடைய பணியைச் சுலபமாகச் செய்கின்றவகையிலே, இதுவரை கிட்டத்தட்ட A.P.P. நியமனம் இல்லாமல் இருந்தது. அரசாங்கத்திற்கு நிதிநெருக்கடி இருந்தாலும்கூட, 56 A.P.P.–களை — Assistant Public Prosecutor–களை — நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமித்து இருக்கின்றார்கள். அதேபோன்று, 13 துணை இயக்குநர்களுக்கு — 1947–லிருந்து துணை இயக்குநர்களுக்கு ஜீப் வழங்கியதே கிடையாது. ஆனால், முதன்முறையாக 13 துணை இயக்குநர்களுக்கு—நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஜீப்பை வழங்கினார்கள்; அதுவும் 49 இலட்சம் ரூபாய் செலவில் என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதேபோன்று, கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். உயர் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்படுகின்ற அந்தக் கருத்துருக்களுக்கெல்லாம் நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தகுந்த நேரத்தில் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நம்முடைய அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர்கூட என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருடைய இடத்திலேகூட ஒரு Sub-Court வேண்டும் என்றார். Sub-Court வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதிலே recurring expenditure வருகின்ற காரணத்தினால், ஒரே வருடத்திலே Sub-Court ஆரம்பிப்பது என்பது முடியாத காரியம். எனவே, நிச்சயமாக உறுதியோடு சொல்கின்றேன். வருகின்ற காலங்களில் ஒரு priority basis–லே, நிச்சயமாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றி வைக்கப்படும். அதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. ஒரே stretch–ல் எல்லாவற்றையும் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நிச்சயமாகப் பரிசீலனை செய்து நல்ல முடிவை அறிவிப்பார்கள். எனவே, இந்த வருடம் செஞ்சியிலே 32,82,000 ரூபாய்க்கு ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதன்மை மாவட்ட நீதிபதிகளுக்கும் மற்றும் முதன்மைக் குற்றவியல் நீதிபதிகளுக்கும் பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்களை வாங்குவதற்கு 44 இலட்ச ரூபாய்க்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் 1,03,000 ரூபாய் செலவில் ஒரு E.P.A.B.X. தொலைபேசிகள் வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். ரூபாய் 12 இலட்சம் செலவில் குற்ற வழக்குத் தொடர்புத் துறையிலுள்ள 11 துணை இயக்குநர் அலுவலகங்களுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். எனவே, இவை நீதித் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த பணிகள்.



அதேபோன்று, சட்டத் துறை என்று சொல்லும்பொழுது மக்களுக்கு சட்டக் கல்வியை அளிக்க வேண்டும் என்பது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய விருப்பம். ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 17,000 விண்ணப்பங்கள் சட்டம் பயில வேண்டும் என்ற ஒரு அடிப்படையிலே வருகின்றன. இது சட்டம் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைக் காட்டுகிறது. எனவே, போன வருடம் Constituent College ஒன்று செங்கற்பட்டிலே அமைத்துக் கொடுத்தோம். நம்முடைய ஆரணி உறுப்பினர்கூட காலையிலே ஒரு கல்லூரி வேண்டும் என்று கேட்டார்கள். எனவே, கல்லூரி அமைய வேண்டும் என்பதிலே மாநில அரசுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் கிடையாது.

*பிற்பகல் 1–40*

மத்தியிலே இருக்கின்ற இந்திய Bar Council–னுடைய ஒப்புதல் பெற்றால்தான், நாம் கல்லூரி அமைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே, இந்திய Bar Council ஒப்புதல் அளித்தால், மாவட்ட நீதிமன்றங்கள் இருக்கின்ற இடங்களிலே அமைப்பதற்கு அதைப் பரிசீலனை செய்யலாம். எனவே, போன வருடம்கூட ஒரு தரமான சட்டக் கல்வி அளிக்க வேண்டுமென்ற அந்தக் கோட்பாட்டின்படி School of Excellence ஒன்று, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அதேபோன்று, நம்முடைய டாக்டர் அம்பேத்கர் கல்லூரியிலே International standard இருக்கின்ற அளவிற்கு Upgradation செய்யப்பட்டு, அங்கும் ஒரு சிறப்புப் பள்ளி நடந்துகொண்டிருக்கின்றது. தொடங்கி ஓர் ஆண்டுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், இங்கு போதிக்கப்படுகின்ற பாடங்கள் நம்முடைய national அளவுக்கு, School–க்கு இருக்கின்றதா, அது உயர்ந்து இருக்கின்றதா, எப்படி இருக்கின்றது என்பதையெல்லாம் ஆய்வு செய்வதற்கு Committee ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் நியமித்து இருக்கின்றார்கள். அந்த Committee கொடுக்கின்ற அந்த அறிக்கையின்பேரிலே, நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, அம்பேத்கர் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தக் கட்டடமே கிடையாது இதுவரையிலே. அந்தக் கட்டடம் கட்டுவதற்கு "பூம்பொழில்" என்ற இடத்திலே மிகப்பெரிய அளவிற்கு value உள்ள ஓர் இடத்தை, டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்து,

கொடுத்ததோடு மட்டுமல்லாமல், முதற்கட்டமாக ரூ.55 இலட்சத்தில் அந்தக் கட்டுமானப் பணிகளை—School of Excellence-ஐ, housing—செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். தற்பொழுது கட்டடம் கட்டி முடியும்தருவாயில் உள்ளது. இரண்டாவது கட்டமாக, 75 இலட்சம் ரூபாய் sanction செய்து இந்த வருடம் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருச்சி அரசு சட்டக் கல்லூரியில், கூடுதல் வகுப்பறை கட்ட ரூ.42 இலட்சமும், கோவை அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறை கட்ட ரூ.34 இலட்சமும், திருச்சி மற்றும் கோவை அரசு சட்டக் கல்லூரிகளில் விளையாட்டு மைதானம் அமைக்க ரூ.20 இலட்சமும், சட்டத் துறை மற்றும் ஐந்து சட்டக் கல்லூரிகளுக்குப் புத்தகங்கள் வாங்க ரூபாய் பத்தரை இலட்சமும், இந்த ஆண்டு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏற்கெனவே, நான் சொன்னதுபோல சட்டம் படிக்கின்ற நம்முடைய மாணவர்கள் தமிழிலே சட்டம் படிப்பதை ஊக்கப்படுத்த வேண்டுமென்பது நமது புரட்சித் தலைவியின் எண்ணம்; எத்தனையோ அரசுகள் கடந்த காலத்தில் இருந்தாலும்கூட, யாரும் செய்யாததை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். சட்டம் படிக்கின்ற மாணவர்கள் ஆங்கிலத்திலேதான் புத்தகங்கள் வாங்கிப் படிக்கின்றார்கள். தமிழ் medium என்று இருந்தாலும்கூட, தமிழிலே சட்டப் புத்தகங்கள் கிடையாது. ஆனால், அப்படிப்பட்ட குறை இருக்கக்கூடாது என்கின்ற அடிப்படையிலே, போதிக்கப்படுகின்ற அத்தனைச் சட்டப் பாடங்களையும் தமிழிலே நீங்கள் எழுத வேண்டும், தமிழிலே அச்சடித்து அதை விநியோகிக்க வேண்டுமென்று சொல்லி நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே வருகின்ற ஆண்டில் நம்முடைய தமிழ் படிக்கின்ற சட்ட மாணவர்களுக்குச் சட்டப் புத்தகங்கள் அத்தனையுமே தமிழில் விநியோகிக்க அம்பேத்கர் பல்கலைக்கழகம் நம்முடைய அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரிலே நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோன்று, மைய மாநில அரசுகள் இயற்றுகின்ற சட்டங்கள் மக்களுக்கு எளிதிலே சென்று அடைய வேண்டும்; மக்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்கின்றவகையில், கடந்த காலத்தில் அதைக்கூட யாருமே மொழிபெயர்க்கவில்லை. தமிழ், தமிழ் என்று சொல்லி அவர்கள் ஊரை ஏமாற்றினார்களேயொழிய தமிழுக்கு என்ன செய்தார்கள்? மைய, மாநிலச் சட்டங்கள் எல்லாம் அப்படியே இருந்தன. ஆனால் முதன்முதலாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக மைய, மாநிலச் சட்டங்கள் எல்லாம் கிட்டத்தட்ட 137–க்கு மேலே மொழிபெயர்க்கப்பட்டு, இன்றைக்கு விநியோகம் செய்யப்படுகின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. அவற்றை நூலகங்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேபோன்று அம்பேத்கர் பல்கலைக்கழகத்திலே என்ன படித்தால் உண்மையிலேயே சமுதாயத்திலே மேம்பாடு அடைய முடியும் என்ற வகையில் இன்றைக்கு Job oriented training programmes இருக்கின்றன. அதேபோன்று படித்து முடித்தவுடன், அவர்கள் நல்ல ஒரு நிலையை அடைவதற்கு என்ன Course கொடுத்தால் அவர்கள் நிச்சயமாக வாழ்க்கையிலே மேம்பாடு அடைவார்கள் என்கின்ற இந்த ஆய்வை மேற்கொண்டு, இரண்டு Courses-ஐ இந்த ஆண்டு Intellectual Property Rights and International Law இந்த வருடம் நம்முடைய அம்பேத்கர் பல்கலைக்கழகம் துவங்க இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று நம்முடைய இளம் வழக்கறிஞர்கள், படித்து முடித்துவிட்டவுடன், வாதாடும் திறன் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். அவர்களின் வாதிடும் திறனை மேம்படுத்துவதற்கு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அவர்களுக்கும் இலவசமாக ஒரு Course ஏற்பாடு செய்திருப்பதை நான் இங்கு சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எரிசக்தித் துறையைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சிக்கு மின்சாரம் என்பது அவசியமான ஒன்று. எனக்கு முன்னாலேகூட யாரோ சொன்னார்கள், சம்சாரம் இல்லையென்றாலும்கூட இருப்பார்கள்; ஆனால் இந்தக் காலத்தில்

மின்சாரம் இல்லாமல் நிச்சயமாக இருக்கமாட்டார்கள் என்று. எனவே மின்சாரம் இன்றைக்கு வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துவிட்ட ஒன்றாகிவிட்டது. இன்றைக்கு வீட்டிலே மின்சாரம் இல்லையென்றால் மிகவும் சிரமமாக இருக்கின்ற ஒரு நிலைமை; எனவே கடந்த காலத்தை இப்போது ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். முந்தைய தி.மு.க. ஆட்சியிலே மின்வெட்டு இருந்தது. ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 20 சதவீதம் அளவிற்கு மின்வெட்டு இருந்தது. ஆனால், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே எங்கேயாவது மின்வெட்டு இருக்கின்றதா? வானத்திலேதான் மின்வெட்டேயொழிய தமிழ்நாட்டிலே இல்லை மின்வெட்டு என்கிற அளவிற்கு இன்றைக்கு மின்சாரத் துறையில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு புரட்சியைப் படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–45

எனவே, அம்மாவினுடைய கொள்கை என்ன? Uninterrupted Quality Power Supply; தங்குதடையில்லாத சீரான மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்பது நம்முடைய அம்மா அரசினுடைய கொள்கை. கிட்டத்தட்ட வானம் பொய்த்தாலும்கூட—நமக்கு Hydel Power என்று சொல்லக்கூடிய நீர் மின்சாரம், 1753 மெகாவாட்டுக்கு கிட்டத்தட்ட 25 சதவீதம்தான் நமக்குக் கிடைக்கப்பெற்றது. ஆனால், அப்படிக் கிடைக்கப்பெற்றாலும்கூட—கடந்த காலத்திலே மின்வெட்டு இல்லாத ஒரு மாநிலமாக தமிழ்நாடு, நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே திகழ்ந்தது. இது ஒரு பெரிய வரலாறு (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அந்த நேரத்திலே நாம் எவ்வளவு peak demand achieve செய்தோம்? உச்சக்கட்ட மின்சக்தி என்றால் சாதாரணமாக மாலை 6–லிருந்து 10 மணி வரை எவ்வளவு மின்சாரம் உபயோகப்படுமோ அந்த மின்சாரத்தைத்தான் உச்சக்கட்ட மின்சக்தி என்று சொல்வார்கள். அந்த உச்சக்கட்ட மின்சக்தி இதுவரையில் இல்லாத அளவிற்கு 7253 மெகாவாட் நாம் reach செய்திருக்கிறோம் என்றால் இது ஒரு மிகப் பெரிய சாதனை. எனவே, ஒவ்வோர் ஆண்டும் 5% கூடும்போது கிட்டத்தட்ட 7600 மெகாவாட் அளவிற்கு வருங்காலத்தில் நாம் peak demand-ஐ reach செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இப்படிப்பட்ட நிலையிலே, கடந்த காலத்திலேயிருந்த, முந்தைய ஆட்சியாளர்கள் மின்சாரத் தேவையை— வருங்காலத் தேவையைப் பூர்த்தி செய்கின்றவகையிலே என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



மின் உற்பத்தி என்று சொல்லும்போது 1991–96–ல் நம்முடைய அம்மாவினுடைய பொற்கால ஆட்சி அன்றைக்கு நடந்தது. Additional installed capacity mega watt என்று சொன்னால், இருக்கின்ற அந்த மின் உற்பத்தி கூடுதலாக அதாவது additional installed capacity, கூடுதல் நிறைவுத் திறன் கிட்டத்தட்ட 1306 மெகாவாட்; அதாவது உற்பத்தி செய்யப்பட்ட மின் அளவு என்று சொன்னால் 1,31,491 மில்லியன் யூனிட். 1996–2001–ல் தி.மு.க. ஆட்சியிலே, 560. எனவே, இதிலே, 2001–2004 மூன்று வருடங்களுக்கு 1074 மெகாவாட். அப்படியானால், முந்தைய ஆட்சியில் எத்தனை சதவீதம்? 1991–96–லே மற்றும் அதேபோன்று இந்த மூன்று ஆண்டு காலத்திலும் கூடுதல் நிறைவுத் திறன் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நிச்சயமாக மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே, வளர்ச்சித் திட்டங்களில் கடந்த காலத்திலே கவனம் செலுத்தாமல் வேறு ஏதேதோ எல்லாம் கவனம் செலுத்திக்கொண்டிருந்தார்களேயொழிய தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்கு கடந்தகால ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவில்லை.

அதேபோன்று, இன்னும், 5 ஆண்டு காலத்திலே நம்முடைய வருங்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற அந்தக் கண்ணோட்டத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை, நீர் மின்சாரம், இயற்கையான மின்சாரம், அது கிடைக்கப்பெற வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடு நம்முடைய காவிரி நீர் மின் திட்டத்தின்கீழ் காவிரி ஆற்றில் ராசிமணல் மற்றும் ஒகேனக்கலில் தேசிய நீர் மின் கழகம் மற்றும் புனல் மின் நிலையம் அமைப்பது குறித்தான வரைவு ஒப்பந்தத்திற்கு நம்முடைய அம்மாவினுடைய அரசு 6–7–2004 அன்று ஒப்புதல் அளித்து, இதன்மூலம் 450 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும். அதாவது ராசிமணல், சிவசமுத்திரம், ஒகேனக்கல், மேகதாது ஆகிய நான்கு இடங்களிலும் மொத்தம் கிட்டத்தட்ட 1150 மெகாவாட் என்று சொல்லும்போது இதிலே நம்முடைய தமிழ்நாட்டின் பங்காக, வருங்காலத்தில் 450 மெகாவாட் கிடைக்கின்ற ஒரு நிலைமையிருக்கின்றது. குறைந்த production cost-லே உற்பத்தி ஆகின்ற மின்சாரம் இது.

அதேபோன்று இதை National Hydro Power Corporation, மத்தியிலே இருக்கின்ற நிறுவனம் எடுத்துச் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது. அதேபோன்று N.L.C. மூலமாக தூத்துக்குடியிலும் அதேபோன்று N.T.P.C.. மூலமாக—National Thermal Power Corporation— எண்ணூர் மூலமாகவும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம், M.O.U. நம்முடைய அம்மா

அவர்களால் மேற்கொள்ளப்பட்டு, ஆயிரம் மெகாவாட் தலா; தூத்துக்குடியிலே ஆயிரம் மெகாவாட், அதேபோன்று வடசென்னையிலே ஆயிரம் மெகாவாட், ஒவ்வொரு யூனிட்டும் தலா 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கு நிர்மாணிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று, கூடங்குளத்திலே 2 ஆயிரம் மெகாவாட். அதேபோன்று காவிரி நீர் மின் திட்டம், நீலகிரி மாவட்டத்திலே கோத்திமலை நீர்த்தேக்கத்தில், காடம்பாறை மின் திட்டம் போல, அதாவது காடம்பாறை என்று சொல்லும்போது உற்பத்தி செய்துவிட்டு கீழே வருகின்ற தண்ணீரைத் திரும்ப மேலே அனுப்பி ஒரு சுழற்சி முறையில் செய்வதன்மூலம் அங்கே மின் உற்பத்தி நடைபெறுகின்றது. எனவே, அதேபோன்று நம்முடைய கோத்திமலையிலே நீலகிரி மாவட்டத்திலும் செய்யக்கூடிய அளவிற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆய்ந்து வருகின்றோம். அது நிறைவேறும்பட்சத்தில் அதிலும் ஒரு 500 மெகாவாட் அளவிற்குக் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1–50*

அதேபோன்று, மரபுசாரா எரிசக்தி என்று சொல்லும்பொழுது, ஒரு யூனிட் மின்சாரம் நாம் பெறவேண்டுமென்றால், ஒரு கிலோ நிலக்கரியை நாம் எரித்தாக வேண்டும். எனவே Natural Resources என்று சொல்லும்பொழுது, ஒரு காலகட்டத்தில் அது இல்லாமல் போய்விடலாம். எனவே, இயற்கையை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது நம்முடைய கடமையாகின்றது. அப்படி இருக்கின்ற நிலையில், ஒரு யூனிட் மின்சாரம் பெறவேண்டுமென்று சொன்னால், ஒரு கிலோ நிலக்கரியை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், நிலக்கரியை வெளியிலிருந்து கொண்டு வருவதற்கான செலவு இருக்கிறது. எனவே மரபுசாரா எரிசக்தியை நாம் ஊக்கப்படுத்துவதன்மூலம் வருங்காலத்திலே பல்வேறு தொந்தரவுகளுக்கு நாம் ஆளாகாமல் — Pollution இல்லாத ஒரு Green power — ஒரு நல்ல ஆரோக்கியமான power கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கும். இதிலே கடந்த காலத்திலே எந்த அளவுக்கு இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கிறது என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். முந்தைய தி.மு.க. ஆட்சியில் Renewable Energy என்று சொன்னால், கிட்டத்தட்ட காற்றாலை மின் உற்பத்தித் திறன் 1991–96 — நம்முடைய அம்மாவினுடைய ஆட்சியில் 40 சதவிகிதம். அதேபோன்று 1996–2001–ல் கிட்டத்தட்ட 19 சதவிகிதம்;



அதாவது 546 மெகாவாட் 1991–96–ல். 1996–2001–ல் 256 மெகாவாட். 19 சதவிகிதம். 2001–2004–ல், இப்பொழுது இந்த 3 ஆண்டுக்கு 548 மெகாவாட், அதாவது 40 சதவிகிதம்.

கரும்புச் சக்கை மூலமான உற்பத்தியைப் பொறுத்தவரையிலே, 1991–96–ல் 68 மெகாவாட்; 1996–2001–லே 27 சதவிகிதம். 2001–2004–ல் 132 மெகாவாட், இதிலும் நாம் 48 சதவிகிதம். தி.மு.க. ஆட்சியில் 27 சதவிகிதம். அதேபோன்று வெப்பப் பயன்பாடு, இதிலே 1996–2001–ல் 11 சதவிகிதம். இப்பொழுது கிட்டத்தட்ட 3 ஆயிரம் கிலோவாட் நமக்குக் கிடைக்கப்பெற்று 89 சதவிகிதம் இருக்கின்றது. மின்சாரப் பயன்பாடு என்று சொன்னால், அதிலே 1996–2001–ல் 60 சதவிகிதம். 2001–2004–ல் 1600 கிலோ வாட், 96 சதவிகிதமாக இருக்கின்றது. சாண எரிவாயு மூலம் சாண எரிவாயு கலன், சமுதாய மற்றும் பிற நிறுவனங்கள் மற்றும் மனிதக் கழிவு கலன் என்று சொன்னால், 1991–96–ல் 70 எண்கள், 1996–2001–ல் 21 எண்கள், இப்பொழுது கிட்டத்தட்ட 32 சதவிகிதம் அளவிற்கு இந்த 3 ஆண்டு காலத்தில் நாம் எட்டி இருக்கின்றோம். எனவே, இயற்கையை—Renewable energy–ஐப் பயன்படுத்திக் கொள்வதிலே நம்முடைய அரசு என்றைக்குமே மற்ற மாநிலத்தைக் காட்டிலும் முன்னோடியாக இருக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதிலும் ஒரு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், காற்றாலை மூலமாக இந்தியாவிலேயே நம்பர் 1 என்று சொன்னால், அது நம் தமிழ்நாட்டைத்தான் சொல்லவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்குக் காற்றாலையிலே மொத்தம் 1361 மெகாவாட் நாம் உற்பத்தி செய்து, அதிலும் நம் தமிழ்நாடு முதன்மையாக இருக்கின்ற சூழ்நிலையை நாம் இன்றைக்கு அடைந்திருக்கின்றோம். எனவே, அந்த Tamil Nadu Energy Development Agency –க்கு T.N.E.D.A.-க்கு இந்த ஆண்டு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கி இருக்கின்ற நிதி — 14 நீர் இறைக்கும் பம்புகள் மற்றும் தெரு விளக்குகள் இயக்கும் கருவி, எரிவாயுக் கலன்கள் அமைக்க – 12 இலட்சம் ரூபாய். அந்த அளவுக்கு மானியமாக அனுமதி அளித்திருக்கிறார்கள்.

500 மாணவர்கள் உள்ள 7 பள்ளி, மதிய உணவு மையங்களுக்கு 20 கிலோவாட் திறன் கொண்ட கரிம எரிவாயுக் கலன்கள் அமைக்க ஏழரை இலட்சம் ரூபாய் மானியம். அதேபோன்று சென்னை, கோட்டூர்புரத்தில்

மாநில அளவிலான எரிசக்திப் பூங்கா அமைக்க 25 இலட்சம் ரூபாய் மானியம். 36 அரசு சார்பு நிறுவனங்கள், பிற நிறுவனங்கள், சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகளாக நிறுவ, ரூபாய் 15 இலட்சம் மானியம். அதேபோன்று, 230 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் சூரிய வெப்ப சக்திப் பயன்பாடு உபகரணங்கள் வழங்க 7 இலட்சம் ரூபாய் மானியம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இயற்கையினுடைய அந்தச் சக்தியை நீங்கள் நிச்சயமாகப் பயன்படுத்துங்கள். அதன் மூலம் ஒரு யூனிட்டை நீங்கள் பயன்படுத்தினால், ஒரு கிலோ நிலக்கரியை நீங்கள் நம்முடைய வாரிசுக்கு மிச்சப்படுத்திக் கொடுப்பதற்குச் சமமாகும். எனவே உங்கள் இல்லங்களில் Solar Water Heater, Solar Power Plant போன்றவற்றையெல்லாம் நீங்கள் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, Power Finance Corporation–ஐப் பொறுத்த வரையிலே, வரலாற்றிலே இல்லாத அளவிற்கு, அதாவது 1999–2000–ஐப் பொறுத்தவரையிலே இந்த நிறுவனத்திற்கு மொத்தம் 150 கோடி ரூபாய்தான் முதலீடு வந்தது. ஆனால் நம்முடைய இந்த 2003–2004 ஒரு ஆண்டில் மட்டும் மொத்தம் 316 கோடி ரூபாய் இன்றைக்கு வைப்பீடாகச் செலுத்தப்பட்டிருக்கின்றது. Total Number of Depositors என்று சொன்னால், வைப்பீட்டாளர்கள் 98,250. இப்பொழுது Deposit செய்யப்பட்டிருக்கின்ற தொகை, இந்த Power Finance Corporation–ல் ரூ.1475 கோடி. இந்த 1475 கோடி ரூபாய் முழுவதுமாக T.N.E.B. -க்கு 2004–2005–ல் 650 கோடி ரூபாயும், 2003–2004–ல் 519 கோடி ரூபாயும் கடனாக வழங்கப்பட்டிருக்கின்றது.

*பிற்பகல் 1–55*

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பணம் இருந்தால் நீங்கள் தனியார் Chit Fund–ல் போட்டு ஏமாறாமல் நம்முடைய Power Finance Corporation –ல் முதலீடு செய்யுங்கள் என்று சொல்லி உங்களுக்கு அதை வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று தகவல் தொழில்நுட்பவியலைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே – I.T. Policy என்று சொன்னால் எந்த மாநிலத்திலும் கிடையாது. முதன்முதலாக I.T.-க்கு, என்று, தகவல தொழில்நுட்பவியலுக்கென்று ஒரு புதிய கொள்கையை வடித்துத் தந்தவர்



நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே I.T. Enabled Service என்கிற அந்த ஒரு கொள்கையும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விரைவில் வெளியிடப்படவிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத்தினுடைய கொள்கை என்ன? தமிழ்நாட்டைத் தகவல் தொழில்நுட்ப முதலீட்டுக்கு ஏதுவான ஒரு மாநிலமாக உருவாக்க வேண்டும், அரசு அலுவலகங்களில் மின் ஆளுமை — e–Governance — மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்; ஊரக மக்களுக்கு கணிப்பொறியின் பயன்பாட்டை அளித்து, ஊரகப் பகுதிகளுக்கும் நகரப் பகுதிகளுக்கும் இடையே உள்ள தகவல் தொழில்நுட்ப அறிவின் இடைவெளியைக் — Digital Device — குறைத்தல்; தகவல் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கான செயல்பாடுகளை மேம்படுத்துதல், தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல் ஆகிய அந்த அடிப்படையில் கடந்த காலத்தில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னேன். ஒவ்வொரு துறையிலும் கடந்த காலத்தில் பின்னேற்றம் இருந்தது. ஆனால் நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சியில் இப்போது வேகமான அளவுக்கு முன்னேற்றம் இருக்கிறது. எனவே தகவல் தொழில் நிறுவனங்களுடைய அந்த வளர்ச்சியைப் பார்க்கும்போது அதற்கும் ஒரு புள்ளிவிவரத்தை நான் இங்கே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் எண்ணிக்கை என்று சொல்லும்போது 1996–2001—ல் தி.மு.க. ஆட்சியில் 764 நிறுவனங்கள். 2001–04–ல் இந்த 3 ஆண்டில் 1046 நிறுவனங்கள். வளர்ச்சி விகிதம் என்று சொன்னால் 36.91 சதவிகிதம் அளவுக்கு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. அதேபோன்று மொத்த மென்பொருள் ஏற்றுமதி என்று சொன்னால், 1996–2001–ல் தி.மு.க. ஆட்சியில் 6830 கோடிதான். 5 ஆண்டுகளில் 6830 கோடி. 2001–04–ல் இந்த 3 ஆண்டு காலத்தில் 19,161 கோடி. அப்படியானால் 180.5 சதவிகிதம் அளவுக்கு மென்பொருள் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றுமதி செய்து ஒரு வரலாற்றைப் படைத்துள்ளது நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சி.

அதேபோன்று, அகில இந்திய அளவில் தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி விகிதாச்சாரம் என்று சொன்னால், 2001–ல் ஒட்டுமொத்தமாக 11 சதவிகிதம், தி.மு.க. ஆட்சியில் 11 சதவிகிதம். 2001–04–ல் 17 சதவிகிதம். வேலைவாய்ப்பு எவ்வளவு

உருவாக்கியிருக்கிறார்கள் கடந்தகால ஆட்சியில்? அந்த 5 ஆண்டுகால ஆட்சியில் 3.5 ஆயிரம் பேருக்குத்தான் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த 3 ஆண்டு காலத்தில் 40 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 114 சதவிகிதம் அளவுக்கு நல்ல உயர்வு இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே வருகின்ற காலங்களில் எல்லாம் இப்போது Top 10 Companies இருக்கின்றன. T.C.S., Wipro, அதேபோன்று Infosys போன்ற பல்வேறு நிறுவனங்கள்; World Bank, ABN Amro Bank, போன்ற நிறுவனங்களின் back offices எல்லாம்கூட தமிழ்நாட்டிலே அமைக்கப்படுகின்றன என்றால், அரசு இப்போது அவர்களை எல்லாம் சிகப்புக் கம்பளம் போட்டு வரவேற்கிற ஒரு நிலையின் காரணமாக தமிழ்நாடு இந்தியாவிலேயே I.T.–யிலே முதன்மையைப் பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அதேபோன்று சமீபத்திலே ஒரு assessment–க்கு Government of India ஏற்பாடு செய்தபோது, கிட்டத்தட்ட எல்லா மாநிலத்தவர்களும் கலந்துகொண்டனர். அதிலே நம்முடைய தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பெருமை Leader State என்ற பெருமை, 4 மாநிலங்களுக்கு அதாவது 4 மாநிலங்களில் ஒன்றாக நம்முடைய தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பெருமை E-readiness Report–படி Leader State—அந்தஸ்து கிடைக்கப் பெற்றிருக்கிறது. இது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாக இருக்கிறது.

அதேபோல நம்முடைய Tamil Virtual University–ஐப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட கல்விப் பணித் திட்டங்கள்மூலம் கலிபோர்னியாவைச் சேர்ந்த 55 மாணவர்கள் சான்றிதழ் பெற்றுள்ளனர். 13 இலட்சம் மக்கள் தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தைப் பார்வையிட்டுள்ளனர். 33 நாடுகளிலிருந்து 1062 மாணவர்கள் சான்றிதழ் கல்விக்கும், 25 நாடுகளிலிருந்து 1142 மாணவர்கள் பட்டப் படிப்புக்கும் பதிவு செய்துள்ளனர். இதிலே ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஹக்கீம் போன்றவர்கள் எல்லாம் தமிழ் ஆர்வம் மிக்கவர்கள். எனவே உங்களுடைய இல்லத்திலே Digital Library தேவையில்லை. எனவே நான் சொல்லுகின்ற அந்த இணைய தளத்திற்குள் செல்லுங்கள்.



www.TamilVU.org உள்ளே சென்றால் உங்கள் வீட்டிலே ஒரு Digital Library இருக்கிறது போன்ற ஒரு தோற்றம் உங்களுக்கு நிச்சயமாக இருக்கும். ஏன் என்று சொன்னால், அரும்பாடுபட்டு கிட்டத்தட்ட தொல்காப்பியம் முதல் இக்கால இலக்கியம் வரை 80,000 பக்கங்கள் இன்றைக்கு ஏற்றப்பட்டுள்ளன. நிச்சயமாக அந்த இலக்கியங்களை நீங்கள் அப்படியே படிக்கலாம், முழுவதுமாக. அதேபோன்று, கலைச் சொற்கள்—இரண்டு இலட்சம் கலைச் சொற்களை இன்றைக்கு அதிலே ஏற்றியிருக்கின்றோம். அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில், தமிழ் இணைய உலக மாநாடு நடைபெற்று ஒரு தமிழ் இணையம் இன்றைக்கு வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–00*

தகவல் தொழில்நுட்பவியல் துறையில் புதிய அறிவிப்புகள்; மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் முதலீடு செய்வதற்கு உகந்த மாநிலமாகத் தமிழகத்தை, குறிப்பாக சென்னையை உருவாக்க தமிழக அரசு எடுத்துவரும் செயல்திறன்மிக்க நடவடிக்கைகளினால் அதிக அளவு முதலீடுகள் தமிழகத்திற்கு வந்துள்ளன.

வட்டம் மற்றும் வட்டார அலுவலகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவதும், பொதுமக்களின் குறைகளைத் தீர்க்கும் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதும் அவசியமாகிறது. இதன் காரணமாகப் பொதுமக்களுக்கு, விரைவான சேவைகள் அளிக்கப்பட உள்ளன. மின் ஆளுமை உத்திகள் (e–Governance Mechanisms) மூலம் பொதுமக்களின் சேவைகளுக்கான அரசின் செயல்பாடுகளைக் கணிசமாக மேம்படுத்த இயலும். மேலும், கிராமத்தில் உள்ள விண்ணப்பதாரர்கள், தங்கள் விண்ணப்பங்களை நேரடித் தொடர்புமூலம் அளித்து, பின்பு தொடர் நடவடிக்கைகளையும் அறிய முடியும். பொதுமக்கள் குறைகள் தீர்ப்பது, பொதுமக்களின் சேவைத் தரத்தினை உயர்த்துவது ஆகியவகையில், தற்போதுள்ள உள் கட்டமைப்பு வசதிகளை வன்பொருள், மென்பொருள், உள்ளிணைப்புகள், வேலைப்போக்கு அமைப்புகள் ஆகியவற்றின்மூலம் அதிகப்படுத்துவதற்கு ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக, ஒரு முன்னோடி மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, திறமையான வழியில் பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்காக மாவட்ட இயந்திரத்தைச் சீரமைக்க முடியும்.

சென்னையில் மின் செய்தி பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் (Society for Electronics Transaction and Security - SETS) அமைக்கப் பெற்றது. அண்ணா பல்கலைக்கழகத்துடன் அறிவு தகவு மையத்தின் (Knowledge Data Centre) வளர்ச்சி, பாரதியார் பல்கலைக்கழகம் — எல்காட் நகரம் (BU-ELCOT CITY) குறித்த தொடக்க முயற்சிகள் ஆகியவை, மாநிலத்திற்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளை (R & D Initiatives) ஈர்க்கும்வகையில், இந்த அரசு பொறுப்புணர்வோடு செயல்படுவதைக் காட்டுகிறது. கோயம்புத்தூரில், பாரதியார் பல்கலைக்கழகம், எல்காட் நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான பியு-எல்காட் நகரம் (BU-ELCOT CITY), தனியார் மற்றும் பொதுத் துறைகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகள் வளர்ச்சி அடைய ஆதரவு அளிக்கிறது. இது ஒரு தன்னார்வத் திட்டமாகும். பல்கலைக்கழகம், தொழில்கள் மற்றும் அரசு ஆகியவற்றின் இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தி, வளர்ச்சிக்கு உறுதியளிப்பதுதான் இதன் சிறப்புத் தன்மையாகும். பியு-எல்காட் நகரத்தின் உள்கட்டமைப்புத் தேவைகளை அமைக்கும்வகையில், அடையாள ஒதுக்கீடாக ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

காகிதமில்லா அலுவலகம் (Paperless Office) தற்போது எல்காட்டிலே செயல்பட்டு வருகின்றது; முன்னோடித் திட்டம். மின்னணு சேவைகள் வழங்கிடல்(Electronic Delivery of Services), அரசு தள மேம்பாடு செய்தல்(Development of Government Portal), ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு (Integrated District Information System) ஆகிய நான்கு இனம் சார்ந்த மென்பொருளின் வளர்ச்சியை மேற்கொள்ளுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. மாநிலத்தின் அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்தக்கூடிய இனம் சார்ந்த மென்பொருளை மேம்படுத்துவதற்காக, அரசு மேலும் உத்தேசித்துள்ளது. இந்தச் செயற்குறிப்புக்காக ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அரசு நிர்வாகத்தில் மின் ஆளுமை நடைமுறைகளை விரைவாக்கும்பொருட்டு, இயக்குநர் ஒருவர் தலைமையின்கீழ் மின் ஆளுமை இயக்குநரகம் ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்குநரகத்தை உருவாக்குவதற்காக நடப்பு நிதி ஆண்டில், அடையாள நிதி ஒதுக்கீடாக ரூ.5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்காக ஒருங்கிணைந்த மின் ஆளுமை படம், தமிழ்நாடு மின் ஆளுமை வினை முறைத்திறம் (Strategy), மின் ஆளுமை முயற்சிகள் மற்றும் திட்டங்களுக்காக மத்திய மற்றும் மாநில



மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து நிதியைக் கண்டறிவது, தமிழ்நாட்டில் மின் ஆளுமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை உருவாக்குவது போன்றவை, இந்த இயக்குநரகத்தின் பொறுப்புகளாகும். மின் ஆளுமை மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது உள்பட மாநிலத்தில் மின் ஆளுமையை உயர்த்துவதற்கு இந்த இயக்குநரகம் நடவடிக்கையை மேற்கொள்ளும்.

ஏறக்குறைய 9 இலட்சம் மாநில அரசு பணியாளர்களுக்காகத் தரவுத் தளம் (Database) ஒன்றை உருவாக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. பணியாளர்களின் பெயர், பிறந்த தேதி, இனம், பிறப்பிட விவரங்கள், பணியின் தகுதி நிலை, இரத்தப் பிரிவு போன்ற பொதுவான விவரங்கள், நிலையான விவரங்களாகும். இவற்றை ஒருமுறை பதிவு செய்தால் போதுமானது. பணி மாறுதல், தகுதிகள், நியமனங்கள், சொத்துகள், விடுப்பு, கடன்கள் போன்றவை மாறுபடும் விவரங்களாகும். இந்தத் தகவல்களும் பதிவு செய்யப்படும். தகவல்கள், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் பதிவு செய்யப்படும். மேலும் தேவைப்படும் தகவல்களுக்கு இந்தத் தரவுத் தளம் (Database) அடிப்படையாக அமையும். அடையாள ஒதுக்கீடு ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின் ஆளுமையின் நன்மைகளை நன்கு அறிந்துகொள்வதற்குப் பெரும்பாலான அரசின் செயல்முறைகள், மின்னணுப்படுத்தப்படுகின்றன. மின் ஒப்பந்தப்புள்ளி (e-Tendering) செயல்பாடுகளின் ஒளிவு மறைவற்ற தன்மையாலும், செலவில் அதிக அளவு சேமிப்பு ஏற்படுவதாலும், மின் ஒப்பந்தப்புள்ளி முறையில் தகவல் தொழில்நுட்பவியலின் வலிமையைப் பயன்படுத்துதல் தேவையான ஒன்றாகும்.

*பிற்பகல் 2–05*

மின் ஒப்பந்தப்புள்ளி முறையானது நம்பகத்தன்மை, நேர்மை, தணிக்கை மற்றும் நிலையான தன்மை ஆகிய தேவையான அம்சங்களைக் கொண்டிருக்கிறது. கொள்முதல் வழிமுறைகளில் மறுசீரமைப்பின் (Procurement Process Re-engineering) ஒரு பகுதியாக, மின் ஒப்பந்தப்புள்ளி குறித்த ஓர் ஆய்வினை அரசு மேற்கொள்ளவிருக்கிறது. இந்தச் செயற்குறிப்பிற்கு அடையாள ஒதுக்கீடாக ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[திரு. டி. ஜெயக்குமார்] [2004 ஜூலை 26

மின்ஆளுமையைச் செயல்படுத்துவதில் இணைய தளம் (Internet) மற்றும் வலை சேவைகள் (Web Services) ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் தேவையின் அடிப்படையில் வலையமைப்பு சேவையகத்தின் இணைப்பு (Web Server Connectivity) உள்பட, இணையதளம் வலையமைப்பு குறித்த ஒரு ஆய்வினைத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளவிருக்கிறது. இதன்மூலம் தமிழக அரசிற்குத் தேவையான வலையமைப்புச் சேவையகம் உருவாக்க, அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது. இந்தச் செயற்குறிப்பிற்கு அடையாள ஒதுக்கீடாக ரூ.2.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உலகு தழுவி வாழும் தமிழ் மக்கட்கும், தமிழில் ஈடுபாடு உள்ள மற்றையோர்க்கும், தமிழ்மொழியைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்துகொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்தோடு தமிழக அரசால் தமிழ் இணைய பல்கலைக்கழகச் சங்கம் நிறுவப்பட்டது.

உலகளாவிய தமிழ் இணைய தளங்களில் பல்வேறு அரிய செய்திகள் உள்ளன. ஒவ்வோர் இணைய தளமும் தமக்கென்று தனிப்பட்ட குறியீடுகளையும், எழுத்துருக்களையும், வடிவமைப்புகளையும் பின்பற்றுகின்றன. இந்த இணைய தளங்களில் ஏதேனும் ஒரு செய்தியைத் தேடும்போது அந்தந்த இணைய தளங்கள் பின்பற்றும் குறியீடு, எழுத்துரு, வடிவமைப்பு முதலியவற்றை அடியொற்றியே தேட வேண்டியுள்ளது. இருமொழி எழுத்துரு (TAB), ஒருமொழி எழுத்துரு (TAM) ஆகிய தமிழ் எழுத்துருக்களை மட்டுமே தேடும்வகையில், தற்போது தேடுபொறி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தேடுபொறியால் பல்வேறு குறியீடுகள், எழுத்துருக்களில் உள்ள இணைய தளங்களின் செய்திகளைத் தேட இயலாது. எனவே, உலகளாவிய தமிழ் இணைய தளங்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகள், எழுத்துருக்களைக் கண்டறிந்து தேடும்வகையில், தேடுபொறி மென்பொருள் உருவாக்கப்படவுள்ளது. இதற்காக, ரூபாய் 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் இணைய பல்கலைக்கழகம், உலகு தழுவி வாழும் தமிழர்களுக்கும், மற்றவர்களுக்கும் தமிழ் மொழியில் சான்றிதழ், மேற்பட்டயம், பட்டம் போன்ற கல்வித் தகுதி பெறுவதற்காகப் பாடத் திட்டங்களை இணைய தள உள்ளீடு செய்து வருகிறது. இதுவரை 40 நாடுகளிலிருந்து சுமார் 2,500 மாணவர்கள் சான்றிதழ் மற்றும் பட்டக் கல்வியில் பதிவு செய்து பயின்று வருகிறார்கள். தமிழ் இணைய பல்கலைக்கழகம் சான்றிதழ் மற்றும் பட்டப் படிப்பிற்கான பாடங்களில்



2004 ஜூலை 26] [திரு. டி. ஜெயக்குமார்]

சிலவற்றை இணைய தளத்தில் இட்டுள்ளது. மீதமுள்ள பாடங்களை இணைய தளத்தில் இடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாணவர்கள் தங்களின் பாடம் தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்வதற்கும், ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதற்கும், சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கும் ஏதுவாக, தமிழ் இணைய பல்கலைக்கழக அலுவலகத்தில், இணைய தள வகுப்பறை ஒன்று, நிழற்படக் கருவி, திரையிடும் கருவி மற்றும் தொடர்புடைய சாதனங்கள் நிறுவப்படவுள்ளன. இதற்காக, ரூபாய் 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, கிட்டத்தட்ட 2,500 மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பாடத்திட்டங்களுக்கான பாடங்கள் அனைத்தும் இணைய தளத்தில் எழுதப்பட்டபின், உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள மாணவர்கள் தாங்கள் விரும்பும் பாடத்திட்டத்தைப் பயின்று தேர்வு எழுதலாம். இதுவரை இலங்கை, மலேசியா, மொரிசியஸ், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் 9 தொடர்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உலகத் தமிழ் மக்களின் பயன்பாட்டிற்காக, தற்சமயம் 2004–2005 ஆம் ஆண்டில் மேலும் 3 தொடர்பு மையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு தொடர்பு மையங்களை அமைப்பதற்கென அடையாள ஒதுக்கீடாக ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அன்றாடப் பணிகளில் தமிழ்மொழியைச் சாதாரண மக்கள் பயன்படுத்துவது மிகவும் குறைவு. பேரங்காடிகளிலும், மருந்துக் கடைகளிலும் பயன்படுத்தப்படும் கணினிகளில், பற்றுச் சீட்டுகளும், பொருட்களின் பட்டியலும் ஆங்கிலத்திலேயே உள்ளன. இத்தகைய வணிக நிறுவனங்களில் உள்ள கணினிகளில் பற்றுச்சீட்டு, பொருட்களின் பட்டியல் முதலியவை சாதாரண மக்களுக்கும் புரியும்வகையில், தமிழில் இருக்குமாறு ஒரு மென்பொருள் உருவாக்கப்பட வேண்டும். இதற்கென ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான்புகழ் கொண்ட வள்ளுவன் குறிப்பிட்ட

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்கின்ற இலக்கணத்திற்கு ஏற்பவும்,

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்பதன்படியும், அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, கொடை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நற்பண்புகளின் இலக்கணமாக ஆட்சி புரியும் அம்மா அவர்களே, உலகம் வியக்க, மதுரை உலகனேரிக்கு உயிர் கொடுத்து, உயர் நீதிமன்றக் கிளை அமைய உரம் போட்டு ஊக்கம் அளித்து, நேற்று முன்தினம் மலர வைத்த எங்கள் உன்னதத் தலைவியே, நாங்கள் தங்கள் ஆணையின்படி, அயராது பாடுபட்டுத் தமிழக (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் நலனுக்காக என்றென்றும் (மேசையைத் தட்டும் ஒலி) பாடுபடும் தங்களோடு நாங்களும் துணைநின்று கடமையாற்றுவோம் எனக் கூறி என் உரையை நிறைவு செய்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

## (அ) கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 3, நீதி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன். (குறுக்கீடு)

* **திரு. ப. அரசன்:** ஒரு முக்கியமான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வலியுறுத்துகிறேன் என்று சொல்லிவிட்டு அப்புறம் பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெறுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Power Finance Corporation–ல் சட்டமன்ற உறுப்பினர்கள் முதலீடு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதில் முதலீடு செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். அருகிலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, எங்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

பிற்பகல் 2–10

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.142,53,99,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13, எரிசக்தித் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.260,11,65,000/–, மூலதனக் கணக்கில் ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.179,25,74,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### இ) கோரிக்கை எண் 30 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30, தகவல் தொழில்நுட்பவியல் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.



**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,55,26,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஈ) கோரிக்கை எண் 32 – சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32, சட்டத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,99,50,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (உ) கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 18, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,335,38,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,19,79,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-07-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

46. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரம் குறித்த வரிகள் சட்டத்தின்கீழ், ஜப்பான் நாட்டு தூதர் தமிழ்நாட்டிற்கு வருகைதரும்போது, அவர் தங்கும் இடத்திற்கு செலுத்தத்தக்க ஆடம்பர வரியைப் பொறுத்தமட்டில் விலக்களித்து, வணிக வரித் துறையின் 22-9-2003 ஆம் நாளிட்ட 138 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரம் குறித்த வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

[2004 ஜூலை 26

47. 2002–2003 ஆம் ஆண்டு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

48. 2002–2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்–III) இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

49. 2002–2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்–I) இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

50. 2002–2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்–II) இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

51. 2002–2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்–V) ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

52. 2002–2003 ஆம் ஆண்டு பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் பத்தொன்பதாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

53. 2002–2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்–I) முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

54. 2002–2003 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)



2004 ஜூலை 26]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

17. மானியக் கோரிக்கை எண் 13 – தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சார ஆய்வுத் துறை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாடு நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

18. மானியக் கோரிக்கை எண் 30 – தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

19. மானியக் கோரிக்கை எண் 32 – சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

20. மானியக் கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

21. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய செயல்முறைத் திட்டம், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

22. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2003–2004)

23. மனுக்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2003–2004)

24. மனுக்கள் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003–2004)

25. மனுக்கள் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. (2003–2004)

26. மனுக்கள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2003–2004)

27. மனுக்கள் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2003–2004)

28. மனுக்கள் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003–2004)

29. மனுக்கள் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2003–2004)

30. மனுக்கள் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (2003–2004)

31. மனுக்கள் குழுவின் ஐம்பத்து எட்டாவது அறிக்கை.(2003–2004)

---

## இணைப்பு - I

*(49 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

**முன்னுரை:**

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி கிடைக்கச் செய்வது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற்பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவினின்றும் இது தனித்து செயற்படுகிறது. புதிய நீதிமன்றங்கள் அமைத்தல், தேவையான இடங் களில் கூடுதல் உள்ளமைப்பு வசதி ஏற்படுத்துதல் மற்றும் நீதிமன்றங்களின் மற்றத் தேவைகளை நிறைவு செய்தல் ஆகியவற்றை செயல்படுத்தி, குடிமக்களுக்கு விரைவான சமூகப் பொருளாதார நீதியை வழங்குவதில் தமிழக அரசு முன்னோடியாக விளங்கி வருகிறது.

### 2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு

புதுதில்லியிலுள்ள உச்சநீதிமன்றம் நமது நாட்டின் உச்சநிலை நீதிமன்றமாகும். அது மாநிலங்களிலுள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுள்ளது. மாநில நீதித்துறையின் படிநிலை அமைப்பு வருமாறு:-

[2004 ஜூலை 26

**உயர்நீதிமன்றம், சென்னை**

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் | சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள் |
| சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் | | |

இத்துடன் பல்வேறு சட்டங்களின்கீழ் பின்வரும் நீதிமன்றங்கள்/ அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:-

1. நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை

2. அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர், சென்னை

3. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்



2004 ஜூலை 26]

4. தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை

5. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள குடும்ப நீதிமன்றங்கள்

6. சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்

7. குடிமையியல் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்

8. 'தடா' சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள்

9. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும், போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் (NDPS) சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும் விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்

10. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்திய குற்றப் புலனாய்வுத்துறை வழக்குகளை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்

11. தமிழ்நாடு நிதி வைப்பாளர் (நிதி நிறுவனங்களில்) நலன் காக்கும் சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிக்க சென்னையில் தோற்றுவிக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம்

12. சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்

13. மதுரையில் உள்ள சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்

14. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலத்தில் மகளிர் நீதிமன்றங்கள் (Mahila Courts)

15. விரைவு நீதிமன்றங்கள்

## 3. தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை விவரங்கள்

தமிழ்நாட்டில் தற்போதுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 26

## 4. செலவின வகைப்பாடு

உயர்நீதிமன்றம் குறித்த செலவு "சாட்டிய செலவினம்" என்றும் நீதி நிருவாகம் தொடர்பான பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்டவை" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### சாட்டிய செலவினங்கள்

1. உயர்நீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்றப் பதிவாளர்கள், அசல் மேல் முறையீட்டுப் பிரிவுகள், மொழி பெயர்ப்பு அச்சிடுதல் துறை, சட்ட நிருபர்கள் மற்றும் பணியாளரமைப்பு, பாண்டிச்சேரி அதிகார வரம்பில் வரும் வழக்குகளை கவனிக்கும் உதவிப் பதிவாளர் மற்றும் அவருக்கான பணியாளர்கள்.

2. நொடித்தவர் சொத்தாட்சியரும் அவரின் பணியாளரமைப்பும்

### அனுமதிக்கப்பட்ட செலவினங்கள்

1. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் உட்பட உரிமையியல் அமர்வு நீதிமன்றங்கள்

2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை

3. பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை

4. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள்

5. அரசு தலைமைச் சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை.

6. அரசு சட்ட அறிவுரையாளர்களும் ஆலோசகர்களும்

7. சிறப்பு நீதிமன்றங்கள்

8. பதிப்பாசிரியர் மற்றும் பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் பதிப்பகம், சென்னை

9. குடும்ப நல நீதிமன்றங்கள்



2004 ஜூலை 26]

## 5. நிதி ஒதுக்கீடு

நீதித் துறை நிருவாகத்திற்கு அரசு வழங்கி வரும் முன்னுரிமையை எதிரொலிக்கும் வகையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில், நமது மாநிலத்தில் நீதித் துறை கணிசமான அளவிற்கு வளர்ச்சியையும் மேம்பாட்டையும் அடைந்துள்ளது. போதிய அளவிற்கு நிதி ஆதாரங்கள் இல்லாதபோதிலும், நீதித் துறை தங்குதடையின்றி சுமூகமாகச் செயல்படுவதற்காக கட்டடங்கள், பணியாளர்கள் மற்றும் தேவையான ஏனைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை பொறுத்தவரையில் அரசு தேவைப்படும் வசதிகளை செய்து கொடுத்துள்ளது. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவு ரூ.171.90 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 6. உயர்நீதிமன்றம், சென்னை

உயர்நீதிமன்றம், நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் விவகார அசல் வழக்கு விசாரணை அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல் முறையீட்டு விசாரணை அதிகாரமும் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு. உரிமையியல் விவகார அசல் வழக்குகளைப் பொறுத்தவரை சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூ.10,00,000/–க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகின்றது. மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி நீதிமன்றங்கள் தொடர்பாகவும் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. பாண்டிச்சேரி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை பாண்டிச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

மாநிலத்தில் உச்சநிலை நீதிமன்றமாக உயர்நீதிமன்றம் அமையப் பெற்றுள்ளது. உயர்நீதிமன்றத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட 42 ஆகும். தற்போது உயர்நீதிமன்றம் 28 நீதிபதிகளுடன் இயங்கி வருகிறது.

தலைமைப் பதிவாளர் உயர்நீதிமன்றத்தின் நிருவாகத் தலைவராக விளங்குகிறார். அவருக்கு உதவ பதிவாளர் (கண்காணிப்பு), பதிவாளர் (நீதி), பதிவாளர் (நிருவாகம்), பதிவாளர் (மேலாண்மை), மாஸ்டர் (Master), துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், முதுநிலைக் கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவிப் பதிவாளர்களும் உள்ளனர்.

நீதி வழங்குவதுடன் மாநிலத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

## 7. மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையை அமைத்தல்

மதுரையில் நிறுவப்படும் உயர்நீதிமன்ற கிளைக்குத் தேவையான கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூபாய் 55.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அனைத்து வசதிகளுடனும் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்தும் வகையில் கிளை திறப்பிற்கான செலவினத் தொகையைச் சேர்த்து அரசு ரூ.275.91 இலட்சங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## 8. தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு

### (1) சென்னைப் பெருநகர்

### (அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை

ஒரு மகளிர் நீதிமன்ற நீதிபதி உட்பட 13 மாவட்ட நீதிபதிகள், 18 உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை) மற்றும் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் நிருவாகப் பொறுப்பு வகிக்கும் பதிவாளர் ஒருவர் உட்பட ஆக 32 நீதிபதிகள் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் பணிபுரிகின்றனர். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு சென்னை மாநகர் எல்லை முழுமைக்கும் விரிவடைந்துள்ளது.

தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1873 மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1892 திருத்தம் செய்யப்பட்டு (திருத்தச் சட்டம் 1 / 2004) உதவி நீதிபதி மற்றும் சென்னை மாநகர முதன்மை நீதிபதி ஆகியோரின் பணம் சார்ந்த அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:-



மாநகர உரிமையியல் நீதிமன்றம்

| உதவி நீதிபதி | முதன்மை நீதிபதி |
|---|---|
| ரூபாய் 5,00,000/–(ரூபாய் ஐந்து இலட்சங்கள்) வரையில் | ரூபாய் 5,00,000/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சங்களுக்கு) மேற்பட்டு ரூபாய் 10,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சங்களுக்கு) மிகாமல் |

ரூ.10,00,000/-ற்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட வேண்டும். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் சென்னை செஷன்ஸ் பிரிவுக்கு அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் மாநகர உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் ரூ.5,88,61,000/– மொத்த செலவு ஆகும் என மதிப்பிடப்படுகிறது.

### ஆ. சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை.

இந்நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள தலைமை நீதிபதி தலைமை வகிக்கிறார். மேலும், உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும், உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் ஏழு நீதிபதிகளும் உள்ளனர். நிருவாகப் பொறுப்பிற்கென உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் தனியே ஒரு பதிவாளரும் உள்ளார். இவர், குறிப்பிட்ட சில ஆணைகளை நிறைவேற்றல், மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதி நிருவாகப் பணிகளையும் கவனிக்கிறார். தலைமை நீதிபதியும், இதர நீதிபதிகளும் 1882 ஆம் ஆண்டு மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைச் செலுத்துவர்.

2004-005 ஆம் ஆண்டில் சிறுவழக்குகள் நீதிமன்றத்திற்கான செலவினம் ரூபாய் 2,50,11,000/– என மதிப்பிடப்பட்டுள்ளது.

### (ii) வெளியூர்

### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்

மாநிலத்தில் 25 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. புதிதாகப் பிரிக்கப்பட்ட நான்கு வருவாய் மாவட்டங்களான தேனி, திருவாரூர், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வருவாய் மாவட்டங்களுக்குப் புதிய மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான குற்றவியல் அமர்வு நீதிமன்ற நீதிபதிகளும் ஆவார். தொழிலாளர் மாநில காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகன சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனி சட்டங்களின்கீழ் தனித் தீர்ப்பாயங்களாகவும் அவரவர்கள் பணியாற்றுகின்றனர்.

தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1873 மற்றும் மாநகர உரிமையில் நீதிமன்றங்கள் சட்டம், 1892 (சட்டம் 1/2001) மூலம் திருத்தம் செய்யப்பட்டு மாவட்டங்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் பண விவகார அதிகார வரம்பில் மாற்றம் செய்யப்பட்டு மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களின் பண விவகார வழக்குகளில் அதிகார வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. பண விவகாரங்களில் சார்நிலை நீதிமன்றங்களின் வரையறுக்கப்படாத அதிகார வரம்பு வரையறுக்கப்பட்டு, மாவட்ட நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

| மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | சார்நிலை நீதிமன்றம் | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|
| ரூபாய் 30,000/–ல் (ரூபாய் முப்பது ஆயிரம்) இருந்து ரூபாய் 1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம்) ற்கு உயர்த்தப் பட்டுள்ளது. | ரூ.1,00,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சம்) மேல் ரூபாய் 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம்) ற்கு மிகாமல் | ரூபாய் 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம்) மேல் உச்சவரம்பின்றி |



அவர்கள் மாவட்டத்தில் உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். மாவட்ட நீதிபதிகள் அவரவர்கள் மாவட்டத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர்.

### ஆ சார் நீதிபதி நீதிமன்றங்கள்

சார் நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை பிரிவு) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். உரிமையியல் செயல்பாடு ஆணை வழக்குகளில் இந்நீதிபதிகளின் பண விவகார அதிகார வரம்பானது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூபாய் 5 இலட்சத்திற்கு உட்பட்டதும் ஆகும். அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராக ரூபாய் 1,00,000/– மதிப்புக்குட்பட்டுத் தொடரப்படும் மேல்முறையீடுகளுக்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும் உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை பிரிவு) பெற்றுள்ளனர். உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை பிரிவு) உதவி குற்றவியல் அமர்வு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களாகவும் சார்நிலை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 107 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

### இ) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி – இளநிலை பிரிவு)

மாவட்ட முன்சீப் பதவிகள் தற்போது உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) பதவிகளாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ரூ.1,00,000/– வரையிலான மதிப்புடைய சொத்து வழக்குகளை விசாரித்து வருகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகார வரம்பைப் பெற்றுள்ளன. அவை ரூ.20,000/– வரையிலான சிறு வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நடுவர்கள், தங்கள் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர். இம்மாநிலத்தில் 158 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

**(ஈ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் உள்ள வழக்காடும் பொதுமக்கள் தங்கள் உரிமையியல் தொடர்பான குறைகளைத் தீர்த்துக்கொள்வதில் மிகுந்த இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அதற்காக அவர்கள் வெளியே உள்ள நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அவர்களுடைய இடர்பாடுகளைக் களையும் பொருட்டு மாவட்ட குற்றவியல் (ம) நடுவர் நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை தீர்த்து வைக்கின்றன. அத்தகைய நீதிமன்றங்கள் மொத்தம் 64 உள்ளன.

அனைத்து உரிமையியல் நீதிமன்றங்களும் மூன்று வகையான பணியாளரமைப்புகளை, அதாவது, வழக்கமான பணியாளரமைப்பு, நகல் எடுக்கும் பணியாளரமைப்பு மற்றும் செயல்முறை பணியாளரமைப்பு ஆகிய மூன்று பணியாளர் அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

வெளியூரிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் தொடர்பாக 2004-2005 ஆம் ஆண்டிற்கு செலவு ரூ.77,58,65,000/- என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**(உ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்று, மற்றும் மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் பத்து தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் அனைத்து பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு தலைமை தாங்குபவர்கள் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் செயல்படுவர். அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த தகராறுகளையும், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன.





தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் சென்று, முகாம் நீதிமன்றம் நடத்தித் தொழிலாளர் வழக்குகள் மற்றும் உரிமை கோரிக்கை மனுக்கள்மீது விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர்.

சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 2004-2005 ஆம் ஆண்டு ரூ.1,69,59,000/- செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 9. குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு முறை

**(i) சென்னை மாநகர்:**

சென்னை மாநகரில், தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றம் உட்பட மொத்தம் 24 பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களில் தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிபதி, கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது மற்றும் பதினொன்றாவது பெருநகர குற்றவியல் நீதிபதிகள் உரிமையியல் நீதிபதி (மூதுநிலை) பதவி நிலையை சார்ந்தவர்கள் ஆவர். ஏனைய அனைத்து பெருநகர குற்றவியல் நீதிபதிகளும் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவி நிலையை சார்ந்தவர்கள் ஆவர். பெருநகர குற்றவியல் நீதிபதிகள் சென்னை நகரில் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட காவல் நிலைய வழக்குகள் குறித்து விசாரிக்கும் அதிகாரம் பெற்றவராவர்.

2004-2005 ஆம் ஆண்டில் மாநகரிலுள்ள பெருநகர குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தமட்டில் ரூபாய் 3,58,10,000/- செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ii) மாவட்டங்கள்**

**(அ) தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

தற்போது மாநிலத்தில் 25 நீதித் துறை தலைமை நீதிபதிகள் உள்ளனர். மேற்படி நீதித் துறை தலைமை நீதிபதிகள் அவரவர் மாவட்டத்திலுள்ள குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்வர்.

[2004 ஜூலை 26

(ஆ) நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும் நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 180 நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் 2004-2005 ஆம் ஆண்டிற்கான செலவு ரூபாய் 35,32,57,000/- ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## 10. தமிழ்நாட்டில் செயல்படும் தனி நீதிமன்றங்கள்

**(i) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்:**

1989 ஆம் ஆண்டைய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் மற்றும் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென கீழ்க்கண்ட மாவட்டங்களில் நான்கு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்றத்தின் அதிகார வரம்பு |
|---|---|---|
| 1. | I கூடுதல் அமர்வு நீதிமன்றம், மதுரை | மதுரை<br>திண்டுக்கல்<br>தேனி<br>இராமநாதபுரம்<br>சிவகங்கை<br>விருதுநகர் |
| 2. | II கூடுதல் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் | தஞ்சாவூர்<br>நாகப்பட்டினம்<br>திருவாரூர் |
| 3. | III கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி |
| 4. | IV கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி<br>கரூர்<br>பெரம்பலூர்<br>புதுக்கோட்டை |



2004 ஜூலை 26]

எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், தொடர்புடைய முதன்மை அமர்வு நீதிமன்றம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின்கீழ் வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும். 2004-2005 ஆம் ஆண்டில் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் ரூபாய் 55,60,000/- செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ii) பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களும் அதாவது கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் (பொருளாதாரக் குற்றப் பிரிவு-I மற்றும் குற்றப் பிரிவு-II) மற்றும் மதுரையில் ஒரு நீதிமன்றமும் ஆக மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் பொருளாதாரக் குற்றப் பிரிவு-I மற்றும் பொருளாதாரக் குற்றப் பிரிவு-II மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். மதுரையிலுள்ள தலைமைக் குற்றவியல் நடுவர், உரிமையியல் நீதிபதி (முதுநிலைத் தரம்) பதவித் தரத்தில் உள்ளார். 2004-2005 ஆம் ஆண்டிற்கு இந்நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவு ரூபாய் 43,20,000/- ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(iii) குடும்ப நல நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக ஆறு குடும்ப நீதிமன்றங்கள் உள்ளன.

[2004 ஜுலை 26

குடும்ப நீதிமன்றங்கள் குறித்த செலவு 2004–2005 ஆம் ஆண்டிற்கு – ரூபாய் 1,30,75,000/- என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**(iv) மத்திய குற்றப்புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில், மத்தியக் குற்றப்புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரிப்பதற்காகவென்றே சென்னையில் இரண்டும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுமாக 4 தனி நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மத்தியக் குற்றப்புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்களுக்காகும் செலவு 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 85,88,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(v) போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்**

போதைப் பொருட்கள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்று சென்னையில் கூடுதல் தனி நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நீதிமன்றத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டுக்கான செலவு ரூ.17,08,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(vi) 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் நடுவர் மன்றம்**

1908 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் செயல்படும் நடுவர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், 2004–2005 ஆம் ஆண்டுக்கான செலவு ரூபாய் 14,86,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(vii) சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களுக்கான தனி நீதிமன்றங்கள்**

சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிக்க குற்றவியல் நடுவர் பதவித் தரத்தில் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் ஒரு தனி நீதிமன்றமும் சேலம் மாவட்டம் சேலத்தில் ஒரு தனி நீதிமன்றமும் செயல்படுகின்றது.



2004 ஜுலை 26]

**(viii) இரயில்வே நீதிமன்றங்கள்**

இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ், பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தல் முதலிய குற்றங்களை விசாரணை செய்வதற்காக எழும்பூர் இரயில் நிலையம் மற்றும் மத்திய இரயில் நிலையம் ஆகியவற்றில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அல்லாமல், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவை நீதித் துறை ஏற்கிறது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத் தொகை மாநில அரசின் நீதித் துறையின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**(ix) நடமாடும் நீதிமன்றங்கள்**

போக்குவரத்து தொடர்பான குற்றங்களை விசாரிக்க நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

**(x) 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தனி (Designated) நீதிமன்றங்கள்**

இச்சட்டத்தின்கீழ் சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களையும் திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தலா ஒரு தனி நீதிமன்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

**(xi) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வருகின்ற வழக்குகளை விசாரணை செய்வதற்காக மாவட்ட அமர்வு நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய ஒவ்வொரு இடத்திலும் ஒரு தனி நீதிமன்றம் வீதம் மொத்தம் ஆறு தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**(xii) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்காக, சென்னை மற்றும் கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் வீதம் இரண்டு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

சென்னையில் குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்காக சென்னை, பூவிருந்தவல்லியில் இயங்கும் தனி நீதிமன்றம் தற்போது பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் சட்டம், 2002-ன்கீழ் (மத்திய சட்டம் 15/2002) தொடரப்படும் வழக்குகளை விசாரிக்கின்றது.

**(xiii) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரையில் உள்ள அமர்வு நீதிமன்றம்**

தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மதுரையில் அமர்வு நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது.

**(xiv) மகளிர் நீதிமன்றம்**

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்காக மட்டுமே மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒரு மகளிர் நீதிமன்றம் ஜூலை திங்கள் 2002 முதல் செயல்படுகிறது. மேலும் ஆகஸ்ட் திங்கள் 2003 முதல் மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒரு மகளிர் நீதிமன்றம் செயல்படுகின்றது.

**(xv) மனித உரிமைகள் நீதிமன்றம்**

மனித உரிமைகள் மீறப்படுவதால் எழும் வழக்குகளை விரைவில் விசாரணை செய்வதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அமர்வு நீதிமன்றத்தை மனித உரிமைகள் நீதிமன்றமாக மாநில அரசு குறிப்பிடவும், மனித உரிமைகள் நீதிமன்றங்களுக்கு தனி அரசு வழக்கு நடத்துநர்களை (குற்றவியல்) நியமிக்கவும், 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்தியச் சட்டம் 10/1994) வகை செய்கிறது.





மேற்சொன்ன விதிகளுக்கிணங்க, சென்னை உயர்நீதிமன்றத்தின் இசைவுடன், இம்மாநிலத்திலுள்ள அனைத்து தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் மற்றும் உதகமண்டலம் அமர்வு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக அரசு குறிப்பிட்டுள்ளது. மாவட்ட நீதிமன்றங்களின் அரசு வழக்கு நடத்துநர்கள் (குற்றவியல்), மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தனி அரசு வழக்கு நடத்துநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுரையின் அடிப்படையில், மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் குறித்து விசாரணை நடத்துவதற்கென்றே மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தனி அரசு வழக்கு நடத்துநர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**(xvi) தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்**

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு வைப்பீட்டாளர்களின் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே தனி நீதிமன்றம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது.

**(xvii) விரைவு நீதிமன்றங்கள்**

பதினொன்றாவது நிதிக் குழுமத்தின் பரிந்துரையின்படி நீதிமன்றங்களில் வழக்குகளின் தேக்கநிலையை குறைக்கும் பொருட்டு, குறிப்பாக மாவட்ட அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் சார்பு நீதிமன்றங்களில் தேங்கியுள்ள குற்ற வழக்குகளில் விரைவாக தீர்வு காண்பதற்கு ஏதுவாக மாநிலத்தில் 49 விரைவு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இந்நீதிமன்றங்களுக்கு 2004-2005 வரையிலுள்ள ஐந்தாண்டு காலங்களுக்கு மத்திய அரசு ரூபாய் 14.12 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.4,44,44,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 11) புதிய முயற்சிகள்

உச்சநீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க சார்நிலை நீதிபதிகளின் ஊதிய விகிதத்தினை முதலாவது தேசிய நீதித் துறை ஊதியக் குழு (First National Judicial Pay Commission) பரிந்துரைத்திருந்த விகிதத்தில் 1-7-96 முதல் முன்தேதியிட்டு உயர்த்தி நிர்ணயிக்க அரசு முடிவு செய்தது. ஓய்வு பெற்ற நீதிபதிகளும் ஓய்வூதியம் பெற வழிவகைகள் செய்யும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 581, உள் துறை, நாள் 30-6-2003-ல் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் அவர்களுடைய ஊதியத்தை 1-7-96 முதல் முன்தேதியிட்டு நிர்ணயம் செய்தும் அதனால் ஏற்படும் நிலுவைத் தொகையை ரொக்கமாக வழங்கவும் அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஓய்வூதியம் பெற தகுதியுள்ள அனைத்து ஓய்வு பெற்ற நீதிபதிகளுக்கும் ஓய்வூதியம் வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. பணிபுரிந்து வரும் நீதித் துறை அலுவலர்களைப் பொறுத்தமட்டில், திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதங்களுக்கான சம்பளத்தை மே 2003 முதல் அவர்கள் பெறக்கூடிய சம்பள நாளிலிருந்து ரொக்கத் தொகையாகப் பெறத் தகுதியுடையவர் ஆவர் என்றும், 1-7-96 முதல் 30-4-2003 வரை உள்ள நிலுவைத் தொகையில் வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டு எஞ்சிய தொகை வருங்கால வைப்பு நிதியில் சேர்க்கப்படும் என்றும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

ஜூன் திங்கள் 2003-ல் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள நூலகக் கட்டடத்திற்கு அருகில் ரூபாய் 1.52 கோடி செலவில் கூடுதலாக இரண்டு அடுக்கு மாடியுடன்கூடிய ஒரு கூடுதல் நூலகக் கட்டடம் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர, கீழ்க்கண்ட புதிய பணிகளை 2004-2005 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது :-



### 2004-2005 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்

| வரிசை எண் | பணியின் பெயர் | தொடரினச் செலவு | தொடரா வினச் செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 | நீதி மன்றங்கள் உரிமையியல் — விழுப்புரம் — உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க செஞ்சியில் சார்பு நீதி மன்றம் அமைத்தல். | 26.82 | 6.00 | 32.82 |
| 2 | மோட்டார் வாகனங்கள் நீதித்துறை —முதன்மை மாவட்ட நீதிபதிகள், கூடுதல் மாவட்ட நீதிபதிகள் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி (ம) முதன்மை குற்றவியல் நீதிபதி ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட பழைய வாகனங்களை மாற்றுவது —பழைய வாகனங்களுக்கு பதிலாக புதியதாக 11 வாகனங்கள் வாங்குவது சம்பந்தமாக | -- | 44.00 | 44.00 |
| 3 | தொலைபேசிகள் —மாநகர உரிமையியல் நீதிமன்றம் சென்னை 5+20 நீட்சித் தொலைபேசிகள். (EPABX ) நிறுவுவதற்காக இசைவளித்தல் சம்பந்தமாக | 0.50 | 0.53 | 1.03 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | குற்ற வழக்கு தொடர்வுத் துறையில் உள்ள 11 துணை இயக்குநர் அலுவலகங்களுக்கு 11 கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவது சம்பந்தமாக. | -- | 12.02 | 12.02 |
| | மொத்தம் | 27.32 | 62.55 | 89.87 |

## 12) பிற சிறப்பம்சங்கள்

### (1) தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழு

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குத் தேவைப்படும் சட்ட உதவிகளை இலவசமாக அளிக்க சட்டப் பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987 (சட்டம் 59/1994-ல் திருத்தப்பட்டபடி) இயற்றப்பட்டது. மேற்சொன்ன அலுவல்களை ஆற்றுவதற்காக இச்சட்டம், மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, வட்டச் சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழு ஆகியவை அமைக்கப்பெற்று அவை சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

**மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் அலுவல்கள்:-**

மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் அலுவல்கள் பின்வருமாறு -

1) மத்திய ஆணைக்குழுவின் கொள்கைகள் மற்றும் உத்தரவுக்குச் செயல்வடிவம் கொடுத்தல்.

2) இச்சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள அளவுகோல்களை நிறைவு செய்பவர்களுக்குச் சட்டப் பணிகள் அளித்தல்.

3) மக்கள் நீதிமன்றங்களை (Lok Adalat) நடத்துதல். (உயர்நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்றங்கள் உட்பட).

4) தடுப்பு வகையான மற்றும் உத்திகளுடன்கூடிய சட்ட உதவித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.



5) மாநில ஆணைக்குழு, மத்திய அதிகார ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து, விதிமுறைகள் மூலம் நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

**மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் ஆகியவற்றின் அலுவல்கள்.**

ஒவ்வொரு மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் அலுவல்கள் வருமாறு:

1) மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழு அவ்வப்போது ஒதுக்கக்கூடிய மாவட்டத்தில் உள்ள மாநில ஆணைக்குழுவின் அத்தகைய அலுவல்களை ஆற்றுதல்

2) வட்டச் சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

3) மாவட்டங்களுக்குள் மக்கள் நீதிமன்றங்களை அமைக்க ஏற்பாடு செய்தல்

4) விதிமுறைகள் மூலம் மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

**உயர்நீதிமன்ற சட்டப் பணிக் குழுவின் அலுவல்கள்**

1) உயர் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளில் உள்ளவர்களுக்கு சட்டப் பணிகளை ஆற்றுதல்.

2) விதிமுறைகள் மூலம் மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

**மக்கள் நீதிமன்றம் (Lok Adalat)**

மாநில மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் ஆகியன மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன.

கீழ்க்காணும் பிரச்சினைகள் தொடர்பான இனங்களில் மக்கள் நீதிமன்றங்களை நடத்தி தாவாவுக்கு உட்பட்ட இருபிரிவினருக்கிடையே இணக்கத் தீர்வு அல்லது உடன்பாடு செய்து வைக்கும் அதிகாரத்தை மக்கள் நீதிமன்றங்கள் பெற்றுள்ளன:-

(அ) யாதொரு நீதிமன்றத்திலும் நிலுவையாக உள்ள யாதொரு வழக்கு, அல்லது

(ஆ) எந்த பகுதிக்கான மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தப் பகுதியின், யாதொரு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வந்து ஆணைக்கென நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லப்படாத யாதொரு பிற பிரச்சினைகள்.

இந்த மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது. இத்தீர்ப்பினை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்ய முடியாது.

31-3-2004 ஆம் நாள் வரை நடத்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களின் மொத்த எண்ணிக்கை 18,010 ஆகும்.

31-3-2004 ஆம் நாள் வரை தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,91,903 ஆகும்.

இவற்றில் 1,11,189 வழக்குகள் விபத்துக்கள் சம்பந்தப்பட்டவை ஆகும்.

ஊரக பகுதிகளில் கால முறைப்படி சட்ட உதவி - சட்ட அறிவு விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இந்த மாநிலச் சட்டப் பணிக்குழு சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் ஒரு புதிய கட்டடத்தில் தற்பொழுது இயங்கி வருகிறது. இந்த மாநில சட்டப் பணிகள் குழுவிற்கான புதிய கட்டடத்தினை சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் கட்டுவதற்கு அரசு ரூ.1.85 கோடி அனுமதித்துள்ளது.

**(ii) குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்:**

கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள இந்திய காவல் பணி அலுவலர் ஒருவர் குற்ற வழக்கு தொடர்வு இயக்குநராக நியமிக்கப்படுகிறார். குற்ற வழக்குகள் தொடர்வு இணை இயக்குநர், குற்ற வழக்குகள் தொடர்வு துணை இயக்குநர்கள், குற்ற வழக்குகள் தொடர்வு உதவி இயக்குநர்கள், கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் அரசு சார்பாக வழக்குகளை நடத்தும் கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள் மற்றும் நிலை I (ம) நிலை II-லுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் ஆகியோரின் நிருவாகப் பணிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரியாக குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் உள்ளார்.



குற்றவியல் வழக்குகளை திறம்பட நடத்தி நிர்வகிப்பதுடன், மாநிலம் முழுவதிலுமுள்ள பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் மற்றும் குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆகியோரின் பணிகளைக் கண்காணிப்பதே குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் தலையாய நோக்கமாகும்.

குற்ற வழக்கு தொடர்வு இயக்ககம் திறமையாக செயல்படுவதற்கு ஏதுவாக குற்ற வழக்கு தொடர்வு இணை இயக்குநர் மற்றும் 11 துணை இயக்குநர்களுக்கு அரசு ரூபாய் 42.06 இலட்சம் மதிப்பீட்டில் 12 மஹிந்திரா ஈப்புகளை அரசு குற்றவியல் வழக்கு தொடர்வு இயக்ககத்திற்கு வழங்கியுள்ளது.

**(iii) சென்னை அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர்:**

சென்னையில் உள்ள அரசு தலைமைச் சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாகத் துணை தலைமைச் சொத்தாட்சியர் பொறுப்புச் சொத்தாட்சியர் உள்ளார். உரிய வயதடையாதவர்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துகளுக்கும் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துகளுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள், அரசுத் தலைமைச் சொத்தாட்சியர் சட்டம் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வகைப் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள். 2004-2005 ஆம் ஆண்டிற்கான தலைமைச் சொத்தாட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் அலுவலகத்தின் உத்தேச செலவு ரூ.41,73,000/- ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**(iv) நீதித் துறை பயிற்சிக் கழகம்**

மாவட்ட நீதிபதிகள் (District Judges), சார்நிலை நீதிபதிகள் (Sub-Judges), மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் (District Munsif) மற்றும் நீதித் துறை அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் பயற்சி அளிப்பதற்காக நீதித் துறை பயிற்சிக் கழகம் செயல்பட்டு வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவு ரூ.23,12,000/- ஆகும்.

### (v) தமிழில் வெளிவரும் சட்ட இதழ்

திர்ப்பு திரட்டு என்னும் பெயரில் தமிழில் வெளிவரும் இருமாத சட்ட இதழின் 2004–2005 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவு ரூ.19,20,000/– என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இதழின் படி ஒன்று ரூ.32/– என்னும் விலையில் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

### (vi) சார்நிலை நீதிமன்றங்களை பரவலாக்குதல்

ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையிலான அதிகார வரம்பு குவிக்கப்பட்டிருப்பதைத் தவிர்ப்பதற்காக, வெளியூர்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுதுள்ள இடங்களுக்குச் செல்வதில் வழக்காடும் பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் இதன் மூலம் தீர்க்கப்பட்டு அவர்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கின்றது.

வெளியூர்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தற்போது, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டமும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை மாகாண சிறுவழக்குகள் நீதிமன்றச் சட்டமும் வரையறுத்துள்ளன.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு, சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட தேனி, திருவள்ளூர், திருவாரூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வருவாய் மாவட்டங்களில் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்படும் வரையில் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் பரந்திருக்கும். குற்றவியல் நீதிமன்றங்களை பொறுத்தவரையில் அதன் அதிகார வரம்பு குற்றவியல் நடைமுறைச் சட்டவிதித் தொகுப்பின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு விரிந்திருக்கும்.





எங்கெங்கு புதிதாக நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்பதை அரசு உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து அங்கெல்லாம் புதிதாக நீதிமன்றங்களைத் தோற்றுவிக்கின்றது.

### 13) 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தினை செயல்முறைப்படுத்துதல்

வங்கி சாரா நிதி நிறுவனங்களில் வைப்பீட்டாளர்கள் தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை முதலீடு செய்து இழக்க நேரிடுவதை தடுத்து அவர்தம் நலனை பாதுகாக்க, நாட்டிலேயே நமது மாநிலத்தில்தான் முதன் முதலில் ஒரு சிறப்பு சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் குற்றவியல் திருத்த அவசர சட்டத்தினால் எழக்கூடிய வழக்குகளை காவல் துறையில் உள்ள பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு–2 விசாரித்து வருகிறது. தமிழ்நாடு வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க சென்னையில் ஒரு தனி நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. காவல் துறை தலைவரிடமிருந்து (பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு–II) பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் வைப்பீட்டாளர்களுக்குத் தங்கள் பணம் திரும்ப கிடைக்கும் வகையில் பணம் திரும்ப செலுத்த தவறிய நிதி நிறுவனங்களின் சொத்துகளை பறிமுதல் செய்ய இடைக்கால பற்றுகை உத்தரவுகளை அரசு பிறப்பித்து வருகிறது. கடந்த 31–3–2004 வரையில், 216 நிதி நிறுவனங்களின் சொத்துகளை கீழ்க்கண்ட இரு சட்டங்களின்கீழ் முடக்கி அரசு 281 இடைக்கால பற்றுகை உத்தரவுகளை கீழ்க்கண்டவாறு பிறப்பித்துள்ளது:–

[2004 ஜுலை 26

| | | திரும்ப செலுத்த தவறிய நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை | பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் | 160 | 211 |
| 2 | 1944 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்த அவசரச் சட்டத்தின்கீழ் | 56 | 70 |
| | மொத்தம் | 216 | 281 |

பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு 2 மேற்கொண்ட புலனாய்வின்படி 12,13,631 வைப்பீட்டாளர்கள் சுமார் ரூ.2183.40/- கோடி பணத்தை மேற்கண்ட வங்கிசாரா நிதி நிறுவனங்களில் வைப்பீடு செய்துள்ளதாக தெரிய வருகிறது. தற்போது 8.1 இலட்சம் வைப்பிட்டாளர்களுக்கு ரூ.467.26 கோடி பணம் திரும்ப தரப்பட்டுள்ளது. மேலும், சுமார் ரூ.1706.46 கோடி மதிப்புள்ள சொத்துகள் கையகப்படுத்துவதற்காக கண்டறியப்பட்டு உள்ளன. பொருளாதார குற்றங்கள் தடுப்பு பிரிவு 2-ல் தற்போது தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 945 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 29 வழக்குகளில் தனி நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டு அவ்வழக்குகள் தண்டனையில் முடிவுற்றுள்ளன. தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட இடைக்கால உத்தரவுகளில், தகுதி வாய்ந்த அதிகாரி மற்றும் கூடுதல் நில நிருவாக ஆணையரால் அச்சொத்துகளை முழுமையாக பற்றுகை செய்யக் கோரி 118 அசல் மனுக்கள் தனி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தினை செயல்படுத்தும்போது தற்போதைய சட்டத்தில் சில குறைபாடுகள்



2004 ஜுலை 26]

உள்ளன என்று புலனாய்வு அதிகாரி மற்றும் செயலாக்க துறையினர் ஆகிய இருவராலும் அனுபவத்தில் அறியப்பட்டுள்ளன. இக்குறைபாடுகளின் காரணமாக வைப்பீட்டாளர்களுக்கு வைப்பீட்டுத் தொகையினை திரும்பப் பெற்று அளிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, வைப்பீட்டாளர்களின் நலன் கருதி இச்சட்டத்தில் உள்ள குறைபாடுகளை களைய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்புத் (நிதி நிறுவனங்களில்) திருத்தச் சட்டம், 2003 (தமிழ்நாடு சட்டம் 30/2003)-ன் வழியாக உரிய திருத்தம் செய்துள்ளது.

## 14. கணினி மயமாக்கல்

### (i) உயர் நீதிமன்றத்தை கணினிமயமாக்கல்

நாற்பது தனிப்பலன் கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு, மாண்புமிகு நீதிபதிகளின் இல்ல அலுவலகங்களில் நிறுவி, அதற்கு இணையதள வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் 63 கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகளுடன் (Printers) புறச்சாதனங்களையும் (Peripherals) நிறுவி, அவற்றுள் தீர்ப்புகளை பதிவு செய்து தேவைப்படும்பொழுது அவற்றை வெளிக்கொணர்ந்து இறுதி ஆணைகள் (Final Orders) மற்றும் தீர்ப்புகள் வெளியிடுவதன் மூலம் வழக்கறிஞர்கள் மற்றும் வழக்காடும் பொதுமக்களுக்கு காலதாமதமின்றி அவை எளிதாக கிடைக்கின்றன.

செய்தியாக அறிவிப்பதற்காக மாண்புமிகு நீதிபதிகளினால் குறிப்பிடப்படும் தீர்ப்புகள் கணினிகளில் பதிவு செய்யப்பட்டு புதுடெல்லி தேசிய தகவலியல் மையத்தின் (National Informatics Centre) உதவியுடன் வழக்கறிஞர்கள் மற்றும் வழக்காடும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இணையதளத்தில் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் ரூபாய் 32,90,000/- செலவினத்தில் கணினி தகவல் மையம் (Facilitation) / விசாரணை மையம் (Enquiry Counter) அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வழக்காடும் பொதுமக்கள் வழக்குகள் பற்றிய தகவல்களை எளிதாகப் பெறுகின்றனர். மேலும், உயர் நீதிமன்றத்தில் நிறுவப்பட்டுள்ள அனைத்து கணினிகளுக்கும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### (ii) சென்னை மாநகர நீதிமன்றங்களை கணினிமயமாக்குதல்

மைய அரசு நிதி உதவி திட்டத்தின்கீழ் ரூபாய் 2,19,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே பத்தொன்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் நடுவண் அரசின் நிதி ஒப்பளிப்புடன் சென்னையிலுள்ள, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள், சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் ஆகிய அனைத்து நீதிமன்றங்களும் கணினிமயமாக்கப்பட்டு அவற்றுக்கு இணையதள வசதி செய்யப்பட்டுள்ளது.

### 15) முடிவுரை:

அனைவருக்கும் நீதி என்ற உயர்ந்த குறிக்கோளை அடைய அரசு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்.



## இணைப்பு - 1

### அ) சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| வரிசை எண் | நீதிமன்றங்கள் / நடுவர் மன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | விரைவு நீதிமன்றம் | மகளிர் நீதிமன்றம் | தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் சார்நிலை நீதிபதி பதவித் தரம் | சார்நிலை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் பதவித் தரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றம் | 12 | 5 | 1 | - | 18 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றம் | 1 | - | - | - | 8 | 8 |
| 3. | பெருநகர தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 2 | - | - | 1 | 6 | 17 |
| 4. | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 3 | - | - | - | - | - |
| 5. | தொழில் நடுவர் நீதிமன்றம் | 1 | - | - | - | - | - |
| 6. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | - | - | - | - | - |

## (ஆ) தமிழ்நாட்டில் மாவட்டங்களில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிபதிகள் | குடியுரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மத்திய புலனாய்வுத் துறை வழக்குகள் விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றம் | தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 1. | செங்கல்பட்டு | 1 | - | 5 | - | - | - | - | - | 1 | 7 | 11 | 4 | 14 |
| 2. | கோயம்புத்தூர் | 2 | 1**** | 5 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 9** | 7 | 4 | 14 |
| 3. | கடலூர் | 1 | - | 3 | 1 | - | - | - | - | 1 | 7 | 8 | 4 | 8 |
| 4. | தர்மபுரி | 2 | - | 1 | - | - | - | - | - | 2 | 4 | 3 | 6 | 5 |
| 5. | திண்டுக்கல் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 3 | 5 | 2 | 5 |
| 6. | ஈரோடு | 2 | - | 4 | - | - | - | - | - | 1 | 8 | 10 | 2 | 9 |
| 7. | கன்னியாகுமரி | 1 | - | - | - | - | - | - | - | 1 | 5 | 9 | 1 | 7 |
| 8. | கரூர் | 1 | - | - | - | - | - | - | - | 1 | 2 | 3 | - | 4 |
| 9. | மதுரை | 2 | 2*** | 4 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 9** | 7 | 3 | 12 |
| 10. | நாகப்பட்டினம் | 1 | - | - | - | - | - | - | - | 1 | 5 | 7 | 1 | 9 |
| 11. | நாமக்கல் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 1 | 4 | 1 | 4 |
| 12. | நீலகிரி | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | 1 | 3 | 1 |
| 13. | பெரம்பலூர் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 1 | 4 | - | 3 |
| 14. | புதுக்கோட்டை | 1 | - | 1 | - | 1 | - | - | - | 1 | 1 | 3 | 2 | 3 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15. | இராமநாதபுரம் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 2 | 2 | 4 | 3 |
| 16. | சேலம் | 2 | - | 2 | 1 | 1 | - | 1 | 1 | 1 | 6* | 6 | 1 | 12 |
| 17. | சிவகங்கை | 1 | - | - | - | - | - | - | - | 1 | 2 | 4 | 4 | 3 |
| 18. | தஞ்சாவூர் | 1 | 1 | 2 | - | 1 | - | - | - | 1 | 6 | 7 | 3 | 6 |
| 19. | தூத்துக்குடி | 1 | - | 2 | - | - | - | - | - | 1 | 2 | 6 | 2 | 6 |
| 20. | திருச்சிராப்பள்ளி | 1 | 1 | 2 | 1 | - | - | - | 1 | 1 | 5* | 7 | 1 | 9 |
| 21. | திருநெல்வேலி | 2 | 1 | 2 | 1 | - | - | - | 1 | 1 | 8* | 11 | 4 | 9 |
| 22. | திருவண்ணாமலை | 1 | - | - | - | - | - | - | - | 1 | 4 | 7 | 3 | 5 |
| 23. | வேலூர் | 1 | - | 3 | 1 | - | - | - | - | 1 | 4 | 8 | 4 | 14 |
| 24. | விழுப்புரம் | 1 | - | 3 | - | - | - | - | - | 1 | 6 | 15 | 2 | 9 |
| 25. | விருதுநகர் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 4 | 3 | 3 | 6 |
| | மொத்தம் | 31 | 6 | 44 | 7 | 5 | 2 | 3 | 5 | 25 | 112 | 158 | 64 | 180 |

** மாநகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீட்டு நடுவர்மன்றத் தலைவர் பதவி ஒன்று விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் நீதித் துறை உறுப்பினர் பதவி ஒன்று உட்பட

* மாநகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீட்டு நடுவர்மன்றத் தலைவர் பதவி ஒன்று உட்பட

*** இனக்கலவரங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்குரிய அமர்வு நீதிமன்றம் ஒன்று உட்பட

**** குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்குரிய அமர்வு நீதிமன்றம்

2004 ஜூலை 26]

## இணைப்பு – II

**சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2003 முதல் 31-12-2003 வரையில் தொடுக்கப்பட்ட/முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்கினை காட்டும் அட்டவணை**

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் | தொடுக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் | முடிக்கப்பட இருந்த வழக்குகள் | முடிக்கப்பட்ட வழக்குகள் | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| I | உரிமையியல் | 787132 | 692667 | 1479799 | 795033 | 684766 |
| II | குற்றவியல் | 314165 | 886843 | 1201008 | 822378 | 378630 |
| | மொத்தம் | **1101297** | **1579510** | **2680807** | **1617411** | **1063396** |

[2004 ஜூலை 26

**சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2003 முதல் 31-12-2003 வரையில் தொடுக்கப்பட்ட / முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள (உரிமையியல்) வழக்கினை காட்டும் அட்டவணை**

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் | தொடுக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் | முடிக்கப்பட இருந்த வழக்குகள் | முடிக்கப்பட்ட வழக்குகள் | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | உரிமையியல் நீதிமன்றம் சென்னை | 333576 | 124818 | 458394 | 160794 | 297600 |
| 2. | சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் | 71265 | 18780 | 90045 | 65650 | 24395 |
| 3. | சென்னை சிறுவழக்குகள் நீதிமன்றம் | 36800 | 46870 | 83670 | 44735 | 38935 |
| 4. | மாவட்ட நீதிமன்றங்கள் | 16592 | 103181 | 119773 | 100143 | 19630 |
| 5. | முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 10597 | 6673 | 17270 | 8032 | 9238 |
| 6. | சார்பு நீதிமன்றங்கள் | 164684 | 204031 | 368715 | 199018 | 169697 |
| 7. | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | 153618 | 188314 | 341932 | 216661 | 125271 |
|  | மொத்தம் | 787132 | 692667 | 1479799 | 795033 | 684766 |



2004 ஜூலை 26]

**சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2003 முதல் 31-12-2003 வரையில் தொடுக்கப்பட்ட / முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள (குற்றவியல்) வழக்கினை காட்டும் அட்டவணை**

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் | தொடுக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் | முடிக்கப்பட இருந்த வழக்குகள் | முடிக்கப்பட்ட வழக்குகள் | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | குற்றவியல் | | | | | |
| 1. | உயர் நீதிமன்றம் சென்னை | 34733 | 60540 | 95273 | 65123 | 30150 |
| 2. | அமர்வு நீதிமன்றங்கள் | 15772 | 23390 | 39162 | 24529 | 14633 |
| 3. | கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 190450 | 587727 | 778177 | 528093 | 250084 |
| 4. | சென்னைப் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 73210 | 215186 | 288396 | 204633 | 83763 |
| | மொத்தம் | 314165 | 886843 | 1201008 | 822378 | 378630 |



## இணைப்பு - II

*(49 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2004–2005

## தமிழ்நாடு மின்சார வாரியம்

**முன்னுரை:**

1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் 1–7–1957 அன்று நிறுவப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு சட்ட நிலையுடன் கூடிய அமைப்பாகும். மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றை சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்குத் தரமான மின்சாரத்தை வழங்குவது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 31–03–2004 அன்றுள்ளபடி 9299 மெகாவாட்டாகும். இதில் வாரிய மின் உற்பத்தி நிலையங்கள் 5381 மெகாவாட், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் 1066 மெகாவாட் மற்றும் மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பங்கு 2852 மெகாவாட் ஆகியவை அடங்கும். இவை தவிர தனியார் காற்றாலைகளிலிருந்து 1342 மெகாவாட்டும் வாரியத்தின் காற்றாலைகளிலிருந்து 19 மெகாவாட்டும் கிடைக்கப் பெறுகிறது.

தற்போதைய நிலையில் உச்ச மின் தேவை 7253 மெகாவாட் அளவை 16–03–2004 அன்று எட்டியுள்ளது. மின் பயனீட்டு அளவின் வளர்ச்சி ஆண்டொன்றிற்கு 5 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 2003–04 நிதியாண்டில் மின் பயனீட்டளவு 49712 மில்லியன் யூனிட்டுகள் ஆகியுள்ளது. ஒரு நாளின் உச்ச பயனீடு 151.609 மில்லியன் யூனிட்டுகளாக 23–04–2004 அன்று எட்டியுள்ளது.

31–03–2004 நிலவரப்படி, மொத்தம் 1044 துணை மின் நிலையங்களும், 1.44 இலட்சம் கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளும், 4.68 இலட்சம் கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும் உள்ளன. மேலும் 1.54 இலட்சம் மின் பகிர்மான மின் மாற்றிகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் 31–03–2004 முடிய மொத்தம் 163.38 இலட்சம் மின் இணைப்புகள் உள்ளன.

[2004 ஜூலை 26

## II. மின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

அதிகரிக்கும் மின் தேவையை நிறைவுசெய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் அதனுடைய மின் உற்பத்தித் திறனை 1945.5 மெகாவாட் அளவிற்கு உயர்த்தவும் அதற்குத் தக்கவாறு மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2002–2007) விரிவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

2003–2004 ஆம் ஆண்டில் மின் வாரியத்தால் ரூ.352 கோடி செலவில் எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட 101 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டம் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள குத்தாலத்தில் 24–03–2004 அன்று இயக்கி வைக்கப்பட்டது. மத்திய துறையில், தேசிய அனல் மின்கழகத்தின் தால்ச்சர் மிகு திறன் அனல் மின் நிலையம் – நிலை II–லிருந்து ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறனுடைய முதல் இரண்டு பிரிவுகள் இயக்கத்திற்கு வந்த பிறகு, தமிழ்நாடு மின்சார வாரியம் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 135 மெகாவாட் வீதம் மொத்தம் 270 மெகாவாட் மின்சாரம் பங்காக பெறப்படுகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் 616 மெகாவாட் கூடுதல் நிறுவுதிறன் ஏற்படும். (வாரியம் – 180 மெகாவாட், மத்திய துறை பங்கு – 270 மெகாவாட் மற்றும் தனியார் துறை – 166 மெகாவாட்). மின் வாரியத்தின் 150 மெகாவாட் திறன் கொண்ட பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் ரூபாய் 383 கோடி செலவில் இயக்கி வைக்கப்படும். மற்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட பவானி கட்டளை தடுப்பணை I புனல் மின் திட்டம் ரூபாய் 195 கோடி செலவில் 2004–2005–ல் இயக்கி வைக்கப்படும்.

மத்திய தொகுப்பின் வாயிலாக, தால்ச்சர் மிகு திறன் அனல மின் நிலையம் நிலை–2 விருந்து (மீதமுள்ள இரண்டு 500 மெகாவாட் பிரிவுகள்) 270 மெகாவாட் தமிழ்நாட்டிற்கு பங்காகக் கிடைக்கும்.

2004–2005 ஆம் ஆண்டில் தனியார் துறையில் எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட இரண்டு மின் உற்பத்தித் திட்டங்கள் நிறுவப்படவுள்ளன. இதன்படி 53 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலாந்தரவையில் ஆர்.கே. எனர்ஜி நிறுவனத்தினாலும் மற்றும் 113 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கருப்பூரில் அபான் பவர் கம்பெனியாலும் அமைக்கப்படும்.



2004 ஜூலை 26]

தமிழ்நாடு மின்சார வாரியத்திலுள்ள அனல் மின் நிலையங்கள் தொடர்ந்து நன்றாக செயல்பட்டு வருகின்றன. மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வடசென்னை ஆகிய அனல் மின் நிலையங்கள் 2001–2002, 2002–2003 மற்றும் 2003–2004 ஆகிய மூன்று தொடர் ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக இந்திய அரசின் தங்கப்பதக்கத்தைப் பெறத்தகுதி பெற்றுள்ளன.

நடப்பு நிதியாண்டில் (2003–2004) தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழைகள் பொய்த்துவிட்டதாலும், காவேரி நதியில் மேட்டூர் அணைக்கு மிகக் குறைவான அளவு நீர்வரத்து இருந்ததாலும், புனல் மின் உற்பத்தி அளவு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. 2003–2004–ல் தமிழ்நாடு மின் வாரிய புனல் மின் நிலையங்களிலிருந்து மின் உற்பத்தி 2067 மில்லியன் யூனிட்டுகளாகும். இது பத்தாண்டு சராசரியான 4187 மில்லியன் யூனிட் புனல் மின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2003–2004 ஆம் ஆண்டில் மட்டும் 2120 மில்லியன் யூனிட்டுகள் இழப்பாகும்.

புனல் மின் உற்பத்தி இழப்பு மிக அதிக அளவாக இருந்த போதிலும், தமிழக அனல் மின் நிலையங்களின் செயல்பாட்டை மேம்படுத்தியும், காயங்குளம் எரிவாயு மின் உற்பத்தி நிலையம் மற்றும் கிழக்குப் பிராந்திய மின் நிலையங்களிலிருந்து கூடுதலாக மின்சாரம் பெற்றும், தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறும் மின்சாரத்தை கட்டண விகிதாச்சார முறையில் பெற்றும், குறைந்த அளவே இருந்த புனல் மின் இருப்பை சிறந்த முறையில் திட்டமிட்டு பயன்படுத்தியும், மின்வெட்டு/மின்தடை இல்லாமல் மின்சாரம் மாநிலத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றது.

## III. 2004-2005-ல் மின் விநியோக நிலைமை

எதிர்வரும் 2004–05ஆம் ஆண்டில் மின் தேவை 7662 மெகாவாட்டாகவும், சராசரி மின் பயனீட்டளவு நாளொன்றுக்கு 135 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கையிருப்பிலுள்ள நிறுவுதிறன் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள மேற்சொன்ன கூடுதல் நிறுவுதிறன் ஆகியவற்றை கொண்டும் மின் தேவையை நிறைவேற்ற முடியும்.

பத்தாவது திட்டக் காலத்தின் (2002–07) திட்ட மதிப்பீடு ரூ. 8000 கோடியாகும். 2004–05 ஆம் ஆண்டிற்கான மூலதன திட்ட மதிப்பீடு ரூ.1793 கோடியாக திட்டமிடப்பட்டுள்ளது. வெவ்வேறு பிரிவுகளில்

[2004 ஜுலை 26

இப்பணிகளுக்கு ஒதுக்கப்படவுள்ள திட்ட மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | விவரம் | பத்தாவது திட்ட மதிப்பீடு (2002—07) | 2004—05 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி | 1212 | 223 |
| 2. | புதுப்பித்தலும், நவீனமயமாக்குதலும் | 364 | 94 |
| 3. | மின் அனுப்புகை மற்றும் மின்பகிர்மானம் | 5914 | 110.5 |
| 4. | ஊரக மின்மயமாக்குதல் | 490 | 93 |
| 5. | நில அளவை மற்றும் ஆய்வுகள் | 20 | 3 |
| 6. | கட்டுமான காலத்தின் வட்டி அளவு | | 27.5 |
| | மொத்தம் | 8000 | 1793 |

மின் தொடர் மற்றும் மின் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் வகையில் 2004–05 ஆம் ஆண்டில் பல்வேறு மின் அழுத்தங்களில் 60 புதிய துணை மின் நிலையங்களும் சுமார் 800 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் கம்பிகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பத்தாவது திட்டக் காலத்தில் (2002–07) மொத்தம் 315 புதிய துணை மின் நிலையங்களை அமைக்கவும், 4000 சுற்று கிலோமீட்டர் மிக உயரழுத்த மின்கம்பிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## IV. துணை மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள்

பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் மின் தொடர் மற்றும் மின் பகிர்மான இழப்பைக் குறைக்கத் துணை மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்களை ரூபாய் 416.5 கோடி மதிப்பீட்டில் தயாரித்துள்ளது. இவை விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற்றும், பிற நிதி நிறுவனங்களான ஊரக



2004 ஜுலை 26]

வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி (NABARD) மற்றும் ஊரக மின் மயமாக்கல் கழகம் (REC) ஆகிய நிறுவனங்களிலிருந்து நிதிஉதவி பெற்றும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2002–2003 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட மேம்பாட்டுத் திட்டங்களின் செலவின விபரங்கள் பின்வருமாறு:–

### 1. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் (APDRP)

சென்னை பெருநகரிலுள்ள நான்கு மின் பகிர்மான வட்டங்கள், ஐந்து மின் பகிர்மான வட்டங்கள் மேலும் 10 நகர்புற பகுதிகள் அடங்கிய 9 மின் பகிர்மான வட்டங்களிலுள்ள மொத்தம் 25 துணை மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள் ரூபாய் 977 கோடி செலவில் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் (APDRP) கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்சொன்ன மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 31–03–2004 முடிய ரூபாய் 355.97 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன மேம்பாட்டு திட்டங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. சென்னை பெருநகர பகுதி | 441.0 |
| <u>மின்பகிர்மான வட்டங்கள்</u> | |
| 2. கோயம்புத்தூர் (தெற்கு) | 113.6 |
| 3. புதுக்கோட்டை | 62.5 |
| 4. விழுப்புரம் | 81.9 |
| 5. உடுமலைப்பேட்டை | 68.3 |
| 6. செங்கல்பட்டு | 52.3 |
| <u>நகர்புற பகுதிகள்</u> | |
| 7. கோயம்புத்தூர் பெருநகரம் | 23.0 |
| 8. சேலம் நகரம் | 31.1 |

| | | |
|---|---|---|
| 9. | ஈரோடு நகரம் | 13.9 |
| 10. | திருநெல்வேலி நகரம் | 12.1 |
| 11. | திருச்சி பெருநகரம் | 19.2 |
| 12. | மதுரை பெருநகரம் | 17.2 |
| 13. | காஞ்சிபுரம் | 8.6 |
| 14. | திருவள்ளூர் மற்றும் திருத்தணி | 3.3 |
| 15. | நாமக்கல் | 2.8 |
| 16. | சங்கரி | 9.8 |
| 17. | திருச்செங்கோடு | 2.7 |
| 18. | இடப்பாடி | 0.8 |
| 19. | குமாரபாளையம் | 1.5 |
| 20. | கடலூர் | 2.8 |
| 21. | சிதம்பரம் | 1.5 |
| 22. | விருத்தாசலம் | 3.2 |
| 23. | பண்ருட்டி | 1.7 |
| 24. | நெல்லிக்குப்பம் | 0.8 |
| 25. | குறிஞ்சிப்பாடி | 1.4 |

**2. ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி திட்டங்கள் (NABARD)**

ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி, ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி – VII, VIII மற்றும் IX ஆகிய திட்டங்களின்கீழ் மேம்பாட்டுப் பணிகளுக்காக கடனுதவி அளிக்கிறது. இதுவரை 14 மாவட்டங்களுக்கு ரூபாய் 146.39 கோடி அளவில் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 31–03–04 முடிய ரூபாய் 100.24 கோடி செலவிடப்பட்டுள்ளது.



**3. ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) உதவும் திட்டங்கள்**

ஊரக மின்மயமாக்கல் (REC) நிறுவனம் 5 வருட செயல்பாட்டில் மின் தொடர் இழப்பைக் குறைப்பதற்காக நிதி உதவி வழங்கி வருகிறது. மின் தொடர் இழப்பைக் குறைக்கும் கீழ்க்காணும் மாவட்டங்களில் மின் தொடர் இழப்பைக் குறைக்கும் திட்டங்களுக்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கியுள்ளது.

| | | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. கோயமுத்தூர் (வடக்கு) | – | 87.86 |
| 2. திருச்சி (வடக்கு) | – | 131.46 |

மேற்கண்ட மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 31–3–2004 முடிய ரூபாய் 18.00 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மேலும் ஊரக மின்மயமாக்கல் கழகத்திலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாவட்டங்களில் மின் இழப்பை குறைக்கும் திட்டத்திற்காக நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

| | | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. திண்டுக்கல் | – | 109.34 |
| 2. மதுரை | – | 75.64 |

மேற்கண்ட திட்டங்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு 31–3–2004 வரை ரூபாய் 9.8 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**4. பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்கள் (PMGY)**

பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கவும், மின்சார கட்டமைப்பை மேம்படுத்தவும், வேலூர் (ரூ.20 கோடி), நீலகிரி (ரூ.8 கோடி) மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் பகுதிகள் (ரூ.14 கோடி) ஆகிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மேற்சொன்ன மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 31–03–04 முடிய ரூபாய் 28.43 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2004 ஜூலை 26

**திட்டங்கள் 31-03-04 வரையிலான செலவினம்**

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நாமக்கல் மாவட்டம் - முதல் நிலை | 62.506 |
| 2. | நாமக்கல் மாவட்டம் - இரண்டாம் நிலை | 1.123 |
| 3. | சேலம் மாவட்டம் | 7.010 |
| 4. | விழுப்புரம் மாவட்டம் | 12.012 |
| | மொத்தம் | **82.651** |

## V. சிறப்பு முயற்சிகள்

### 1. விவசாயிகள் மற்றும் குடிசைவாழ் மக்களுக்கு இலவச மின்சாரம்

மக்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்த அரசு, விவசாயிகள் மற்றும் குடிசை வாழ் மக்களுக்கு 01-04-2004 முதல் இலவச மின்சாரம் வழங்கி ஆணையிட்டுள்ளது. இதற்கென மானியமாக முறையே ஒரு வருடத்திற்கு ரூபாய் 190 கோடி மற்றும் ரூபாய் 10 கோடி வழங்க உள்ளது. இதன் மூலம் சுமார் 15.3 இலட்சம் விவசாயிகளும் சுமார் 9 இலட்சம் குடிசை வாழ் மக்களும் பயனடைகின்றனர். இந்த மானியம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரையாண்டிற்கு ஒருமுறை வழங்கப்படும்.

### 2. வீட்டு மின்பயனீட்டாளர்களுக்கு மானியம் உள்ளடக்கிய மின் கட்டணம்

தமிழ்நாட்டிலுள்ள மக்களின் நலனுக்காக வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு மின் கட்டணத்தை 16-06-2004 முதல் கீழ்க்காணுமாறு குறைக்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது.



2004 ஜூலை 26]

**அ) மின் நுகர்வு ஒரு மாதத்திற்கு 50 யூனிட்டுகள் வரை இருந்தால் மின் கட்டணம்:**

| மாதாந்திர மின் பயனீட்டளவு (யூனிட்டுகள்) | தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள தற்போதைய கட்டணம் (ஒரு யூனிட்டிற்கு ரூபாய்) | திருத்திய கட்டணம் (ஒரு யூனிட்டிற்கு ரூபாய்) | பயன் அடைவோர் |
|---|---|---|---|
| 0-25 | 1.10 | 0.65 | சுமார் 60 இலட்சம் |
| 26-50 | 1.30 | 0.75 | |

**ஆ) மின் நுகர்வு ஒரு மாதத்திற்கு 50 யூனிட்டுகளுக்கு மேல் இருந்தால் மின் கட்டணம்:**

| மாதாந்திர மின் பயனீட்டளவு (யூனிட்டுகள்) | தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள தற்போதைய கட்டணம் (ஒரு யூனிட்டிற்கு ரூபாய்) | திருத்திய கட்டணம் (ஒரு யூனிட்டிற்கு ரூபாய்) | பயன் அடைவோர் |
|---|---|---|---|
| 0-25 | 1.10 | 0.75 | சுமார் 57 இலட்சம் |
| 26-50 | 1.30 | 0.85 | |
| 51-100 | 2.60 | 1.50 | |
| 101-300 | 3.50 | 2.20 | |
| 300—க்கு மேல் | 4.75 | 3.05 | |

இவ்வாறு குறைக்கப்பட்ட மின்கட்டணத்திற்கு ஈடாக அரசு ஒரு வருடத்திற்கு ரூபாய் 910 கோடி மானியமாக வழங்கும். இந்த மானியம் தமிழக அரசு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாதத் தவணைகளில் வழங்கும்.

[2004 ஜூலை 26

### 3. மின் இணைப்புக்காக கட்டட அனுமதி மற்றும் கட்டட நிறைவுச் சான்றிதழ் ஆகியவை வலியுறுத்தப்பட்டதை திரும்பப் பெறுதல்

கட்டடங்களுக்கு மின் இணைப்பு வழங்கும்போது கட்டட அனுமதி மற்றும் கட்டட நிறைவுச் சான்றிதழ் ஆகியவை அளிக்குமாறு வலியுறுத்தப்பட்டிருந்த நிபந்தனைகளை நீக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு சுமார் 6 இலட்சம் வாய்ப்புள்ள பயனீட்டாளர்கள் விரைவில் மின் இணைப்புப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## மின்சார ஆய்வுத் துறை

### முன்னுரை மற்றும் நிர்வாகம்

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பொது அதிகாரப் பட்டியலில் மின்சாரம் உள்ளது. இந்திய மின்சார சட்டம், 1910, மின்சார (வழங்கல்) சட்டம், 1948 மற்றும் மின்சார ஒழுங்குபடுத்துதல் ஆணையச் சட்டம், 1998 ஆகியவை நீக்கப்பட்டு, புதிதாக இயற்றப்பட்ட மின்சாரச் சட்டம், 2003 (2003ன் 36வது சட்டம்) 10–06–2003 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

செப்டம்பர் 1961–லிருந்து அரசு தலைமை மின் ஆய்வாளரை துறைத் தலைவராகக் கொண்டு மின்சார ஆய்வுத் துறை உருவாக்கப்பட்டது. 1–8–1993 முதல் தலைமைச் செயலக எரிசக்தித் துறை தனித் துறையாக ஆக்கப்பட்டதிலிருந்து அத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது.

### செயல்பாடுகள்

மின்சார ஆய்வுத் துறையிடம் கீழ்க்காணும் கடமைகளும், செயல்பாடுகளும் ஒப்படை செய்யப்பட்டுள்ளன:-

1) மின்சார சட்டம், 2003 (2003ன் 36வது சட்டம்)இன் கீழ் ஒழுங்குமுறைகள் விதிக்கப்படும் வரையில், இந்திய மின்சார விதிகள் 1956–இன்கீழ் ஆய்வுகள் மற்றும் பணிகள் மேற்கொள்ளல்.

2) தமிழ்நாடு மின் தூக்கி சட்டம், 1997 (Tamil Nadu Lift Act, 1997) மற்றும் தமிழ்நாடு மின் தூக்கி விதிகள் 1997 (Tamil Nadu Lift Rules, 1997) இன்படி செயல்படல்.



2004 ஜூலை 26]

3) திரையரங்குகளில் நிறுவப்பட்ட மின் அமைப்புகள் குறித்து தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள் 1957–இன்கீழ் குறிப்பிட்டுள்ள கடமைகள்.

4) மின்சாரத் தொழில்நுட்பம் தொடர்புடைய இந்தியத் தர நிர்ணயங்களை உருவாக்கும் இந்தியத் தர நிர்ணய குழுமத்தில் உறுப்பினராகப் பணிபுரிதல்.

5) இந்திய மின்சார விதிகள் 1956–ன் விதி 45–இன்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார உரிமம் வழங்கும் வாரியத்திற்கு அரசு தலைமை மின் ஆய்வாளர் பதவி வழியில் தலைவராகப் பணிபுரிதல்.

6) தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள் 1957–இன்படி உருவாக்கப்பட்ட திரைப்பட கருவி இயக்குநர்களுக்கான தேர்வுக் குழுமத்திற்கு அரசு தலைமை மின் ஆய்வாளர் பதவி வழியில் தலைவராகப் பணிபுரிதல்.

### இந்திய மின்சார விதிகள், 1956–ன்கீழ் வரும் செயல்பாடுகள்:

1) மின் உற்பத்தி கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் உயர் மின்னழுத்த நுகர்வோர்கள் ஆகியோரால் நிறுவப்படும் உயர் மற்றும் மிக உயர் அழுத்த மின்னமைப்புகளுக்கு இந்திய மின்சார விதிகள் 1956–இன் 46வது விதியின்படி ஒப்புதல் அளித்தல் மற்றும் அவற்றிற்கான கால முறை ஆய்வு செய்தல்.

2) இந்திய மின்சார விதிகள் 1956–இன் விதி 44ஏ–இன்கீழ் மின் உற்பத்தி, மின் வழங்கல் மற்றும் மின் உபயோகம் ஆகியவற்றில் ஏற்படும் மின் விபத்துகள் குறித்து தகவல்கள் பெறப்பட்டதும் விபத்து நடந்த இடத்தில் புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல்.

### தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் மற்றும் விதிகள், 2003

இம்மாநிலத்தில் ஏற்கெனவே நடப்பிலிருந்த தமிழ்நாடு மின்சார நுகர்வு வரிச்சட்டம், 1962 மற்றும் தமிழ்நாடு மின் தீர்வைச் சட்டம், 1939 ஆகியவற்றிற்குப் பதிலாக, "புதிதாக தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் மற்றும் விதிகள் 2003," 16–06–2003 முதல் நடப்புக்கு வந்துள்ளது .

[2004 ஜ அலை 26

இச்சட்டத்தின்படி:-

அ) சுயமாக உற்பத்தி செய்து பயன்படுத்திக்கொள்ளப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு மின் வரி 10 காசுகள்.

ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான நிகர கட்டணத்தின் மீது 5 சதவீதம் வரி ஆகும்.

இ) இந்த மின் வரிவிதிப்பிலிருந்து கீழ்க்காணும் இனங்களுக்கு விலக்களிக்கப்பட்டது:-

1) அனைத்து அரசுத் துறை பயன்பாடுகள்

2) இரயில்வே துறை பயன்பாடுகள்

3) உள்ளாட்சி அமைப்புகளின் பயன்பாடுகள்

4) வீடுகள், குடிசைகள் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கென வழங்கப்படும் மின்சாரம்.

**தர நிர்ணய சோதனைக் கூடம் மற்றும் நடமாடும் ஆய்வுக் கூடங்கள்:-**

அரசு தர நிர்ணய மின் ஆய்வுக் கூடம், சென்னையிலுள்ள கிண்டியில் உள்ளது. நடமாடும் ஆய்வுக் கூடங்கள், சென்னை, சேலம், திருநெல்வேலி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன.



2004 ஜ அலை 26]

## தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

**முன்னுரை:**

தமிழ்நாட்டில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்தவும், அவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் 1985ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனமாக தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது. இதன் மூலம் மாநில மற்றும் மத்திய அரசுகளின் உதவியுடன் மாற்று எரிசக்தி ஆதாரங்களை பொதுமக்கள் பயன்படுத்துவதை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு முயற்சிகளின் விளைவாக தமிழ்நாட்டில் புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் பயன்பாடு பெருமளவில் அதிகரித்துள்ளது. புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள்மூலம் (நீர் மின் திட்டங்கள் நீங்கலாக) 31-3-2004 வரை மொத்தம் 1648 மெகாவாட் மின் உற்பத்தித்திறன் உருவாக்கப்பட்டுள்ளது; இது தமிழ்நாடு மின்சார வாரிய கட்டமைப்பின் மொத்த மின் உற்பத்தித் திறனில் 18 சதவீதமாகும். ஆனால் இந்திய அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் அளவு சுமார் 4.5 சதவீதம் மட்டுமே உள்ளது. இதனால் புதுப்பிக்கவல்ல எரிசக்தி உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன் மாநிலமாகத் திகழ்கிறது.

**புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள்**

**புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களில் முக்கியமானவை பின்வருமாறு:**

(1) காற்றுச் சக்தி (2) சூரிய சக்தி (3) தாவர மற்றும் பிற உயிர் சக்திகள் (4) கடல் அலை மின்சக்தி (5) எரி பொருள்கலன் (6) கடல் வெப்ப சக்தி (7) பூமியின் வெப்ப சக்தி.

இவற்றுள் முதல் மூன்று வகை ஆதாரங்களான காற்றுச் சக்தி, சூரிய சக்தி மற்றும் தாவர உயிர் சக்தி ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் பயன்பாடு மட்டுமே இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் பெருமளவில் வளர்ந்துள்ளது. பிற வகை ஆதாரங்களை வணிக ரீதியாகப் பயன்படுத்தும் நிலை இன்னும் உருவாகவில்லை.

[2004 ஜூலை 26

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின்கீழ் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச திட்டத்தின்கீழ், 15–வது அம்சத்தில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் விவரம் பின்வருமாறு:

15 (vii) ஆவது அம்சத்தின்கீழ் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள் மற்றும் பிற நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் சிலவகையான புதிய கட்டடங்களில் சூரிய சுடுநீர் சாதனங்களை நிறுவுவதைக் கட்டாயமாக்கி அரசு ஆணை எண் 112 நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் (எம்.ஏ.ஐ) துறை, நாள் 16–8–2002 மற்றும் சென்னை பெருநகரைப் பொறுத்தவரை அரசு ஆணை எண் 277, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (யுடி.ஐ) துறை, நாள் 14–11–2002இன்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**15 (ix) ஆவது அம்சத்தின்கீழ்**

(அ) மின்வசதி இல்லாத தொலைதூர குடியிருப்புகளில் சூரிய சக்தியின் மூலம் நிலையான எரிசக்தி ஆதாரங்கள் உருவாக்கித் தரப்படும்.

(ஆ) அரசின் கொள்கைப்படி, தாவர எரிசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் 31–3–2004 வரை மொத்தம் 249 மெகாவாட் திறனில் 37 திட்டங்களை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனுமதிக்கு பரிந்துரை செய்துள்ளது.

(இ) அரசு உள்ளாட்சிகளுக்கு ஊக்கம் அளித்து 2003–04 ஆம் ஆண்டில் 3387 சூரிய ஒளி தெரு விளக்குகளை நிறுவ ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் தொழிற்சாலைகளில், வெப்பசக்தி மற்றும் மின்சார பயன்பாட்டிற்கு தாவர எரிசக்தி கலன்களை நிறுவவும் அரசு உதவியளிக்கிறது. 31–3–2004 வரை மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 11 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு விளக்கப்படுகின்றன:



2004 ஜூலை 26]

**I. காற்றுச் சக்தி**

**(அ) காற்று ஆய்வு மையங்கள் மற்றும் செயல்விளக்கக் காற்றாலைப் பண்ணைகள்**

காற்றின் வேகம் மணிக்கு 18 கிலோ மீட்டருக்கு மேலுள்ள பகுதிகளைக் கண்டறிய காற்று ஆய்வு மையங்கள் அமைத்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் அடிப்படையில் இந்தியாவில் முதல்முறையாகத் தமிழ்நாட்டில்தான் 19 மெகாவாட் திறன் கொண்ட செயல்விளக்கக் காற்றாலைப் பண்ணைகள் நிறுவப்பட்டன. இதன் விளைவாக, 1990 ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்நாட்டில் தனியார் காற்றாலைப் பண்ணைகள் பெருமளவில் நிறுவப்பட்டு வருகின்றன.

**(ஆ) தனியார் முதலீடு**

மேலும், 67 இடங்களில் மேற்கொண்ட ஆய்வின்படி, காற்றாலைப் பண்ணைகள் அமைக்க உகந்தவையாக 40 பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றில் தனியார் முதலீட்டின் மூலம் 19 பகுதிகளில் 31–3–2004 வரை மொத்தம் 1361 மெகாவாட் மின் உற்பத்தித்திறன் அளவுக்கு காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது நாட்டின் மொத்த உற்பத்தித்திறனில் 50 சதவீதத்திற்கு மேலாகும். 2003–04 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 371 மெகாவாட் திறனையும் சேர்த்து கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் மொத்தம் 548 மெகாவாட் திறன் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளது.

**(இ) தமிழ்நாடு மின்வாரியம் மின்சாரம் பெறல்**

தனியார் முதலீட்டாளர்கள் தங்கள் காற்றாலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ரூ.2.70 விலைக்கு விற்கலாம் அல்லது அந்த மின்சாரத்தைத் தங்களுடைய தொழிற்சாலைகளுக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டுப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**(ஈ) மின்சாரத்தைத் தொலைவிலுள்ள இடங்களுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தல் மற்றும் சேமித்து வைத்து பயன்படுத்தல் (Wheeling and Banking Service):**

காற்றாலையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்து மாநிலத்தில் பிற இடங்களிலுள்ள தங்கள் தொழிற்சாலைகளின் உபயோகத்திற்குப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறது. இதற்கு தமிழ்நாடு மின்சார

வாரியம் 5 சதவீதம் கட்டணம் வசூலிக்கிறது. மேலும், சில மாதங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அந்த நிதி ஆண்டு முழுவதும் தேவைப்படும்போது பயன்படுத்திக்கொள்ளும் வசதியையும் தமிழ்நாடு மின்சார வாரியம் அனுமதிக்கிறது. இதற்காக மேலும் 5 சதவீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

### (உ) காற்றாலை நீர் இறைப்பான்

காற்றின் வேகம் மணிக்கு 18 கிலோமீட்டருக்குக் குறைவாக இருக்கும் இடங்களில் சிறிய காற்றாலைகளை அமைத்து திறந்த கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறு போன்றவற்றிலிருந்து நீரிறைக்கப் பயன்படுத்த முடியும். இதுவரை இத்தகைய சிறு காற்றாலைகள் மாநில மற்றும் மைய அரசு மானிய உதவியுடன் 875 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. புதிய காற்றாலைகள் அமைப்பவர்களுக்கு ஒரு குதிரை சக்தி பம்பு அமைப்பதற்காகும் செலவில் 50 சதவீதம் வரை மைய அரசிடமிருந்து தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் மானியம் பெற்றுத் தருகிறது.

### (ஊ) காற்றாலை மின்னாக்கி

சிறிய காற்றாலைகள் மூலம் குறைந்த அளவில் மின்சாரம் தயாரித்து மின்கலனில் சேமித்து வைத்து தேவைப்படும்போது விளக்கு எரிக்கவும் பிற மின் தேவைகளுக்கும் பயன்படுத்தலாம். பரிசோதனையாக காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மூன்று இடங்களில் மட்டும் மைய அரசு மானிய உதவியுடன் காற்றாலை மின்னாக்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதை அமைப்பதற்கான செலவில் 50 சதவிகிதம் முதல் 75 சதவிகிதம் வரை மானியமாக நிறுவனத்திற்கு மைய அரசிடமிருந்து பெற்று வழங்கப்படும்.

## II. சூரிய சக்தி

சூரிய சக்தியினை இரு வழிகளில் பயன்படுத்தலாம். முதலாவதாக மின்சாரம் தயாரித்து விளக்கு மற்றும் பிற மின் தேவைகளுக்குப் பயன்படுத்தல், இரண்டாவதாக வெப்ப சக்தியைச் சுடுநீர் தயாரிப்பதற்கும் வேளாண் பொருட்களை உலர்த்தவும் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகள், சமையல் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தலாம்.



### 1. சூரிய ஒளி மின்சக்தி

### *(அ) சூரிய ஒளி விளக்குகள்*

வீட்டு விளக்கு, அலுவலக மின்விளக்கு மற்றும் தெரு விளக்குத் தேவைகளுக்கு ஏற்றவாறு சூரியஒளி விளக்குகள் அமைக்க 50 சதவீத மானியம் வழங்கி மைய அரசு ஊக்குவித்து வருகிறது. 2003–04 ஆம் ஆண்டில், மத்திய அரசு 500 வீட்டு விளக்குகளுக்கும், பெரும்பாலும் ஊராட்சிகளில் 3387 தெரு விளக்குகளுக்கும் மானியம் வழங்கியுள்ளது. இத்திட்டம் மாவட்டங்களிலுள்ள மேலும் பல உள்ளாட்சிகளுக்கு 2004–05 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்படும்.

### (ஆ) தொலைதூர குடியிருப்புகளுக்கு மின்வசதி

மாநிலத்திலுள்ள எல்லா குடியிருப்புகளுக்கும் 2005 ஆம் ஆண்டிற்குள் மின்வசதி செய்துதரும் மாநில அரசின் கொள்கைப்படி, முதற்கட்டமாக மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத 152 தொலைதூரக் குடியிருப்புகளுக்கு மின்சார விளக்கு வசதி செய்து தரும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு, ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் திருத்தப்பட்ட மொத்தச் செலவு ரூ.8.15 கோடி ஆகும். இத்திட்டத்திற்கு 90 சதவீதம் மானியம் அளிக்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மீதி 10 சதவீதச் செலவினை தமிழ்நாடு அரசு ஏற்கும். மின்வசதியில்லாத பிற குடியிருப்புகளுக்கும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் மூலம் இத்திட்டத்தை 2004–05இல் செயல்படுத்துவதற்காக மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்திற்கு மானிய உதவிகோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

### (இ) சூரியஒளி மின் பம்புகள்

சூரிய சக்தி மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தைக் கொண்டு 2 குதிரை சக்தி வரை திறனுள்ள மின் மோட்டார் பம்புகளை இயக்கி, சிறு விவசாயம் மற்றும் குடிநீர் வசதி செய்துதர பயன்படுத்தலாம். இதற்கு 40 சதவீதம் வரை மைய அரசு மானியம் அளித்து வந்தது. 1–1–2004 முதல் இந்த மானியம் சுமார் 30 சதவீத அளவுக்கும் அதிகபட்சமாக ரூ.2 லட்சம் வரையிலும் மாற்றப்பட்டுள்ளது. இந்திய புதுப்பிக்கவல்ல

எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம், மானியம் போக மீதித் தொகையில் 90 சதவீதம் வரை, வருடத்திற்கு 5 சதவீத வட்டியுடன் கடன் வசதி, அந்நிறுவனத்தின் ஒப்புதல் பெறப்பட்ட நிதி இடையீட்டாளர்கள் மூலம் பெறலாம்.

2003–04 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டங்களின்கீழ் மாநில அரசு ஒதுக்கியுள்ள ரூ.1.95 இலட்சம் மூலம் சூரிய ஒளி மின் பம்புகள் நிறுவ கூடுதல் மானியம் வழங்கப்படும். மேலும், காவிரி ஆற்றுப் படுகையிலுள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பயன்படுத்தும் வகையில் சூரியஒளி மின் பம்புகள் நிறுவுவதற்கான ஒரு முன்னோடித் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 2. சூரிய வெப்ப சக்தி

### (அ) சூரிய சுடுநீர் கலன்கள்

சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்தி வீடுகள், விடுதிகள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியவற்றில் குளிக்கவும், கருவிகளைச் சுத்தப்படுத்தவும் சுடுநீர் தயாரிக்கும் திட்டம் மைய, மாநில அரசுகளின் மானியத்துடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1993 ஆம் ஆண்டில் மைய அரசு மானியம் நிறுத்தப்பட்ட பிறகு, இத்திட்டத்திற்கு மாநில அரசு நிதி உதவி அளித்து வருகிறது. 2003–04 ஆம் ஆண்டில் ஏற்கெனவே கூறியுள்ளவாறு நகர் பகுதிகளில் கட்டப்படும் புதிய கட்டடங்களில் சுடுநீர் வசதிகளை நிறுவுவதைக் கட்டாயமாக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

### (ஆ) சூரிய சுடுகாற்று அமைப்புகள்

சூரிய வெப்ப சக்தியினைப் பயன்படுத்தி தானியங்கள், பழங்கள், தேயிலை, தோல் ஆகியவற்றை உலர்த்துவதற்கு தேவையான புதிய தொழில்நுட்பம் முதல் முறையாக தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதுடன் குறிப்பிட்ட வகையான உலர்த்துதல் மற்றும் சூடுபடுத்துதலுக்கு இது மிகவும் இலாபகரமாக உள்ளது. இதன் பயன்பாட்டினை ஊக்கப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு 2003–2004 ஆம் ஆண்டில் பலவிதமான பொருட்களை உலர்த்துவதற்கான வசதியை மொத்தம் 440 சதுர மீட்டர் பரப்பளவில் அமைப்பதற்கு மானியம் வழங்கிட ரூ.4.61 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. இதற்கான முன்மொழிவுகள் தேர்வு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



### (இ) சூரிய வெப்ப சமைப்பான்

பெட்டி வடிவிலான சமைப்பான்கள் மூலம் 4 அல்லது 5 நபர்களுக்கு சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்தி சமைக்கலாம். இந்த சாதனத்தால் மரபுசார்ந்த எரிசக்தி ஆதாரங்கள் கணிசமாக மிச்சமாகும். இதற்கு 1995–96 முதல் மைய அரசு மானியம் நிறுத்தப்பட்டுவிட்டது. தற்பொழுது வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வசதி செய்து ஊக்கப்படுத்தப்படுகிறது. மேலும் தட்டை வடிவிலான சமைப்பான்கள் 10 அல்லது 15 நபர்களுக்கும், சூரிய வெப்ப சக்தியைக் கொண்டு நீராவி மூலம் மிக அதிக அளவு சமைப்பதற்கான திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கு 50 சதவீதம் வரை மத்திய அரசு மானியம் வழங்குகிறது. 2003–04 ஆம் ஆண்டில் சூரிய வெப்ப சக்தியினைப் பயன்படுத்தி நீராவி தயாரித்து சமைப்பதற்கான அமைப்பினைத் துறையூர் அகத்தியர் சன்மார்க்க டிரஸ்ட் நிறுவனத்தில் அமைக்க மைய அரசு ரூ15.47 இலட்சம் மானியம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

## III. தாவர மற்றும் பிற உயிர்ச் சக்திகள்

தாவர மற்றும் பிற உயிர்ச்சக்திக் கழிவுகளிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரித்து எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

### 1. இணை மின் திட்டம்

சர்க்கரை ஆலைகளில் குறைந்த அழுத்த நீராவி அமைப்பின் மூலம் கரும்புச் சக்கையிலிருந்து நீராவி உற்பத்தி செய்து அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு, உபரி மின்சாரத்தை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்பதுடன் அழுத்தம் குறைந்த நீராவியை சர்க்கரை உற்பத்திக்கு பயன்படுத்தும் திட்டம் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31–3–2004 வரை மொத்தம் 274.6 மெகாவாட் உற்பத்தித்திறன் நிறுவி தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்னணியில் உள்ளது. இது நாட்டின் மொத்த உற்பத்தித்திறனில் 40 சதவீதம் ஆகும். கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் கூடுதலாக 132 மெகாவாட் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

2. தாவரப் பொருள் மூலம் மின் உற்பத்தி

விறகு மற்றும் பிற விவசாயக் கழிவுகள் மற்றும் மிஞ்சியிருக்கும் தாவரப் பொருள்கள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊக்கமளிக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பழயசீவரம் என்ற இடத்தில் 12 மெகாவாட் திறன் கொண்ட திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும் 64.5 மெகாவாட் மொத்த உற்பத்தித்திறன் கொண்ட ஆறு தாவர சக்தி மின் திட்டங்களுக்குத் தமிழ்நாடு மின் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் தாம் மேற்கொண்ட தாவர சக்திக் கழிவுகள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வின் அடிப்படையில் புதிய தாவர சக்தி மின் திட்டங்களுக்கு ஊக்கமளிக்க அரசு முடிவு செய்தது. அதனையொட்டி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) உதவியுடன் இதற்காக விண்ணப்பங்கள் கோரியது. பெறப்பட்ட மொத்தம் 109 விண்ணப்பங்களைப் பரிசீலித்து, அவற்றில் 31 மனுக்கள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மொத்தம் 200 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேலும், 6 விண்ணப்பங்கள் மொத்தம் 49 மெகாவாட் திறனுக்கு ஒப்புதல் அளிக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநிலத்தில் மாவட்டங்கள் வாரியாக தாவரப் பொருள் கழிவுகளின் மதிப்பீட்டு ஆய்வு மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. அதன் வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன்படி கணிக்கப்படும் உபரி தாவரக் கழிவுப் பொருட்களின் அளவின் அடிப்படையில் மின்சார உற்பத்திக்கான புதிய திட்டங்களுக்கு ஊக்கமளிக்கப்படும்.

3. தாவர எரிசக்தி வாயுகலன்

தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் வெப்ப சக்தி மற்றும் மின் சக்தியைத் தயாரிக்க உதவும் வாயுகலன்களை அமைக்கும் புதிய திட்டம் ஒன்றை மத்திய அரசின், மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்கள் உதவி பெற தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் ஊக்கம் அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வெப்ப சக்தி



பயன்களுக்கான கலன்களுக்கு 10 சதவீத மானியமும், முழுவதும் வாயு என்ஜின் (100 சதவீதம்) மூலம் மின்சக்தி தயாரிக்கும் திட்டத்திற்கு ஆகும் செலவில் 50 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. 2003–04 ஆம் ஆண்டில் மத்திய அரசு, 3 வெப்ப சக்தி பயன்பாட்டு அமைப்புகளுக்கும், 8 மின்சாரம் தயாரிக்கும் கலன்களுக்கும் மொத்தம் 3290 கி.வாட் திறனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. தாவர எரிசக்தி வாயுகலன்கள் மூலம், மின்சாரம் தயாரித்து நீர் இறைக்கும் பம்புகளை இயக்கவும் ஊராட்சிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

4. மனித கழிவு வாயுகலன்கள்

தமிழ்நாட்டில் சாண எரிவாயு கலன்கள் பெருமளவில் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில், கொளத்தூர் (சேலம்), பெருந்துறை (ஈரோடு), பெரியகுளம் (தேனி) ஆகிய இடங்களில் பரிசோதனையாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் நடப்பு (2003–04) ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மனித கழிவு வாயுகலன் அமைக்க தனியார் நிறுவனங்களுக்கு 33 சதவீதம் மானியம் வழங்க அரசு ஒப்புதல் அளித்து ரூ.43.5 இலட்சம் ஒதுக்கியது. இதற்கான முன்மொழிவுகள் பெறப்பட்டு கலன்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் நடப்பு ஆண்டிலும் (2004–05) 10 கன மீட்டர் திறன் கொண்ட கலன்களுக்கும் மானியம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

IV. ஊராட்சிகளில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி திட்டங்கள்

1. சூரியஒளி தெரு விளக்குகள்

கடந்த இரண்டு ஆண்டுகளில், பல ஊராட்சிகளில், குறிப்பாக புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மத்திய மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் மானிய உதவியுடன் (50 சதவீதம் வரை) சூரிய ஒளி தெரு விளக்குகள் நிறுவப்பட்டதன் மூலம் மின் செலவு குறைந்து ஊராட்சிகள் பயனடைந்துள்ளன. எனவே பல்வேறு மாவட்டங்களிலுள்ள மேலும் பல ஊராட்சிகளில் இத்திட்டத்தினை ஊரக வளர்ச்சித் துறையின் உதவி மற்றும் ஆதரவுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2003–04 ஆம் ஆண்டில் மத்திய அரசு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் அளித்த கருத்துருவின் அடிப்படையில் 3387 தெரு விளக்குகளுக்கு மானியமாக ரூ.3.08 கோடி

வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 28 மாவட்டங்களிலுள்ள 508 ஊராட்சிகள் மற்றும் 6 மாநகராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் அடுத்த (2004–05) ஆண்டிலும் ஊரக வளர்ச்சித் துறையின் உதவியுடன் மேலும் பல ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

### 2. சூரியஒளி பம்புகள் மூலம் குடிநீர் விநியோகம்

கிராமப்புறங்களில் ஆழம் குறைந்த அல்லது ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து நீர் எடுத்து குடிநீர் விநியோகம் செய்ய சூரியஒளி பம்புகளைப் பயன்படுத்தலாம். இதன்மூலம் ஊராட்சிகள் மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை மிச்சப்படுத்தலாம். மின் கட்டமைப்பு மூலம் மின்சார வசதி அளிக்க முடியாத தொலைதூர இடங்களிலும் இவற்றைப் பயன்படுத்தலாம். மைய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் மானியத்துடன், சில குறிப்பிட்ட ஊராட்சிகளில் சூரியஒளி பம்புகள் மூலம் குடிநீர் வசதி செய்து தர ஒரு முன்னோடித் திட்டமாக 2003–04–ல் ஊரக வளர்ச்சித் துறையின் உதவி மற்றும் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகிறது. அதன் செயல்பாட்டை கருத்தில்கொண்டு, இத்திட்டம் 2004–05 ஆம் ஆண்டில் பிற பகுதிகளுக்கு விரிவாக்கப்படும்.

### 3. தாவர எரிசக்தி வாயுகலன்கள்

மரம், மரக்கழிவு, விவசாயக் கழிவுகள் ஆகிய தாவர திடப்பொருட்கள் கிடைக்கும் இடங்களில் தாவர எரிசக்தி வாயு கலன்கள் அமைத்து மின்சாரம் தயாரித்து பகலில் நீர் இறைக்கும் பம்புகள் இயக்கவும், இரவில் தெரு விளக்குகள் எரிக்கவும் பயன்படுத்தலாம். தாவர எரிசக்தி வாயுகலன் மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு ஒரு யூனிட்டிற்கு ரூ.2.50 செலவு ஆவதால், எரிசக்திச் செலவை கணிசமாக குறைக்கலாம். 2003–04 ஆம் ஆண்டில் மத்திய அரசு, உள்ளாட்சிகளில் மூன்று தாவர எரிசக்தி வாயுகலன்கள் அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, 2004–05 ஆம் ஆண்டில் 9 கி.வாட் திறனுள்ள அத்தகைய எரிசக்தி வாயுகலன்கள், மைய அரசு, மானியத்துடன், நிறுவ உத்தேசித்துள்ளது. இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.



மேலும், சாதாரண முறையில் மனித உடல்களை தகனம் செய்ய அதிக அளவு விறகுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்காக ஒரு உடல் தகனம் செய்ய 300 லிருந்து 400 கிலோ விறகு தேவைப்படுகிறது. தாவர எரிசக்தி வாயுகலன்கள் பயன்படுத்துவதன் மூலம் இதை 150 லிருந்து 200 கிலோ அளவிற்கு குறைக்க முடியும். இத்தகைய எரியூட்டும் கலன்கள் அமைப்பதன் மூலம், மக்களின் சமய நம்பிக்கைகளும் சம்பிரதாயங்களும் மதிக்கப்படுவதுடன் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு இல்லாமலும் செயல்படுத்தி நடைமுறைச் செலவையும் குறைக்க முடியும்.

### 4. மனிதக் கழிவு எரிவாயு கலன்கள்

சாண எரிவாயு, ஒரு சுத்தமான, குறைந்த செலவில், எளிதாக தயாரிக்கக்கூடிய எரிசக்தியாகும். இதில் 55 முதல் 60 சதவீதம் எளிதில் எரியும் மீதேன் வாயு உள்ளது. மாட்டுச் சாணம், மனிதக் கழிவு மற்றும் காய்கறிக் கழிவுகள் ஆகியவற்றைக்கொண்டு நொதித்தல், (காற்று இல்லாத) முறையில் சாண எரிவாயு உற்பத்தி செய்யலாம். சமைப்பதற்கு மட்டுமின்றி, சாண எரிவாயுவை மின்சாரம் தயாரித்து விளக்கு எரித்தல் மற்றும் சிறிய மோட்டார் மூலம் நீர் இறைப்பதற்கும் பயன்படுத்தலாம். சாண எரிவாயு கலனிலிருந்து வெளிவரும் மீதமாகும் கழிவுகள் சிறந்த உரமாகவும் பயன்படுத்தி பயிர்கள், காய்கறிகள், பழங்கள், ஆகியவற்றின் விளைச்சலை அதிகரிக்கவும் முடியும். 2003–04 ஆம் ஆண்டில் ஊராட்சிகளில் இத்தகைய 14 மனித கழிவு சாண எரிவாயு கலன்களை அமைப்பதற்கு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் உதவி அளித்துள்ளது. 2004–05–ல் மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் குறிப்பிட்ட ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த சுகாதார மையங்களில் கூடுதல் மனிதக் கழிவு சாண எரிவாயுகலன்களை ஊரக வளர்ச்சித் துறையின் ஆதரவுடன் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

## V. பிற திட்டங்கள்

### 1. கழிவுப் பொருள்களிலிருந்து மின்சாரம் தயாரித்தல்

மரவள்ளிக்கிழங்கு, சவ்வரிசிக் கழிவுநீர், கோழி எச்சம், காய்கறிக் கழிவுகள் ஆகியவற்றைக்கொண்டு எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவை பின்வருமாறு: (i) மரவள்ளிக் கிழங்கின் கழிவுநீரிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் (தர்மபுரி

மாவட்டம்) முடிவடைந்து சோதனை ஓட்டத்தில் உள்ளது. (ii) நாமக்கல் மாவட்டத்தில் கோழி எச்சத்தில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டப் பணி நடைபெற்று வருகிறது. (iii) சென்னையில் கோயம்பேடு காய்கறி மொத்த விற்பனை வளாகத்தில் கிடைக்கும் காய்கறிக் கழிவுகளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க மைய அரசு நிதி உதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 2003–04ல் சென்னை மாநகர மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், 2004–05–ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2. மின்கலத்தால் இயங்கும் வாகனங்கள்

பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களைக் கொண்டு இயங்கும் வாகனங்கள் வெளியேற்றும் நச்சுப்புகை சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதைத் தவிர்க்கும் வகையில் மின்கலத்தால் இயங்கும் வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய வாகனங்களைப் பயன்படுத்தும் தகுதியான நிறுவனங்களுக்கும், அமைப்புகளுக்கும் மைய அரசு, வாகன விலையில் 33 சதவீதம் வரை மானிய உதவி வழங்குகிறது. இந்த வாகனங்களை வனவிலங்கு சரணாலயங்கள், சுற்றுலா முக்கியத்துவம் மிக்க பகுதிகள், மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் பயன்படுத்தி சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்துக்கொள்ளலாம். தமிழ்நாட்டில் இதுவரை 27 வேன்கள் 2 மூன்று சக்கர வண்டிகளுக்கு மைய அரசு மானியம் வழங்கியுள்ளது.

## 3. காற்று அளவு மதிப்பீடு மற்றும் நுண் ஆய்வுத் திட்டம்

தமிழ்நாட்டில் 2 காற்று ஆய்வு செய்த இடங்களில், நுண் ஆய்வு செய்து காற்றாலைப் பண்ணைகள் நிறுவ உகந்த இடத்தைத் தேர்வு செய்வதற்குத் தேவையான விவரங்களைத் தொகுத்து முதலீட்டாளர்களுக்கு வழங்க, தமிழக அரசு ரூ.5 இலட்சம் ஒதுக்கி உள்ளது. மேலும், 2 புதிய காற்று ஆய்வு நிலையங்கள் மாநிலத்தில் மாநில மற்றும் மைய அரசு நிதி உதவியுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 4. விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு

புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் பயன்பாட்டினை விரிவுபடுத்தவும் எரிசக்திச் சிக்கனத்தைத் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களில் செயல்படுத்தவும் இந்நிறுவனம் கருத்தரங்குகள், கண்காட்சிகளை



நடத்துவதுடன் பிற அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறது. மேலும், பல்வேறு மாவட்டங்களிலும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி தொடர்பான கருத்தரங்குகள் நடத்த தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 2003–04 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் இத்தகைய கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. 2004–05 ஆம் ஆண்டில் பிற மாவட்டங்களிலும் இக்கருத்தரங்குகள் நடத்தப்படும். மேலும் சில குறிப்பிட்ட தொழிற்சாலைகள் போன்ற பயனாளிகளுக்குப் பயன்படும் வகையில் புதுப்பிக்கவல்ல எரிசக்திகளைப் பற்றிய கருத்தரங்குகள் 2004–05–ல் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தால், நடத்தப்படவுள்ளது.

## 5. மாற்றியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இந்திய அரசு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை அனைத்து ஊரக மாவட்டங்களுக்கும், நகராட்சிகளின் கீழ்வரும் இடங்களைத் தவிர்த்து, மாற்றியமைத்துள்ளது. இதன்படி மாநில அளிவிலான பிரிவு (cell) தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்திலும், ஒரு மாவட்ட அளவிலான அமைப்பு அந்த மாவட்டத்தின் ஊரக வளர்ச்சி நிறுவனத்திலும் அமைக்கப்படும். இத்திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புக் கிராமங்களில் உள்ள 100 சதவீதம் மக்களும் பயன்படும்படி அங்குள்ள மரபுசார்ந்த எரிசக்திகளைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், சில மரபுசாராத எரிசக்திகளின் பயன்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

மேலும், ஆங்காங்கு இருக்கும் ஊராட்சி அமைப்புகள், கிராம எரிசக்தித் திட்டங்களைத் தயாரிப்பதிலும், செயல்படுத்துவதிலும், எரிசக்தி அமைப்புகளைப் பேணுவதிலும் ஈடுபடுத்தப்படும். ஊராட்சியால் நியமிக்கப்படும் நபர்களுக்கு பயிற்சியளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும். மாநில பிரிவிற்கு ரூ.5 இலட்சமும், மாவட்ட பிரிவு ஒவ்வொன்றிற்கும் ரூ.10 இலட்சமும், மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்தால், இத்திட்டத்தைச் செயல்படுத்த அதே அளவு நிதி ஒதுக்கீடு மத்திய அரசும் செய்யும். இத்திட்டத்திற்கு மாநில அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2004–05 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

[2004 ஜூலை 26

## 6. புதுப்பிக்கவல்ல எரிசக்தியைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

*மின்சார சட்டம் 2003* இயற்றப்பட்டுள்ள நிலையில் புதுப்பிக்கவல்ல எரிசக்திக்கான கொள்கைகளை அவை சம்பந்தப்பட்ட பலரிடம் கலந்தாலோசித்து, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் தயாரித்து வருகிறது. அதன்பேரில் தமிழ்நாட்டிற்கான புதிய புதுப்பிக்கவல்ல எரிசக்தித் தொடர்பான கொள்கைகளை முடிவு செய்து அவற்றை அரசு விரைவில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் திட்டங்களில் முதலீடு அதிகரிக்கவும் பல துறைகளில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வாய்ப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2004–05 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

### 1. பகுதி 2 – திட்டங்கள்

2004–05 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் பத்து புதிய திட்டங்கள், மொத்தம் ரூ.102 இலட்சம் செலவில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன.

| வ. எண் | திட்டப் பணியின் விவரம் | 2004—05 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| (i) | நீர் இறைக்கும் பம்புகள் மற்றும் தெரு விளக்குகளை இயக்கும் கரிம எரிவாயு கலன்கள் 20 கிலோ வாட் (மின்) 14 எண்கள். | 12.00 |
| (ii) | 500 மாணவர்கள் உள்ள பள்ளி மதிய உணவு மையங்களுக்கு (20 கிலோ வாட்) திறன் கொண்ட கரிம எரிவாயு மின் தயாரிப்பு கலன்கள். | 7.50 |
| (iii) | சென்னையில் மாநில அளவிலான எரிசக்தி பூங்கா | 25.00 |
| (iv) | அரசு / அரசு சார்பு நிறுவனங்கள் / பிற நிறுவனங்களில் சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகளை நிறுவுதல். | 15.00 |



2004 ஜூலை 26]

| | | |
|---|---|---|
| (v) | அரசு மேல் நிலைப் பள்ளிகளில் சூரிய வெப்ப சக்தி பயன்பாட்டு உபகரணங்கள் வழங்குதல். | 7.00 |
| (vi) | காற்றடிக்கும் திசையைக் கண்காணிக்கும் புதிய நிலையம் மற்றும் காற்றாலைகளை அமைப்பதற்கேற்ற பகுதிகளை நுண்ணாய்வு செய்தல். | 9.50 |
| (vii) | மனிதக் கழிவு அடிப்படையிலான உயிரி எரிவாயு தளவாடம் . | 20.00 |
| (viii) | அண்ணாப் பல்கலைக் கழகம் மூலம் நீடித்த எரிசக்தி பாதுகாப்பு முறைக்காக விரிவான திட்ட அறிக்கைத் தயாரித்தல். | 4.00 |
| (ix) | தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் அலுவலகத்தில் தேவையான வசதிகளுடன் மாநாட்டுக் கூடம் அமைத்தல். | 2.00 |
| | மொத்தம் | ரூ.102.00 |

### 2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 2004–05 ஆம் ஆண்டிற்கான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ54 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட திட்டப்பணிகளைச் சமர்ப்பித்துள்ளது.

| வ எண் | திட்டங்கள் | ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| (i) | அரசு மற்றும் சார்பு நிறுவனங்களில் சூரிய சுடுநீர் அமைப்புகள் 6 X 1000 லிட்டர் அல்லது 12 X 500 லிட்டர் | 10.00 |
| (ii) | உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சூரிய ஒளி தெரு விளக்குகள்-75 | 15.00 |
| (iii) | சுகாதார அமைப்புகளில் சூரிய ஒளி நீர் இறைக்கும் 1 எச்பி சமதள பம்புகள் 4 | 10.00 |

| | | |
|---|---|---|
| (iv) | ஊட்டியிலுள்ள அரசு பாலிடெக்னிக்கில் எரிசக்திப் பூங்கா அமைக்கும் செலவில் 50 சதவீதம். | 5.00 |
| (v) | அரசு மற்றும் சார்பு நிறுவனங்களில் மனிதக் கழிவு எரிவாயு 10 க.மீ. அளவு – 2 கலன்கள் (பகலில் நீர் இறைக்கவும், இரவில் தெரு விளக்கு எரிக்கவும்) | 4.00 |
| (vi) | சூரிய சுடுகாற்று அமைப்புகள் நிறுவி டீ இலைகள் உலர்த்துவதற்கு கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு 50 சதவீத மானியமும், இதர தொழிற்சாலைகளுக்கு 33. 1/3 சதவீத மானியம் வழங்க | 10.00 |
| | மொத்தம் | ரூ.54.00 |

### 3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் 2004–05 ஆம் ஆண்டிற்கான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தாவர எரிசக்தி வாயுகலன் மூலம் மின்சாரம் தயாரித்து ஊராட்சிகளில் நீர் இறைக்க மற்றும் தெரு விளக்கு எரிக்க (ரூபாய் 16.00 இலட்சம்), சூரியஒளி பம்புகள் அமைக்க (ரூபாய் 10.00 இலட்சம்) மற்றும் சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்க (ரூபாய் 16.00 இலட்சம்) ஆக மொத்தம் ரூ.42.00 இலட்சம் செலவில் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.



## தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

**முன்னுரை:**

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் 9–1–1991 தேதியிடப்பட்ட அரசு ஆணை எண் 47 (பொ.பது)–இன்படி நிறுவப்பட்டது. இந்நிறுவனம் 27–6–1991–லிருந்து செயல்படத் துவங்கியது. இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியில் வங்கி சாரா நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தித் துறைக்கு குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் வினியோகத் திட்டங்களுக்குத் தேவையான தொகையைத் திரட்டுவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 கோடிகளாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.22 கோடி.

**வைப்பீட்டுத் தொகைகள்**

இந்நிறுவனம் வைப்பீட்டாளர்களுக்குப் பரிவோடு சிறந்த சேவை புரிந்தும், தொடர்ந்து இலாபம் ஈட்டியும் கடந்த பத்தாண்டுகளில் வைப்பீட்டுத் தளத்தை விரிவாக்கியதுடன் வைப்பீட்டாளர்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. இதன் பயனாக 1991–1992 ஆம் ஆண்டில் ரூ.2.09 கோடியாக இருந்த வைப்பீட்டுத் தொகை 31–03–2004 அன்று ரூ.1475 கோடியாக கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. இதுபோன்று 1991–92–இல் 816 ஆக இருந்த வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 31–03–2004 அன்று 98,250 ஆகப் பெருகியுள்ளது. இந்நிறுவனம் கடந்த 2002–2003, 2003–2004இல் முறையே ரூ.198 கோடி, ரூ.316 கோடி என்ற அளவில் மொத்தம் ரூ.514 கோடி நிகர வைப்பீட்டுத் தொகை திரட்டியுள்ளது. இவ்வாண்டுகளில் நிகர வைப்பீட்டு எண்ணிக்கை முறையே 12325 மற்றும் 10020 ஆகும்.

**கடனுதவி :**

இந்நிறுவனத்தால் திரட்டப்படுகின்ற நிதி அனைத்தும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்கு கடனாக அளிக்கப்பட்டு வருகிறது. 2003–2004இல் இந்நிறுவனம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.680 கோடி தவணைக் கொள்முதல் கடன் மற்றும் நீண்ட கால கடனாக அளித்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளிக்கப்பட்ட மொத்த கடன் தொகையான ரூ.3739 கோடியில் 31-03-2004 அன்று ரூ.1811 கோடி நிலுவையில் உள்ளது. கடந்த 2002-03 மற்றும் 2003-04இல் இந்நிறுவனம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.448 கோடியை நிகர கடன் தொகையாக அளித்துள்ளது. இதுதவிர, 2003-2004இல் ரூ.15 கோடியைப் பூம்புகார் கப்பல் நிறுவனத்திற்குக் காலக் கடனாக அளித்துள்ளது.

## பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் 2001

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் ரூ.30.47 கோடியை வைப்பீட்டுத் தொகையாக 19,975 பெண் குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளது.

## இலாபம் மற்றும் ஈவுத் தொகை

இந்நிறுவனம் 1991இல் துவக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 சதவிகிதத்தை ஈவுத் தொகையாக 1995-96 முதல் எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்நிறுவனம் 2003-2004இல் ரூ.24 கோடி (வரி போக) இலாபம் ஈட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வருங்காலத் திட்டங்கள்

1) சென்னை மற்றும் பிற மாநிலங்களுக்கு மின்னணு பிரிப்பு மூலம் வட்டித் தொகையை அளிப்பது போன்று திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம் ஆகிய இடங்களுக்கும் விரிவுபடுத்துதல்.

2) வைப்பீட்டுத் தளத்தை விரிவாக்கும் வகையில் கொல்கத்தா, அகமதாபாத், பூனே, அந்தமான் நிக்கோபார் தீவுகள் போன்ற இடங்களில் வைப்பீடு திரட்டும் முகாம்கள் நடத்துதல்.

3) இதர அரசுத் துறை நிறுவனங்களுக்கும் மற்றும் இதர அடிப்படை வசதித் திட்டங்களுக்கும் நிதி உதவி அளித்தல்.



# இணைப்பு - III

*(49 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 30 – தகவல் தொழில் நுட்பவியல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### முன்னுரை

இந்தியாவில், தகவல் தொழில் நுட்பவியலில், முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. ஏறக்குறைய இரண்டு பில்லியன் அமெரிக்க டாலர் வரை தகவல் தொழில் நுட்பவியல் பொருட்களை ஏற்றுமதி செய்து இப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் மாநிலங்களுள் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகள் கிடைப்பது, தலைசிறந்த மற்றும் ஏராளமான திறமை மிகுந்த மனிதவள ஆதாரங்கள், தொழில் சம்பந்தமான அமைதியுடன் (Presence of Industrial Peace) சேர்ந்த உலக இணைப்பு நடவடிக்கைகள் (Global Connectivity) மற்றும் தமிழக அரசின் முற்போக்கு கொள்கை ஆகியவை தகவல் தொழில் நுட்பவியல் நிறுவனங்களின் முதலீடுகளுக்கு தமிழகத்தை உகந்த இடமாக உருவாக்கியுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க சீரிய தலைமையின்கீழ் தகவல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் வளர்ச்சியில் இரட்டை இலக்கு விழுக்காட்டினை தமிழ்நாடு தொடர்ந்து நிலை நாட்டி வருகிறது. இதன் மூலம் கடந்த ஓராண்டில் தமிழ்நாட்டில் 100 தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் நிறுவப்பட்டன அல்லது விரிவுபடுத்தப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2002, செப்டம்பரில் வெளியிடப்பட்ட தகவல் தொழில் நுட்பவியல் கொள்கை 2002-ன் பயனாக தமிழகம் தகவல் தொழில் நுட்பவியல் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே கணிசமான பகுதியைப் பெற்று மேலும் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான ஒரு முக்கியமான இடமாக தமிழகம் முன்னேறி வருகிறது.

[2004 ஜூலை 26

தங்களுடைய விரிவாக்கப் பணிகளுக்காக சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அதிக அளவு நிலங்களை தகவல் தொழில் நுட்பவியலில் தலைசிறந்து விளங்கும் நிறுவனங்களான இன்ஃபோசிஸ், டாட்டா கன்சல்டன்சி சர்வீசஸ் மற்றும் விப்ரோ நிறுவனங்கள் வாங்கியுள்ளன. இத்தகைய அதிக அளவிலான தேவை தகவல் தொழில் நுட்ப உள்ளமைப்பில் (IT infrastructure) வளர்ச்சியை உருவாக்கியுள்ளது. கடந்த நான்கு மாதங்களில் 1.4 மில்லியன் சதுர அடிக்கும் மேலாக தகவல் தொழில் நுட்பவியல் இடம் (I.T. Space) மேம்படுத்தப்பட்டுள்ளது இதற்குச் சான்றாகும். தேசிய மற்றும் பன்னாட்டு வாடிக்கையாளர்களின் வளரும் தேவைக்கேற்ப 2004–2005 ஆம் ஆண்டில் மேலும் 2.5 மில்லியன் சதுர அடி தகவல் தொழில் நுட்பவியல் இடம் தனியார் மற்றும் பொது துறைகளில் உருவாகும் என்று அரசு உறுதியாக நம்புகிறது. சோழிங்கநல்லூரில் தகவல் தொழில் நுட்பவியல் பாதையுடன் அறிவுசார் நகரியத்தின் முதல் கட்டத்தை ஒரு சிறப்பு நோக்க ஊர்தி மூலம் (Special Purpose Vehicle) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தகவல் தொழில் நுட்பவியல் துறைகளுள் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளின் துறை (ITES Sector) அதிக அளவு வளர்ச்சி விகிதத்தைக் காட்டியுள்ளது. தொழில்களுக்கான முக்கிய வளர்ச்சியை அதிகரிப்பதில் இது தொடர்ந்து முன்னின்று செயல்படும். இந்தியாவில் தகவல் தொழில் நுட்பவியல் நடவடிக்கைகளுக்காக பல்வேறு இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. நாஸ்காம் கேபிஎம்ஜி (NASSCOM KPMG) ஆய்வு 2004–ன் கருத்தின்படி சென்னையும் கோயம்புத்தூரும் தகவல் தொழில் நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த இடங்களாக அமைந்துள்ளன.

வெளியிடப்படவுள்ள அரசின் புதிய தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளின் கொள்கை மாநிலத்தின் வலிமையை மேலும் உயர்த்தும் வகையில் அதிக அளவில் வேலைவாய்ப்புகளையும் கூடுதலான மதிப்பு மற்றும் வளத்தையும் உருவாக்கும். தகவல் தொழில் நுட்பவியல் வளர்ச்சியின் ஒரு பகுதியாக சென்னை நகரத்தை வங்கியியல், நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளின் உலகத் தலைநகரமாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் ஆய்வின் அடிப்படையில் சென்னையில் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளின் மேம்பாட்டிற்கு அரசு தொடர்ந்து முயற்சியை மேற்கொள்ளும். மேலும் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளின் மேம்பாட்டிற்கு அரசு கோயம்புத்தூர் நகரை தெரிவு செய்துள்ளது.



2004 ஜூலை 26]

ஆரம்ப முயற்சியாக பெங்களூர் ஐடி.காம் (Bangalore IT.C நிகழ்ச்சியிலும் மலேசியா கோலாலம்பூரில் நடைபெற்ற இன்கிரெடிபில இந்தியா (Incredible India) கண்காட்சியிலும் ஆர்வத்துடன்கூடிய வரவேற்பு கிடைத்தது. தமிழ்நாடு தொழில் நுட்பவியலில் முன்னணி வகிப்பதற்கு அரசு தொடர்ந்து தீவிர முயற்சியினை மேற்கொள்ளும்.

தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளின் முதலீடுகளுக்கு தமிழ்நாடு ஒரு உகந்த மாநிலம் என்ற முத்திரையை உருவாக்க, தமிழக அரசு பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு கண்காட்சிகளிலும் பங்கேற்றுள்ளது. மேலும் பன்னாட்டு ஆலோசகர் ஒருவரை, ஒளிவு மறைவற்ற வழியில் நியமனம் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான வழிமுறை முயற்சிகளை தொடங்குமாறு எல்காட் நிறுவனம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் நடைபெற்ற ஏழாவது தேசிய மின் ஆளுமை மாநாடு அப்போதைய பாரத துணைப் பிரதமர் திரு. எல்.கே.அத்வானி அவர்கள் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் மாநிலத்தில் மின் ஆளுமை நடவடிக்கைகளுக்கான புதிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. மாநிலத்தின் அனைத்து அரசுத் துறைகளின் மின் ஆளுமை நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் ஒரு மின் ஆளுமைப் பிரிவு செயல்படத் துவங்கியுள்ளது.

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) 1977ஆம் ஆண்டு தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு தொழில் நிறுவனமாக நிறுவப்பட்டது. இந்நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து நாளது வரை தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகள் (Information Technology Enabled Services - ITES) குறித்த முதலீடுகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை வழங்கவல்ல டைடல் (TIDEL) போன்ற நிறுவனங்களை ஊக்குவித்து, தன்னை ஒரு தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த நிறுவனமாக வளர்த்துக் கொண்டுள்ளது. தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பவியல் கொள்கைகளைச் செயல்படுத்தும் ஒரு முனையமாகவும் (NODAL AGENCY) இது செயல்படுகிறது. கல்வி நிறுவனங்களான அண்ணா பல்கலைக்கழகம் (Anna University), இந்திய தொழில் நுட்பவியல்

[2004 ஜூலை 26

நிறுவனம், சென்னை (Indian Institute of Technology, Madras) ஆகியவற்றுடனும் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் மின்னணு நிறுவனங்கள் ஆகியவற்றுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு அரசு, தொழில் கூடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான ஒரு 'இணைப்பு பாலமாக' (Channel of Connectivity) எல்காட் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. 2004, மார்ச்சில் எல்காட் நிறுவனம் 27 ஆண்டுகள் சேவையை முடித்து மேலும் பல்லாண்டுகள் சேவை செய்வதற்கு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது.

கடந்த காலங்களில் எல்காட் நிறுவனம் கீழ்கண்ட நான்கு முக்கிய பணிகளை திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது.

அ. தகவல் தொழில் நுட்பவியல் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு தொடக்க திட்டங்கள் (IT Promotional and Development initiatives)

ஆ. சிறப்பு திட்டங்கள் (Special Projects)

இ. தமிழ்நாடு மின் ஆளுமைத் திட்டங்கள் (Tamil Nadu e-Governance Mission)

ஈ. தகவல் தொழில் நுட்பவியல் கொள்முதல் மற்றும் சேவைகள் (IT Procurement and Services)

**அ) தகவல் தொழில் நுட்பவியல் வளர்ச்சி மற்றும் மேம்பாடு தொடக்க திட்டங்கள்** (IT Promotional and Developmental Initiatives)

**I. வளர்ச்சித் திட்டங்கள் (Promotional Projects)**

தகவல் தொழில் நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை உயர்த்துவதற்கு எல்காட் நிறுவனம் (ELCOT) கருத்தரங்குகளையும் கண்காட்சிகளையும் நடத்தியுள்ளது. மேலும் 2003-2004 ஆம் ஆண்டில் தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்க நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துள்ளது.



2004 ஜூலை 26]

**தேசிய அளவில்**

**(அ) கனெக்ட் 2003, (Connect 2003) சென்னை:**

2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில், தமிழக அரசு, இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் (Confederation of Indian Industry) சேர்ந்து கனெக்ட் 2003 (Connect 2003) என்ற நிகழ்ச்சியை நடத்தியது. அரசின் சார்பாக எல்காட் நிறுவனம் முன்னணி நிறுவனமாக திகழ்ந்தது. இந்த நிகழ்ச்சி கீழ்க்கண்டவாறு குறிப்பாக மூன்று நோக்கங்களுடன் நடைபெற்றது:

18-09-2003: வணிக செயற்பாட்டு பணி ஒப்படைப்பு (Business Process Outsourcing) பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது

19-09-2003: முதன்மை தகவல் அலுவலர்களின் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதே நாளில் இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசிய முதன்மை தகவல் அலுவலர்களின் கூட்டம் (Chief Information Officers' Summit) ஏற்பாடு செய்யப்பட்டது.

20-09-2003: கீழ்க்கண்ட எனேபிலிங் ஐடிஇஎஸ்-இன் (Enabling ITES IN) என்ற தலைப்பில் நான்கு வித்தியாசமான வட்ட மேஜை கூட்டங்கள் நடைபெற்றன.

- வங்கியியல், நிதி மற்றும் காப்பீடு ( Banking, Finance and Insurance)
- சுகாதாரம் (Health Care)
- பொறியியல் உள் அலுவலகம் (Engineering Back Office)
- மனித வளம் (Human Capital)

இந்திய தொழில் கூட்டமைப்புடன் பொது மற்றும் தனியார் பங்கேற்பு குறித்து மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா முதலிய நாடுகளுக்கு அலுவலர் அளவிலான பிரதிநிதிகள் குழு மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள்

தலைமையில் சென்றது. கனெக்ட் 2003 நிகழ்ச்சியை நடத்துவதற்காக தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர் தலைமையில் பெங்களூர் மற்றும் குர்கானிற்கு அலுவலர் அளவிலான பிரதிநிதிகள் குழு சென்றது. இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் 55,000 பிரதிநிதிகள்/பார்வையாளர்கள் பங்கேற்றனர். இது சென்ற ஆண்டின் பங்கேற்பாளர்களைவிட இரண்டு மடங்கு அதிகமாகும்.

**ஆ) 2003 இந்தியா பணி ஒப்படைப்பு கருத்தரங்கு – பெங்களூர் (2003 India Outsourcing Summit - Bangalore) 2003:**

அக்டோபரில் பெங்களூர் நகரில் நடைபெற்ற 2003 இந்தியா பணி ஒப்படைப்பு கருத்தரங்கில் அரசு பங்கேற்றது. பன்னாட்டு அளவில் பணி ஒப்படைப்பு இயக்கத்தின் (Outsourcing Movement) முதன்மையானவரும் உலக அளவில் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளின் துறையில் மிகவும் பிரசித்தி பெற்றவருமான திரு. மைக்கேல் கோர்பெட் (Thiru Michael Corbett) அவர்கள் தனது குழுவினருடன் 2003 அக்டோபர் 14 ஆம் நாளன்று வருகை புரிந்து சென்னையில் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியை எல்காட் நிறுவனம் பொது மற்றும் தனியார் பங்கேற்பு மூலமாக நடத்தியது. உலக வங்கி, ஸ்கோப் இண்டர்நேஷனல் மற்றும் பாரதி டெலிகாம் ஆகிய நிறுவனங்கள் உட்பட பல்வேறு செயல்பாடுகள் பார்வையாளர்களுக்கு காண்பிக்கப்பட்டன. இது தமிழகத்தைப் பற்றி மிகவும் அதிக அளவு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

**(இ) பெங்களூர் ஐ.டி.காம். (Bangalore IT.COM):**

பெங்களூரில் 2003, நவம்பரில் நடைபெற்ற பெங்களூர் ஐ.டி.காம். (Bangalore IT.COM) நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு எல்காட் நிறுவனம் மூலமாக பங்கேற்றது. தகவல் தொழில் நுட்பவியல் துறையின் செயலாளர் முதன்மை தகவல் அலுவலர்களை தேர்ந்தெடுப்பதற்கு பெங்களூரில் சிறப்பு அறிமுகப்படுத்தல் மற்றும் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தார். பெங்களூர் ஐ.டி.காம் மூலமாக ஹாங்காங் வர்த்தக குழுவுடன் (Hong Kong Trade Mission) தகவல் இணைப்பு மேற்கொள்ளப்பட்டு அதன் விளைவாக பிரதிநிதிகள் சென்னைக்கு 11-12-2003 அன்று வருகை தந்தனர்.



**ஈ) இந்தியா பன்னாட்டு வர்த்தக கண்காட்சி 2003, புதுடில்லி– India International Trade Fair 2003 at New Delhi:**

2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதுடில்லியில் நடைபெற்ற இந்தியா பன்னாட்டு வர்த்தக கண்காட்சி 2003ல் தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலம் பங்கேற்றது.

**உ) டைகான் இந்தியா 2003 – உலகத் தொழில் முனைவர்களுக்கான மாநாடு, புதுடில்லி – (TIECON India, 2003 - Global Entrepreneur's Conference, New Delhi):**

2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புதுடில்லியில் நடைபெற்ற டைகான் இந்தியா 2003 – உலகத் தொழில் முனைவோர்களுக்கான மாநாட்டில் தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாக பங்கேற்றது. இம்மாநாட்டில் தகவல் தொழில் நுட்பவியல் துறையின் செயலாளர் கலந்து கொண்டார். தகவல் தொழில் நுட்பம் (IT) மற்றும் வணிக செயற்பாட்டு பணி ஒப்படைப்பு (BPO) போன்ற வளரும் தொழில்களில் பல்வேறு வாய்ப்புகள் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்/தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளின் இதர வருங்கால நிலை ஆகியவை குறித்த திட்டவட்டமான நோக்கத்துடன் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

**ஊ) ஜிடெக்ஸ் 2004–பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப கண்காட்சி மற்றும் கருத்தரங்கு ஹைதராபாத் (GITEX 2004 - International IT Exhibition and Conference, Hyderabad):**

2004 ஜனவரி மாதம் ஹைதராபாத் நகரில் நடைபெற்ற ஜிடெக்ஸ் 2004 – பன்னாட்டு தகவல் தொழில் நுட்பவியல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் (GITEX 2004 - International IT Exhibition and Conference, Hyderabad) எல்காட் நிறுவனம் மூலமாக தமிழ்நாடு அரசு பங்கேற்றது. தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர் பத்திரிகையாளர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்.

**எ) கோயம்புத்தூர் ஐ.டி.காம் – (Coimbatore IT.COM):**

இந்தியத் தொழில் கூட்டமைப்பு பங்கேற்புடன் 2003 நவம்பரில் "கோயம்புத்தூர் ஐ.டி.காம்" என்ற தலைப்பில் கோயம்புத்தூரில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கே தகவல் தொழில்

நுட்பவியல் துறைச் செயலாளர் பத்திரிகையாளர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்.

**ஏ) இரண்டாவது பிரவாசி பாரதிய திவாஸ் நிகழ்ச்சி, புதுடில்லி- (Celebration of Second pravasi Bharatiya Divas - New Delhi):**

2004 ஜனவரி மாதம் புதுடில்லியில் நடைபெற்ற இரண்டாவது பிரவாசி பாரதிய திவாஸ் கொண்டாட்டத்தில் தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாக பங்கேற்றது. இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர் கலந்து கொண்டார்.

**ஐ) நாஸ்காம் 2004 - இந்தியா லீடர்ஷிப் ஃபோரம் - மும்பை- (NASSCOM 2004 INDIA Leadership Forum - Mumbai):**

2004 பிப்ரவரி மாதம் மும்பையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கம் பல்முனைக் கருத்தரங்கம் ஆகும். இக்கருத்தரங்கில் "உலகப் பொருளாதாரக் காட்சி", "தகவல் தொழில் நுட்ப வாய்ப்புகள்", "வணிக செயற்பாட்டு பணி ஒப்படைப்பு" மற்றும் "உட்பொதிந்த மென்பொருள்" (Embedded Software) ஆகிய தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர் மற்றும் எல்காட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆகியோர் பங்கேற்றனர்.

**(ஒ) அசோசம் கருத்தரங்கு - உலக வங்கி - தேசிய மாநாடு மற்றும் இந்திய கண்காட்சி - அறிவுத் தலைநகரம் (ASSOCHAM Conference - World Bank - National Summit and Exhibition India - The Knowledge Capital):**

இந்நிகழ்ச்சியில் 2004 பிப்ரவரி மாதத்தில் தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாக ஒரு விற்பனைக் காட்சியரங்கு அமைத்தது. தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர் மற்றும் எல்காட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆகியோர் இக்கருத்தரங்கில் உரை நிகழ்த்தினார்கள்.

பன்னாட்டு அளவில்

**(ஓ) ஐரோப்பிய பணி ஒப்படைப்பு மாநாடு 2003 (European Outsourcing Summit 2003):**

தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர் 2003 ஆம் ஆண்டு ஜூன் 2, 3 தேதிகளில் பெல்ஜியம் நாட்டில் பிரஸ்ஸெல்ஸ் நகரில்



நடைபெற்ற ஐரோப்பிய பணி ஒப்படைப்பு மாநாடு 2003-ல் பங்கேற்றார். இதன் பயனாக பிரசித்தி பெற்ற தொழில் வல்லுனரான திரு. மைக்கேல் கோர்பெட்டுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. அவர் பெங்களூரில் நடைபெற்ற பணி ஒப்படைப்பு கருத்தரங்கு 2003-ல் கலந்து கொண்டு சென்னைக்கு வருகை தந்தார்.

**ஔ) இன்கிரெடிபில் இந்தியா 2003, மலேசியா (Incredible India 2003, Malaysia):**

2003 ஆம் ஆண்டு டிசம்பரில் கோலாலம்பூரில் நடைபெற்ற இன்கிரெடிபில் இந்தியா 2003 என்ற நிகழ்ச்சியில் தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாக பங்கேற்றது. இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர் பங்கேற்றார்.

## II. ஆய்வுகள் மற்றும் கலந்தாய்வு (Studies and Consultancy)

தகவல் தொழில் நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த இடத்திற்காக (Destination of Choice) ஒரு ஆலோசகரை (Consultant) தெரிவு செய்யும் பொறுப்பு எல்காட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. விரைவில் பணி முடிக்கப்படும் என எல்காட் நிறுவனம் எதிர்பார்க்கிறது. ஆலோசகர் ஒருவரை நியமிப்பதன் மூலம் ஒரூர் நகரத்தை தகவல் தொழில் நுட்பவியல் பணிகளுக்காகவும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கு உகந்த இடமாக ஆக்குவதற்காகவும் ஆய்வு ஒன்றினை எல்காட் நிறுவனம் நடத்தியுள்ளது. எல்காட் நிறுவனம், இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry) பங்கேற்புடன் மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் நகரங்களை ஒரு தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கு உகந்த இடமாக (ITES Destination) உருவாக்க தனியாக ஒரு ஆலோசகர் மூலம் ஆய்வு ஒன்றினை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. ஆய்வின் ஒரு பகுதியாக தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கு இந்நகரங்களில் கிடைக்கக்கூடிய அறிவுத் தன்மையை கண்டுபிடிக்கவும் இந்த நகரங்களில் பணிமனைகளை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**III. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வளர்ச்சி (Research and Development Promotion):-**

**(அ) மின் செய்திப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் (Society for Electronics Transaction and Security) (SETS):**

சென்னையில் மின் செய்திப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கத்தின் நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்காக எல்காட் நிறுவனம் ஒரு கட்டடத்தை தெரிவு செய்தது. மேற்கண்ட சங்கம் சென்னை, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள இடத்திலிருந்து 2003 ஜுன் மாதத்திலிருந்து தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது.

**(ஆ) பாரதியார் பல்கலைக்கழகம்–எல்காட் நகரம் (BU-ELCOT CITY)**

எல்காட் நிறுவனம் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (Memorandum of Understanding) ஏற்படுத்தி 100 ஏக்கர் நிலத்தை கோயம்புத்தூரில் பல்கலைக் கழக வளாகத்தில் தெரிவு செய்துள்ளது. இந்த பாரதியார் பல்கலைக்கழகம்–எல்காட் நகரம் தமிழ்நாட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை ஒருமுகப்படுத்தும்.

**ஆ. சிறப்புத் திட்டங்கள் (Special Projects)**

**அ) தகவல் தொழில் நுட்பவியல் பாதை (IT Corridor)**

எல்காட் நிறுவனத்தின் விடாமுயற்சியால் உருவான தகவல் தொழில் நுட்பவியல் பாதை உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. சிறுசேரி பூங்காவில் டாடா கன்சல்டன்சி நிறுவனம் 75 ஏக்கர் நிலத்தை ஏற்கெனவே பெற்றுள்ளது. விப்ரோ நிறுவனம் தங்களது தொழில் விரிவாக்க நடவடிக்கைகளுக்காக தகவல் தொழில் நுட்பவியல் பாதையில் கணிசமான அளவில் நிலம் வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. அரசின் முயற்சிக்கு பலம் சேர்க்கும் வகையில் தனியார் கட்டுமான நிறுவனங்களும் தகவல் தொழில் நுட்பவியல் பூங்காக்களை தகவல் தொழில் நுட்பவியல் பாதையில் அமைத்து வருகின்றனர். தகவல் தொழில் நுட்பவியல் கட்டுமான நிறுவனங்களால் கட்டப்படுவதற்காக சுமார் 3.3 மில்லியன் சதுர அடிப் பரப்பளவு தகவல் தொழில் நுட்பவியல் இடத்திற்கு எல்காட் நிறுவனம் ஏற்கெனவே அனுமதி அளித்துள்ளது.



**ஆ) அறிவுசார் தொழில் நகரியங்கள் (Knowledge Industry Townships -KITs)**

உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளுடன் சென்னையில் தகவல் தொழில் நுட்பவியல் பெருவழிகள் (IT Highways) ஏற்படுத்தப்படும் என்றும் பொது மற்றும் தனியார் பங்கேற்புடன் இத்துறையில் அறிவு சார்ந்த தொழில்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அறிவுசார் தொழில் நகரியங்கள் அமைக்கப்படும் என்றும் 2002–2003 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு அரசு தெரிவித்தது.

அரசு ஆய்வு ஒன்றினை மேற்கொண்டது. உலகத்தரம் வாய்ந்த ஆலோசனை நிறுவனமான திருவாளர்கள். கே.பி.எம்.ஜி. (M/s. KPMG) விரிவான திட்ட அறிக்கையை அளித்துள்ளது. சோழிங்கநல்லூரில் சர்வே எண் 602/3A3–ல் 300 ஏக்கர் நிலத்திற்காக எல்காட் நிறுவனம் நுழைவு அனுமதியை பெற்றுள்ளது என்பதையும் மேற்கூறிய நிலத்தை உரிமை மாற்றம் செய்வதற்கு, ஆணையர், நில நிர்வாகம் பரிந்துரை செய்துள்ளார் என்பதையும் தற்போது இச்செயற்குறிப்பு உடனடியாக செயல்படுத்தப்படுவதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவிப்பதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

**இ) கோயம்புத்தூரில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா – (IT Park at Coimbatore)**

கோயம்புத்தூர் நகரை தகவல் தொழில் நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த நகரமாக்க இந்திய தொழில் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாக ஆய்வு ஒன்றினை மேற்கொண்டது. இந்த ஆய்வு மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் 2,50,000. சதுர அடி பரப்பில் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைக்க கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் எல்காட் நிறுவனம் நிலங்களை தெரிவு செய்துள்ளது. இந்தப் பூங்கா அமைக்கும் வேலையை எல்காட் உட்கட்டமைப்பு நிறுவனம் மேற்கொள்ளவிருக்கிறது.

**ஈ) தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு – (Tamil Nadu State Wide Area Network - TNSWAN)**

ஏற்பு நேரம் மற்றும் ஒளிவு மறைவு அற்ற தன்மையை மேம்படுத்துவதற்காக ஒலி, எழுத்துரை மற்றும் ஒளிப்பட இணைப்பு வழங்குவதற்கு தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு (தமிழ்நாடு

மெய்நிகர்த் தனி வலை அமைப்பு என்று முன்னர் பெயரிடப்பட்டது) 2004-2005 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்படவுள்ளது. வட்டார அளவில் இணைப்பினை (Connectivity) ஏற்படுத்துவதற்கு இந்த இணையதளம் படிப்படியாக செயற்படுத்தப்படும். இந்த அமைப்பிற்கு தேவையான தொழில் நுட்பவியல் மற்றும் வணிக உள்ளீடுகளை அளிப்பதற்கான ஆலோசகரை தெரிவு செய்யும் பணி 2004-2005 ஆம் ஆண்டில் முடிவடைந்துவிடும்.

**உ) இணையம் வழி ஊரகச் சேவை (Rural Access to Services through Internet - RASI)**

இணையம் வழி ஊரகச் சேவை 2003-2004 ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு தற்போது முன்னேற்றத்தில் உள்ளது. இச்சேவை 2004-2005 ஆம் ஆண்டில் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

**ஊ) மின் சேவைகள் வழங்கல் (Electronic Delivery of Services - EDS)**

தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் குடிநீர் வழங்கல் வாரியத்தில் பயன்பாட்டுப் பட்டுவாடா (Utility Payment) சேவைகளை கருதி மின் சேவைகள் வழங்கலுக்கான ஒரு முன்னோடி திட்டம் 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டில் சென்னையில் பிற துறைகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

**இ. தமிழ்நாடு மின் ஆளுமைக் குழு-(Tamil Nadu e - Governance Mission)**

மின் ஆளுமைத் திட்டத்தில் வளர்ந்து வரும் தேவையின் ஒரு பகுதியாக, அரசின் தகவல் மற்றும் தொலை தொடர்பு நுட்பவியல் முயற்சிகளுக்கான கொள்கை மற்றும் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கும் அரசின் திட்டங்கள் மற்றும் மின் ஆளுமை முயற்சிகளை வழங்குவதற்கும் தனியாக ஒரு மின் ஆளுமை இயக்குனரகத்தை தகவல் தொழில் நுட்பவியல் துறை நிறுவி வருகிறது. இதன் முதல் முயற்சியாக தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தில் ஒரு மின் ஆளுமைப் பிரிவு 'தமிழ்நாடு மின் ஆளுமை குழு' என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. இது பின்னர் தமிழ்நாடு மின் ஆளுமை இயக்குனரகத்தின் ஒரு அங்கமாக செயல்படும்.



தமிழ்நாட்டில் மின் ஆளுமை திட்டங்களைப் பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்கு மின் ஆளுமைக் குழுவானது ஒரு வரைவு மின் ஆளுமைக் கொள்கையையும் (e-Governance Policy) வினை முறைத் திறனையும் (Strategy) அதனுடன் ஒருங்கிணைந்த மின் ஆளுமை படத்தையும் வெளியிட உள்ளது. திட்டமிடப்பட்டுள்ள மின் ஆளுமை வினை முறைத்திறன் (Strategy) மற்றும் கொள்கையானது (Policy), நிலைப்படுத்துதல் (Standardisation), பாதுகாப்பு (Security), நிதி ஆதாரங்கள் (Funds Resources), மக்கள் தொடர்பு மேம்பாடு (Public Relations Promotion), மேலாண்மை தகவல் முறை (Management Information System) மற்றும் முடிவு ஆதரவு முறை (Decision Support System) போன்ற முக்கிய அம்சங்களை உள்ளடக்கி உள்ளது. இந்தத் வரைவு மின் ஆளுமைக் கொள்கை மற்றும் வினை முறைத்திறன் இந்தத் துறையில் அனுபவம் மிக்க நபர்களுக்கும் வழங்கப்பட உள்ளது. மேலும் கொள்கை குறித்த ஆலோசனைகளுக்காக இது எல்காட் நிறுவனத்தின் வலைதளத்தில் பதிவு செய்யப்பட உள்ளது.

உலகம் முழுமையிலும் உள்ள மின் ஆளுமை செயல்பாடுகளில் சிறந்தவற்றை நமது அரசின் மின் ஆளுமை திட்ட முயற்சிகளில் புகுத்துவதற்கு தமிழ்நாடு மின் ஆளுமை இயக்ககம் தொடக்கத்திலிருந்தே செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் மின் சேவை மையங்கள் அமைத்து குடிமக்களுக்கு தகுந்த கட்டணத்தில் வழங்கவும் அரசு - குடிமக்கள் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கும் செயலாற்றி வருகிறது.

**ஈ. தகவல் தொழில் நுட்பவியல் கொள்முதல் மற்றும் சேவைகள் (IT Procurement and Services)**

**I. தகவல் தொழில் நுட்பவியல் கொள்முதல்**

பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்வதற்காக "விருப்பக் கொள்முதல் முகமையாக (Optional Procurement Agency)" எல்காட் நிறுவனம் நியமனம் செய்யப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் சுமார் 145 துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்காக ரூ3164 இலட்சங்கள் மதிப்புள்ள தகவல் தொழில் நுட்பவியல் வன்பொருள் மற்றும் மென்பொருள்களின் உற்பத்திப் பொருட்களை எல்காட் நிறுவனம் வெற்றிகரமாக கொள்முதல் செய்துள்ளது.

## II. தகவல் தொழில் நுட்பவியல் சேவைகள்

### அ) பள்ளிகள் கணினி கல்வித் திட்டம் (Schools Computer Education Project)

எல்காட் நிறுவனம் இதுவரை கணினிக் கல்வித் திட்டத்தை முதல் கட்டத்தில் 666 பள்ளிகளிலும், இரண்டாம் கட்டத்தில் 531 பள்ளிகளிலும் செயல்படுத்தியுள்ளது.

### ஆ) அழைப்பு மையங்கள் (Call Centres)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 12-11-2003 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒரு அழைப்பு மையத்தை தொடங்கி வைத்தார்கள். இந்த அழைப்பு மையம் சென்னையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக ரூ.4.5 இலட்சம் செலவில் பழுது மற்றும் மின் துண்டிப்பு சம்பந்தமான முறையீடுகளை சரி செய்யும் பொருட்டு அமைக்கப்பட்டது. சென்னை மாநகர காவல் துறைக்காக சென்னை எழும்பூரில் உள்ள நவீன கட்டுப்பாட்டு அறையில் (Modern Control Room) 12 முகவர்கள், 4 வி.எச்.எப் ஆப்பரேட்டர்கள் (VHF Operators) மற்றும் ஒரு மேற்பார்வையாளர் கொண்ட ஒரு அழைப்பு மையம் (Call Centre) அமைக்கப்பட்டு உள்ளது. இந்த அழைப்பு மையத்தில் டயல் 100 முறையில் வரும் முறையீடுகளை சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு மாற்றுவதற்கும், டயல் 103 முறையில் வரும் முறையீடுகளை போக்குவரத்து பிரிவிற்கு மாற்றுவதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது. இந்த அழைப்பு மையத்தை எல்காட் நிறுவனம் ரூ.13.5 இலட்சம் செலவில் அமைத்தது. மேலும், இந்த அழைப்பு மையத்தின் மூலம் உலக வழக்கிலுள்ள முறையை (Global Positioning System) பயன்படுத்தி 50 சுற்றுக் காவல் வாகனங்களை தானியங்கி (Automatic Vehicle Tracking System) முறையில் கண்காணிக்க முடியும். இந்த அழைப்பு மையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18-02-2004 அன்று துவக்கி வைத்தார்கள். வன்பொருள் மற்றும் மென்பொருள் சம்பந்தமாக வாடிக்கையாளர்களுக்கு ஆதரவு தரும் பொருட்டும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகள் வழங்கவும் எல்காட் நிறுவனத்திற்காக உதவி மேஜையுடன் (Help Desk) மற்றுமொரு அழைப்பு மையம் எல்காட் நிறுவனத்தில் நிறுவப்பட்டது. மேலும் மூல விற்பனையாளர்கள் மூலம் வன்பொருள் மற்றும் மென்பொருள் சம்பந்தமான சேவை ஆதரவுகளையும் வழங்க முடியும். வலை மூலம்



(Web) வாடிக்கையாளர்களுக்கு உதவி செய்யும் வகையில் எல்காட் நிறுவனத்திற்கு அளித்த கொள்முதல் ஆணைகள் குறித்த நிலையை கண்காணிக்கவும், அறியவும் கொள்முதல் நுழைவுவாயில் (The Procurement Portal) வலைதளம் அமைக்கும் பணி தற்போது முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணி விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

### தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (த.இ.ப.)

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கும் தமிழை கற்பதில் ஆர்வம் மற்றும் தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றிய அறிவினை பெறுவதில் ஆர்வமுள்ள ஏனையோருக்கும் வாய்ப்புகள் மற்றும் ஆதாரங்களை இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்துடன் ஒரு சங்கமாக (Society) தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2002 ஜுன் மாதத்தில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பணித் திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டதையடுத்து அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியா தமிழ் அகாடெமியைச் சார்ந்த 55 மாணவர்கள் அடிப்படை நிலை-1 படிப்பில் தேர்ச்சி பெற்று அவர்களுக்கு 2003 ஜுலை மாதத்தில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த விழிப்புணர்ச்சி அதிகரித்து 23 மாணவர்கள் கலிஃபோர்னியாவிலிருந்தும், 2 மாணவர்கள் நியுயார்க்கிலிருந்தும் 2004 ஜுலை மாதத்தில் அடிப்படை நிலை-1 படிப்பினை முடித்தார்கள். இவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் தற்போது மொரிசியஸ் நாட்டு தமிழ் கலாசார மையத்திலிருந்து 21 மாணவர்கள் அடிப்படை நிலை-1 படிப்பினை மேற்கொண்டு சான்றிதழ்களை பெற இருக்கிறார்கள். இதுபோன்று கலிஃபோர்னியாவிலிருந்து 27 மாணவர்கள், நியுயார்க்கிலிருந்து 2 மாணவர்கள் அடிப்படை நிலை-2 படிப்பினை இவ்வருடம் முடிக்க உள்ளார்கள். தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் பயன்பாட்டிற்கு, இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. மேலும் 2004 ஜுலையில் ஒருங்கிணைந்த பட்டப் படிப்பிற்கான (B.A. Tamil) முதல் பருவத்திற்குரிய தேர்வுகளை நடத்துவதற்கு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

[2004 ஜுலை 26

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இந்த நிதியாண்டில் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்திடமிருந்து முதுநிலைப் பட்டக் கல்விப் பாடத் திட்டத்தை பெற்று வழங்க உத்தேசித்துள்ளது. இதுவரை தமிழ் இணையப் பல்கலைக்கழகம் பல்வேறு நாட்டில் உள்ள மாணவர்களின் நன்மைக்காக 9 கல்வித் தொடர்பு மையங்களை நிறுவியுள்ளது. மேலும் 3 தொடர்பு மையங்களை பிரிட்டன், ஜெர்மனி மற்றும் பிரான்சு போன்ற நாடுகளில் விரைவில் நிறுவ உத்தேசித்துள்ளது. ஏறக்குறைய 13 இலட்சம் மக்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தைப் பார்வையிட்டுள்ளனர். 33 நாடுகளிலிருந்து 1062 மாணவர்கள் சான்றிதழ்க் கல்விக்கும், 25 நாடுகளிலிருந்து 1142 மாணவர்கள் பட்டப் படிப்பிற்கும் பதிவு செய்துள்ளனர்.

தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்துகொள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகத்தில்

இலக்கணம்

சங்க இலக்கியம்

பதினெண் கீழ்க்கணக்கு

காப்பியங்கள்

சமய இலக்கியங்கள்

சிற்றிலக்கியங்கள்

திரட்டு நூல்கள்

நெறி நூல்கள்

20 ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் (கவிதை)

20 ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் (உரைநடை)

நாட்டுப்புற இலக்கியங்கள்

கலைச்சொற்கள் தொகுப்பு

அகராதிகள்

போன்றவை இடம்பெற்றுள்ளன.



2004 ஜுலை 26]

இது தவிர, தமிழ்நாட்டிலுள்ள சைவ மற்றும் வைணவக் கோயில்களின் ஒலி–ஒளிப்படக்காட்சிகளின் தொகுப்புகளும் இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. இலக்கண நூல்கள், அகராதிகள் மற்றும் கலைச் சொற்கள் ஆகியவற்றைப் பார்வையிடும் ஆர்வலர்களுக்காக, மின் நூலகத்திற்கான வருடாந்திர உறுப்பினர்க் கட்டணமான US$50 நீக்கப்பட்டு மின் நூலகம் அனைவருக்கும் இலவசமாக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு நூல்களை மின்நூலகத்தில் இடுவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

தமிழ் மென்பொருள் மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ் மென்பொருள் மேம்பாட்டினை உயர்த்துவதற்கு தமிழ்நாடு அரசு திடமான நடவடிக்கையை எடுத்து வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2002 ஜூனில் 'பொன்விழி' – என்னும் 'தமிழ் எழுத்துரு அறிவி' (Tamil OCR) தமிழ் மென்பொருள் மற்றும் 2003 ஆகஸ்டு மாதத்தில் 'இயந்திரவழி ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்தல்' (Machine Aided English - Tamil Translation) என்னும் தமிழ் மென்பொருட்களை வெளியிட்டார்கள். இதனைத் தொடர்ந்து தமிழ் மென்பொருள்களான 'தமிழ் லினெக்ஸ் (Tamil Linux)', 'கையெழுத்துப் பிரதி வழியாக தமிழ் எழுத்துருவை அறிதல் (OCR for Tamil Handwriting)', 'தமிழ்த் துறைத்தள மேலாண்மை (Tamil Database Management)', 'தமிழ்ச் சொல்வலை (Tamil Wordnet to enhance Machine aided Translation), 'தமிழ் அச்சு எழுத்திலிருந்து ஒலி உருவாக்கும் மென்பொருள் (Tamil text to Voice Synthesizer)' ஆகியவற்றுக்காக மேற்கூறிய நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டு அம்மென்பொருள்கள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இத்தகைய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை வணிக பொருள்களாக மேம்படுத்துவதற்கு அரசு கடும் முயற்சியினை மேற்கொள்ளும்.

தமிழக அரசின் TAM/TAB தரத்திற்கு ஏற்ப நிறுவனங்கள் தமிழ் மென்பொருள்களை வடிவமைத்தால்தான் ஒன்றுக்கொன்று ஏற்புடையதாக அமையும். எனவே, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மென்பொருள் நிறுவனங்களால் வடிவமைக்கப்படும் தமிழ் மென்பொருள்களைச் சோதித்துச் சான்றிதழ் வழங்குகின்றது. இவ்வாறு பல்வேறு மென்பொருள் நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்டுள்ள 8 தமிழ் மென்பொருள்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள், தமிழ் மென்பொருள்கள் ஏற்புடைமை பற்றி

அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, இம்மாதிரியான தரச் சான்றிதழ் வழங்கும் பணி தொடரும். மேலும், பல்வேறு தர நிர்ணயங்களும் இறுதியாக்கப்படும்.

இறுதியாக, தகவல் தொழில் நுட்பவியல் துறை, தனது இரண்டு அங்கங்களாகிய எல்காட் நிறுவனம் மற்றும் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணையோடு, தமிழகத்தை, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகளின் முதலீடுகளுக்கேற்ற முதன்மையான மாநிலமாக உருவாக்கவும் தகவல் தொழில் நுட்பவியலை பயன்படுத்தி "மக்களால் மக்களுக்காக" என்ற நிலையை அடையவும் செயல்பட்டு வருகிறது.





## இணைப்பு - IV

*(49 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 32 - சட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004-2005

### முன்னுரை

சட்டம் மனித சமுதாயத்திற்கானது, மக்களாட்சியில் சட்டத்தின் மாட்சியே மேலான ஆட்சி புரிகிறது. மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டம், மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலனுக்காக இயற்றப்படும் சட்டமானது, நியாயமாகவும், சமமாகவும், திறம்படவும் செயற்படுத்தப்படுதல் வேண்டும். சட்டம் என்பது அரசின் எண்ணங்கள் வழியாக மக்களுக்கு நியாயம் வழங்குவதேயாகும். இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளைக் கவனத்திற்கொண்டு, பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்டவடிவமளித்து, சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர் ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213-ஆவது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதைப் பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும் சட்டத்துறையின் முக்கிய பணி சட்ட ஆலோசனை வழங்குவதாகும். சட்டத் துறையானது சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளில் இருந்தும்

[2004 ஜூலை 26

கேட்கப்படும் சட்டப் பிரச்சனை தொடர்பாக ஆலோசனை வழங்கி வருகிறது.

இவைதவிர, சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும், அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும், சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது:-

1) சட்டக் கல்வி

2) சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும், நீக்கமும்

3) மாநிலச் சட்ட ஆணையம்

4) மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு

5) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

**சட்டக் கல்வி**

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறையானது, தமிழ்நாட்டில் 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. இது மேன்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில், ஒரு சட்டக் கல்லூரி, 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979-1980 ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், திருநெல்வேலியில்



2004 ஜூலை 26]

ஒரு அரசு சட்டக் கல்லூரி இயங்கி வருகிறது. தற்போது, தமிழ்நாட்டில் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

2004-2005 ஆம் கல்வியாண்டில் அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:

| சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை 104. (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1002 |
| அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1428 |
| அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1292 |
| அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1292 |
| அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்) | 1240 |

அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளும், சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன.

சென்னை, மதுரை ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களுக்கும், மாணவியருக்கும் எனத் தனித்தனியே விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவியர்களுக்கும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மாணவர்கள் சட்டத்தைத் தமிழில் பயிலுவதற்கேதுவாக, தமிழில் அனைத்துச் சட்டப் புத்தகங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாடத் திட்டத்திலுள்ள அனைத்துச் சட்டப் பாடங்களுக்கும், கையெழுத்துப் பிரதிகள் தமிழில் எழுதி முடிக்கப்பட்டு, அவற்றை அச்சிட்டு வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் செய்து வருகிறது.

டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் ஆறு மாணவர்கள் வியன்னா, ஹாங்காங் ஆகிய இடங்களில் நடைபெறும் நீதிமன்ற வழக்கு வாதப் பயிற்சி (Moot Court) போட்டிகளில் பங்கேற்பதற்காக, ரூபாய் 4.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும், நீக்கமும்**

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 31-3-2004 வரையுள்ள கணக்குப்படி, இம்மாநிலத்தில் 1824 சான்றுறுதி அலுவலர்கள் உள்ளனர். கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் மட்டும், 680 வழக்குரைஞர்கள், சான்றுறுதி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**மாநிலச் சட்ட ஆணையம்**

மாநிலச் சட்ட ஆணையம் பின்வருபவர்களைக் கொண்டிருக்கும்:

1) தலைவர்

2) இரண்டு முழு நேர உறுப்பினர்கள்

3) இரண்டு பகுதி நேர உறுப்பினர்கள்

4) ஒரு முழு நேர உறுப்பினர்-செயலாளர்

ஆங்கிலேயர் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களையும், அதற்குப் பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களையும் நன்கு ஆய்வு செய்து, அவை தற்போதைய சூழலுக்கு ஒத்துவருமா என்பதையும் கண்டறிந்து, அவற்றில் செய்யக்கூடிய மாற்றங்களையும், திருத்தங்களையும் அரசுக்குப் பரிந்துரைப்பது இதன் பணிகளாகும். மாநிலச் சட்டங்கள், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் வழக்குகளில் முடிவு செய்யப்பட்ட தீர்ப்புகளுக்கு இணங்கியவகையில், அவை இருக்கின்றனவா என்பதனை மேலும் ஆய்வு செய்து அச்சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களையும் பரிந்துரை செய்யும்.



மேலும் மாநிலச் சட்ட ஆணையம் –

1) தற்போதுள்ள சட்டங்களுக்குத் தகுந்த மாற்றமைவுகள் மற்றும் திருத்தங்கள் குறித்து ஆலோசனை கூறுதல்;

2) தகுந்த சமூக மற்றும் பொருளாதார சட்டமியற்று நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூறுதல்;

3) மாநிலங்களுக்கிடையேயான மற்றும் மைய—மாநிலங்களுக்கு இடையேயான நல்லுறவுகளுக்கான வழிவகைகள் குறித்து ஆலோசனை கூறுதல்;

4) நீதி மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்கள் தொடர்பாக உகந்ததும், விரைவானதுமான நடைமுறைகளுக்காக ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் கூறுதல்;

5) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமல்லாது, இந்த மாநிலத்திற்கும் பொருந்துகிற மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகள் குறித்து ஆலோசனை கூறுதல்;

ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

மாநிலச் சட்ட ஆணையம், இதுவரையில், பின்வரும் பொருள் குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது:-

(1) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இயற்றப்பட்ட "நீக்கறவு செய்யப்படாத தமிழ்நாடு ஒழுங்குமுறை விதிகள்".

(2) தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துகிற மையச் சட்டங்கள்.

(3) 1884 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம நீதிமன்றங்கள் சட்டத்தின் பொருள்வழி "கிராமத்தினருக்கு நீதி வழங்குதல்".

(4) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு சட்டம்.

[2004 ஜூலை 26

(5) 1867 மற்றும் 1891 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வகைமுறைகள் விளக்கச் சட்டம்.

(6) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் கேலி தடைச் சட்டம்.

(7) 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம்.

**மாநில ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு**

1965 ஆம் ஆண்டு முதன்முதலாக, மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம், சட்டச் சொற்களை அறுதி செய்து, சட்டச் சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

2. மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்கீழும், சட்டத் துறை கூடுதல் செயலாளரின் தலைமையிலும், சட்டத் துறையின் ஒரு பிரிவாக 1992 ஆம் ஆண்டு, சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் மொழிபெயர்த்து வருகிறது.

3. மைய மற்றும் மாநிலச் சட்டங்களின் மொழிபெயர்ப்பினைத் துரிதப்படுத்துவதில், அரசு அக்கறை கொண்டிருப்பதன் காரணமாக சட்டக் கல்லூரி ஆசிரியர்களின் பணியுடன் கூடுதல் பணியாக அவர்களிடம் மொழிபெயர்ப்புப் பணியினையும் அளிக்க அரசு முன் வந்துள்ளது. சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு, சட்டத் துறையின் சட்ட ஆட்சி மொழிப் பிரிவில் உள்ள அனுபவம் மிக்க பிரிவு அலுவலர்களைக் கொண்ட குழுக்களால், அரசு கூடுதல் செயலாளரின் மேற்பார்வையின்கீழ், கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. மையச் சட்டங்களை மொழி பெயர்த்து புத்தகவடிவில் அச்சிடுவதற்கான செலவினை, மைய அரசு ஏற்றுக் கொள்ளும். மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை, மாநில அரசு மேற்கொள்கிறது. இந்த மூன்று ஆண்டுக் காலத்தில், 92 மையச் சட்டங்களும், 45 தமிழ்நாடு சட்டங்களும், ஆக 137 சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தக வடிவில் அச்சிடப்பட்டுள்ளன.



2004 ஜூலை 26]

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்**

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படும் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகளும், சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், 2002–2003 ஆம் கல்வியாண்டில் சிறப்புச் சட்டப் பள்ளியினையும், 2003–2004 ஆம் கல்வியாண்டில் செங்கல்பட்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரியையும் நிறுவியுள்ளது. மேலும், உரிய காரணங்களைக் கருத்திற்கொண்டு, மாநிலத்தில் புதிய சட்டக் கல்லூரிகளைத் துவங்க தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் பின்வரும் சிறப்புப் பிரிவுகளில் முழுநேர முதுகலைச் சட்டப் படிப்புகளைத் துவங்கியுள்ளது:-

1) வணிகச் சட்டம்

2) அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் சட்ட ஒழுங்கு

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வேலைவாய்ப்பு அளித்திடும் காப்புறுதி மற்றும் நடைமுறைபற்றிய முதுகலை பட்டயப் படிப்பு, தொலை தூரக் கல்வித் திட்டத்தின்கீழ் துவங்கியுள்ளது. இந்தப் பிரிவில் தேர்ச்சி பெறும் மாணவர்கள், யுனைடெட் இந்தியா நிறுவனத்தால் முகவர்களாகப் பணியமர்த்தப்படுவர்.

உலகமயமாக்கலின்பொருட்டு, சட்டக் கல்வியில் ஏற்பட்டுள்ள தாக்கத்தினைக் கருதியும், புதிய சிறப்புப் பாடப் பிரிவுகளை அறிமுகம் செய்யும் நோக்குடனும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் (1) அறிவுசார்ந்த சொத்துரிமை, (2) பன்னாட்டுச் சட்டங்கள் ஆகிய இரண்டு புதிய முழு நேர சட்ட மேற்படிப்புப் பிரிவுகளை, 2005 ஆம் ஆண்டில் துவங்க உத்தேசித்துள்ளது.

## 2004–2005 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்

(ரூபாய் இலட்சங்களில்)

| தொடர் எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2004-2005-ல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் | வருவாய்க் கணக்கில் செலவு | மூலதனக் கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | சட்டப் புத்தகங்களை வாங்குதல் (சட்டத்துறை நூலகம்) | 0.00 | 3.00 | 3.00 | 3.00 | 0.00 | 0.00 | 3.00 |
| 2. | அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களுக்குச் சட்டப் புத்தகங்கள் வாங்குதல் | 7.50 | 0.00 | 7.50 | 7.50 | 0.00 | 0.00 | 7.50 |
| 3. | திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரிகளில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல் | 0.00 | 20.00 | 20.00 | 0.00 | 20.00 | 0.00 | 20.00 |
| 4. | மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு தொலை நகலி மற்றும் படிப்பெருக்கி இயந்திரங்கள் வாங்குதல் | 0.00 | 4.00 | 4.00 | 4.00 | 0.00 | 0.00 | 4.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு நீரை தூய்மைப் படுத்தும் மின்னணுசாதனத்துடன் கூடிய நீர் குளிரூட்டும் சாதனம் வாங்குதல் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| 6. | திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் கூடுதலாக ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுதல் | 0.00 | 5.45 | 5.45 | 5.45 | 0.00 | 0.00 | 5.45 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுதல் | 0.00 | 105.00 | 105.00 | 0.00 | 42.00 | 0.00 | 42.00 |
| 8. | கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுதல் | 0.00 | 85.00 | 85.00 | 0.00 | 34.00 | 0.00 | 34.00 |
| 9. | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்விக்கான சிறப்பு துறைக்காக (முதல் மாடி) கட்டடம் கட்டுதல் | 0.00 | 75.00 | 75.00 | 0.00 | 75.00 | 0.00 | 75.00 |

[2004 ஜூலை 26

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10. | செங்கல்பட்டு சட்டக் கல்லூரி நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்குதல் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| 11. | செங்கல்பட்டு சட்டக் கல்லூரிக்கான அறைகலன்கள் வாங்குதல் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| மொத்தம் ( நிலை நிதிக் குழுவால் ஏற்பளிக்கப்பட்டது) | | 7.50 | 303.45 | 310.95 | 25.95 | 171.00 | 0.00 | 196.95 |



2004 ஜூலை 26]

## இணைப்பு - V

*(50 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

### அத்தியாயம் - 1

**முன்னுரை**

தமிழக அரசு, "அனைவருக்கும் நல வாழ்வு" அளிப்பதில், குறிப்பாக, பொருளாதார ரீதியில் நலிந்த நிலையிலுள்ள ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, அவர்களுக்குப் பெரிதும் தேவைப்படுகிற நலவாழ்வு வசதிகளை அளிப்பதில் உறுதி கொண்டுள்ளது. நோய்த் தடுப்பு, மருத்துவச் சேவை எளிதில் கிடைப்பது, மருத்துவர்களைப் போதிய அளவில் நியமனம் செய்வது, அனைவருக்கும் தரமான மருத்துவ வசதி கிடைக்கச் செய்தல், ஆகியவற்றை இந்த அரசு தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறது. இதனை மேலும் உறுதி செய்யும் வகையில், ஒப்பற்ற சுகாதாரக் கொள்கை ஒன்றை, இவ்வரசு உருவாக்கி வருகிறது. நமது சமுதாயத்தை, ஆரோக்கியமான ஒன்றாக உருவாக்குவதில், இவ்வரசு 2004–2005 ஆம் ஆண்டில் கவனம் செலுத்தும்.

2000 ஆம் ஆண்டில், குழந்தை இறப்பு விகிதம், ஆயிரத்திற்கு 51 என்ற நிலையிலிருந்து, 2002 ஆம் ஆண்டில், ஆயிரத்திற்கு 44 என்ற அளவிற்குக் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்திருப்பதும், இதேபோன்று, அதே கால அளவில், பிறப்பு விகிதம், ஆயிரம் மக்கட் தொகைக்கு 19.3 என்ற அளவிலிருந்து 18.5 என்ற அளவிற்குக் குறைந்திருப்பதும், இம் மாநில மக்களின் நல்வாழ்வை மேம்படுத்த, இந்த அரசு பின்பற்றி வரும் செறிவார்ந்த கொள்கைத் திட்டத்திற்கும், அதனைச் செயல்படுத்துவதில் அரசு காட்டும் ஆர்வத்திற்கும் சான்று பகரும் குறியீடுகளாகும். எனினும், 2004–2005 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பல்நோக்கு அணுகுமுறை ஒன்றின் மூலம், சுகாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எய்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். முதற்கட்டமாக, மருத்துவர்கள் நியமனம், தங்கு தடையின்றி மருந்துப்

பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றின் மூலம் கிராமப் பகுதிகளிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில், மருத்துவச் சேவையை வலுப்படுத்துவதில், அரசு பெரிதும் கவனம் செலுத்தி வருகிறது. நிலை உயர்த்தப்பட்ட ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும், ஒப்பந்த அடிப்படையில் கூடுதலாக ஒரு மருத்துவரை நியமித்தல், நிலை உயர்த்தப்பட்ட அனைத்து ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் நோயைக் கண்டறிவதற்கான மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை, கிராமப்புற மக்களுக்குச் சிறந்த மருத்துவச் சேவையை அளிக்கும்வகையில் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள், குறிப்பிடத் தகுந்தவையாகும்.

இந்த ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும், இரண்டு மருத்துவமனைகளை அனைத்து வசதிகளையும் கொண்ட 24 மணி நேர அவசரகால மகப்பேறு மற்றும் மகவு காப்பு மையங்களாக நிலை உயர்த்தி, 24 மணி நேரமும் இயங்கச் செய்வதன்மூலம், மகப்பேறின்போது தாய்மார்கள் இறப்பு விகிதம் குறையும். இதுபோலவே, இம்மருத்துவமனைகளில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குப் பல்வகை அவசர சிகிச்சை கவனிப்பின்மூலம், குழந்தை இறப்பு விகிதம் மேலும் குறைக்கப்படும்.

உலக வங்கி உதவி பெற்று தமிழ்நாடு மருத்துவமனைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம், இம்மாநிலத்தில் உள்ள மருத்துவமனைகளின் வளர்ச்சியும், மேம்பாடும் விரைவுபடுத்தப்படும். மேம்படுத்தப்பட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், சாதனங்கள், சிறந்த பயிற்சி பெற்ற மற்றும் பணி ஆர்வமிக்க பணியாளர்கள் ஆகியவற்றைக் கொண்ட இந்த மருத்துவமனைகள் அளிக்கும் நல்ல தரமான மருத்துவப் பணிகள், சமுதாயத்தின் வசதி வாய்ப்பற்ற மற்றும் வறிய பிரிவினருக்குப் பெருமளவில் பயனளிக்கும். தமிழ்நாடு மருத்துவமனைகள் மேம்பாட்டுத் திட்டம், உலக சுகாதார நாள் முதற்கொண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

பாடத் திட்டத்தையும், பாட முறையையும் திருத்தியமைப்பதன்மூலம், மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். மக்களின் வாழ்க்கைமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால், புதுப் புது நோய்கள் பரவி வருவதும், எச். ஐ. வி. / எய்ட்ஸ் நோய் குறித்த பயமும், மக்கள் நல்வாழ்வு குறித்து திட்டமிடுவோர் மற்றும் நிருவாகிகளைத் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றன. எனவே, பொருத்தமான பழக்க வழக்க மாற்ற





உத்திகள்மூலம் உடல்நலத்தை மேம்படுத்துதல் மற்றும் நோய்களைத் தடுத்தல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இம்மாநிலம், சுகாதாரப் பணியில் ஒரு முன்னோடி மாநிலமாக உருவெடுத்து வருகிறது. இவ்வாண்டில் ஏனைய மாநிலங்கள்/ நாடுகளைச் சேர்ந்த மக்கள், தங்களால் முடிந்த செலவில் மருத்துவச் சிகிச்சைகளைப் பெற இயலும்பொருட்டு, இம்மாநிலத்தைச் சேர்ந்த பெரிய மருத்துவமனைகளில் தற்போதுள்ள மருத்துவ வசதிகளை மேலும் மேம்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. இதற்காக, வெளிநாடுகளிலிருந்து வரும் நோயாளிகளுக்கு, மருத்துவ வசதிகளை அளிக்கும் நோக்குடன் இவ்வரசு பெரிய மாநகரங்களில் உள்ள நிறுவன ரீதியிலான மருத்துவமனைகளுடன், பயனுள்ளவகையில் பேச்சுவார்த்தை நடத்தி செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும். மேலும் இவ்வரசு, சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி அரசு மருத்துவமனையில் உள்ள இந்திய முறை மருத்துவத்திலும், சிறந்த மருத்துவப் பணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முடுக்கிவிடும். சென்னை, அரும்பாக்கத்தில் உலகத் தரம் வாய்ந்த இந்திய முறை மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்தில் சிகிச்சை பெறுவதற்காக இந்த மருத்துவமனை பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டவர்களை ஈர்க்கும்.

மருத்துவமனைகளின் பராமரிப்பு மற்றும் சுத்தமாக வைத்திருக்கும் பணியில், எத்தகைய சமரசத்திற்கும் இடமளிக்காமல் அரசு மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்காக வரும் புறநோயாளிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் முந்தைய முறையை அரசு ரத்து செய்துள்ளது. இந்நடவடிக்கை, சமுதாயத்தில் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு நிம்மதியையும், மன நிறைவையும் அளித்துள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறையில் முதலீடு செய்ய அரசு எடுத்த முடிவானது, நடைமுறை சார்ந்த, திட்டமிட்ட செயல்திட்டங்கள் வாயிலாக, பொதுத் துறையின்கீழ், மக்கள் நல்வாழ்வுப் பணியில் ஒரு முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க தொலைநோக்கு உணர்வோடு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

[2004 ஜூலை 26

மானியக் கோரிக்கை எண் 18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை என்பதன்கீழ் 2004–2005 ஆம் ஆண்டுக்கு ரூ.1387.58 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரம் வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| கோரிக்கை | திட்டத்தில் சேராதது | திட்டப்பணிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | மாநிலத் திட்டம் | மத்திய அரசு பொறுப் பேற்பவை | மத்திய அரசு நிதியுதவி பெறுபவை | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | 975.54 | 170.33 | 188.70 | 52.86 | 411.89 |

(ரூபாய் கோடியில்)

| மானியக் கோரிக்கை | திட்டப்பணிகள் மற்றும் திட்டத்தில் சேராதது | கூட்டுக-திருப்பி வசூலிப்பவை | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) |
| 18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | 1387.43 | 0.15 | 1387.58 |

மானியக் கோரிகை எண் 18: மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை என்பதன்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் இயக்ககம் வாரியான நிதி ஒதுக்கீடு வருமாறு:



2004 ஜூலை 26]

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 335.44 |
| 2 | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் | 26755.23 |
| 3 | மருத்துவக்கல்வி இயக்ககம் | 45346.46 |
| 4 | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் | 51060.74 |
| 5 | குடும்ப நல இயக்ககம் | 7076.88 |
| 6 | மருந்து கட்டுப்பாடு இயக்ககம் | 513.81 |
| 7 | இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் | 5136.47 |
| 8. | தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத்துறை | 1032.65 |
| 9. | டேனிடா தமிழ்நாடு பகுதி நல்வாழ்வுத் திட்ட இயக்ககம் | 0.35 |
| 10 | பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்ட இயக்ககம் | 1500.45 |
| | மொத்தம் | 138758.48 |

அ பொதுப்பணித் துறை மேற்கொள்ளும் கட்டட பணிகள் வகையில் ரூ.39.26 கோடி கோரிக்கை எண் 38–ன்கீழ் ஒதுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட இயக்ககங்களின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆ மாநில தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளுக்காக மானியக் கோரிக்கை எண் 31 தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்பு என்பதன்கீழ் ரூ.85.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இ தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் நோய் கட்டுப்பாடு சங்கத்திற்கான நிதி, மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 26

# அத்தியாயம் -2

## மருத்துவக் கல்வி

மருத்துவக் கல்வி இயக்ககம் 1966 ஆம் ஆண்டு ஜூலை முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்ககத்தின் முதன்மை நோக்கங்களை பின்வருமாறு விரிவாக வகைப்படுத்தலாம்.

1. மருத்துவக் கல்வியை மேம்படுத்துதல்.

2. மருத்துவக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகள் நிருவகித்தல்.

3. தேர்வுக் குழுவை சீரிய முறையில் கண்காணித்தல்.

### மருத்துவக் கல்லூரிகள்

மாநிலத்தில் தற்போது 11 மருத்துவக் கல்லூரிகளும் 1 பல் மருத்துவக் கல்லூரியும், 2 இயன்முறை மருத்துவக் கல்லூரிகளும், 2 செவிலியர் பயிற்சி கல்லூரிகளும் அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்த இயக்ககத்தின் கீழுள்ள 43 மருத்துவமனைகளில் உள்ள மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 21238 ஆகும். நாளொன்றுக்கு முறையே 19802 மற்றும் 69381 அகநோயாளிகளும் புற நோயாளிகளும் சராசரியாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இடங்களின் எண்ணிக்கை.

(அ) பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பில் உள்ள இடங்களின் எண்ணிக்கை:

| படிப்பின் பெயர் | மொத்த இடங்கள் |
|---|---|
| எம்.பி.பி.எஸ் | 1305 |
| பி.டி.எஸ். | 100 |
| பி.எஸ்.ஸி ( செவிலியர்) | 50 |
| இயன்முறை மருத்துவம் | 50 |
| மருந்தாக்கியல் (இளநிலை) | 110 |
| செவிலியர் பட்டயப் படிப்பு | 1745 |



2004 ஜூலை 26]

(ஆ) பட்ட மேற்படிப்பில் உள்ள சிறப்பு படிப்புகள் மற்றும் அவற்றிற்கான இடங்களின் எண்ணிக்கை

| பாடத்திட்டம் | சிறப்பு படிப்பு எண்ணிக்கை | மொத்த சேர்க்கை இடங்கள் |
|---|---|---|
| பட்ட மேற்படிப்பு | 22 | 426 |
| பட்டய மேற்படிப்பு | 15 | 460 |
| எம்.டி.எஸ் | 7 | 18 |
| உயர் சிறப்பு மேற்படிப்பு | 15 | 73 |
| மருந்தாக்கியல்(முதுநிலை) | 4 | 12 |
| எம்.எஸ்.ஸி (செவிலியர்) | 4 | 8 |

தனியார் துறையில் செயல்பட்டு வரும் சுயநிதி மருத்துவக் கல்லூரி மற்றும் துணை மருத்துவக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை.

| கல்லூரிகள் | மொத்த கல்லூரிகள் | மொத்த இடங்கள் |
|---|---|---|
| ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரி, பெருந்துறை (ஓரளவு அரசு சார்ந்த கல்லூரி) | | 60 |
| மருத்துவக் கல்லூரிகள் | 2 | 200 |
| பல் மருத்துவக் கல்லூரிகள் | 6 | 420 |
| மருந்தாக்கியல் கல்லூரிகள் | 32 | 1630 |
| இயன்முறை மருத்துவம் (இளநிலை) | 41 | 1925 |
| செவிலியர் (பட்டப்படிப்பு) | 35 | 1580 |
| தொழில் வழி சிகிச்சை | 6 | 275 |

[2004 ஜூலை 26

**மாணவர் தெரிவு முறை**

மருத்துவம்/பல் மருத்துவம்/செவிலியர்/இயன்முறை மருத்துவம்/தொழில் வழி மருத்துவம்/மருந்தாக்கியல் ஆகிய இளநிலை பட்டப்படிப்புகளுக்கு மருத்துவக் கல்வி இயக்குநரின் தலைமையிலான தேர்வுக்குழு ஒவ்வொராண்டும் அறிவிக்கப்படும் அரசின் கொள்கைக்கிணங்க, ஒற்றைச் சாளர முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு, முதுநிலை பல் மருத்துவம், உயர் சிறப்பு மேற்படிப்பு ஆகிய இடங்களுக்கு இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றி பொது நுழைவுத் தேர்வினை தொடர்ந்து கலந்தாய்வு மூலம் தேர்வுக் குழுவால் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். பட்டயப் படிப்பு (செவிலியர்) இடங்களுக்கும் மதிப்பெண் (+2 மதிப்பெண்) மற்றும் கலந்தாய்வு மூலம் தேர்வுக்குழுவால் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

**மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகள்**

தேனியில் அரசு புதிய மருத்துவக் கல்லூரி துவங்க முடிவு செய்துள்ளது. இந்தக் கல்லூரிக்காக ஆண்டிப்பட்டி வட்டம், சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் 19.27.0 ஹெக்டர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஹட்கோ கடன் உதவியுடன் ரூ.12 கோடி செலவில், இக்கல்லூரிக்காக 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மத்திய அரசின் அனுமதி பெறுவதற்கான செயற்குறிப்பு 2004 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அனுப்பப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் புதிய மருத்துவக் கல்லூரி துவங்க மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் முதற்கட்ட இசைவுக் கடிதம் அளித்துள்ளது.

வேலூரில் புதிய மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

**ஐந்து மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான இடங்களை அதிகரித்தல்**

எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்குக் கூடுதலாக 315 இடங்களை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. கீழ்ப்பாக்கம், செங்கற்பட்டு,



2004 ஜூலை 26]

திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய 5 அரசு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான இடங்கள் அதிகரிக்கப் பட்டிருக்கின்றன. சாதனங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்க அரசு ரூ.1.00 கோடி வழங்கியுள்ளது. 5 மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் கட்டடங்கள் கட்ட ஹட்கோ நிறுவனம் கடனாக ரூ.10.00 கோடி அனுமதித்துள்ளது. இந்திய மருத்துவக் கழகம், மேற்குறிப்பிட்டுள்ள 5 மருத்துவ கல்லூரிகளிலும் உள்ள அனைத்து வசதிகள் பற்றி ஆய்வு செய்துள்ளது. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் 2004–2005 கல்வி ஆண்டு முதல் எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான இடங்களை 110–லிருந்து 150 ஆக அதிகரிக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. எஞ்சிய மருத்துவக் கல்லூரிகளுக்கு இந்திய மருத்துவக் கழக அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

**செவிலியர் கல்வி**

கீழ்க்கண்ட இடங்களில் புதிதாக 11 செவிலியர் பயிற்சி பள்ளிகளைத் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது. செவிலியர் பயற்சி பள்ளிகள் ஒவ்வொன்றிலும் 50 மாணவியர் சேர்க்கப்படுவர்:–

1. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, காஞ்சீபுரம்.
2. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, கடலூர்.
3. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.
4. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, திண்டுக்கல்.
5. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, உதகமண்டலம்.
6. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்.
7. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டினம்.
8. அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை.
9. அரசு செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சங்கற்பட்டு.

[2004 ஜூலை 26

10. அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தூத்துக்குடி.

11. அரசு கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நாகர்கோவில்.

ஏற்கெனவே உள்ள பின்வரும் 9 செவிலியர் பயிற்சி பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அரசு அதிகரித்துள்ளது:

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை

2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை

3. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை

4. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை

5. அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.

6. அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

7. அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனை, திருச்சி.

8. அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்.

9. அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்

### புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

தற்போது கீழ்க்காணும் மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் பொருட்டு மத்திய அரசு உதவியுடன் கோபால்ட் தெரபி சாதனம் நிறுவப்பட்டு புற்றுநோய் நோயாளிக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது,

1. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை

2. அரசு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை.



2004 ஜூலை 26]

3. அரசு பொது மருத்துவமனை, சென்னை

4. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை

5. அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.

6. அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

7. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை

8. அரசு கோயம்புத்தூர் மருத்துவமனை, கோயம்புத்தூர்.

9. அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, காஞ்சிபுரம்.

சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கோபால்ட் தெரபி சாதனம் நிறுவிட மத்திய அரசு ரூ.2.00 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

### மார்பகப் புற்றுநோயைக் கண்டறிவதற்கான சாதனம் (Mammo graphy Units)

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றிற்கு 2003–2004 ஆம் ஆண்டு மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கான சாதனம் வழங்கப்பட்டது. இச்சாதனம் ஏற்கெனவே அங்கு நிறுவப்பட்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

### மனநல மருத்துவம்

சென்னை, அரசு மனநல காப்பகம் வலுப்படுத்தப்பட்டு நடைமுறை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ரூ1.5 கோடி செலவில் நிருவாகப் பிரிவிற்கான புதிய கட்டடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மனநல நோயாளிகளுக்குரிய உணவுச் செலவு நாளொன்றுக்கு ரூ.9.64-லிருந்து ரூ 13.70 ஆக உயர்த்தப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் மானிய உதவியைக் கொண்டு ஒவ்வொன்றும் ரூ.8.00 இலட்சம் செலவில் மூன்று போதை பழக்கத்திலிருந்து விடுவிக்கும்

மையங்கள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இத்தகைய 8 நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**இரத்த சேமிப்பு வங்கி:**

மருத்துவக் கல்லூரி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் கீழ்க்காணும் 22 அரசு மருத்துவமனைகளில் உள்ள இரத்த சேமிப்பு வங்கிகள் அரசு உரிமம் பெற்று செயல்பட்டு வருகின்றன.

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை
3. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை
4. அரசு சிறார் நல நிலையம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை
5. மகளிர் நோயியல் நிலையம் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை
6. அரசு ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, சென்னை
7. அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை
8. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை
9. அரசு புறநகர் மருத்துவமனை, அண்ணா நகர், சென்னை
10. அரசு புறநகர் மருத்துவமனை, கே.கே.நகர், சென்னை
11. அரசு புறநகர் மருத்துவமனை, தண்டையார்பேட்டை, சென்னை
12. அரசு நெஞ்சக நோய் சிகிச்சை மருத்துவமனை, தாம்பரம், சென்னை.
13. அரசு செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு
14. அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்





15. அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்
16. அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனை, திருச்சி
17. அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்
18. அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.
19. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை.
20. அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.
21. அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தூத்துக்குடி
22. அரசு கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கன்னியாகுமரி.

**கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பகுதி**

மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் கட்டணம் செலுத்தி சிகிச்சைப் பெறும் மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்துவது குறித்து ஆலோசனை தெரிவிக்க அரசு கீழே குறிப்பிட்டவர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது:

| | |
|---|---|
| நிருவாக இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் | தலைவர் |
| மருத்துவக் கல்வி இயக்குநர் | உறுப்பினர் |
| மருத்துவம் மற்றும் ஊரக நல பணிகள் இயக்குநர் | உறுப்பினர் |
| பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் | உறுப்பினர் |

மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பின்வரும் மருத்துவமனைகளில் பணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவை ஏற்படுத்த குழு பரிந்துரை செய்தது.

1. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை
2. அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை, சென்னை
3. அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனை, திருச்சி
4. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை (40 படுக்கைகள்)

இதன்படி சென்னையிலுள்ள அரசினர் கஸ்தூரிபா காந்தி தாய்சேய்நல மருத்துவ மனையில் 40 படுக்கைகளைக் கொண்ட கட்டண சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்ற மூன்று மருத்துவமனைகளிலும் இத்தகைய கட்டணப் பிரிவுகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## கிங் நோய் தடுப்பு மருந்து நிறுவனம்

கிண்டியிலுள்ள கிங் நோய் தடுப்பு மருந்து நிறுவனம், நாட்டிலுள்ள தலைசிறந்த ஆய்வுக் கூடங்களில் ஒன்றாகும். இந்த நிலையத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் ஊநீர் (SERUM) தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு கற்பிக்கும் மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனத்தின் நோய் நுண்ம நச்சாய்வு பிரிவு, இந்திய அரசாலும், உலக சுகாதார நிறுவனத்தாலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான தேசிய இளம் பிள்ளை வாத நோய்த் தடுப்பு ஆய்வகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் 2003 ஆம் ஆண்டில் இரண்டு விஞ்ஞான ஆராய்ச்சி மாணவர்களுக்குத் தட்டம்மைக்கான பயிற்சியை அளித்துள்ளது. 2004–05 ஆம் ஆண்டில் மூன்று மில்லியன் டோஸ் இரண ஜன்னி நோய் தடுப்பு மருந்து உற்பத்தி இலக்கை எட்ட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் 1988ம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மருத்துவம், மருத்துவம் சார்ந்த மேற்படிப்புக்கான கல்வித் தரத்தை விழுமிய நிலைக்கு உயர்த்துவது இதன் நோக்கமாகும்.

### அ. இரத்தம் ஏற்றும் மருத்துவத் துறை

இரத்தம் ஏற்றும் மருத்துவத் துறை, இரத்தத்தைச் சேகரித்தல், அதனை ஆய்வு செய்தல், பாதுகாத்தல், இரத்தம் ஏற்றும் செய்முறை



ஆகிய பணிகளைச் செய்வதுடன் இரத்தப் பொருட்களான இரத்த சிவப்பணுக்கள், புதிய உறைந்த பிளாஸ்மா, செறியூட்டப்பட்ட பிளேட்லெட், கிரையோபிரிசிபிடேட் போன்றவைகளை 24 மணி நேரமும் வழங்கி வருகிறது. ஒவ்வொரு மாதமும் இரத்த தான முகாம்கள் நடத்தப்படுகின்றன. இத்துறையில் எம்.டி. (இரத்தம் ஏற்றும் மருத்துவம் மற்றும் தடுப்பாற்ற இயல்) படிப்பு தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆ. வட்டார மருத்துவ நூலகம்

இந்நூலகத்தில் ரூ.34.00 இலட்சம் செலவில் மத்தியத் திட்டக் குழுவிடம் உதவி பெற்று டிஜிட்டல் நூலகம் ஒன்று தொடங்கப்பட்டது. இந்த நூலகத்தில் ரூ.85.00 லட்சம் செலவில் மத்தியத் திட்டக் குழு உதவியுடன் இணைய நூலகம் உருவாக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து மருத்துவ நிலையங்களையும் இப்பல்கலைக்கழக டிஜிட்டல் நூலகத்துடன் இணைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### இ. பாடத் திட்ட மேம்பாட்டுத் துறை

காலத்தின் தேவைகளுக்கேற்றவாறு மருத்துவம் மற்றும் துணை மருத்துவ துறைகளின் பாடத் திட்டத்தைப் புதிய நோக்கில் மேம்படுத்துவதே இத்துறையின் நோக்கமாகும். 45 மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களுக்கு புதுவை, ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் கல்வி முறை பற்றிய உயர்நிலை பயிற்சி அளிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இப்பல்கலைக் கழகத்தில் மருத்துவ கோட்பாடுகள் பற்றி பயிற்சி அளிக்க உலக சுகாதார அமைப்பு மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் உதவியுடன் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஈ. கொள்ளை நோயியல் துறை

25,000 பேருக்கு மேல் உள்ள மதுரமங்கலம் பகுதியில், பொது சுகாதார இயக்குநரால் நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற கடுமையான நோய்களைத் தொடர் சிகிச்சை மூலம் போக்குவது குறித்து கள ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எம்.எஸ்.ஸி. (கொள்ளை நோய்) படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. மருத்துவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவக் கல்லூரிகளின் கள நடைமுறை மையங்கள் மூலம் மரணம் தொடர்பான மருத்துவச் சான்றளிக்கும் நடைமுறைகளை மேம்படுத்துவது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

**உ. சோதனை மருத்துவத் துறை**

இத்துறை, எச்.ஐ.வி. சோதனையில் குறித்த தர மதிப்பீட்டிற்கான தேசிய ஒருங்கிணைப்பு மையமாக விளங்குகிறது. மேலும், மத்திய அரசின் தர நிர்ணயம் செய்வதற்குத் தேசிய அளவில் தேர்வு செய்யப்பட்ட மையமாகவும், தென்னிந்தியாவில் தாய்சேய் திட்டத்தினை செயல்படுத்த சென்னையில் மூன்று மையங்களும், கர்நாடகாவில் ஒரு மையத்திற்கும், ஆந்திராவில் ஒரு மையத்திற்கும், ஆக 5 மையங்களுக்கு, ஒருங்கிணைப்பு மையமாக இத்துறை செயல்படுகிறது. இம்மருத்துவமனைகளுக்கு வரும் கருவுற்ற தாய்மார்களுக்கு எச்.ஐ.வி. பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

## 2004-2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. கீழ்க்காணும் அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ.100.00 இலட்சம் மொத்தச் செலவில் மருத்துவச் சாதனங்கள் மற்றும் அறைக் கலன்கள் வழங்குதல்.

   அ) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.

   ஆ) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு

   இ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.

   ஈ) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம்

   உ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி

2. சென்னை தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பட்டமேற்படிப்பு கட்டடத் தொகுதியில் தற்போதுள்ள முதல் தளத்திற்கு மேலே ரூ. 80.00 இலட்சம் மொத்தச் செலவில் கூடுதல் தளம் கட்டுதல்.

3. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.70.00 இலட்சம் மொத்தச் செலவில் நீராவி சலவையகம் கட்டுதல்.

4. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ 15.00 இலட்சம் மொத்தச் செலவில் 160 கிலோவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வாங்குதல்.



5. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ 150.00 இலட்சம் மொத்தச் செலவில் கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பு கட்டுதல்.

6. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ 160.00 இலட்சம் மொத்தச் செலவில் மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டுதல்.

7. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ 11.00 இலட்சம் மொத்தச் செலவில் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைத்தல்.

8. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ. 60.00 இலட்சம் மொத்தச் செலவில் படியடுக்கு அமைப்பு கொண்ட விரிவுரைக் கூடம் கட்டுதல்.

9. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டடத்தில் ரூ.20.00 இலட்சம் மொத்தச் செலவில் ஒரு மின்தூக்கியைப் புதுப்பித்தல் மற்றும் புதிதாக வாங்குதல்.

10. சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.20.00 இலட்சம் மொத்தச் செலவில் மயக்கமருந்தியல் துறையை வலுப்படுத்துதல்.

11. சென்னை, தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை, புறநோயாளிகள் பிரிவை ரூ 6.50 இலட்சம் மொத்தச் செலவில் விரிவுபடுத்துதல்.

12. திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் ரூ 10.00 இலட்சம் மொத்தச் செலவில் விலங்ககம் ஒன்று கட்டுதல்.

13. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் ரூ. 60.00 இலட்சம் மொத்தச் செலவில் விலங்ககம் ஒன்று கட்டுதல்.

## அத்தியாயம் – 3

## மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், மாவட்டங்களில் மருத்துவப் பணிகள் குறித்த அனைத்தையும் திட்டமிட்டு நிறைவேற்றும் பொறுப்பில் உள்ளார். அவர், சங்கிலித் தொடர்போல் இணைக்கப் பெற்ற 29 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள், 156 வட்ட தலைமையிட மருத்துவமனைகள், 80 வட்டம் சாரா மருத்துவமனைகள், 12 மருந்தகங்கள், 11 நடமாடும் மருத்துவப்பிரிவுகள், 7 தாய் சேய் நல மருத்துவமனைகள், 2 காசநோய் மருத்துவமனைகள், 2 காசநோய் மருந்தகங்கள் மற்றும் தொழுநோய் மருத்துவமனைகள் வாயிலாக மருத்துவ நலப் பணிகளை வழங்கும் பொறுப்பு வகிக்கிறார். மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், அரசால் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்படும் கொள்கை முடிவுகளை செயலாற்றும் அதிகாரி ஆவார். மேலும் தன் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ நிறுவனங்களின் வாயிலாக குணப்படுத்தும் தன்மை குறித்த நலப் பணிகளையும் வழங்குகிறார். மேலும் அவர், மனித உள்ளுறுப்பு மாற்றுச் சட்டம் மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்தும் சட்டம், பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறை சட்டம், தனியார் மருத்துவமனைகளை அங்கீகரிக்கும் சட்டம் முதலிய பல்வேறு சட்டங்களின்கீழ் வருகின்ற திட்டங்களின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுகிறார்.

இம்மாநிலத்திலுள்ள 30 வருவாய் மாவட்டங்களில் சென்னை மாவட்டம் நீங்கலாக 29 மாவட்டங்களில் இத்துறையின் வாயிலாக மருத்துவசேவைப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. நிருவாக வசதிக்காக இந்த 29 மாவட்டங்களும் 42 நலப்பிரிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நலப்பிரிவு மாவட்டத்திலுள்ள மருத்துவ நிலையங்கள் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்பநலத் துறை இணை இயக்குநராலோ அல்லது துணை இயக்குநராலோ மேற்பார்வையிடப்படுகின்றன.

மருத்துவப் பணிகள் துணை இயக்குநர் (நெஞ்சக நோய் மருந்து) ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய் கட்டுப்பாட்டு திட்டத்தை மேற்பார்வையிடுகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மருத்துவப் பணிகள் துணை இயக்குநர்கள் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தை



மேற்பார்வையிடுகிறார்கள். தொழுநோய் களப்பணியாளர்களை பொது சுகாதாரப்பணியில் ஈடுபடுத்தவும், சுகாதார ஆய்வாளர்களை தொழுநோய் தடுப்பு பணியில் ஈடுபடுத்தவும் தொழுநோய் திட்டமானது ஏற்கெனவே பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

மாவட்டம், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் செய்யப்பட்ட மேம்பாடுகளில் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ வசதிகள், சிறப்பு மருத்துவப் பணிகள் அடங்கும்; அதாவது மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு மகளிர் நோயியல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, பால்வினைநோய், எலும்பு முறிவு அறுவை சிசிச்சை, மயக்க மருத்துவம், குழந்தை நல மருத்துவம், பல் மருத்துவம், மனநலம், நோய்குறியியல் ஆய்வகப் பணிகள், தொழுநோய், காசநோய், நீரிழிவுநோய், இருதய நோய், சிறுநீரக நோய் ஆகியவற்றிற்கான மூத்த அறுவைச் சிகிச்சை மருத்துவருக்கு இணையான சிறப்பு மருத்துவர்கள் மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ளனர். விபத்துக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்க விபத்து மற்றும் அவசர சிகிச்சை வசதிகள் உள்ளன. கல்விசாரா மருத்துவ நிறுவனங்களின் வாயிலாக, மகப்பேறு குழந்தை நலம் மற்றும் குடும்பநல பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கண் பார்வை இழப்புத் தடுத்தல், மருத்துவ வசதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம் முதலிய பிற மருத்துவ நலத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் அரசு மருத்துவமனைகள் வாயிலாக செயல்படுத்தப்படுகின்றன.

### அறுவை சிகிச்சை கூடங்களுக்குக் குளிர்சாதன வசதி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கொள்கை முடிவின்படி, 20 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 25 அறுவைச் சிகிச்சை கூடங்களுக்கும் 64 வட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலுள்ள 64 அறுவைச் சிகிச்சை கூடங்களுக்கும் குளிர்சாதன வசதி செய்து தரப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் நிதி ஆண்டில் 25, வட்ட மருத்துவமனைகளிலுள்ள 25 அறுவைச் சிகிச்சை கூடங்களுக்கு குளிர்சாதன வசதி செய்து தரப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 26

## அரசு மருத்துவமனைகளுக்கு மின் உற்பத்தி இயந்திர வசதி

அரசு எடுத்த கொள்கை முடிவின்படி, மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கும் வட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கும் மற்றும் வட்டம் சாராத மருத்துவமனைகளுக்கும் படிப்படியாக மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்கப்பட்டன. மீண்டும் அரசு எடுத்த கொள்கை முடிவின்படி 6 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு 75 கேவிஏ திறனுள்ள மின் உற்பத்தி இயந்திரங்கள் அனுமதிக்கப்பட்டன. 2003–2004 ஆம் ஆண்டில் . 3 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு 75 கே.வி.ஏ. மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்கப்பட்டன .

## தொலைபேசி வசதி

அரசு மருத்துவமனைகளுக்கு சிறந்த தொலைத் தொடர்பு வசதிகள் அமைப்பதற்காக, தொலைபேசி வசதி படிப்படியாக செய்து தரப்படுகிறது. 2001–2002 ஆம் ஆண்டில், 21 மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நல இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதி அமைக்கப்பட்டுள்ளது. மீண்டும் 2003–2004 ஆம் ஆண்டு 27 வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் தொலைபேசி வசதி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

## புதிய செவிலியர் பள்ளி நிறுவுதல்

கிராமப்புற பொதுமக்களுக்கு முறையான செவிலியர் சேவையை வழங்கும் நோக்கத்திற்காகவும், கிராமப்புறங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு செவிலியர் பணியை வாழ்க்கைத் தொழிலாக மேற்கொள்ள வாய்ப்பளிக்கவும், ஏழு புதிய செவிலியர் பள்ளிகள் கீழ்க்காணும் மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் தொடங்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும் 50 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

| | |
|---|---|
| காஞ்சீபுரம் | உதகமண்டலம் |
| கடலூர் | திருப்பூர் மற்றும் |
| இராமநாதபுரம் | நாகப்பட்டினம். |
| திண்டுக்கல் | |



2004 ஜூலை 26]

## 1994 ஆம் ஆண்டின் பிறப்பிற்குமுன் கருவின் தன்மையறி (ம் தொழில்நுட்பம் (பாலினத் தெரிவு செய்தலைத் தடுத்தல்) சட்டம்

பாதகமான பாலின விகிதாசாரத்தைக் கட்டுப்படுத்தவும், பெண்கருக் கொலையைத் தடுக்கவும், 1994 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்பம் (முறைப்படுத்தல் மற்றும் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல்) சட்டம் இம்மாநிலத்தில் திறம்பட செயல்படுத்தப்படுகிறது. மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் மற்றும் வட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்படி, இதுவரை 2534 "ஸ்கேன் மையங்கள்" பதிவு செய்யப்பட்டு கருவின் பாலினத்தை அறிவதைத் தடுக்க கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை பதிவு செய்யப்படாத 90 ஸ்கேன் மையங்கள் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. 61 ஸ்கேன் மையங்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 43 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மக்கள் தொடர்பு சாதனங்களில் பெருமளவில் விளம்பரம் செய்யப்படுகிறது .

## காசநோய் கட்டுப்பாட்டு திட்டம்

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் பேர் காசநோய் கிருமியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 1.5 இலட்சம் பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் காசநோய் ஏற்படுகிறது. இவர்களில் சுமார் 60 ஆயிரம் நோயாளிகள் மூலம் இந்நோய் தொற்று பரவுகிறது. இம்மாநிலத்தில் பத்து காசநோய் மருத்துவமனைகள் உள்ளன. அதில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் 2 மருத்துவமனைகளும், மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் 6 மருத்துவமனைகளும், தனியார் பொறுப்பில் இரண்டும் இயங்கி வருகின்றன.

மொத்தத்தில் அதி தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ள காசநோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கென்று 3654 படுக்கை வசதிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அருகில் உள்ள சிகிச்சை மையங்கள் மூலமாக மொத்த காசநோயாளிகளும் நேரடி சிகிச்சை முறையின் மூலம் சிகிச்சை பெறுகிறார்கள். சளிப் பரிசோதனை செய்வதற்காக 644 நுண்ணோக்கி மையங்கள் உள்ளன. மூன்று இயக்ககங்களுக்கும் இத்திட்டத்தை ஒருங்கிணைக்கவும் மேற்பார்வை செய்யவும் கூடுதல் இயக்குநர் நிலையில்

மாநில காசநோய் அலுவலர் ஒருவர் உள்ளார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின்கீழ் மாவட்ட காசநோய் தடுப்புச் சங்கம் ஒன்று உள்ளது. மாவட்ட காசநோய் அலுவலர் மாவட்ட அளவில் இத்திட்டத்தை ஒருங்கிணைக்கிறார். இத்திட்டம் உலக சுகாதார அமைப்பு மற்றும் சென்னை காசநோய் ஆராய்ச்சி மையம் மூலமாக தொழில்நுட்ப உதவி பெற்று வருகிறது. உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் பிற மருந்துகளுக்கான முழுச் செலவுகள் மற்றும் தகவல், கல்வி, தொலைத் தொடர்பு செயல்பாடுகள் உள்ளிட்ட ஒப்பந்தப் பணியாளர் அமைப்பு செலவுகளுக்கு உலக வங்கி உதவியுடன் மத்திய அரசின் உதவி பெறப்படுகிறது. 30 மாவட்டங்களில் உள்ள காசநோய் மையங்களில் பணிபுரியும் பணியாளர்களின் முழுச் செலவுகளை மாநில அரசு ஏற்கிறது. 2003–2004 ஆம் ஆண்டில் 6.4 இலட்சம் நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டதில், 90 ஆயிரம் நோயாளிகளுக்கு காசநோய் இருப்பது கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

## 2004–2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. பெரியகுளம் மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் மொத்தம் ரூ.32.00 இலட்சம் செலவில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டுதல்.

2. மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 12 அவசர ஊர்தி/அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக மொத்தம் ரூ.48 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வாங்குதல்.

3. சீர்காழி மற்றும் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசு வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் ரூ.64 இலட்சம் செலவில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டுதல்.

4. நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் ரூ.28.00 இலட்சம் செலவில் குளிர்பதன வசதிகளுடன் கூடிய பிணவறைப் பிரிவு கட்டுதல்.

5. வள்ளியூர் அரசு மருத்துவமனையில் ரூ.71. 89 இலட்சம் மொத்தச் செலவில் 10 படுக்கை வசதிகளுடன் கூடிய விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.



6. வட்ட தலைமையிட மருத்துவமனையில் ரூ.0.19 இலட்சம் செலவில் தொலைபேசி வசதிகள் செய்து கொடுத்தல் (3 எண்ணிக்கை)

7. மயிலாடுதுறை, சிவகாசி, மானாமதுரை, விருத்தாச்சலம், ஏற்காடு மற்றும் முதுகுளத்தூர் ஆகிய வட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் உள்ள 6 அவசர ஊர்தி / அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக ரூ.24.00 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வாங்குதல்.

8. வட்டம் சாரா 10 மருத்துவமனைகளில் 10 அறுவை சிகிச்சை கூடங்களுக்கு ரூ.6.10 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதிகள் செய்து கொடுத்தல்.

9. குமாரபாளையம் மற்றும் உதயரம்பாளையத்திலுள்ள வட்டம் சாரா மருத்துவமனைகளில் ரூ.22.60 இலட்சம் செலவில் மின் உற்பத்தி இயந்திரத்திற்கான கட்டடங்கள் கட்டுவதன் மூலம் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் 40 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் உற்பத்தி சாதனம் வழங்குதல்.

10. வட்டம் சாரா தலைமையிட 38 மருத்துவ மனைகளுக்கு ரூ.2.36 இலட்சம் செலவில் தொலைபேசி வசதி செய்து கொடுத்தல்.

11. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் அலுவலகத்திற்கு மொத்தம் ரூ.4.00 இலட்சம் செலவில் கணினி இணைப்பு மற்றும் துணை பாகங்கள் வழங்கி அலுவலக நிருவாகத்தை நவீனப்படுத்துதல்.

[2004 ஜூலை 26

## அத்தியாயம் – 4

## கண்பார்வை இழப்புக் கட்டுப்பாட்டு திட்டம்

தமிழ்நாட்டில், உலக வங்கி உதவி பெறும் கண்புரை பார்வை இழப்புக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை/பார்வை இழப்பு கட்டுப்பாட்டு தேசிய திட்டத்தை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்புக் கட்டுப்பாட்டுச் சங்கம் 1996 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை செயலாளர் தன் பதவி நிலையில் இதன் தலைவராக இருக்கிறார். திட்ட இயக்குநர், உறுப்பினர் செயலாளராக இருந்து இச்சங்கம தொடர்பான செயல்பாடுகளைக் கவனித்து வருகிறார். இந்தத் திட்டம், 30.6.2002 வரை உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டது அதன் பின்னர் "பார்வை இழப்புக் கட்டுப்பாட்டு தேசிய திட்டத்தின்" கீழ் மைய அரசின் உதவியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது இச்சங்கம் கண் புரை நீக்கும் அறுவை சிகிச்சை நடைபெறுவதையும கண் அறுவை சிகிச்சை செய்யப்படும் படுக்கை பிரிவுகளையும மேற்பார்வை செய்வதுடன், இது சம்மந்தமான மற்ற வசதிகளை அதிகரிக்கும் பணியையும் ஆற்றி வருகிறது.

இத்திட்டத்தை மாவட்ட அளவில் நல்ல முறையில் செயல்படுத்தவும், மேற்பார்வை செய்யவும் ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும், பார்வை இழப்புக் கட்டுப்பாட்டுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் இதன் தலைவராக செயல்படுகிறார். மருத்துவப் பணிகள் இணை இயக்குநர்/துணை இயக்குநர் மாவட்ட திட்ட மேலாளராக செயல்பட்டு மாவட்ட பார்வை இழப்பு கட்டுப்பாட்டுச் சங்கத்தின் செயல்பாடுகளை கவனித்து வருகின்றார்.

கண் புரை அறுவை சிகிச்சை செய்தல், பள்ளிச் சிறார்களுக்கு கண் பரிசோதனை செய்தல், கண் வங்கிக்குக் கண்களைச் சேகரிப்பது ஆகியவற்றிற்கான ஆண்டு இலக்கை மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் நிர்ணயிக்கிறது. மாவட்டங்களின் மக்கள் தொகையை பொறுத்து இந்த இலக்கு அவற்றிற்கிடையே பிரித்து மறு நிர்ணயம் செய்யப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதே மாவட்ட பார்வை இழப்புக் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் குறிக்கோளாகும்.





2004 ஜூலை 26]

கட்டணமின்றி கண்புரை நீக்கி, விழி உள்ளாடி பொருத்துதல் தொடர்பாக, மைய அரசு நிர்ணயித்த இலக்கை அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளின் முனைப்பான பங்கேற்புடன், எய்துவதே மாவட்ட பார்வை இழப்பு கட்டுப்பாட்டுச் சங்கத்தின் மிக முக்கியச் செயல்பாடு ஆகும். பள்ளிச் சிறார்களுக்கு கண் பரிசோதனை செய்வது, கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்காக கண் வங்கிகள் மூலம் கண்களைச் சேகரிப்பது, மற்றும் கண்களைப் பற்றிய செய்தி, கல்வி, தகவல் தொடர்பு ஆகியவை இத்திட்டத்தின் மற்ற செயல்பாடுகள் ஆகும்.

மாவட்ட பார்வை இழப்புக் கட்டுப்பாட்டுச் சங்கம் அடிக்கடி இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்துகிறது. இதுபோல நடத்த அரசு சாரா நிறுவனங்களுக்கும் ஆர்வம் ஊட்டுகிறது. கண் புரை உள்ளவர்கள் இந்த முகாம்களில் அடையாளம் கண்டறியப்படுகின்றனர். பின்னர் நேர்விற்கேற்ப அரசாங்க மருத்துவமனையில் அல்லது சம்பந்தப்பட்ட அரசு சாரா மருத்துவமனையில் செவ்வனே அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. அரசு சாரா நிறுவனங்களுக்கு ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்கும் ரூ.600/– அளிக்கப்படுகிறது. மருந்து, தையல் பொருட்கள், விழியுள்ளாடி பொருத்துதல், மூக்கு கண்ணாடி இவைகளுக்காக மேற்படி தொகை அளிக்கப்படுகிறது. இவற்றில் ஏதாவது இந்திய அரசால் அளிக்கப்பட்டால் அதனுடைய விலை மைய அரசால் அளிக்கப்படும் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளப்பட்டு மீதத் தொகை வழங்கப்படுகிறது. அரசு மருத்துவமனைகளுக்கு, கண் அறுவை சிகிச்சைக்குத் தேவையான சாதனங்கள், தையல் பொருட்கள், விழி உள்ளாடிகள் வழங்கப்படுகின்றன. மேலும், கண் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், செவிலியர், கண் மருத்துவ சார்பு உதவியாளர்கள் ஆகியோர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

பள்ளிச் சிறார்களுக்கான கண் பரிசோதனை திட்டத்தின்கீழ், மாவட்ட கண் பார்வை இழப்பு கட்டுப்பாட்டுச் சங்கம், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவை பள்ளிச் சிறார்களுக்குக் கண் பரிசோதனை செய்கின்றன. மாவட்ட கண் பார்வை இழப்பு கட்டுப்பாட்டுச் சங்கம் தகுதியுள்ள ஏழை மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வருகின்றது. அரசுத் துறையிலுள்ள கண் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மட்டுமின்றி அரசு சாரா அமைப்புகளுடன் சேர்ந்து மாவட்ட கண் பார்வை இழப்பு கட்டுப்பாட்டுச் சங்கம், கருவிழி மீட்பு சிகிச்சை மேற்கொள்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் கண்தானம் செய்ய விரும்புவோரிடமிருந்து அவர்கள் இறந்த பின்னர் கண்கள்

[2004 ஜூலை 26

எடுக்கப்படுகின்றன. அக்கண்விழிகள், விழிவெண்படல நோயினால் பார்வை இழப்பு ஏற்பட்டோருக்குப் பொருத்தப்படுகின்றன.

கடந்த 2 ஆண்டுகால செயல்பாடுகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

தமிழ்நாடு மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்புரை அறுவை சிகிச்சை விவரம்:

| ஆண்டு | இலக்கு | சாதனை | மத்திய அரசு வழங்கிய தொகை ( ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2002-03 | 4,00,000 | 3,71,559 | 1486.92 |
| 2003-04 | 4,20,000 | 4,50,654 | 1648.28 |

**பார்வை இழப்பு விகிதம்**

| முற்றிலும் பார்வை இழப்பு | | | கண்புரையால் கண் பார்வை இழப்பு | | |
|---|---|---|---|---|---|
| | 1994 | 2002 | | 1994 | 2002 |
| இந்தியா முழுவதும் | 1.49% | 1.10% | இந்தியா முழுவதும் | 1.19% | 0.7% |
| தமிழ்நாடு | 1.62% | 0.78% | தமிழ்நாடு | 1.13% | 0.4% |

**பள்ளிக் குழந்தைகள் கண் பரிசோதனைத் திட்டம்**

| ஆண்டு | இலக்கு | கண் பார்வை பரிசோதிக்கப் பட்ட பள்ளிச் சிறார்களின் எண்ணிக்கை | கண்பார்வை குறைபாடு உள்ள பள்ளிச் சிறார்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட இலவச கண்ணாடிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2002-03 | 13,00,000 | 13,07,716 | 50,956 | 21,220 |
| 2003-04 | 14,85,000 | 23,46,028 | 1,11,685 | 38,550 |



2004 ஜூலை 26]

**கண் தானம்**

| ஆண்டு | இலக்கு | சேகரித்தது | பொருத்தியது |
|---|---|---|---|
| 2002-03 | 2500 | 4491 | 2496 |
| 2003-04 | 3600 | 4707 | 2678 |

இன்றைய தேதியில், கண் பார்வை இழப்புக் கட்டுப்பாடுத் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. நடப்பு நிதியாண்டில் மைய அரசு நிர்ணயித்த இலக்கை இவ்வரசு விஞ்சியுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டிற்கு மைய அரசு கீழ்க்கண்ட இலக்கை நிர்ணயித்திருக்கிறது:

| | |
|---|---|
| கண்புரை அறுவை சிகிச்சை | 4,40,000 |
| பள்ளிச் சிறார்கள் கண் பரிசோதனை | 18,00,000 |
| ஏழைச் சிறார்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்குதல் | 37,800 |
| கண் தானம் | 4,500 |

அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள பரந்து விரிந்த அரசு மருத்துவமனை கட்டமைப்புகள், அரசு மருத்துவமனை வசதிகள் இல்லாத பகுதிகளில் அரசுத் துறையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 35 கண் அறுவை சிகிச்சை செய்யப்படும் படுக்கை பிரிவுகள் மற்றும் 55 அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றின் துணையோடு, தமிழ்நாடு அரசால், இந்த இலக்கை எட்டிவிட முடியும். அவ்வாறு எட்டுவதன் வாயிலாக, தமிழ்நாடு, கடந்த காலத்தைப் போலவே, தொடர்ந்து முன்னிலை வகித்து சாதனை படைக்கும் என்பது திண்ணம்.

[2004 ஜூலை 26

## அத்தியாயம் – 5

## பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, இம்மாநிலம் முழுவதிலும் உள்ள 1413 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 8682 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் ஆரம்ப சுகாதார பணிகளை அளித்து வருகிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு நோயற்ற ஆரோக்கியமான வாழ்வை அளிப்பது அரசின் கொள்கையாகும். மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதற்காக, ஆரம்ப சுகாதார கவனிப்பு அணுகுமுறை மூலம் அரசு, பொதுச் சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு திட்டங்களை வகுத்து, செயற்படுத்தி வந்துள்ளது.

### ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணைச் சுகாதார நிலையங்கள் ஆகியவை நோய்த் தடுப்பு, உடல்நல மேம்பாடு, நோய் களைதல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகிய பணிகளை மக்களுக்கு அளிக்கிறது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தொடர் குளிர்சாதன கருவிகள், அறுவை சிகிச்சைகளுக்குத் தேவையான கருவிகள், மகப்பேறு சாதனங்கள் போன்ற தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான வளர்ச்சி வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை, கண்புரை நோய் கண்டறிதல், கண்களில் ஏற்படும் சிறு கோளாறுக்கான சிகிச்சை அளித்தல் ஆகிய வசதிகள் உள்ளன. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 1413 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மலைவாழ் மக்கள் உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. 241 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களாகச் செயல்படுகின்றன. 70 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 8 துணை சுகாதார நிலையங்களும் தொழில் நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 26]

2003–2004 ஆம் ஆண்டில் 582.73 இலட்சம் புறநோயாளிகளுக்கும், 2,56,389 உள்நோயாளிகளுக்கும் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### ஆரம்ப சுகாதார நிலையங்களின் நிலை உயர்த்துதல்

மாவட்ட தலைமையிட மருத்துவமனை, வட்டம் / வட்டம்சாரா மருத்துவமனைகள் மற்றும் நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவை இல்லாத இடங்களில் ஒரு வளர்ச்சி வட்டாரத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளை அமைத்துக் கொடுப்பது இவ்வரசின் கொள்கையாகும். இந்த மருத்துவமனைகள் நவீன கருவிகளான அல்ட்ரா சோனோகிராம், இ.சி.ஜி., ஊடுகதிர் இயந்திர சாதனப் பிரிவு மற்றும் நோயாளர் ஊர்தி போன்ற வசதிகள் கொண்டதாக இருக்கும். 2001–2002 ஆம் ஆண்டில் 21 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்தப்பட்டன. 2002–2003 ஆம் ஆண்டில் பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களும், நபார்டு வங்கியின் கடன் நிதியுதவியுடன் 17 ஆரம்ப சுகாதார நிலையங்களும் நிலை உயர்த்தப்பட்டன. 2003–2004 ஆம் ஆண்டில் பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.1673.19 இலட்சம் செலவில் 35 ஆரம்ப சுகாதார நிலையங்களை நிலை உயர்த்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்

தற்போது 1360 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 14 ஆரம்ப சுகாதார நிலைய கட்டட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டடங்கள் கட்டப்பட வேண்டியுள்ள 39 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 15 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நபார்டு வங்கியின் கடனுதவியை பயன்படுத்தி மொத்தம் ரூ.1.92 கோடியில் கட்டடங்கள் கட்டக் கருதப்பட்டுள்ளது. இக்கருத்துரு நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது.

[2004 ஜுலை 26

## சமுதாய அணுக்க துணைச் சுகாதார நிலையங்கள்

இம்மாநிலத்தில் மொத்தமுள்ள 8682 துணைச் சுகாதாா நிலையங்களில், 6510 துணைச் சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 2002–2003 ஆம் ஆண்டில் நபார்டு வங்கி கடனுதவியுடன் 298 துணைச் சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்ட அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவற்றில் 286 கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிட்டன. நபார்டு வங்கியின் கடனுதவியைப் பயன்படுத்தி ரூ.1951.92 இலட்சம் செலவில் 306 துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

## அனைவருக்கும் தடுப்பூசித் திட்டம்

தடுப்பூசிகளால் தவிர்க்கப்படக்கூடிய நோய்கள், தடுப்பூசி திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 100 சதவீதம் தடுக்கப்படுகின்றன. வழக்கமான தடுப்பூசி திட்டத்துடன் ஒவ்வொரு ஆண்டும் இளம்பிள்ளைவாத சொட்டு மருந்து முகாம்களும் நடத்தப்படுகின்றன.

04–01–2004 மற்றும் 22–02–2004 ஆம் நாட்களில் நடைபெற்ற இளம்பிள்ளைவாத சொட்டுமருந்து முகாமில் ஐந்து வயதிற்கு உட்பட்ட 72 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. இது தவிர 4.4.2004 அன்று ஐந்து வயதிற்கு உட்பட்ட 72 இலட்சம் குழந்தைகளுக்கு கூடுதல் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

சென்னை மாநகரில் குடிசைவாழ் குழந்தைகளுக்கும், விருதுநகர், இராமநாதபுரம், மதுரை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள குழந்தைகளுக்கும் மஞ்சள்காமாலை நோய்த் தடுப்பு மருந்து அளிக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 2.20 இலட்சம் குழந்தைகள் இதனால் பயனடைந்தனர். இத்திட்டம், படிப்படியாக இதர மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்படும்.

எம்.எம்.ஆர்.மற்றும் ரூபெல்லா தடுப்பூசித் திட்டம் கடலூர், பெரம்பலூர், தேனி, திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.



2004 ஜுலை 26]

## தாய்சேய் நலப் பணிகள்

இத்துறை அளிக்கும் அனைத்துப் பணிகளிலும் தாய்சேய் நலப் பணிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். கருவுற்ற தாய்மார்களை பதிவு செய்தல், கருவுற்ற தாய்மார்களை பரிசோதித்தல், ஜன்னி மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படாவண்ணம் தடுக்க தடுப்பூசி போடுதல், பேறுகால பராமரிப்பு மற்றும் பேறுகால பின்பராமரிப்பு அளித்தல் போன்ற பணிகள் அளிக்கப்படுகின்றன. தற்போது 92.3% பிரசவங்கள் மருத்துவ நிலையங்களில் நடைபெறுகின்றன.

## பள்ளிக் குழந்தைகள் நலத் திட்டம்

மாநிலத்தில் இதுவரை செயல்படுத்தப்பட்டுவந்த பள்ளி சுகாதாரத் திட்டம், திருத்தியமைக்கப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் விரிவான நல பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் "பள்ளி சுகாதார நாளாக" கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் "மேல் சிகிச்சை நாளாக" கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை ஒருங்கிணைத்து திறம்படச் செயல்படுத்துவதில் உதவி புரிய வேண்டி ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். உயர் வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்கள் சுகாதார வழிகாட்டிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பள்ளி சுகாதார அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சுகாதார அட்டை பள்ளியை விட்டு மாணவர்கள் செல்லும்போது மாற்றுச் சான்றிதழோடு இணைத்து வழங்கப்படும். சுகாதார மதிப்பீட்டு பதிவேடுகள், மேல்சிகிச்சைப் பதிவேடு, மருந்து பொருள் இருப்புப் பதிவேடுகள் ஆகியவை அச்சிட்டு வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலமாக ரூ300 இலட்சம் மதிப்புடைய மருந்துகள் வழங்கப்படுகின்றன.

2004 ஆம் ஆண்டு மார்ச் வரை இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 40,308 பள்ளிகளில், 35,327 பள்ளிகள் மருத்துவக் குழுவினரால் பார்வையிடப்பட்டு, 91,13,289 மாணவர்கள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டனர். 46,503 மாணவர்கள் மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டனர்.

[2004 ஜூலை 26

பள்ளி மாணவர் நலத் திட்டத்தில் பள்ளி மாணவர்களிடையே கண்டறிந்த நோய்களின் நிலை:

| தொடர் எண் | நோய்கள் | சதவீதம் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை |
|---|---|---|
| 1 | பல் சொத்தை | 10.29 |
| 2 | வயிற்றுப் பூச்சி | 9.64 |
| 3 | சுவாசக் கோளாறு | 12.65 |
| 4 | இரத்த சோகை | 3.38 |
| 5 | வைட்டமின் (ஏ) குறைபாடு | 1.91 |
| 6 | சொரி சிரங்கு | 1.23 |
| 7 | கண் பார்வைக் கோளாறு | 0.16 |
| 8 | காதில் சீழ்வடிதல் | 0.35 |
| 9 | தொழுநோய் | 0.05 |
| 10 | காது கேட்பதில் குறைபாடு | 0.05 |
| 11 | இதய நோய் | 0.04 |
| 12 | காச நோய் | 0.09 |
| 13 | முன்கழுத்து கழலை | 0.05 |

## தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல்

தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவது / ஆரம்ப சுகாதார கவனிப்புப் பணிகளின்கீழ் முக்கியமான திட்டங்களில் (குறிப்பாக கொள்ளை நோய் வடிவில் ஏற்படுகின்ற நோய்களும் ஒன்றாகும்) தண்ணீர் மூலம் பரவும் நோய்களில் கடும் வயிற்றுப்போக்கு, வாந்திபேதி ஆகியவை பொதுவானவையாகும். திடக் கழிவுகளை சேகரித்து தகுந்த பாதுகாப்புடன் அவற்றை உடனுக்குடன் அகற்றுதல், துப்புரவு மற்றும் தூய்மையை பராமரித்தல், குடிநீர் ஆதாரங்கள் அனைத்திலும் குளோரின் போன்ற கிருமிநாசினிகளை தேவையான அளவு கலந்து தெளித்தல்,



2004 ஜூலை 26]

ஈக்களை ஒழித்தல் ஆகியவை உட்பட தேவையான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற அலுவலர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். 53,625 குடிநீர் ஆதாரங்களில் குளோரின் கிருமிநாசினி கலக்கப்பட்டது. வாந்திபேதியினால் உண்டாகும் உடல் நீர் வறட்சியை ஈடு செய்ய வாய்வழியாக உப்பு சர்க்கரை நீர் கரைசல் செலுத்துவது சுகாதார கல்வி மூலம் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. உப்பு சர்க்கரை நீர்க் கரைசல் தயாரிக்கும் முறை பற்றிய செயல்விளக்கம் களப்பணியாளர்களால் பொதுமக்களுக்கு அளிக்கப்படுகிறது.

## தொழிலக தூய்மை மற்றும் சுகாதாரம்

குடிநீரில் மாசு ஏற்படுவதையும், தூய்மைக் கேடு ஏற்படுவதையும் கட்டுப்படுத்த சென்னை மற்றும் கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்பட்டுள்ள நீர் பகுப்பாய்வுக் கூடங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பல்வேறு ஆதாரங்களிலிருந்து நீர் மாதிரிகள் சேகரித்து அவற்றைப் பகுப்பாய்வு செய்கின்றன. இப்பகுப்பாய்வுக் கூடங்கள் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளை பரிசோதனை செய்வதில் மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு உதவி புரிந்து வருகின்றன. மேலும் தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுப்புற தூய்மைக் கேட்டை கட்டுப்படுத்தத் தேவையான கள ஆய்வுகள் மேற்கொள்ளவும் உதவுகின்றன.

காற்றின் தரத்தை மதிப்பீடு செய்ய தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்சாலைகளில் ஏற்படும் தொல்லைகளை அகற்றவும் தொழிற்சாலைப் பகுதிகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளை வகைப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரையிலும், 33,004 நீர் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டுள்ளன.

## உணவுக் கலப்படத்தை தடுத்தல்

1954 ஆம் ஆண்டு உணவு கலப்படத் தடைச் சட்டத்தையும் 1955 ஆம் உணவு கலப்படத் தடை விதிகளையும் செயற்படுத்துவதன் மூலம் உணவு கலப்படத்தை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது. தற்போது 481 உள்ளாட்சி அமைப்புகள் உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தை செயல்படுத்துகின்றன. 2003–2004 ஆம் ஆண்டில் 4277 மாதிரிகள் பகுப்பாய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 761 உணவு மாதிரிகள் கலப்படம் என கண்டறியப்பட்டன.

மேற்படி கலப்படத்தின் சதவீதம் 17.79 ஆகும். 206 இனங்களில் ந்திமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. 82 வழக்குகளில் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 72 வழக்குகளில் அபராதத்துடன் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. 10 வழக்குகளில் அபராதம் விதிக்கப்பட்டது.

அயோடின் சத்து இல்லாத உப்பு விற்பனைக்கு 01–01–1995 ஆம் நாள் முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தடை, 1–1–2000 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பான்மசாலா, குட்கா மெல்லுவதற்கு பயன்படும் புகையிலை ஆகியவற்றை விற்பதற்கு இம்மாநிலத்தில் 19–11–2001 முதல் 5 ஆண்டுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொது இடங்கள் எச்சில் துப்புதல் மற்றும் புகைபிடித்தல் ஆகியவை 14–05–2003 முதல் தடை செய்யப்பட்டுள்ளன.

**பிறப்பு–இறப்பு பற்றிய புள்ளி விவரம்**

1969 ஆம் ஆண்டு பிறப்பு–இறப்பு பதிவுச் சட்டம் மற்றும் தமிழ்நாடு 2000 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு பதிவு விதி ஆகியவற்றின்படி பிறபபு மற்றும் இறப்புகள் நிகழ்ந்த இடத்திலேயே அவை குறித்த விவரங்கள் பதிவு செய்யப்படுவது கட்டாயமாக்கப்பட்டு மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் 1000 மக்கள் தொகைக்கு 18.5 ஆகவும், இறப்பு விகிதம் 7.7 ஆகவும் உள்ளது. உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளில் சிசு இறப்பு விகிதம் 44.0 ஆக உள்ளது.

பிறப்பு பதிவு பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு 14–11–2003 ஆம் நாள் முதல் பெரிய அளவில் தேசிய முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் 10 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. இம்முகாமில் 28 இலட்சம் குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**மலேரியா**

மலேரியா நோய் தமிழ்நாட்டில் முக்கியமாக நகர்ப்புற பகுதிகளில் அதிகளவில் காணப்படுகிறது. மொத்த நிகழ்வுகளில் 75 சதவீதத்திற்கு மேல் நகர்ப்புறங்களில் காணப்படுகிறது. இராமநாதபுரம், பரமக்குடி



மற்றும் நாகப்பட்டினம் ஆகிய சுகாதாரப் பிரிவு மாவட்டங்களைச் சார்ந்த கடற்கரையை ஒட்டியுள்ள கிராமப்புறங்களிலும் மற்றும் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த ஆற்றோர கிராமங்களிலும் முன்காலத்தில் பெருமளவில் மலேரியா காணப்பட்டது. தீவிர தடுப்பு நடவடிக்கைகளினால் கிராமங்களில் மலேரியா நோய் நிகழ்வுகள் பெருமளவு குறைந்துள்ளன. அதன் விளைவாக 1990–ல் 1,20,029 ஆக இருந்த மலேரியா நோய் நிகழ்வுகள் தற்போது 43,396 ஆகக் குறைந்துள்ளது. இந்நோய் பாதிப்பு ஏற்படும் பகுதிகளை கண்டறியவும், இந்நோய் ஏற்படும் காலங்களை அறியவும் புவியியல் தகவல் முறை ஒன்று தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது.

**யானைக்கால் நோய்**

தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் தமிழகத்தில் 1957 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கொசுபுழுக் கொல்லிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்களின் செலவில் 50 விழுக்காடு அளவிற்கு மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கிறது. நிருவாகச் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்கிறது. இத்திட்டம், 13 நோய் பாதிப்பு மாவட்டங்களில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1997–98 முதல் யானைக்கால் நோயுற்ற பகுதிகளை அதிகமாகக்கொண்ட மாவட்டங்களில் டி.இ.சி. மாத்திரைகள் மக்களுக்கு வழங்கும் ஒட்டுமொத்த சிகிச்சைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. ஐந்தாவது சுற்றில் 2001–2002 உலக சுகாதார நிறுவனம் வடிவமைத்துக் கொடுத்த புதிய விளம்பர உத்தியினை (Communication of Behavioural Impact) கையாண்டு செயல்படுத்த தமிழக அரசு முன் வந்தது. டி.இ.சி. மற்றும் அல்பண்டசோல் ஆகிய இரு மாத்திரைகளையும் ஆறு மாவட்டங்களில் மட்டும் வழங்க தமிழ்நாட்டிற்கு உதவி செய்ய உலக சுகாதார நிறுவனம் முன்வந்துள்ளது. ஆறாவது சுற்றில், 2003 ஆம் ஆண்டில் ரூ.49.00 இலட்சம் மதிப்புடைய தகவல் மற்றும் கல்வி சாதனங்களையும் 14.40 இலட்சம் மதிப்புடைய அல்பண்டசோல் மாத்திரைகளையும் உலக சுகாதார நிறுவனம் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கியது. டி.இ.சி. மாத்திரைகள் வழங்கும் ஏழாவது சுற்று 2004 ஜூலையில் நடைபெற்றது.

[2004 ஜூலை 26

## நோய் பரப்பு உயிரி மற்றும் விலங்கு வழி பரவும் தொற்று நோய் கட்டுப்பாட்டு நிறுவனம், ஒசூர்

ஒசூரிலுள்ள நோய் பரப்பு உயிரி மற்றும் விலங்கு வழி பரவும் தொற்றுநோய் கட்டுப்பாடு நிறுவனம், ஒரு ஒருங்கிணைப்பு அமைப்பாகச் செயல்படுகிறது. இந்நிறுவனத்திலுள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகள், பல்வேறு பயிற்சித் திட்டங்கள், பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் ஆகியவற்றை நடத்தப் பயன்படுத்தப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டில், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன், ஒசூர் நோய் பரப்பு உயிரி மற்றும் விலங்கு வழி பரவும் தொற்று நோய் கட்டுப்பாட்டு நிறுவனத்தில் எம்.எஸ்.ஸி. படிப்பைத் தொடங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## லெப்டோஸ்பைரோசிஸ் நோய்

திருவள்ளூர் மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள வட்ட/மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 7 லெப்டோஸ்பைரோசிஸ் மருந்தகங்கள் தொடங்கப்பட்டு தற்போது இயங்கி வருகின்றன.

## தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் 1954–55 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தொழுநோய் ஒழிப்புத் துறையில் தமிழ்நாடு பாராட்டத் தக்கவகையில் பணியாற்றி உள்ளது. 1983 ஆம் ஆண்டில் தொழுநோய் நிகழ்வுகள் 10,000 மக்கட் தொகைக்கு 118 என்ற விகிதத்தில் இருந்தது, அது 2003 ஆம் ஆண்டில் 10,000 மக்கட்தொகைக்கு 1.4 என்ற விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## சிறப்பு மருத்துவ முகாம்கள்

தமிழகம், தொற்று நோய்களை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியும் ஒழித்தும் வந்துள்ளது. புற்றுநோய், நீரிழிவு நோய், இருதயநோய் போன்றவைகள் அதிகரித்துவரும் இன்றைய சூழ்நிலையில் அவற்றிற்குச் சிறப்பு சிகிச்சை பெற போதுமான வசதிகள் கிராமப்புறங்களில் கிடைப்பதில்லை. எனவே, கிராமப்புற மக்களுக்கு அவர்தம் வாழும் பகுதியிலேயே புற்றுநோய், நீரிழிவுநோய், இருதய நோய்கள், இரத்த அழுத்தம் மற்றும் வயது முதிர்ச்சியினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து சிறப்புச் சிகிச்சை அளித்திட ஒவ்வொரு



2004 ஜூலை 26]

வளர்ச்சி வட்டாரத்திலும் ஒரு சிறப்பு மருத்துவமுகாம் நடத்தப்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் 385 முகாம்கள் நடத்த அரசு ரூ.259.39 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இதுவரை 360 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மொத்தம் 7,38,326 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## நடமாடும் மருத்துவப் பணிகள்

பிரதம மந்திரியின் கிராம யோஜனா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 26 சுகாதார மாவட்டங்களில் 45 நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த 45 நடமாடும் மருத்துவக் குழுக்களுக்கு மருந்துப் பொருட்கள் மற்றும் பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ஆகியவற்றிற்காக ரூ.200.70 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2003–2004–ல் 2,35,933 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

## பொதுச் சுகாதாரப் பயிற்சி மற்றும் தொடர் கல்வி

மருத்துவர்களும் பொதுச் சுகாதாரப் களப்பணியாளர்களும் பல்வேறு திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை அவ்வப்போது அறிந்துகொள்ளும் வகையில் பணியிடைப் பயிற்சித் திட்டங்கள் இத்துறையால் செயல்படுத்தப்படுகின்றன. எழும்பூர், பூவிருந்தவல்லி, மதுரை, சேலம், விழுப்புரம், காந்தி கிராமம் மற்றும் திருவரங்குளம் ஆகிய இடங்களில் வட்டார பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 5 பல்நோக்கு சுகாதார பணியாளர் (பெண்கள்) பயிற்சி பள்ளிகளிலும், பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர்கள் (பெண்கள்) பயிற்சி பள்ளியிலும் நீண்ட கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும் தன்னார்வ சுகாதார தொண்டு நிறுவனங்களும் மற்றும் அடையாறில் உள்ள புற்றுநோய் நிறுவனம், ஸ்பாஸ்டிக் சொசைட்டி போன்ற பெயர் பெற்ற நிறுவனங்களும் பயிற்சி அளிப்பதில் ஈடுபடுத்தப்படுகின்றன.

## 2004–2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. மொத்தம் ரூ.5.00 இலட்சம் செலவில் நீரிழிவு நோய்க் கட்டுப்பாடு முன்னோடி திட்டம்.

2. ரூ.5.00 இலட்சம் செலவில் பிறப்பு–இறப்புகளை பதிவு செய்வது குறித்து விளம்பரம் செய்தல்.

3. ரூ.6.00 இலட்சம் செலவில் மாவட்டப் பொது சுகாதார அலுவலர் அலுவலகத்திற்கு கணினிகள்.

4. இரண்டு மாவட்டங்களில் பல் மருத்துவத் திட்டத்தை மொத்தம் ரூ.20.00 இலட்சம் செலவில் விரிவாக்குதல்.

5. மொத்தம் ரூ.15.00 இலட்சம் செலவில் பேறுகாலத்திற்கு பிந்தைய தாய்மார்களுக்கு வைட்டமின் ஏ மாத்திரைகள் வழங்குதல்.

6. மொத்தம் ரூ.90.00 இலட்சம் செலவில் 1000 சுகாதார துணை மையங்களுக்கு லேபர் போர்டு (Labour Board) வழங்குதல்.

7. மொத்தம் ரூ.6.90 இலட்சம் செலவில் 150 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுத்தல்.

8. மொத்தம் ரூ.9.50 இலட்சம் செலவில் இந்திய முறை மருத்துவத்தைப் பயன்படுத்தி இரத்த சோகையைக் கட்டுப்படுத்தும் திட்டம்.



# அத்தியாயம் – 6

# குடும்பநலத் திட்டம்

தமிழ்நாட்டில் தாய்சேய் நலத்தை மேம்படுத்துவதன் மூலம் மக்கள் தொகை பெருக்கத்தை நிலைப்படுத்தும் பொருட்டு குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் 'சமுதாய மதிப்பீட்டு அணுகுமுறை' அறிமுகப்படுத்தப்பட்டதற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த மாநிலம் தமிழ்நாடு மாநிலமே. குடும்பநலத் திட்டம் சமுதாயத்தின் முனைப்பான ஒத்துழைப்புடன் ஒரு மக்கள் திட்டமாக, செயல்படுத்தப்படுகிறது. இம்மாநிலத்தில், குடும்ப நலத் திட்டம் சாதனை படைத்ததற்கான பல்வேறு காரணிகளில் வலுவான சமூக மற்றும் அரசியல் பொறுப்புணர்வுடன் கூடிய ஈடுபாடும் நிருவாகத்தின் உதவியும் அடங்கும்.

## மக்கள் தொகையியல் குறியீடுகள்

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 2001 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6.24 கோடியாகும். பத்தாண்டின் வளர்ச்சி விகிதம் 11.7 விழுக்காடாகும். நம் நாட்டில், தமிழ்நாடு, கேரள மாநிலத்திற்கு அடுத்தப்படியாக குறைந்த மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தைக் கொண்டு இரண்டாவது இடத்தில் உள்ளது. தமிழ்நாடு, இந்தியாவில் ஆறாவது பெரிய மக்கள் தொகை கொண்ட மாநிலமாகும். தமிழக மக்கள் தொகை எண்ணிக்கை. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 விழுக்காடு ஆகும். 2004 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6.4 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டின் மைய அரசின் மாதிரி பதிவு முறைப்படி தமிழக மக்கள் தொகையியல் நிலவரம் வருமாறு:

| | |
|---|---|
| பிறப்பு வீதம் | 18..5/1000 மக்கள் தொகைக்கு |
| இறப்பு வீதம் | 7.7/1000 மக்கள் தொகைக்கு |
| சிசு மரண வீதம் | 44/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| மகப்பேற்றின்போது தாய்மார்கள் இறப்பு வீதம் | 1.3/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| இயற்கையான வளர்ச்சி வீதம் | 1.08 சதவீதம் |

## இலக்குகள்

[2004 ஜூலை 26

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் அதாவது 2007 ஆம் ஆண்டிற்குள் அடைய நிர்ணயிக்கப்பட்டுள்ள மக்கள் தொகையியல் இலக்குகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சிசு மரண வீதம் | 30/1000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு |
| 2. | பிறப்பு வீதம் | 15/1000 மக்கள் தொகை |
| 3. | மகப்பேற்றின் போது தாய்மார்கள் இறப்பு வீதம் | <1/1000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு |
| 4. | மொத்த கருத்தரிப்பு வீதம் | 1.7 |
| 5. | தம்பதியர் காப்பு வீதம் | 65 சதவீதம் |
| 6. | அதிக குழந்தைகள் பிறப்பு வீதம் குறைப்பு | 10 சதவீதம் |
| 7. | கருத்தடை முறையில் ஆண்களின் பங்கேற்பு | 10 சதவீதம் |

## குடும்ப நல மையங்கள்

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட பணி மையங்கள் மூலமாக தாய் சேய் மற்றும் குடும்ப நலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

| வரிசை எண் | மையங்களின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பேறுகால பின்கவனிப்பு மையங்கள் | 118 |
| 2. | நகர்ப்பகுதி குடும்பநல மையங்கள் | 101 |
| 3. | நகர்ப்பகுதி நல்வாழ்வு மையங்கள் | 198 |
| 4. | கிராமப்பகுதி குடும்பநல மையங்கள் | 382 |
| 5. | அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள் | 1308 |
| 6. | தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் | 27 |



2004 ஜூலை 26]

மாநிலத்தில் 2003–04 ஆம் ஆண்டில் நடைபெற்ற மொத்த குடும்பநல அறுவை சிகிச்சைகளில், 62.1 விழுக்காடு, அரசு மருத்துவமனைகளிலும், 6.7 விழுக்காடு, தன்னார்வ தொண்டு நிறுவனங்களிலும், 22.5 விழுக்காடு அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளிலும், 3.7 விழுக்காடு உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகளிலும், மீதமுள்ள 5 விழுக்காடு அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளிலும் நடைபெற்றன.

## குடும்பநலத் திட்ட சாதனை

2003–2004 ஆம் ஆண்டில் எய்திய குடும்ப நலத்திட்ட சாதனை விவரம் வருமாறு.

| வ. எண் | திட்டம் | எதிர்பார்க்கப் பட்ட தேவை அளவு 2003—04 | எய்திய சாதனை (2003—04) | சாதனை விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | குடும்ப நல அறுவைச் சிகிச்சை | 6,00,000 | 4,29,450 | 72 |
| 2 | கருத்தடை வளையம் | 4,50,000 | 4,37,573 | 97 |
| 3 | வாய்வழி மாத்திரை உட்கொள்வோர் | 3,50,000 | 1,71,813 | 49 |
| 4 | ஆணுறை உபயோகிப்போர் | 3,50,000 | 2,11,636 | 47 |
| 5 | மருத்துவ கரு சிதைப்பு | 1,50,000 | 71,031 | 47 |

## பிரச்சினைகளும் உத்திகளும்

1. 1998–99 ஆம் ஆண்டு இரண்டாவது தேசிய குடும்பநல கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 57 விழுக்காடு தாய்மார்களும், 69 விழுக்காடு சிசுக்களும் ஏதாவது ஒரு வகை இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மகப்பேறின் போது தாய்மார்களின் மரணத்திற்கும், சிசு மரணத்திற்கும் தற்போதைய அதிக எண்ணிக்கைக்கு முக்கியக் காரணம் இரத்த சோகையாகும்.

2. தமிழ்நாட்டில் பிறக்கும் 11.5 இலட்சம் குழந்தைகளில், 20.2 விழுக்காடு (2.3 இலட்சம் குழந்தைகள் இரண்டிற்கும் அதிகக் குழந்தைகள் உள்ள பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகளாகும்). 2007 ஆம் ஆண்டுக்கான இலக்கை எய்த இந்தவகை பிறப்புகள் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும்.

3. சிசு மரண விகிதம் உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளுக்கு 44 என்ற எண்ணிக்கையில் உள்ளது. அதில், ஏறக்குறைய 75 சதவீத சிசுக்கள் பிறந்த ஒரு மாதத்திற்குள் இறந்து விடுகின்றன. இந்த இறப்பைக் கட்டுப்படுத்தினால் ஆயிரம் பிறப்புகளுக்கு 30 என்ற இலக்கை எய்திட முடியும்.

இரண்டாவது தேசிய குடும்பநல கணக்கெடுப்பின்படி, மொத்த கருவுறு வீதத்திற்கும் (2.0) விரும்பப்படும் குடும்ப அளவிற்கும் (1.7) இடைவெளி உள்ளது. அதிக குழந்தை பிறப்பதைக் (20.2%) குறைப்பதனாலும், குடும்பநல சேவைகளின் (13%) தேவையை நிறைவு செய்வதன் வாயிலாகவும் இந்த இடைவெளியைக் குறைக்கலாம். மொத்த கருவுறு வீதத்திற்கும் விரும்பப்படும் குடும்ப அளவிற்குமிடையிலான இடைவெளியை குறைக்க, கீழ்க்கண்ட அணுகு முறைகள் பின்பற்றப்படும்:

1. கருவுற்ற தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்த நடவடிக்கை எடுத்தல்.

2. அதிக குழந்தைகள் பெறும் தாய்மார்களைக் கிராம வாரியாகக் கண்டறிந்து அவர்கள் குடும்பநல முறைகளை ஏற்றுக்கொள்ள ஆலோசனை வழங்குதல்.

3. 16 இலட்சம் குடும்பநல அறுவை சிகிச்சைகள், 13.5 இலட்சம் கருத்தடை வளையம் பொருத்துதல், மற்றும் 11.75 இலட்சம் ஆணுறை உபயோகிப்போர் என்ற இலக்கினை நிர்ணயித்து அடுத்த மூன்று ஆண்டுகளில் இதனை எய்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. மொத்தமுள்ள 382 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது 184 அறுவை சிகிச்சைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் ஆரம்ப சுகாதார நிலைய அறுவை சிகிச்சை கூடங்களின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



5. தகுதி வாய்ந்த தம்பதியருக்குக் குடும்ப நல சேவைகள் அளித்திட அதிக எண்ணிக்கையிலான தனியார் மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.

6. தகுதி வாய்ந்த தம்பதியருக்கு சிறந்த குடும்ப நல சேவைகளை அளிப்பதை மேம்படுத்த அரசு நிர்வாகத்துடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் மற்றும் அரசு சாரா அமைப்புகளையும் ஈடுபடுத்தல்.

7. மாவட்டங்களில் குடும்பநலத் திட்ட முன்னேற்றத்தை ஆய்வு செய்வதில் மாவட்ட ஆட்சியரை ஈடுபடுத்தல்.

8. தகுதி வாய்ந்த தம்பதியர்களுக்கு குடும்பநல சேவைகளை வழங்குவதில் சுய உதவி குழுக்கள், மகளிர் மன்றம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் ஏனைய தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்துதல்.

**மாநில மக்கள் தொகை ஆணையம்**

குடும்பநலம் மற்றும் தாய்சேய் நலத்திட்டப் பணிகளின் செயலாக்கத்தை ஆய்வு செய்து, கண்காணித்து தக்க அறிவுரை வழங்கவும், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்தவும் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய தலைமையில் மாநில மக்கள் தொகை ஆணையம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மாநில மக்கள் தொகை கொள்கை விரைவில் வெளியிடப்படும்.

## குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கான காப்பீட்டுறுதித் திட்டம்

தமிழ்நாட்டில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்காக, ஒரு காப்பீட்டுறுதித் திட்டம் 2001 பிப்ரவரி முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இத்திட்டத்தின் மூலம் அரசு செலவில் ஒரு தாய்க்கு ரூ.14/– வீதம் பிரிமியம் செலுத்தப்படுகிறது. அரசு, உள்ளாட்சி நிறுவனம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் மருத்துவமனைகள், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்களில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களில் எவரேனும் உயிரிழக்க நேரிட்டால் ரூ. 2.00 இலட்சம் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும். இத்தொகை, அவர்களுடைய

குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படும். மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் உயிரிழக்க நேரிட்டால் ரூ.25,000 காப்பீட்டுத் தொகை வழங்கப்படும், இத்தொகை அத்தாய்மார்களின் குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படும்; இத்திட்டம் தேசிய காப்பீட்டு கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு இத்திட்டத்தை 31-10-2004 வரை மேலும் நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளது.

## 2004-2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்

மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் 20 லேப்ராஸ்கோப் கருவிகள் (ஒற்றை துளை கொண்டது) வாங்கி வழங்குதல்.



# அத்தியாயம் – 7

## மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகம்

மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி, விநியோகம், விற்பனை ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான கீழ்க்காணும் சட்டங்களின்படி அமல்படுத்தும் தலையாய பணியினை மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகம் மேற்கொண்டு வருகிறது.

அ) 1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் மற்றும் 1945 ஆம் ஆண்டு விதிகள்.

ஆ) 1995 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் விலைக்கட்டுப்பாட்டு ஆணை.

இ) 1954 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் மற்றும் மாந்திரீக நிவாரணங்கள் (ஆட்சேபத்திற்குரிய விளம்பரங்கள்) சட்டம்.

ஈ) 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டம்.

மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு இயக்குநர், கட்டுப்பாட்டு மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரி ஆவார். இவர் ஆங்கில முறை, ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஓமியோபதி மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கவும், விற்பனை செய்யவும் தேவையான உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார். மத்திய உரிமம் வழங்கும் குழுமத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு உரிமம் வழங்கும் பணியினையும் இவர் ஆற்றுகிறார்.

### நடமாடும் ஆய்வுக்குழு மற்றும் சட்டம், உளவுத் தகவல் பிரிவின் பணிகள்

போலிப் பொருட்கள் மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து தென் மாவட்டங்களிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கைகள் எடுக்க, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு நடமாடும் ஆய்வுக் குழுவும், சென்னையிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க இயக்குநர் அலுவலகத்தில் ஒரு சட்டம் மற்றும் உளவுத் தகவல் பிரிவும் செயல்படுகின்றன. இத்துடன் சட்டம் மற்றும் உளவு தகவல் பிரிவு தொடர்பான பணிகளையும், சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

[2004 ஜூலை 26

## மருந்துப் பொருட்கள் ஆய்வுக் கூடம்

இத்துறையுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு மருந்து ஆய்வுக் கூடம் இயங்கி வருகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், பல்வேறு உற்பத்தி நிறுவனங்கள், மொத்த மற்றும் சில்லரை விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களிலிருந்து (ஊசிமூலம் செலுத்தப்படும் மருந்துத் தயாரிப்பு நீங்கலாக) மருந்துப் பொருட்கள் ஆய்வாளர்களால் சோதனைக்காக எடுக்கப்பட்ட மருந்துப் பொருட்கள், இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன; கிண்டியிலுள்ள கிங் நிலையத்தில் ஊசிமூலம் செலுத்தப்படும் மருந்துத் தயாரிப்புகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

சோதனைக்காக மாதிரிகளை பெற்றுக்கொள்வதிலிருந்து இறுதி சோதனை முடிவு அறிக்கை அளிக்கப்படும் வரையில் சோதனைச்சாலையில் பின்பற்றப்படும் அனைத்து நடைமுறைகளும் 1.4.2003 ஆம் நாளிலிருந்து முழுமையாகக் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

## 2003-2004 ஆம் ஆண்டின் சாதனைகள்

இந்த இயக்ககம் மருந்துப் பொருட்கள் மாதிரிகள் பலவற்றைப் பெற்றுள்ளதுடன் நுண்ணுயிர்கொல்லி மருந்து பொருட்களின் மாதிரிகளையும் பெறுவது தொடர்பாக ஆய்வாளர்களுக்குத் திட்டவட்ட அறிவுரைகள் வழங்கியுள்ளது. எடுக்கப்பட்ட மாதிரி மருந்துகள், "மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின்" விதிமுறைகளின்படி பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு, அங்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு, அப்பகுப்பாய்வு அறிக்கைகளின் பேரில் நிருவாகம் மற்றும் சட்டப்படியான நடவடிக்கை, வழக்கின் தன்மையைப் பொறுத்து, உரியவரின் மீது எடுக்கப்படுகிறது. இதன்படி இந்த இயக்ககம் தரமற்ற மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்து வழங்கிய பத்து மருந்து உற்பத்தியாளர்கள்/விற்பனையாளர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், இந்த இயக்ககம் தரமற்ற மருந்துப் பொருட்களை தயாரித்த இரண்டு மருந்து உற்பத்தி நிறுவனத்தின் உரிமங்களை ரத்து செய்துள்ளது மேலும் தரமற்ற மருந்துப் பொருட்களை தயாரித்த 37 மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் உரிமங்களை இடைநீக்கம் (SUSPENSION) செய்துள்ளது

இவ்வியக்கக உளவுத் தகவல் பிரிவு மருந்தாய்வாளர்கள், மருந்து தயாரிப்பு நிறுவனங்களில் திடீர் சோதனைகள் மேற்கொள்கின்றனர். அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் ஐந்து உரிமதாரர்களுக்கு உற்பத்தி மற்றும்



2004 ஜூலை 26]

விற்பனையை 1945 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் விதிகளின் 85(2) விதியின்படி நிறுத்திவைக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

இவ்வியக்கக மருந்தாய்வாளர்கள் மாதிரி மருந்துகளை பகுப்பாய்வுக்கு எடுப்பதன் மூலம், வெளிச் சந்தையில் போலி மருந்துப் பொருட்கள் நடமாட்டத்தை கண்டுபிடித்து, தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரியாக ஆரம்ப கட்டத்திலேயே போலி மருந்துப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் மொத்த போலி மருந்துகளும் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. மேற்கொண்டும் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இத்துறையின் இயக்ககம் உரிமம் பெறாமல் மருந்துப் பொருட்கள் தயாரிக்கும் இரண்டு நிறுவனங்களைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது உரிய சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் இரத்த வங்கிகளின் நடவடிக்கைகளை நுணுக்கமாக கவனித்து ஒரு மருத்துவமனை உரிமம் பெறாமல் இரத்த வங்கி நடத்தி வருவதைக் கண்டுபிடித்து, குற்ற வழக்கு தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இரத்த வங்கி நடத்துவதற்கு தேவையான சி.பி.டி. (CPD) இரத்தப் பைகளின் விற்பனை கண்டுபிடிக்கப்பட்டு 1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தை மீறியதற்காக இரத்தப்பை விற்பனையாளர் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

மருந்துப் பொருட்கள் மற்றும் மாந்திரீக நிவாரணங்கள் (ஆட்சேபணைக்குரிய விளம்பரங்கள்) சட்டத்தின்கீழ் (1) ஆஸ்துமா, மூக்கடைப்பு, புகை மற்றும் தூசி ஒவ்வாமை ஆகியவற்றைக் குணப்படுத்துவதாக விளம்பரம் செய்தல்; (2) களுக்கு, மாதவிடாய் தாமதம்; (3) முறையற்ற உதிரப்போக்கு மற்றும் உடலுறவு ஆற்றலை ஊக்குவிக்கும் மருந்துகள் (4) மக்களை ஈர்க்கும் ஆட்சேபணைக்குரிய விளம்பரப் பொருட்களை சேமித்து வைத்திருந்தது தொடர்பான நான்கு நேர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இத்துறை, மேலும், அனைத்து விற்பனை நிலையங்களிலும் திடீர் சோதனைகளை மேற்கொண்டு, கீழ்க்கண்ட குற்றங்களைக் கண்டுபிடித்துள்ளது:

1. காம்ப்போஸ், போர்ட்வின், அல்ட்ராக்ஸ் போன்ற மருந்துப் பொருட்கள் விற்பனை செய்தது.
2. மருத்துவரின் மாதிரி மருந்துகளை விற்பனை செய்தது.
3. காலாவதியான மருந்துப் பொருட்களை விற்பனை செய்தது.

4. விற்பனை பட்டியல்கள் இல்லாமல் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்தது.

5. உரிய உரிமம் இல்லாமல் கடை நடத்தி மருந்து பொருட்கள் விற்பனை செய்தது.

6. தகுதியுள்ள நபர்களின் மேற்பார்வை இல்லாமல் மருந்துப் பொருட்களை விற்பனை செய்தது. இது தொடர்பாக 150 நபர்கள்/ நிறுவனங்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த இயக்ககம், பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தையும், விதிகளையும் செயற்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

## 2004-2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகத்தின்கீழ் வரும் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் ரூ. 7.50 இலட்சம் செலவில் கணினிகள், துணைபாகங்கள், மற்றும் அறைகலன்கள் ஆகியவை வாங்கி வழங்குதல்.

2. விற்பனை நிறுவனங்கள், உற்பத்தி நிலையங்கள் / இரத்த வங்கிகள் / அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் குறைந்த பட்சம் 32,100 ஆய்வுகள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. குறைந்தபட்சம் 4,550 மருந்துப் பொருள் மாதிரிகளை, அங்காடிகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களிலிருந்து எடுத்து, அதன் தரத்தினை ஆய்வுசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. மருந்துப் பொருட்களின் தயாரிப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு தொடர்பான, அண்மைக்கால தொழில்நுட்ப வளர்ச்சிகள் குறித்து அறிந்துகொள்வதற்கு ஏதுவாக, மருந்துப் பொருட்கள் ஆய்வாளர்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் முதுநிலை ஆய்வாளர்களுக்கு பயிற்சி திட்டம் ஒன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

5. பொதுமக்களின் பயனுக்காக மருந்துப் பொருட்கள் பற்றிய தகவல் மையம் ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



# அத்தியாயம் – 8

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

இந்திய மருத்துவ முறைகளின் ஒட்டுமொத்த உடல் நலம்நாடும் முழுமையான அணுகுமுறையானது, "உணவே மருந்து–மருந்தே உணவு" என்ற சித்தர்களின் முதுமொழியை அடிப்படையாகக் கொண்டதாகும். பாரம்பரிய மருத்துவ முறைகள், குறைந்த செலவில் நல்ல பயன் தரக்கூடியவை என்ற எண்ணம் உலகெங்கும் பரவி வலுப்பெற்று வருகிறது. பாரம்பரிய மருத்துவமுறைகளின்பால் மீண்டும் உலகத்தின் கவனம் திரும்புவது கண்கூடாகத் தெரிகிறது. நவீன மருத்துவத்தின் மருந்துகள் உண்டாக்கும் பக்கவிளைவுகளும் நச்சுத் தன்மையையும் உலகெங்கிலும் பாரம்பரிய மருத்துவ முறையின் மகத்துவத்தையும், அதன் பொருத்தமுடைமையையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. ஆங்கில (நவீன) மருத்துவ முறையில் குறிப்பிட்ட நோய்களுக்கு மட்டும் சிகிச்சையளிக்கபடுகிறது. இந்திய மருத்துவ முறையில் ஒட்டுமொத்த உடல் நிலையையும் கருத்திற்கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. எனவே பொது சுகாதார சேவை முறை, இவ்விரண்டு மருத்துவ முறைகளிலும் உள்ள நன்மைகளை கருத்தில்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு அரசு, இந்திய மருத்துவ முறையை விரைந்து மேம்படுத்த உறுதி பூண்டுள்ளது. இவ்வரசு இந்திய மருத்துவமுறை சந்திக்க வேண்டியுள்ள சவால்களையும் அதற்குள்ள வாய்ப்புகளையும் நன்கு அறிந்துள்ளது. காலப்போக்கில், தொலைநோக்கு பார்வையுடன் மாநிலத்தில் உள்ள எல்லா மருத்துவமனைகளிலும் ஆங்கில மருத்துவ முறைகளோடு, பல்வேறு இந்திய முறை மருத்துவமும் அளித்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு நடைமுறை சார்ந்த ஒரு முடிவை எடுத்துள்ளது. இந்த அணுகு முறைக்குப் பரவலான ஆதரவு கிடைத்து வருகிறது. இதற்கான ஆரம்பம் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது; தற்போது, 326 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவர்களும், 2 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆயுர்வேத மருத்துவர்களும், 3 ஆரம்ப சுகாதார நிலையங்களில் யுனானி முறை மருத்துவர்களும் உள்ளனர். மேலும் 2003–04 ஆம் ஆண்டில் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இந்திய முறை மருத்துவர் நியமிக்கப்பட எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

ஆராய்ச்சி, கல்வி, மருந்துகள் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தும், எல்லோருக்கும் இவற்றின் பயன்கள் கிடைக்கச் செய்வதன் மூலமும் இம்மருத்துவ முறைகளின் நம்பகத்தன்மையையும், சட்ட முறைமையையும் மீட்டு உருவாக்குவதே அரசின் கொள்கைத் திட்டமாகும்.

இந்திய மருத்துவ முறைகளை மேம்படுத்துவது, இந்திய மருத்துவ முறை மருந்துகள் பலருக்கும் கிடைக்கச் செய்வது, நம்பகத்தன்மையை மேம்படுத்துவது, அரசு மருத்துவமனைகளில் கிடைக்கும் நவீன மருத்துவ முறைக்கு இணையாக இந்திய மருத்துவ முறைக்கும் சம முக்கியத்துவம் அளிப்பது, சுகாதார சேவைகள் சாதாரண மனிதனுக்கும் கிடைக்கச் செய்வதில் நவீன மருத்துவத்திற்குத் துணையாக இந்திய முறை மருத்துவத்தையும் பயன்படுத்துதல் ஆகியனவே அரசின் அடிப்படை அணுகு முறையாகும்.

## மருத்துவக் கல்வி

மருத்துவக் கல்வி முறையில் இருவிதமான உத்திகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அரசே இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளை தொடங்கி உள்ளது. மேலும், நிர்ணயிக்கப்பட்டுள்ள தர நிர்ணய விதிமுறைகளை நிறைவு செய்யும் தனியார் கல்லூரிகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ முறையில் பட்ட / பட்டய படிப்புகளுக்காக அரசு மருத்துவக் கல்லூரிகளில் 236 மாணவர்களும், தனியார் கல்லூரிகளில் 790 மாணவர்களும் ஓராண்டில் சேர்க்கப்படுகின்றனர். அரசு மருத்துவக் கல்லூரிகளில் மட்டும் முதுநிலை மருத்துவப் படிப்பில் 80 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். மேற்காணும் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளின் மூலம் வழங்கப்படும் படிப்புப் பிரிவுகள் பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.



| நிறுவனத்தின் தன்மை | சித்த மருத்துவம் | ஆயுர்வேத மருத்துவம் | யுனானி மருத்துவம் | ஹோமியோபதி மருத்துவம் | இயற்கை மற்றும் யோகா | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| இளநிலை பட்டப்படிப்பு | | | | | | |
| அரசு | 150 | – | 26 | 50 | 10 | 236 |
| தனியார் | 90 | 150 | – | 400 | 150 | 790 |
| முதுநிலை பட்டப்படிப்பு | | | | | | |
| அரசு | 80 | – | – | – | – | 80 |
| தனியார் | இல்லை | – | – | – | – | – |
| இயன் மருத்துவம் தொக்கனம் மற்றும் வர்மக் கலையில் சித்த பட்டயப் படிப்பு (2 ஆண்டுகள்) | – | – | – | – | – | – |
| அரசு | 40 | – | – | – | – | 40 |
| தனியார் | | | | | | |

## ஆராய்ச்சி:

இத்துறையில் மருத்துவமனைகளில் ஆராய்ச்சிக்குரிய வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன. எனவே, ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆய்வுக்கு தெரிந்தெடுக்கப்படும் மருந்துகளின் மருத்துவ குணத்திற்கு செயல் திறன்

கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று தமிழ்நாட்டில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்வதற்காக போதிய வசதிகள் இத்துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும்.

### மருத்துவ சிகிச்சை

இந்திய மருத்துவத் முறை மற்றும் ஓமியோபதி முறை மருத்துவத் துறையில் தற்போது 713 நிலையங்கள் பொது மக்களுக்கு மருத்துவ வசதிகளை அளித்து வருகின்றன. மேற்காணும் மருத்துவமனைகளில் உள் இருப்பு நோயாளிகளுக்காக 965 படுக்கை வசதிகள் உள்ளன.

### தேசிய சித்த மருத்துவ நிறுவனம்

தேசிய சித்த மருத்துவ நிறுவனம் அமைப்பது, தமிழ்நாட்டு மக்களின் ஒரு நீண்ட நாளைய கனவாகும். இக்கனவு விரைவில் நனவாகும். இந்நிறுவனம், நடப்பு ஆண்டில் செயல்படத் தொடங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசும், மத்திய அரசும் 40:60 என்ற விகிதத்தில் மூலதனச் செலவினத்தை பங்கிட்டுக் கொள்கின்றன. மாநில அரசு தனது பங்கின் ஒரு பகுதியாக 14.78 ஏக்கர் நிலத்தை ஏற்கனவே அளித்துவிட்டது.

மத்திய அரசு கட்டடம் கட்டுவதற்காக 2003–2004 ஆம் ஆண்டு வரை ரூ.14.00 கோடி வழங்கியுள்ளது. மாநில அரசு மூலதனச் செலவில் தனது பங்களிப்பான 40%-ஐ அதாவது ரூ.10.64 கோடி தொகையினை அளித்துள்ளது. (அதாவது 2003–2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிலத்தின் மதிப்பு ரூ.6.64 கோடி + ரூ.4.00 = 10.64 கோடி) இந்த நிறுவனத்தின் கட்டடம் 14242.14 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டடம் கட்டும்பணி இந்த ஆண்டில் முடிக்கப்படும் என்றும், நடப்பு 2004–2005 ஆம் கல்வியாண்டிலிருந்து செயல்படத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### மகப்பேறு குழந்தை நலத் திட்டம் - II

தாய்சேய் நலம் காப்பதில் பல சாதாரண நோய்களுக்கு இந்திய மருத்துவ முறைகள் ஒட்டுமொத்த உடல் நலத்திற்கும் பாதுகாப்பான பயனுள்ள சிகிச்சையை வழங்குவதை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. எனவே மகப்பேறு குழந்தை நலத் திட்டம்–II-ன்கீழ் ஒரு முன்னோடித்



திட்டமாக வழங்கப்படும் மருத்துவப் பெட்டகத்தில் முக்கியமான இந்திய முறை மருந்துகளையும் சேர்த்து வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இம்முயற்சி தாய்சேய் மருத்துவத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்து, இந்திய முறை மருத்துவத்திற்கு உரிய அங்கீகாரம் பெறுவதற்குப் பெரிதும் உதவும்.

### எளிய மருந்துகள் முன்னோடித் திட்டம்

தேனி மாவட்டத்தில் மட்டும் செயற்படுத்தப்படும் எளிய மருந்துகள் முன்னோடித் திட்டத்திற்காக, மத்திய அரசு, ரூ.8.03 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிராமப்புற மக்களுக்கு இந்திய மருத்துவ முறை தயாரிப்பிலான எளிய மருந்துகள் பயிற்சி பெற்ற கிராம செவிலியர்கள் மூலம் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த முன்னோடித் திட்டம் தேனி மாவட்டத்தில் நூறு கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு, அதன் மூலம் 21,959 பயனாளிகள் பயன்பெற்றனர்.

### ஒப்பந்தம்

#### அ. ஆவணப்படுத்துதல்

1. சித்த மருத்துவப் புத்தகங்களை ஆங்கிலத்திலும், முடிந்தால் ஹிந்தி மொழியிலும் ஆவணப்படுத்துதல்.
2. தரவுத் தளம் உருவாக்கம்.
3. புராதனமான ஓலைச் சுவடிகளை கணினிமயமாக்குதல்.

#### ஆ. ஆராய்ச்சியும் மேம்பாடும்

மஞ்சள் காமாலை, எய்ட்ஸ், மூட்டுவலி, நீரிழிவு போன்ற நோய்களைச் சித்த மருத்துவ முறையில் குணப்படுத்த முடியும் என்பதை மெய்ப்பிக்க உலகளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட அறிவியல் முறைகளைப் பின்பற்றி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேம்படுத்துதல்.

#### இ. மூலிகை அறிவியல் போதனை

#### ஈ. கல்வி மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு உள்ளிருப்பு பயிற்சி அளித்தல்

**உ. இந்த ஒப்பந்தத்தின்கீழ் பொருத்தமானவர்களுடன் மேற்சொன்ன துறைகளில் ஏதாவது ஒன்றில் அல்லது பல துறைகளில் ஆராய்ச்சியில் ஈடுபடும் திட்டங்கள்**

**டாம்ப்கால்**

டாம்ப்கால் நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50.00 இலட்சம் ஆகும். தற்போதைய செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.20.75 இலட்சம் மட்டுமேயாகும். இந்நிறுவனம் 1998–1999 ஆம் ஆண்டு முதல் அரசுக்கு ஆதாயப் பங்கினை அளிக்கத் தொடங்கியுள்ளது. மேலும் இந்நிறுவனம் 2002–2003 ஆம் ஆண்டில் 15 சதவீத ஆதாயப் பங்காக அரசுக்கு ரூ.3.11 இலட்சம் அளித்துள்ளது.

டாம்ப்கால் நிறுவனம், 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.46.19 இலட்சமும் 2002–2003 ஆம் ஆண்டில் 93.55 இலட்சமும் இலாபம் ஈட்டியுள்ளது.

## 2004–2005 ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. 35 தொடக்க சுகாதார நிலையங்களில் ரூ.92.07 இலட்சம் செலவில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்குதல்.
2. ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.5.68 இலட்சம் மொத்த செலவில் யோகா மற்றும் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்குதல்.
3. சென்னை, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் மொத்தம் ரூ.15.00 இலட்சம் செலவில் பணியாளர் பணியிடங்களை உருவாக்குதல்.
4. மொத்தம் ரூ.14.40 இலட்சம் செலவில் முழுச் சம்பளத்துடன் கூடிய பட்ட மேற்படிப்பு.
5. அரசு சித்தா / யுனானி / ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் பகுதி நேர/மதிப்பூதியத்தின் அடிப்படையில் ரூ.5.76 இலட்சம் செலவில் ஆசிரியர்களை நியமித்தல்.
6. 2004–2005 ஆம் ஆண்டில் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் இயங்கி வரும் மாநில மருந்துகள் சோதனை ஆய்வகத்திற்கு ரூ.26.00 இலட்சம் செலவில் சாதனங்கள் வாங்கப்படும். பணியாளர்கள் சம்பளத்திற்கு ரூ.9.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.



7. பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் இயங்கும் மருந்தாக்க நிலையத்திற்கு ரூ.10.00 இலட்சம் செலவில் இயந்திரங்களும் சாதனங்களும் வாங்குதல்.
8. சென்னை யுனானி மருத்துவக் கல்லூரியில் ரூ.15.00 இலட்சம் செலவில் முதல் தளம் கட்டுதல்.
9. டாம்ப்கால் நிறுவனத்திற்கு கட்டடம் கட்டுவதற்காக ரூ.20.00 இலட்சம் வழங்கப்படும்.
10. 4 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளிலும், 6 வட்ட மருத்துவமனைகளிலும், சிறப்பு சிகிச்சை மையம் அமைப்பதற்காக மைய அரசு ரூ.160.00 இலட்சம் அனுமதித்துள்ளது.

இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும்:

1) மாவட்ட தலைமையிட மருத்துவமனை, காஞ்சீபுரம்
2) மாவட்ட தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்
3) மாவட்ட தலைமையிட மருத்துவமனை, திருச்சி
4) மாவட்ட தலைமையிட மருத்துவமனை, விருதுநகர்

1) வட்ட மருத்துவமனை, ஆண்டிப்பட்டி
2) வட்ட மருத்துவமனை, பழநி
3) வட்ட மருத்துவமனை, பரமக்குடி
4) வட்ட மருத்துவமனை, சுந்தர்வக்கோட்டை
5) வட்ட மருத்துவமனை, பூதப்பாண்டி
6) வட்ட மருத்துவமனை, திருமங்கலம்

11. 2003–2004 ஆம் ஆண்டில் 234 தொடக்க சுகாதார நிலையங்களில் ரூ.58.50 இலட்சம் செலவில் முக்கிய மருந்துகள் வாங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் வரை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## அத்தியாயம் – 9

## உலக வங்கியின் உதவி பெறும் தமிழ்நாடு அரசு மருத்துவமனைகள் மேம்பாட்டுத் திட்டம்

இந்தியாவில், மருத்துவமனைகள் மேம்பாட்டிற்கு உலக வங்கி இரண்டாம் கட்ட உதவி செய்ய உத்தேசித்துள்ள மாநிலங்களில், தமிழ்நாடு முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மருத்துவச் சாதனங்கள் உட்பட கட்டடங்கள் கட்டுதல், நல்வாழ்வு குறித்த செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்புப் பணிகளில் பயிற்சி அளித்தல், சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு, மருத்துவத் துறையில் அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவன அமைப்புகளில் செயல்பாடுகளை ஊக்குவித்தல், பழங்குடியினர் சுகாதார மேம்பாடு, மருத்துவமனை கழிவுகள் மேலாண்மை மற்றும் மாநிலத்தில் உள்ள மாவட்டம் மற்றும் வட்ட மருத்துவமனைகள் மற்றும் வட்ட மருத்துவமனைகளல்லாத மருத்துவமனைகளில் தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து மருத்துவத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு உதவி அளிக்கப்படும். இத்திட்டக் கால அளவு சுமார் 5 ஆண்டுகளாகும். இத்திட்டத்திற்கான உத்தேசிக்கப்பட்ட நிதியொதுக்கம் மொத்தம் ரூ.500 கோடியாக இருக்கும்.

உலக வங்கிக் குழுவினர் பலமுறை தமிழ்நாட்டுக்கு வந்து பார்வையிட்டு இத்திட்டத்தின்கீழ் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்தனர். கீழ்க்கண்ட முக்கிய நடவடிக்கைகள் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன:–

1. மருத்துவமனைக் கட்டடங்களைப் பழுது பார்த்தல், புதிய கட்டடங்கள் கட்டுதல்
2. மருத்துவ சாதனங்கள் மற்றும் பொருள்கள் வழங்குதல்
3. நோயாளி ஊர்தி வழங்குதல்
4. மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்
5. மருத்துவமனை நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துதல்



### இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ள மருத்துவமனைகள்

மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் : 26

வட்டம் மற்றும் வட்ட மருத்துவமனைகள் அல்லாத மருத்துவமனைகள் : 244

உலக வங்கி மதிப்பீட்டுக் குழு தமிழ்நாட்டிற்கு 2004 ஜூலையில் வருகை தந்தது. இத்திட்டம் 2004 அக்டோபர் முதல் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படுவதன் பயனாக இத்திட்டம் செயல்படுத்தப்படுவதன் பயனாக அரசு மருத்துவமனைகள் மூலம் ஏழை இடைநிலை பிரிவிலுள்ள மக்களுக்கு சிறந்த மருத்துவச் சேவை கிடைப்பது உறுதி செய்யப்படும்.

## அத்தியாயம் – 10

## மகப்பேறு குழந்தை நலத் திட்டம்

### நோக்கங்கள்

மகப்பேறு குழந்தை நலத் திட்டம் நிலை—I மகளிரின் வாழ்நாளில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பொதுவான நோக்கத்தில், மகளிருக்கு உயர்தர சுகாதார காப்பு வசதி அளிப்பதன் மூலம் மகளிருக்கும், குழந்தைகளுக்கும் நல்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மொத்தத்தில் சிறப்பான சுகாதாரப் பணிகளை சமுதாயத்திற்கு அளித்தல் மற்றும் பாதுகாப்புடன் கூடிய மகப்பேறு ஏற்பாட்டு முறைகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

உலகளாவிய தடுப்பூசி திட்டம், தாய் சேய் நலத் திட்டம் மற்றும் குடும்ப நலத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் மகப்பேறு குழந்தை நலத் திட்டம் நிலை—I உருவாக்கப்பட்டுள்ளது. இத்துடன் மகளிர் பருவம் எய்துவது முதற்கொண்டு மாதவிடாய் அற்றுப்போதல் காலம் வரையான மகப்பேறு சார் சுழற்சிக்கால அளவில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய உடல்நலன் வகையிலான அனைத்து அம்சங்களும் இதில் அடங்குகிறது.

| | |
|---|---|
| மகப்பேறு குழந்தை நலத் திட்டம் | உலகளாவிய தடுப்பூசித் திட்டம்<br>தாய் சேய் நலத் திட்டம்<br>குடும்ப நலத் திட்டம்<br>கருத்தரிப்பு பாதை நோய்த் தொற்று<br>வளர்இளம் பருவத்தில் மகப்பேறு<br>சுகாதாரம் குறித்த மேலாண்மை |

இத்திட்டத்தின் விரிவான நோக்கங்கள் வருமாறு:-

- மகளிர், வளர் இளம் பருவத்தினர் மற்றும் குழந்தைகளின் சுகாதார நிலையை மேம்படுத்தல்
- மகளிரின் உடல்நலம் பேணும் ஆர்வத்தைப் பெருக்குதல்
- சுகாதாரப் பணித் தரத்தை மேம்படுத்துவதன்மூலம் அப்பணி ஆற்றுபவர்களின் நம்பகத் தன்மையை அதிகரித்தல்

இந்த நோக்கங்களை எய்த வகைசெய்யப்பட்டுள்ள உக்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

- ➢ நிறுவன ரீதியிலான பணிகளை வலுப்படுத்தல்
- ➢ மேலாண்மை பணித்திறனை அதிகரித்தல்
- ➢ கண்காணிப்பு செயற்பாட்டு முறையை வலுப்படுத்தல்
- ➢ திட்டமிடலைப் பரவலாக்குதல்
- ➢ அளிக்கப்படும் சுகாதாரப் பணியின் நிலையை உயர்த்துதல்
- ➢ மகளிரிடையே உடல்நலம் பேணும் ஆர்வத்தை அதிகரிப்பதன் மூலம் பணித் தேவையை உருவாக்குதல்

கருவுறுதிறன், தாய் மற்றும் சிசுமரணம், நோய்த்தாக்கம் ஆகியவற்றைக் குறைப்பது, இத்திட்டத்தின் ஒட்டு மொத்த நோக்கமாகும். பூஜ்யம் மக்கட்தொகை வளர்ச்சி வீதத்தை எய்த இது உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.



**திட்ட வடிவமைப்பு**

மகப்பேறு குழந்தை நலத்திட்டம் தமிழ்நாட்டில், இரண்டு அம்சங்களாக செயல்படுத்தப்பட்டுள்ளது:

1. மதுரை, தேனி மாவட்டங்களில் (ஊரக மற்றும் நகர்ப் பகுதிகள்) செயல்படுத்தப்படும் வகையிலான ஒரு துணை திட்ட அம்சம்.
2. தமிழ்நாட்டில் எஞ்சி உள்ள அனைத்து மாவட்டங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதி குறித்த தேவைகளை வலுப்படுத்துவதற்கான மாநில அரசின் திட்ட செயல்பாட்டுடன்கூடிய ஒரு தேசிய அம்சம்.

இந்த துணைத் திட்டத்தை ரூ.23.14 கோடி (ஊரகப் பகுதிகளுக்கு 15.24 கோடி, நகர்ப் பகுதிகளுக்கு ரூ.7.90 கோடி) நிதி ஒதுக்கீட்டில் 1997–98 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி 5 ஆண்டு கால அளவில், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

**துணைத் திட்டக் கூறு:**

**(மதுரை மற்றும் தேனி மாவட்டம்)**

இந்த துணைத் திட்டம் 1997-1998 ஆம் ஆண்டு தொடங்கி மார்ச் 31, 2004 முடிய 5 ஆண்டு கால அளவில் மதுரை, தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாவட்டங்களில் இந்த மகப்பேறு குழந்தை நல துணைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு:-

- ➢ சுகாதாரப் பணியாளர்களின் திறனை நிலை உயர்த்துதல்
- ➢ ஏனைய புதிய முயற்சிகள் மற்றும் மேம்பட்ட வாகனவசதி மூலம் நோயாளிகளின் இடத்திற்குச் சென்று பணி ஆற்றுவதை வலுப்படுத்தல்
- ➢ பெண் சிசு கொலையைத் தவிர்க்க ஆலோசனை நல்குதல் மற்றும் மாவட்டத்தில் சில பகுதிகளில் கொள்ளை நோய் பரவாமல் இருக்க ஆலோசனை கூறுதல்

- சாதனங்கள், மருந்துப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கச் செய்தல்
- மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதி, மனித ஆற்றல் ஆதரவு
- வளர் இளம்பெண்களிடையே திறனை உருவாக்குதல்
- தெரிந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதன்மூலம் கருத்தரிப்பு நோய்தொற்றுகளுக்கு சிகிச்சை அளித்தல்
- தனியார் மற்றும் அரசு சாரா அமைப்புகள் பங்குகொள்வதை ஊக்குவிக்க முன்னோடி முயற்சிகளை மேற்கொள்ளுதல்

## துணைத் திட்டம் - கிராமப்புறப் பகுதி

1. துணைச் சுகாதார நிலையங்களின் கட்டுமானப் பணிகள்
2. ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள வசதிகளை மேம்படுத்துதல்
3. தெரிவுசெய்யப்பட்ட துணை சுகாதார நிலையங்களில் சிறிய மராமத்து பணிகளை மேற்கொள்ளுதல்
4. அனைத்து சுகாதார நிலையங்களுக்கு தாய் சேய் நலம், குழந்தை நலம், மயக்க மருந்து மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்கத்திற்கு தேவையான பொது உபகரணங்கள் விநியோகம் செய்தல்.
5. ஆரம்ப சுகாதார நிலையங்களின் தேவைகளுக்கென லகுரக வாகனங்கள் வாங்கப்பட்டு விநியோகம் செய்தல்
6. தேனி மாவட்டத்தில் பொது மக்களுக்கு நலச் சேவைகளை அதிகளவில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அவர்களுக்குத் தூண்டுதல் அளித்து கலைப்பயணம், தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
7. மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள அரசு தலைமையிட மருத்துவமனைகளிலும், சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்திலும் கணினி மற்றும் அதற்குத் தேவையான உபபொருட்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது. மதுரை



மற்றும் தேனி மாவட்டத்திலுள்ள மருத்துவப் பணியாளர்களுக்கு கணினி பயிற்சி வழங்கப்பட்டது.

8. மகளிர் சுகாதார களப் பணியாளர்களுக்கு வாகனம் ஓட்டுதல் மற்றும் தகவல் தொடர்புப் பணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு மொபெட் வாகனம் வாங்க கடன் வசதி வழங்கப்பட்டது.
9. அகில இந்திய வானொலியில் சுகாதாரம் தொடர்பான நலச் செய்திகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.
10. தன்னார்வத் தொண்டு நிறுவன உதவியுடன் சிக்கலான பிரசவங்கள் மற்றும் சாலை விபத்து நேரிடும் நபர்களுக்கு மேல் சிகிச்சை அளிப்பதற்கு கம்பி இல்லா தொடர்பு வசதியுடன் கூடிய அவசரக்கால ஊர்தி செயல்பட்டு வருகிறது.

## துணைத் திட்டம் - நகர்ப் பகுதி

1. நகர்ப் பகுதி சுகாதார மையங்களைக் கட்டுதல்.
2. நகர்ப் பகுதி சுகாதார மையங்களுக்கு மேசை, நாற்காலி போன்ற அறைகலன்களும் சாதனங்களும் வழங்கப்பட்டன.
3. நகர்ப்பகுதி சுகாதார மையங்களுக்கு மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.
4. மதுரை மாவட்டத்தில் மகப்பேறு குழந்தை நலத் துணைத் திட்டம் 31-3-2004 அன்று முடிவடைந்து விட்டது.

## தேசிய திட்டக்கூறு - மாநில செயலாக்கத் திட்டம்

1. ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நோயாளிகள் முதற்கண் அனுப்பப்படும் மருத்துவமனைகளிலும் பெரிய அளவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
2. தெரிவுசெய்யப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறிய அளவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
3. தெரிவு செய்யப்பட்ட 90 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணிநேர பேறுகால கவனிப்பு வசதிக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

4. மாவட்டங்களிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் உடனடியாக மகப்பேறு கவனிப்பு (சிசேரியன் அறுவை சிகிச்சை வசதியும்) குடும்ப நலப் பணிகளும் (கருத்தடை அறுவை சிகிச்சை வசதி) கிடைக்க வகை செய்வதற்காக, மயக்க மருந்தளிக்கும் மருத்துவர்களை/மகப்பேறு மருத்துவர்களை ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றொரு மருத்துவமனைக்கு மாற்றி பணியமர்த்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

5. கருத்தரிப்புப் பாதை நோய்த்தொற்றுக்கு/பால்வினை நோய்த் தொற்றுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக, தெரிவு செய்யப்பட்ட 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கருத்தரிப்பு பாதை நோய்த்தொற்று சிகிச்சை மருந்தகங்கள்/பால்வினை நோய்த்தொற்று சிகிச்சை மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன

6. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில்/ நோயாளிகள் முதற்கண் அனுப்பப்படும் மருத்துவமனைகளில் சிசேரியன் அறுவைசிகிச்சை வசதியும், கருத்தடை அறுவைசிகிச்சை வசதியும் அளிப்பதற்காக, மதிப்பூதிய அடைப்படையில், தனியார் மயக்க மருந்து மருத்துவர்களைப்/மகப்பேறு மருத்துவர்களை அமர்த்தும் நடைமுறை செயல்படுத்தப்படுகிறது

7. தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நோயாளிகள் முதற்கண் அனுப்பப்படும் மருத்துவமனைகளுக்கு மருந்துப்பொருட்களும், காயக்கட்டு துணிகளும் வழங்கப்பட்டன.

8 'A' 'B' மருந்துப்பைகள், பேறுகால இன்றியமையா மருத்துவச்சாதனங்கள் அடங்கிய பைகள், அவசரநிலை பேறுகால (சிசேரியன் அறுவை சிகிச்சை) மருத்துவச் சாதனங்கள் அடங்கிய பைகள், கருத்தரிப்புப் பாதை தொற்று (RTI) பால்வினை நோய்த் தொற்று மருந்துப்பொருட்கள் அடங்கிய பைகள் ஆகியவற்றை சுகாதாரத் துணை மையங்களுக்கு / ஆரம்ப சுகாதார மையங்களுக்கு நோயாளிகள் முதற்கண் அனுப்பப்படும் மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்காக தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கொள்முதல் செய்து வந்தது.

9. ஆரம்ப சுகாதார நிலையங்கள்/நோயாளிகள் முதற்கண் அனுப்பப்படும் மருத்துவமனைகள், தலைமைப் மருத்துவமனைகள் பயன்படுத்துவதற்காக மருத்துவச் சாதனங்கள் அடங்கிய பைகளை, மத்திய அரசு வழங்குகிறது.



**தேசிய திட்டக்கூறு-மாநில செயலாக்கத் திட்டத்திற்கான வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கீடு**

ரூபாய் இலட்சத்தில்

| | | |
|---|---|---|
| 1. | சிறிய அளவிலான கட்டுமானப் பணிகள் | - 220 |
| 2. | பெரிய அளவிலான கட்டுமானப்பணிகள் | - 938 |
| 3. | ஒருங்கிணைந்த நிதியொதுக்கீடு | - 457 |
| 4. | மருந்து பொருட்கள் அடங்கிய பைகள் | 1490 |
| | மொத்தம் | ரூ.3105 |

தேசிய திட்டக் கூறு-மாநில செயலாக்கத் திட்டம்- 1-4-2004 ஆம் நாளுக்குப் பின்னரும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மகப்பேறு-குழந்தை நலத் திட்டத்தின்கீழ் பயிற்சி**

புதுடில்லி, தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைப்பின் உடனுழைப்புடன்,, அனைத்து வகை மருத்துவம் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் கீழ்க்காணும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

- மகப்பேறு குழந்தை நலன், (நாட்டின் மக்கள் தொகை குறியீடுகள் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பயிற்சி)
- இன்றியமையா மகப்பேறு கவனிப்பு மற்றும் பிறந்த குழந்தை பராமரிப்பு ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த திறன் மேம்பாடு குறித்த பயிற்சி
- மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு, பெண்களுக்கான கருத்தடை அறுவைசிகிச்சை, கருத்தடை வளையம் பொருத்துதல் ஆகியவற்றில் சிறப்புத் திறன் மேம்பாடு குறித்த பயிற்சி.
- தகவல் தொடர்பு குறித்த பயிற்சி

[2004 ஜூலை 26

- மாவட்ட சுகாதார நிருவாக அதிகாரிகளுக்கான நிருவாகப் பயிற்சி.

## மகப்பேறு குழந்தை நலத் திட்டத்தின் நிலை II-ஐத் திட்டமிடுதல்

மகப்பேறு குழந்தை நலத் திட்டத்தின் நிலை II-ஐத் திட்டமிடுகிற பணி நடைபெற்று வருகிறது. நிலை II-ஐச் செயல்படுத்தும் பணி 2005 ஆம் ஆண்டில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய திட்டக்கூறு மாநில செயலாக்கத் திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

### 2004-2005 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

1. 2004-2005 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் ரூ. 700 இலட்சம் மதிப்புள்ள மருந்துப் பொருட்கள் அடங்கிய பைகள் வழங்கப்படும்.

2. ஒருங்கிணைந்த நிதியொதுக்கீட்டின்கீழ் இந்த நிதியாண்டில் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

அ) 3 செவிலியர், ஓட்டுநர், துப்புரவுப் பணியாளர் ஆகியோருடன் கூடிய 24 மணி நேர பேறுகால கவனிப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்.

ஆ) தெரிவு செய்யப்பட்ட 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கருத்தரிப்புப் பாதை நோய்த் தொற்று/ பால்வினை நோய்த் தொற்று சிகிச்சை மருந்தகங்களை ஏற்படுத்துதல்.

இ) நோயாளிகள் முதற்கண் அனுப்பப்படும் மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மயக்க மருந்து மருத்துவர்களையும், மகப்பேறு மருத்துவர்களையும் அமர்த்தி உடனடி பேறுகால கவனிப்பு வசதியைச் (சிசேரியன் அறுவை சிகிச்சை வசதி) செய்து கொடுத்தல்.

3. நகர்ப்பகுதி சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக, நகராட்சிகளிலிருந்தும், 6 மாநகராட்சிகளிடமிருந்தும் செயற்குறிப்புகள் கோரப்பட்டுள்ளன. இதுவரையில் நகராட்சிகளிடமிருந்து வரப்பெற்ற 61 செயற்குறிப்புகள் மத்திய



2004 ஜூலை 26]

அரசின் வரையறைகளின்படி மாற்றியமைக்கப்பட்டு ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

4. வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள பெண்கள் அனைவரும் பேறுகாலப் பயனைப் பெறுகின்ற வகையில் தேசிய பேறுகாலப் பயன் திட்டத்தின் செயலாக்கம் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படும்.

5. நகர்ப்பகுதி சுகாதார மையங்களில் பணியாற்றுகிற மருத்துவம் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. 24 மணிநேர உடனடி பேறுகால கவனிப்பு வசதிகளையும், பிறந்த குழந்தைகளுக்கான பராமரிப்பு வசதியையும் செய்து கொடுப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் பேறுகால மருத்துவ வசதிகள் அனைத்தும் கொண்ட இரண்டு மருத்துவமனைகள் (விரிவான உடனடி பேறுகால கவனிப்பு வசதி மற்றும் பிறந்த குழந்தை பராமரிப்பு வசதி கொண்ட மருத்துவமனைகள்) இனங்கண்டறிப்பட்டுள்ளன. இந்த மையங்களில் தரமான மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக சிறப்பு மருத்துவர்களுடன் போதிய பணியாளர்கள், சாதனங்கள், இரத்த வங்கிகள் போன்ற வசதிகளைக் கொண்டிருக்கும். விரிவான உடனடி பேறுகால கவனிப்பு வசதி மற்றும் பிறந்த குழந்தைகளுக்கான பராமரிப்பு வசதி கொண்ட மருத்துவமனைப் பணியாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படும்.

# அத்தியாயம் – 11

## தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம்

எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்புத் திட்டங்களுக்கு இந்த அரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இம்மாநிலத்தில் எச்.ஐ.வி / எய்ட்ஸுடன் வாழும் மக்களுக்குப் போதுமான அன்பு, அரவணைப்புடன் கூடிய சிகிச்சை அளிப்பதிலும் அதே அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. எச்.ஐ.வி.தடுப்பு/ நோயாளிகளின் நலன் மற்றும் ஆதரவு திட்டங்கள் முழு வெற்றி பெற தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், இவ்வாண்டில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த ஆண்டில் நடத்தப்பட்ட தடுப்பு கண்காணிப்பு ஆய்வு (Sentinel

Surveillance Survey) மற்றும் நடத்தை மாற்ற கண்காணிப்பு ஆய்வுகளின் (Behavioural Surveillance Survey) முடிவுகள், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலன் அளிக்கத் தொடங்கியுள்ளன என்பதைக் காட்டுகின்றன.

## எச்.ஐ.வி. நிலவரம்

பொது மக்களிடையே கண்காணிப்படவேண்டிய பிரிவினர் (Sentinel group) என்று அழைக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவினரிடம், எச்.ஐ.வி தொற்றும் தன்மையைக் கண்டறிய, குறித்த காலத்திற்கொரு முறை அதே இடங்களில் நடத்தப்படும் ஆய்வுகள் நோய் பரவல் நிலவரத்தைக் கண்டறிவதில் உதவிபுரிகின்றன. தமிழகம் முழுவதும் 2003 ஆம் ஆண்டில் ஆகஸ்டு திங்கள் முதல் அக்டோபர் திங்கள் வரையில் 79 இடங்களில் நோய் கண்டறியும் ஆய்வு (Round 2003) நடத்தப்பட்டது. கீழ்க்கண்ட பிரிவினர்கள் இந்த நோய் கண்டறியும் ஆய்வுக்காக உட்படுத்தப்பட்டார்கள். (1) அரசு மருத்துவமனைகளில் உள்ள பால்வினை நோய்ப் பிரிவுக்கு வருபவர்கள் (2) ஊசி மூலம் போதை மருந்தைச் செலுத்திக் கொள்பவர்கள் (IVDU) (3) பெண் பாலியல் தொழிலாளர்கள் (4) ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள் (MSM) (5) முன் பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணித் தாய்மார்கள். இந்த ஆய்வில் கர்ப்பிணித் தாய்மார்களுடைய எச்.ஐ.வி நிலவரம், 2002 ஆம் ஆண்டில் 0.87 சதவீதத்திலிருந்து (Median) 2003 ஆம் ஆண்டில் 0.75 சதவீதமாகக் குறைந்துள்ளது எனத் தெரியவருகிறது. அதே போன்று பால்வினை நோய் பிரிவிற்குச் சிகிச்சைக்கு வருபவர்களிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் 2002 ஆம் ஆண்டில் 14.80 சதவீதத்திலிருந்து 2003 ஆம் ஆண்டில் 9.20 சதவீதமாகக் குறைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. முதன் முறையாக இந்த ஆய்வில் பெண் பாலியல் தொழிலாளர்களிடம் எச்.ஐ.வி நிலவரம் 8.80 சதவீதமாக உள்ளது. ஊசி மூலம் போதை மருந்தைச் செலுத்திக் கொள்பவர்களிடையேயும் மற்றும் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்களிடையேயும் இவ்வாண்டில் எச்.ஐ.வி நோய் பரவல் அதிகரித்துள்ளது. ஊசி மூலம் போதை மருந்தைச் செலுத்திக் கொள்பவர்களிடம் எச்.ஐ.வி நிலவரம் 33.80 சதவீதத்திலிருந்து 83.80 சதவீதமாகவும், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்களிடையே எச்.ஐ.வி நிலவரம் 2.40 சதவீதத்திலிருந்து 4.40 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.



## விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

மக்களிடையே எச்.ஐ.வி நோய் பரவுவதைத் தடுக்க அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் இச்சங்கம் வெற்றி பெற்றுள்ளது. நடத்தை மாற்றக் கண்காணிப்பு ஆய்வின் முடிவுகளிலிருந்து பொது மக்களிடையேயும், நோய் பரவ அதிக வாய்ப்புள்ளவர்களிடையேயும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய அதிக அளவு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. சமுதாயத்தில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய தவறான கருத்துகளைக் களைவதில் போதுமான அளவு வெற்றி பெற்றுள்ளோம். செய்தி, கல்வி, தகவல்தொடர்பு ஆகிய நடவடிக்கைகள் மூலம் எச்.ஐ.வி/எய்ட்ஸுடன் வாழ்பவர்களின் மனித உரிமையைக் காப்பாற்றுவதிலும், எச்.ஐ.வி/எய்ட்ஸுடன் வாழ்பவர்களைத் தனிமைப்படுத்துவதையும் அவர்கள்மீது களங்கம் கற்பிப்பதையும் தடுப்பதற்கான திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

## பள்ளிகளில் எய்ட்ஸ் பற்றிய கல்வித் திட்டம்

பள்ளிப் பாடத் திட்டத்தில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய பாடங்களை அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இது தவிர, இந்திய அரசின் நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில், முதன் முறையாக தமிழ்நாட்டிலுள்ள 8417 அரசு மற்றும் தனியார் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அனைத்தும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, தமிழ்நாட்டிற்கு யூனிசெப் (UNICEF) மற்றும் யூஎஸ்எயிட் (USAID) உதவியுடனான அபக் (APAC) திட்டமும் தங்களுடைய ஆதாரவை அளித்துள்ளன.

## இலக்கிட்ட தடுப்புத் திட்டங்கள்

எச்.ஐ.வி தடுப்பு நடவடிக்கைகள் குறிப்பாக, அதிக ஆபத்தை எதிர்நோக்கியுள்ள பிரிவினரை இலக்காகக் கொண்ட திட்டங்கள் இலக்கிட்ட தடுப்புத் திட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இத்திட்டங்கள், அதிக ஆபத்தில் உள்ள பிரிவினரைப் பாதுகாத்து, எச்.ஐ.வி

பரவுவதைத் தடுப்பதற்கு மட்டுமல்லாமல், பொது மக்களிடையேயும் எச்.ஐ.வி பரவுவதைத் தடுப்பதற்கும் அவசியமாகின்றன. தற்போது, 75 திட்டங்கள் இச்சங்கத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் 20 திட்டங்கள், பாலியல் தொழிலாளர்களுக்காகவும், 15 திட்டங்கள் வாகன ஓட்டுநர்களுக்காகவும், 31 திட்டங்கள் தொழிலக மற்றும் குடி பெயரும் தொழிலாளர்களுக்காகவும், மற்றும் 2 திட்டங்கள் ஓரினச் சேர்க்கையாளர்களுக்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் யாவும் அரசு சாரா அமைப்புகளின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அமைப்புகள் எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதில் மிக முக்கியப் பங்கு ஆற்றுகின்றன.

## பால்வினை நோய் (STD) பாதிப்பைக் குறைத்தல்

### பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகள்

இச்சமுதாயத்தில் பால்வினை நோயின் தாக்கம் அதிகமாக இருப்பது எச்.ஐ.வி./எய்ட்ஸ் எளிதில் பரவ வழி வகுக்கிறது. ஆகையால், எச்.ஐ.வி./எய்ட்ஸுக்கு எதிராகப் போராடுவதில் பால்வினை நோயைக் குறைத்தல் ஒரு முக்கியமான அம்சமாகிறது. இச்சங்கம், தமிழ்நாட்டில் 57 பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும், சாதனங்களையும் மற்றும் மருந்துகளையும் வழங்கி வருகிறது. மேலும், தொடர் மருத்துவக் கல்வித் திட்டத்தின் மூலம் மருத்துவர்களின் திறமை மற்றும் அறிவு மேம்படுத்தப்படுகிறது. பால்வினை நோய் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளிடம் பரிவுடன் நடந்துகொள்ள மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கு மன மாற்றங்களை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

### குடும்ப நல விழிப்புணர்வு முகாம்

பொது மக்களிடையே பால்வினை நோயைக் கண்டறிந்து அதற்கு உரிய சிகிச்சை அளிப்பதற்குக் குடும்ப நல விழிப்புணர்வு முகாம் ஒரு முக்கிய வழிமுறையாகக் கருதப்படுகிறது. மத்திய அரசின் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன், தமிழ்நாட்டில் 1999 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வோர் ஆண்டும் குடும்ப நல விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 2003 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் 14,889 இடங்களில் குடும்ப நல மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாம்களுக்கு பல் ஊடகங்கள் வாயிலாக போதிய



அளவுக்குப் பிரச்சாரம் செய்யப்பட்டதால் இம்முகாம்களின் மூலமாக கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பால்வினை நோயாளிகளின் எண்ணிக்கை 2002 ஆம் ஆண்டில் 6,63,330 லிருந்து 2003 ஆம் ஆண்டில் 11,05,047 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 8,31,986 பேர் பெண்கள்.

### ஆணுறை பயன்பாட்டை ஊக்குவித்தல்

பொது மக்களில் அதிக எச்.ஐ.வி நோய் பரவ அதிக வாய்ப்புள்ள பிரிவினரிடையேயும் மற்றும் குறைந்த வாய்ப்பு உள்ளவர்களிடையேயும், உடலுறவின் மூலம் எச்.ஐ.வி பரவுவதைத் தடுப்பதற்காக ஆணுறை பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆணுறை விற்பனைத் திட்டத்தில் அரசு சாரா அமைப்புகளும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. தற்போது மாநிலத்தில் உள்ள நியாய விலை கடைகளிலும் ஆணுறைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

### இரத்தப் பாதுகாப்பு

எச்.ஐ.வி./எய்ட்ஸ், இரத்தம் மற்றும் இரத்தம் சார்ந்த பொருட்கள் மூலமாகவும் பரவலாம். ஆகையால் பரிசோதிக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான இரத்தத்தை அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில இரத்த ஏற்று குழுமம், மருந்து கட்டுப்பாட்டு இயக்ககத்துடன் இணைந்து, இரத்த வங்கிகளின் செயல்பாட்டை உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. பாதுகாப்பான இரத்தத்தைத் தானமாக அளிப்பதில் தன்னார்வ இரத்தக் கொடையாளிகள் மிக முக்கியப் பங்காற்றுகின்றனர். தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிப்பதற்கு அதிக முயற்சி மேற்கொள்ளப்பட்டதால் தன்னார்வ இரத்த தானம் அளிப்பவர்களின் எண்ணிக்கை 59.40 சதவீதத்திலிருந்து இவ்வாண்டில் 64.05 சதவீதமாக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் தொடர் நடவடிக்கைகள் மூலமாக, இரத்தக் கொடையாளிகளிடையே எச்.ஐ.வி சதவிகிதம் 0.21 சதவீதத்திலிருந்து 0.18 சதவீதமாகக் குறைந்துள்ளது.

### பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்குப் பரவுவதைத் தடுக்கும் திட்டம்

எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுள்ள தாயிடமிருந்து, பிறக்கும் குழந்தைக்கு எச்.ஐ.வி நுண்கிருமி பரவுவதைத் தடுப்பதற்காக, தமிழ்நாட்டில் பெற்றோர் சேய் நோய் பரவாத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம்,

தற்போது, அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு தலைமையிட மருத்துவமனைகள், தனியார் மகப்பேறு மருத்துவமனைகள், மாநகராட்சி நல மையங்கள் என 65 நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முன்பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு வரும் எல்லா கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் அவர்களுடைய கணவன்மார்களுக்கும் ஆலோசனை அளித்தல், எச்.ஐ.வி பரிசோதனை, எச்.ஐ.வி உள்ளதாகக் கண்டறியப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எச்.ஐ.வி நுண்கிருமிக்கு எதிரான மருந்து அளிப்பது மட்டுமல்லாமல், பொதுவாக கர்ப்பிணித் தாய்மார்களின் கவனிப்பை மேம்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் சிறப்பம்சங்களாகும்.

## தன்னார்வ இரகசிய ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள்

நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் ஆதரவு நடவடிக்கைகளுக்கும் இடையே தன்னார்வ இரகசிய ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் ஆகியவற்றுக்கிடையே ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்படுகின்றன. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சிறந்த கட்டமைப்பு மூலமாக (1) நோய் பரவ அதிக வாய்ப்புள்ள பிரிவினரை வரவழைத்து ஆலோசனை வழங்குதல் (2) அவர்களிடம் எதிர்பார்க்கும் நடத்தை மாற்றத்தைத் கொண்டுவருதல் (3) நிணநீர் தொற்றுக்குள்ளானவர்களைக் (sero positive) கண்டறிதல் (4) நிணநீர் தொற்றுக்குள்ளானவர்களிடம் (sero positive ) மன ரீதியான நல்ல மாற்றத்தை ஏற்படுத்துதல் (5) நிணநீர் தொற்றுக்குள்ளான (sero positive) நபர்களின் தேவையறிந்து தேவையான மருத்துவ உதவி கிடைக்கப் பரிந்துரை செய்தல் ஆகிய பணிகளை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். இச்சங்கம், தற்பொழுது 43 தன்னார்வ இரகசிய ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களுக்கு ஆதாவு அளித்துள்ளது. இவ்வாண்டில் இம்மையங்களின் மூலம் 85,000 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

## கவனிப்பும் ஆதரவும்

இந்த அரசு, இம்மாநிலத்தில் உள்ள எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு, அவர்களுக்கு மன நல மாற்றம் மற்றும் தரமான சிகிச்சை வசதி கிடைக்க அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இச்சங்கம் வாய்ப்பாக ஏற்படும் நோய் தொற்றுக்கான மருந்துகளை வாங்குவதற்காக நிதி உதவியை அளித்து



வருகிறது. எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்கள் சங்கத்திற்கு பகல் நேரக் கவனிப்பு மற்றும் சமுதாய கவனிப்பு மையங்களை நடத்த இச்சங்கம் உதவி அளிக்கிறது. இச்சங்கம் தற்போது 12 தனியார் நிறுவன நல அமைப்புகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டியுள்ளது. அவற்றில் 5 சமுதாய நல மையங்களும் மற்றும் 7 நல மையங்களும் (Drop-in-Centres) அடங்கும். எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸுடன் வாழும் மக்களுக்கு உதவுவதற்காக, இந்த அரசு எச்ஐவி நுண்கிருமிக்கு எதிரான மருந்துகளுக்கு (ART) விற்பனை வரி விலக்கு அளித்துள்ளது.

## எச்.ஐ.வி நுண்கிருமிக்கு எதிரான சிகிச்சை (Anti Retroviral Therapy)

இந்திய அரசாங்கம் நமது நாட்டில் பொது சுகாதார அமைப்பின் கீழ் எச்ஐவி நுண்கிருமிக்கு எதிரான மருந்துகள் கிடைக்கச் செய்வதென்ற கொள்கை முடிவை எடுத்துள்ளது. இம்முடிவின்கீழ் முதல் கட்டமாக 1-4-2004 முதல் தமிழ்நாட்டில் தாம்பரத்தில் உள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரையில் 100 எய்ட்ஸ் நோயாளிகளுக்கு எச்.ஐ.வி நுண்கிருமிக்கு எதிரான (ART) இலவச சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

## எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் மக்களை அதிக அளவில் ஈடுபடுத்துதல் (GIPA)

இந்த அரசு எச்ஐவி/எய்ட்ஸுடன் வாழும் மக்களை அதிக அளவில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்புத் திட்டங்களில் ஈடுபடுத்திட உறுதி பூண்டுள்ளது. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தில் பல்வேறு நிலைகளில் எடுக்கப்படும் முடிவுகளில், எச்.ஐ.வியுடன் வாழும் குழுக்களும் முனைப்புடன் ஈடுபடுத்தப்படுகின்றன. குறிப்பாக, தமிழ் நாட்டில் உள்ள எல்லா மருத்துவமனை ஆலோசனைக் குழுக்களிலும் (Advisory Committee) எச்.ஐ.வியுடன் வாழும் பெண் உறுப்பினரைச் சேர்க்கும்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 2004-2005 ஆம் ஆண்டிற்கான நிதி

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் 2004-2005 ஆம் ஆண்டில் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டங்களை மொத்தம் ரூ. 15 கோடி செலவில், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் ஒப்புதலோடு இந்திய அரசு, நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது.

# அத்தியாயம் – 12

## தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

### நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 01–07–1994–ல் தொடங்கப்பட்டது. இக்கழகம், ஐ.எஸ்.ஓ. 9001 – 2000 தரச்சான்றிதழைப் பெற்றுள்ளது.

இக்கழகம், திறமைமிக்க இயக்குநர்கள் குழுவால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. 19–06–2004 முதல் இக்கழகத்திற்கு தலைவர் (Chairman) நியமிக்கப்பட்டுள்ளார். இயக்குநர்கள் குழுவிலுள்ள ஒருவர் இயக்குநர்களுள் அவரும் ஒருவர் ஆவார். இக்கழகத்தின் அன்றாட நிருவாகத்தை இதன் மேலாண்மை இயக்குநர் கவனித்து வருகிறார்.

### நடவடிக்கைகள்

### மருந்துப் பொருட்கள் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தரம் வாய்ந்த மருந்துப் பொருட்கள், மருந்துகள், அறுவை சிகிச்சைக்குத் தேவையான மருந்துப் மற்றும் தையல் போடுவதற்குத் தேவையான பொருட்கள் பொருட்கள் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் தாராளமாகக் கிடைப்பதை உறுதி செய்கிறது.

### கால்நடை மருந்துகளின் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், கொள்முதல், சேமித்தல், விநியோகித்தலுக்கான சீரான நடைமுறையைப் பின்பற்றி மருந்துகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் திரவ நைட்ரஜன் (Liquid Nitrogen) முதலியவற்றைக் கொள்முதல் செய்து தமிழ்நாடு முழுவதிலும் கால்நடை பராமரிப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிற அரசு கால்நடை மருத்துவமனைகளுக்கு விநியோகம் செய்கிறது.

அந்தந்தத் துறைத் தலைவர்கள் செய்த நிதியொதுக்கீட்டின் அடிப்படையில், "பாஸ் புத்தக" ஏற்பாடு ஒன்றின் மூலம்,



தமிழ்நாட்டிலுள்ள 24 மருந்துப் பொருட்கள் சேமிப்புக் கிடங்குகளிலிருந்து அரசு மருத்துவ நிறுவனங்களுக்கு மருந்துப் பொருட்களும், மருந்துகளும் விநியோகிக்கப்படுகின்றன.

### சி.டி. மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையங்களின் செயல்பாடு

இக்கழகம், தமிழ்நாட்டில் 35 அரசு மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் மையங்களையும், சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு எம்.ஆர்.ஐ ஸ்கேன் மையம் வீதம் 2 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையங்களையும் ஏற்படுத்தி குறைந்த கட்டணத்தில், பொது மக்களுக்கு ஸ்கேன் வசதியை அளித்து வருகிறது.

### சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள இரத்த சேத தடுப்பு மற்றும் ஈரல் பித்தப்பை இயல் மையங்களைப் பராமரித்தல்

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் பராமரிக்கப்படுகிற ஐ.எஸ்.ஓ. 9001 தாச்சான்றிதழ் பெற்ற இரத்த சேத தடுப்பு மற்றும் ஈரல் மற்றும் பித்தப்பை இயல் (சிறப்புப் பிரிவு) மையமானது, இரப்பை–குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத் துறையின்கீழ் ஒரு தனிப்பட்ட பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திலிருந்து கிடைக்கிற வருமானத்தைக் கொண்டு இப்பிரிவுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் அளிக்கிறது. மேலும், இதில் பணிபுரியும் செவிலியர்கள் மற்றும் இம்மையத்தைப் பராமரிக்கும் பணியாளர்கள் தனியார் முகவாமைப்புகள் மூலம் நியமிக்கப்படுகின்றனர். இம்மையத்திலிருந்து கிடைக்கும் வருமானம் மூலம் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

### மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் மருத்துவ நிறுவனம் மற்றும் தாய்–சேய் நல அரசு மருத்துவமனையில் சிறப்பு வகை மகப்பேறு கட்டணப் பிரிவு பராமரிப்பு

சென்னை எழும்பூரில் உள்ள மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் மருத்துவ நிறுவனம் மற்றும் தாய் சேய் நல அரசு மருத்துவமனையில் கட்டண மகப்பேறு பிரிவினைப் பராமரிக்கும் பொறுப்பு, தமிழ்நாடு

மருத்துவப் பணிகள் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 19-02-2003-லிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. இப்பிரிவு பணிகள் கழகம், எழும்பூரிலுள்ள மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் மருத்துவ நிறுவனம் மற்றும் தாய் சேய் நல அரசு மருத்துவமனையில் இப்பிரிவினை செவ்விய முறையில் பராமரித்து வருகிறது.

## முழு உடல் பரிசோதனைத் திட்டம்

சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவமனையில், முழு உடல் பரிசோதனைத் திட்டச் செயலாக்கம் குறித்த நிதிக் கட்டுப்பாடு, 01-04-2001 முதல் இக்கழகத்தின் வரம்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கழகம், இத்திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

## கட்டுமானப் பணிகள்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கான சேமிப்புக் கிடங்குகள் உட்பட தமிழ்நாட்டில் 7 மண்டல நோய்அறி மையங்களையும், 5 இடங்களில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளையும், 8 நகர்ப் பகுதி சுகாதார நிலையங்கள், 21 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றையும் கட்டுகிற பணியை மேற்கொண்டுள்ளது. உலக வங்கியின் நிதி உதவி பெற்ற மகப்பேறு மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் மதுரை, தேனி மாவட்டங்களில் 35 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 70 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் மேம்பாட்டுப் பணி நடைபெற்று வருகிறது.

## மைய கொள்முதல் குழு விலை ஒப்பந்த நிர்ணயம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 2002-2004 வரையிலான கால அளவிற்கு அரசு மருத்துவமனைகளிலுள்ள 19 மருத்துவ சிகிச்சை துறைகளுக்குத் தேவைப்படுகிற சாதனங்கள், இரண்டு துணை பாகங்களை (சுமார் 3078 பொருட்கள்) கொள்முதல் செய்வதற்கு ஒளிவு மறைவற்ற பகிரங்க ஒப்பந்தப்புள்ளி ஏற்பாடு மூலம் மைய கொள்முதல் குழுவின் விலை ஒப்பந்தத்தை முடிவு செய்துள்ளது. மருத்துவ நிலையங்கள் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஏற்ப தங்களுக்குத் தேவைப்படும் கருவிகள் மற்றும் சாதனங்களை மைய கொள்முதல் குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிலிருந்து ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில் நேரடியாகக் கொள்முதல் செய்யலாம்.



## மருத்துவச் சாதனங்களின் கொள்முதல் மற்றும் வழங்கல்

இக்கழகம் அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான உயர் தொழில் நுட்பம் மற்றும் அதிக மதிப்புள்ள மருத்துவச் சாதனங்களை அரசின் ஆணையின்படி, கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

## ஆலோசனைப் பணிகள்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மருந்துகளின் கொள்முதல் மற்றும் கிடங்கு சேமிப்பு உத்தியில் நமது நாட்டிற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. பல மாநிலங்கள் இக்கழகத்தின் செயல் முறைகளைப் பின்பற்றி வருகின்றன. இக்கழகம், ஆந்திர அரசிற்கு ஆலோசனை வழங்கும் பணியை வெற்றிகரமாகச் செய்துமுடித்து உள்ளது. இராஜஸ்தான் மாநில அரசும் ஆலோசனைப் பணிகளை வழங்குமாறு இக்கழகத்தினை அணுகியுள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில அரசின் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் இக்கழகத்தைப் பார்வையிட்டு, இக்கழகத்தின் ஏற்பாடுகள், கொள்கைகள் ஆகியவற்றை தங்கள் அரசு பின்பற்றும் என்று தெரிவித்துள்ளார்.

## மருந்துப் பொருட்கள் கொள்முதல்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், 257 வகை மருந்துப் பொருட்கள் மற்றும் மருந்துகள், 63 வகை அறுவைச் சிகிச்சை பொருட்கள், 92 வகை தையல் பொருட்கள் ஆகியவற்றை ஒளிவுமறைவற்ற, பகிரங்க ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த மருந்து தயாரிப்பாளர்களிடமிருந்து கொள்முதல் செய்கிறது. மேலும் இதேபோன்று இக்கழகம் 130 வகை மருந்துப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் திரவ நைட்ரஜன் (Liquid Nitrogen) முதலியவற்றை கால்நடை பராமரிப்புத் துறைக்காகக் கொள்முதல் செய்துவருகிறது. ஒவ்வொரு மருந்துப் பொருள் சேமிப்புக் கிடங்கிற்கும் தேவைப்படுகிற மருந்துப் பொருட்கள், வழங்கல் ஆணையை அளித்தல், மருந்து விநியோகம் ஆகிய பணிகள் கணினி ஏற்பாட்டு முறையின்கீழ் கண்காணிக்கப்படுகின்றன.

## தரத்தை உறுதி செய்தல்

இக்கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படுகிற மருந்துப் பொருட்களின் தரத்தை உறுதி செய்ய, தரக் கட்டுப்பாடு பிரிவு

ஒன்றை கழகம் ஏற்படுத்தியுள்ளது. தரக் கட்டுப்பாடு பிரிவு மருந்து நிறுவனங்கள் வழங்கும் மருந்து தொகுதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் மாதிரி எடுத்து பகிரங்க ஒப்பந்தப்புள்ளி மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறந்த சோதனைக்கூடங்களில் பகுப்பாய்வு செய்வதன் மூலம் மருந்துகளின் தரத்தை உறுதி செய்கிறது. தரச் சோதனையில் வெற்றி பெற்ற தரமான மருந்துகள் மட்டுமே மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகின்றன.

## விநியோகம்

அந்தந்தத் துறைத் தலைவர்கள் செய்கிற நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில், அரசு மருத்துவமனைகளுக்கு பாஸ் புத்தகம் வழங்கப்படுகிறது. இந்தப் புத்தகம் மூலம், மருத்துவமனைகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிடங்கிலிருந்து தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம். மருத்துவமனைகளுக்குத் தடையில்லாமல் மருந்துகள் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் இக்கழகம், கிடங்குகளில் மூன்று மாதத்திற்குத் தேவையான மருந்துகளை இருப்பு வைத்துள்ளது.

## இணையதளம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கான இணையதளம் (www.tnhealth.org) ஒன்றைப் பராமரித்து வருகிறது. நேரடி உரையாடல் மூலம் தினமும் மாலை 4–00 மணி முதல் 6–00 மணி வரை ஒவ்வொரு துறையிலும் உள்ள சிறந்த மருத்துவர்களைக் கொண்டு இணையதளத்தின் மூலம் பொது மக்களுக்கு நோய்கள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

## ஏனைய செயல்பாடுகள்

1. இக்கழகம், தமிழ்நாடு மின் வாரியம், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், சிறை, காவல் துறை மருத்துவமனைகள், அரசினர் இளங்குற்றவாளிகள் சீர்திருத்த இல்லங்கள், அரசு மறுவாழ்வு மையங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கால்நடை மருத்துவமனைகள் போக்குவரத்துக் கழகம்



ஆகியவற்றுடன் இணைந்த மருந்தகங்களுக்கு மருந்துகளை விநியோகம் செய்கிறது.

2. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 21.00 கோடி செலவில் திருவண்ணாமலை, விழுப்புரம், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம், நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் (கட்டடம் மற்றும் மருத்துவ சாதனங்கள் உட்பட) 7 மண்டல நோய் அறி மையங்களைக் கட்டுகிற பணியையும் மேற்கொண்டுள்ளது.

3. அரசின் உத்தரவின்பேரில் உயிர்காக்கும் மருந்துகளை, பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்காக கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விற்பனை நிலையம் (Sales Counter) ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

4. அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவச் சாதனங்களைப் பராமரிக்கும் பணியும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் — 13

## தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை, 1981 ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வு மற்றும் ஒரு தனி இயக்ககமாக ஏற்படுத்தப்பட்டது. குடும்ப நலத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள ஊர்திகள் பழுதுறும் நேர்வில், அவற்றை உடனுக்குடன் பழுது நீக்கி இயங்கச் செய்வதன் வாயிலாக இயங்கா நிலையிலுள்ள ஊர்திகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இயக்ககங்களிலும் சேர்ந்து மொத்தம் 2603 ஊர்திகள் உள்ளன.

## செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையின்கீழ், ஏழு மண்டல பணிமனைகள் உள்ளன. இவை சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய

இடங்களில் செயல்படுகின்றன. இதைத் தவிர, இத்துறையின்கீழ் 9 மாவட்ட தலைமையிடப் பணிமனைகள் மற்றும் 27 நடமாடும் பராமரிப்புப் பணிமனைகளும் இயங்கி வருகின்றன. சென்னையில் மறு சீரமைப்பு மற்றும் மைய பழுதுபார்ப்புப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

1981 ஆண்டில் மொத்த வாகனங்களில் நல்ல முறையில் இயங்கி வந்த வாகனங்களின் விழுக்காடு 72.6 ஆக இருந்தது. இது, படிப்படியாக உயர்த்தப்பட்டு 2003 ஆம் ஆண்டில் 96 விழுக்காட்டை எட்டியுள்ளது. இவையன்னியில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு இயக்ககங்களுக்கு அனுமதிக்கப்படும் புதிய ஊர்திகள் விரைந்து வாங்கி வழங்கப்படுவதையும் இத்துறை உறுதி செய்கிறது.

தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் மற்றும் தரமணியில் உள்ள மைய அரசின் தொழிற் பழகுநர் பயிற்சிக் குழுமத்தின் இயக்குநர், ஆகியோரால் அனுப்பப்படும் தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றவர்கள், பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பொறியியல் பட்டயதாரிகளுக்கு இத்துறையினரால் தொழில் பழகுநர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

## 2004-2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்

மொத்தம் ரூ.0.99 இலட்சம் செலவில் துணைப் பாகங்களுடன்கூடிய ஒரு கணினி மற்றும் அறைகலன் முதலியவை வழங்குதல்.

---

D
V211,31 P04

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.